ஆபத்தானவர்கள்

கோட்டயம் புஷ்பநாத்

தமிழில்: சிவன்

http://www.pustaka.co.in

ஆபத்தானவர்கள்

Aabathanavargal

Author :

கோட்டயம் புஷ்பநாத்

Kottayam Pushpanath

Translated by:

சிவன்

Sivan

For other books

http://www.pustaka.co.in/home/author/kottayam-pushpanath

Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.

All other copyright © by Author.

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

அத்தியாயம் 1

அத்தியாயம் 2

அத்தியாயம் 3

அத்தியாயம் 4

அத்தியாயம் 5

அத்தியாயம் 6

அத்தியாயம் 7

அத்தியாயம் 8

அத்தியாயம் 9

அத்தியாயம் 10

அத்தியாயம் 11

அத்தியாயம் 12

அத்தியாயம் 13

அத்தியாயம் 14

அத்தியாயம் 15

அத்தியாயம் 16

அத்தியாயம் 17

அத்தியாயம் 18

அத்தியாயம் 19

அத்தியாயம் 20

அத்தியாயம் 21

அத்தியாயம் 22

அத்தியாயம் 23

அத்தியாயம் 24

அத்தியாயம் 25

அத்தியாயம் 26

அத்தியாயம் 27

அத்தியாயம் 28

அத்தியாயம் 29

அத்தியாயம் 30

அத்தியாயம் 31

அத்தியாயம் 32

அத்தியாயம் 33

அத்தியாயம் 34

அத்தியாயம் 35

அத்தியாயம் 36

அத்தியாயம் 37

ஆபத்தானவர்கள்

1

அன்றைய பத்திரிகைச் செய்தி எப்படிப்பட்டவரையும் நடுங்க வைக்கக் கூடியதாக இருந்தது. சமீப காலமாக நாட்டின் பல பகுதிகளிலும் 'மனித உயிருக்கு எந்த ஒரு மரியாதையும் இல்லை!' என்பது போன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன. அவை ஓரளவுக்கு அடங்கி விட்டிருக்கின்றன என்று நினைத்த சூழ்நிலையில்...

அப்போதுதான் வெளிநாட்டில் இப்படிப்பட்ட ஒரு பயங்கரச் சம்பவம்!

புகழ்பெற்ற மருத்துவமனை ஒன்றில் பணி புரிந்த நர்ஸ்களின் தங்கியிருந்த கட்டடம் ஒன்று வெடித்துத் தெறித்திருக்கிறது. உள்ளே இருந்தவர்களுக்கு அலறுவதற்குக்கூட வாய்ப்புக் கிடைக்கவில்லையாம். அங்கிருந்தவர்களில் இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் வந்தவர்கள். அதிகமானவர்கள் கேரளத்தைச் சேர்ந்தவர்கள்.

வெளிநாட்டில் வேலை செய்பவர்கள், எதிர்பாராத விபத்துகளில் சிக்கி

அங்கிங்காக ஒரிருவர் மரணமடைவது சகஜம். பெரும்பாலும் கார் விபத்துகள்தான் காரணமாக இருக்கும். ஆனால், இது திட்டமிட்டு நடத்தப்பட்ட கூட்டுக்கொலை. இப்படிப்பட்ட கொடூரம் இதுதான் முதல் தடவையும் கூட!

துப்பறிவாளர்கள் இந்தச் செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். இந்தியாவிலிருந்து வெளிநாடுகளில் வேலைக்குச் செல்பவர்களுக்கு இந்தச் சம்பவத்தை ஓர் எச்சரிக்கையாகவே குறிப்பிட்டனர்.

ஆனால், பிரபல துப்பறியும் நிபுணரான புஷ்பராஜ் இந்தச் சம்பவத்தை வேறொரு கோணத்தில்தான் பார்த்தார்.

இதற்கு முன்பு நடந்த பல மரணங்களையும் அவர் இந்த விபத்துடன் தொடர்புபடுத்திப் பார்த்தார்.

டிடெக்டிவ் புஷ்பராஜ் புகழ்பெற்ற துப்பறியும் நிபுணர். சிக்கலான எத்தனையோ வழக்குகளை மிகவும் சாதாரண மாகக் கண்டுபிடித்து அவற்றின் மர்ம முடிச்சுகளை அவிழ்த்திருக்கிறார். சமீபத்தில்தான் அவர் கண்டுபிடித்த வழக்குகள் 'கேஸ் டயரி' என்ற பெயரில் பெரிய புத்தக மாக வெளியானது.

அவருக்கு வயது முப்பத்திரண்டு. உடற்பயிற்சி மூலம் செதுக்கியெடுத்த உடம்பு. அழகானவர். எப்படிப்பட்ட வரையும் வசீகரிக்கும் களையான முகம்.

அன்றைய செய்தித்தாளில் மரணமடைந்தவர்களில் சிலரது புகைப்படங்கள் வெளியாகியிருந்தன.

ஒவ்வொரு படத்தையும் அவர் ஊன்றிக் கவனித்தார்.

படங்கள் அவ்வளவாகத் தெளிவாக இல்லை. இறந்தவர் களில் ஒருவர் பக்கத்து ஊர்க்காரர். பெயர் கிரேசி மாத்யூ வயது இருபத்தைந்து.

சட்டென்று ஏதோ நினைவு வந்தவராக புஷ்பராஜ் மேஜை மீதிருந்த ஃபைலை எடுத்தார். அதில் அந்த விபத்தில் மரணமடைந்த சிலரைப் பற்றிய குறிப்புகள் வெட்டி யெடுத்து பத்திரப்படுத்தப் பட்டிருந்தன. உற்றுப் பார்த்தபோது எல்லாம் ஒரே இடத்தில் நிகழ்ந்தது என்பது புரிந்தது. எனவே, அவருக்குள் ஆர்வம் அதிகரித்தது.

"இதன் பின்னணியில் ஏதோ ஒரு பயங்கர ரகசியம் இருக்கிறது' - அவரது உதடுகள் மந்திரம் போல் உச்சரித்தன.

பத்திரிகைகள் எல்லாவற்றையும் ஃபைலுக்குள் மறுபடியும்

பத்திரப்படுத்தினார். மரணமடைந்த கிரேசி மாத்யூவின் வீட்டுக்குப் போவதென்ற முடிவுக்கு வந்தார்.

அவருக்குள் தோன்றிய சந்தேகத்தைப் பற்றி அவர், வேறு எவரிடமும் மூச்சு விடவில்லை. அதிகமானவர்கள் இறந்து போயிருப்பதால், எப்படியும் விபத்து குறித்து அதிகாரபூர்வமான விசாரணை நடைபெறும் என்று நினைத்துக் கொண்டார்.

காலை நேரத்திலேயே கிரேசியின் வீட்டை நோக்கிப் புறப்பட்டார்.

வீட்டைக் கண்டுபிடிப்பது கஷ்டமான காரியமாக இருக்கவில்லை. சற்றுப் பெரிதான அந்த வீட்டின் முன் புறம் பந்தல் போட்டிருந்தார்கள். மனிதர்கள் சற்று அதிகமாகவே குழுமியிருந்தனர்.

பூதவுடல் இன்னும் வந்து சேரவில்லை. பதினொன்றரை மணிக்கு வந்து சேரும் என்று பேசிக் கொண்டார்கள். புஷ்பராஜ் காலியாகக் கிடந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்து கொண்டார். அதற்குப் பக்கத்தில் நடுத்தர வயது மனிதர் ஒருவர் அமர்ந்திருந்தார். ஜென்டில்மேன் மாதிரி தெரிந்தார். அவருடன் அறிமுகப்படுத்திக் கொள்வதற்காகப் பேச்சை ஆரம்பித்தார் புஷ்பராஜ்.

“மிஸஸ் கிரேசியோட சொந்தக்காரர்னு நெனைக்கிறேன்." - பக்கத்திலிருந்தவரிடம் கேட்டார்.

“ம்... தூரத்துச் சொந்தம்... நீங்க?” அவர் திருப்பிக் கேட்டார்.

“நான் பக்கத்துல ஒரு வீட்டுக்கு வந்திருக்கேன். இப்பத் தான் தகவல் தெரிஞ்சது. பார்க்கலாம்னு வந்தேன்."

“பாவம்... ரொம்பவும் பரிதாபம்’ அவர் தொடர்ந்தார்: “வீட்டுக்கு ஒரே பொண்ணு. வசதியான வீடுதான். அவளே பிடிவாதமா இந்த வேலைக்குப் போகணும்னு போனாள்.’’

“அங்க வேண்டியவங்க யாராவது இருந்திருப்பாங்க..."

"அப்பிடி யாரும் இல்லை. ஒரு ஸ்பெஷல் ரெக்ரூட் மெண்ட்ல இங்கேருந்து இருபத்தஞ்சு பேர் போனாங்க. முக்கால்வாசிப் பேர் நர்ஸிங் டிகிரி இல்லாதவங்கதான். இவளுக்கும் கிடையாது. பன்னிரண்டாயிரம் ரூபா சம்பளம். போய் மூணு மாசம்தான் ஆகியிருக்கும்.”

“ச்சே... பரிதாபம்தான்!” -புஷ்பாரஜ் வருத்தப்பட்டார்.

“போனதிலேர்ந்து இது வரையில பணம் எதுவும் அனுப்பித் தந்ததா தெரியலை. ஒருவேளை அங்கேயே பாங்க்ல போட்டிருப்பாளோ என்னவோ? கடைசி கடைசியா முகத்தை ஒரு தடவை பார்க்கிறதுக்கு உடம்பா வது வந்து சேருதே!? அவர் நீண்ட பெருமூச்சு விட்டார்.

“நீங்க சொல்றது மாதிரி முகம் பார்க்கிற மாதிரிஅடையாளம் தெரியுற மாதிரி இருக்கும்னு தோணலை. ஏன்னா வெடிகுண்டு விபத்தாச்சே!” - என்றவர் வாட்ச் சைக் கவனித்துவிட்டு அங்கிருந்து எழுந்தார்.

ஆட்கள் அப்போதும் வந்த வண்ணமாகவே இருந்தனர்.

சட்டென்று வளைவில் திரும்பி கார் ஒன்று வந்து நின்றது.

அதிலிருந்து நான்கு பேர் இறங்கினார்கள். கேட்டைத் தாண்டி நேராக வீட்டுக்குள் நுழைந்தனர். சற்றுப் பின்னாலேயே மற்றொரு மாருதி வேன் வந்து நின்றது.

எல்லோரின் பார்வையும் அந்தப் பக்கமாகத் திரும்பியது.

எதிர்பார்ப்புடன் இருக்கைகளிலிருந்து எழுந்தனர்.

அதில்தான் உடல் வந்திருந்தது.

ஒரு பெரிய பெட்டி.

தகடால் மூடப்பட்டிருந்த அந்தப் பெரிய பெட்டியின் மேற்புறத்தில் மூலைப் பகுதியில் கனமான கண்ணாடி பதிக்கப் பட்டிருந்தது. ஏறத்தாழ எட்டங்குல சதுரத்தில் இருந்தது கண்ணாடி, அதன் வழியாக உள்ளிருந்த உடலின் முகம் தெளிவற்றுத் தெரிந்தது.

விபத்தில் முகம் சிதைந்து விட்டிருக்கிறது!

முற்றப் பகுதியில் நட்ட நடுவில் இரண்டு பெஞ்ச்சு களைப் போட்டு சவப்பெட்டியை அதன் மீது வைத்தனர்.

அதன் பிறகு அங்கிருந்து ஒரு கூட்டத்தின் அழுகை யொலி உயர்ந்தது.

புஷ்பராஜ் கேட்டை நெருங்கி உட்புறம் பார்த்தார்.

அரைமணி நேரத்துக்கு மேல் டெட்பாடியை வைத்திருக்கக் கூடாது என்று யாரோ சொன்னார்கள். ஆனால், எவரும் அதைப் பொருட்படுத்தவோ, அதற்கு பதிலளிக் கவோ முற்படவில்லை.

செமித்தேரியை நோக்கி உடல் நகர்ந்தது.

சவத்தை அடக்கம் செய்வது வரை புஷ்பராஜ் கல்லறை மைதானத்துக்குள் இருந்தார். அப்போதும் அவர் முகத்தில் சந்தேகத்தின் நிழல் படிந்தே கிடந்தது. அங்கிருந்து ஆட்கள் கலையத் தொடங்கினர். கடைசியில் மிகவும் குறைவான வர்கள் மட்டும் மீதமாயினர்.

மீதமிருந்த கூட்டத்தில் காரில் வந்த நான்கு பேரும் இருந்தனர். ‘அப்படியானால் அவர்கள் இறந்து போன வருக்கு நெருங்கிய உறவினர்களாக இருக்க வேண்டும்!” என்று நினைத்தார் புஷ்பராஜ்.

அங்கிருந்து கிளம்ப முற்பட்டபோது சட்டென்று அவருள் ஒரு யோசனை உதித்தது. அன்றிரவை அங்கேயே கழிப்பது என்று தீர்மானித்தார்.

எனவே, நகரில் ஒட்டல் ஒன்றில் ஓர் அறையை எடுத்தார். காரை நிறுத்துவதற்கு இடம் ஒதுக்கப்பட்டிருந்த சற்று காஸ்ட்லியான ஒட்டல் அது.

மாலை நேரம் வரை தூங்கினார்.

அவர் எழுந்தபோது மணி ஏழு ஆகிவிட்டிருந்தது.

நேராக ரிசப்ஷன் கௌண்டருக்கு வந்தார்.

“உங்க ரிஜிஸ்டரை கொஞ்சம் பார்க்கலாமா? நான் முக்கியமான ஒருத்தரை எதிர்பார்த்துக் காத்திட்டிருக்கேன். அவர் இங்கதான் தங்கப் போறதா என்கிட்டச் சொல்லியிருக்கார். ' -புஷ்பராஜ் ரிசப்ஷனிஸ்டிடம் பேச்சுக் கொடுத்தார்.

அவர், ரிஜிஸ்டரை புஷ்பராஜிடம் நீட்டினார்.

புஷ்பராஜ் பெயர்களைக் கண்களால் துழாவினார். முன்தினம் யாராவது அறையெடுத்திருக்கிறார்களா என்று தேடினார்.

அப்படி ஒரு பெயர் இருந்தது. கபர் சிங். மெடிக்கல் ரெப்ரசென்டேட்டிவ். அதே போல் மேலும் இருவர். அவர்களும் அதே வேலையைத்தான் குறிப்பிட்டிருந்தனர். நான்காவதாக ஜஸ்டின் பிரான்சிஸ், அட.. அவரும் மெடிக்கல் ரெப்தான்!

புஷ்பராஜின் சந்தேகம் வலுவடைந்தது, அவருக்கே தோன்றியது.

“இங்க பக்கத்துல டாக்டர்ங்க எத்தனை பேர் இருக்காங்க சார்... அதாவது பிரைவேட்டா பிராக்டீஸ் பண்ற வங்க?” ரிசப்ஷனிஸ்ட்

வாலிபரிடம் கேட்டார் புஷ்பராஜ்.

“அதோ தெரியுது பாருங்க. அது கூட ஒரு கிளினிக் தான். சார்லிஸ் கிளினிக், டாக்டர் பேரு சார்லி. அந்த ரெண்டு மாடி கட்டடம்தான்."

“தாங்க்ஸ்!” புஷ்பராஜ் அங்கிருந்து வெளியேறினார்.

கிளினிக்கை நெருங்கினார்.

டாக்டர் சார்லி இருந்தார்.

புஷ்பராஜ், டாக்டரிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார் -ஒரு பத்திரிகை நிருபராக.

"சார், எனக்குப் பழக்கமான ஒரு மெடிக்கல் ரெப்பைப் பத்தித் தெரிஞ்சுக்கிறதுக்காக வந்திருக்கேன். அவர் பேர் கபர் சிங்... அவரோட ஃபிரண்ட் ஜஸ்டின் ஃபிரான்சிஸ். மொத்தம் நாலு பேர். இங்க உங்களை வந்து சந்திச்சுட்டுப் போனாங்களா சார்?’ புஷ்பராஜ் கேட்டார்.

டாக்டர் சார்லி சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தார்.

“இல்லையே... நீங்க சொல்ற பேர்ல மெடிக்கல் ரெப்புங்க யாரும் இங்க வந்ததாக ஞாபகமில்லை. நீங்க சொன்ன பேர்ல எந்த ரெப்பையும் நான் இது வரை சந்திச்சதாவும் ஞாபகமில்லை!" -டாக்டர் சொன்னார்.

நன்றி சொல்லிவிட்டுக் கிளம்பிய புஷ்பராஜ் நேராக ஓட்டல் அறைக்குத் திரும்பினார். மெடிக்கல் ரெப்ர சென்ட்டேட்டிவ் நான்கு பேர்... கிரேசியின் வீட்டுக்கு வந்தவர்களும் நான்கு பேர். அந்த நால்வரின் முகங்களும் புஷ்பராஜின் மனத்தில் எதையோ கிளப்பி விட்டன.

சவப்பெட்டி வந்த வேனுக்கு முன்பாக வந்த காரில் நான்கு பேர் வந்ததை அவர் கவனித்திருந்தார். எந்த வித நோக்கமும் இல்லாமல்தான் அப்போது கவனித்தார். ஆனால், அவர்கள் கவனத்துக்கு உரியவர்கள் என்று அவரது மூளை எச்சரித்தது.

அவர்கள் யார்?

அந்த நான்கு பேர்தானா இங்கும் அறையெடுத் திருப்பவர்கள்?

எட்டு மணிக்கு சாப்பாட்டின் முன் அமர்ந்திருக்கும் போதும் அவரது சிந்தனை அதிலேயே உழன்றது.

அவர்களது திட்டம் என்னவாக இருக்கும்? சட்டென்று கிரேசியின் உடலை அடக்கம் செய்த கல்லறை அவரது நினைவுக்கு வந்தது.

‘அங்கே உடனே போ!'-என்று அவருக்குள் ஏதோ ஒன்று உசுப்பியது.

இரவு பதினோரு மணியானபோது புஷ்பராஜ் தயாரானார். கிரேசியின் உடலும். நான்கு தடியர்களும் மாறிமாறி அவரை அலைக்கழித்தனர்.

‘இந்த இரவில் அந்தக் கல்லறையில் ஏதோ ஒன்று நடக்கப் போகிறது!’ என்று அவர் கணக்கிட்டார்.

ஒட்டலிலிருந்து கல்லறை ஐந்து கிலோ மீட்டர் தூரம். நான்கு கிலோமீட்டர் தூரம் ஆட்டோ பயணம். மீதம் நடக்க வேண்டிய தூரம். அவர் ஒரு தீர்மானத்துக்கு வந்தார்.

பதினொன்றரை மணிக்கு ஆட்டோவில் ஏறியவர் திட்டமிட்டபடி இறங்கி, நடக்கத் தொடங்கினார்.

மணி பன்னிரண்டு முப்பது. -

கல்லறை காம்பௌண்டுக்கு வெளியே ஏறத்தாழ இருபது மீட்டர் தொலைவில் படர்ந்து பரவியிருந்த ஆல மரத்தின் அடியில் உட்கார்ந்தார்.

சிகரெட் ஒன்றை எடுத்து உதட்டில் பொருத்தி, லைட்டரால் பற்ற வைக்க முயன்றபோது தொலைவில் கார் ஒன்றின் ஹெட்லைட் வெளிச்சம் தெரிந்தது.

சிகரெட்டையும் லைட்டரையும் பாக்கெட்டுக்குள் போட்டார். அவர் உட்கார்ந்திருந்த மரத்தை நோக்கித்தான் கார் வந்து கொண்டிருந்தது. அவர் எழுந்து பின் பக்கமாக மறைந்தார்.

கார் மரத்தின் கீழ் வந்து நின்றது.

அதிலிருந்து நான்கு பேர் இறங்கினர்.

நேராகக் கல்லறையின் கேட்டை நெருங்கி, அதன் தாழ்ப்பாளைத் திறந்தனர்.

புஷ்பராஜ் இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தார்.

அவர்கள் ஒவ்வொருவராக உள்ளே நுழைந்தனர். கிரேசியின் உடலை அடக்கம் செய்த கல்லறையை நெருங்கினர்.

நிலவொளியில் தூரத்தில் நடப்பதெல்லாம் தெளிவாகத் தெரிந்தது.

‘என்ன செய்யப் போகிறார்கள்?’ அவர் தனக்குத்தானே கேட்டுக் கொண்டார்.

அவர்கள் கிரேசியின் கல்லறையைத் திறப்பதில் ஈடுபட்டனர்.

நின்ற இடத்திலிருந்து கல்லறையை நோக்கி நடந்தார். மர நிழல்களிலேயே நடந்து காம் பௌண்ட் சுவரை நெருங்கினார், புஷ்பராஜ்.

அதற்குள் அவர்கள் கல்லறையிலிருந்து சவப்பெட்டியை வெளியே எடுத்து விட்டனர்.

‘அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்?’ என்பதை அறியும் ஆவலுடன் புஷ்பராஜ் மூச்சை அடக்கியபடி அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தார்.

2

புஷ்பராஜ் அவர்களையே கவனித்துக் கொண்டிருந்தார்.

சவப்பெட்டியை மேலே எடுத்தவர்கள் அப்படியே கவிழ்த்தார்கள்.

இரண்டு பேர், காரின் டிக்கியில் இருந்து சற்றுப் பெரிய பெட்டியை எடுத்து வந்து சவப்பெட்டியின் அருகே வைத்தனர். கொண்டுவந்த பெட்டிக்குள் இருந்து சுத்தியலையும், உளியையும் எடுத்து சவப்பெட்டியின் அடிப்புறத்தை உடைத்தனர். பிறகு அதற்குள்ளிருந்து எதையோ வெகு கவனத்துடன் எடுத்து தாங்கள் கொண்டு வந்த பெட்டியில் வைத்தனர்.

சட்டென்று காம்பௌண்ட் சுவரைத் தாண்டிக் குதித் தார் புஷ்பராஜ்.

“யாருடா அது!’ அவர்களில் ஒருவன் சடக்கென்று திரும்பினான். அதற்குள் புஷ்பராஜ் அவர்களை நெருங்கி விட்டிருந்தார்.

தாமதிக்காமல் இருவர் புஷ்பராஜ் மேல் பாய்ந்தனர். புஷ்பராஜ் அவர்களை வெகு லாகவமாகச் சமாளித்தார். இருவரும் தூரத்தில் பொத்தென்று விழுந்தனர். அதில் ஒருவன் நேராக ஒரு சமாதியின் சிலுவை மீதே ‘ஐயோ' என்று அலறியபடி விழுந்தான்.

இப்படியோர் எதிர்ப்பை அவர்கள் எதிர்பார்க்காததால், கைவசம் ஆயுதங்கள் எதையும் எடுத்து வரவில்லை. புஷ்பராஜும் இப்படி

யூகித்திருந்தார்.

அவரிடம் துப்பாக்கி இருந்தது. எனினும் இந்தச் சந்தர்ப்பத்தில் அதைப் பயன்படுத்தக் கூடாது என்று நினைத்தார். காரணம் 'வெடியோசை கேட்டால் அக்கம் பக்கத்திலிருந்து யாராவது வந்து கூடிவிட்டால், தன்னுடன் மோதிக் கொண்டிருப்பவர்கள் வேறு ஏதாவது சாகச முயற்சியில் ஈடுபடலாம். எனவே தவிர்ப்பதுதான் நல்லது!'

அதற்குள் மூன்றாவது மனிதன் அவரை நெருங்கினான்.

அவரை நோக்கி ஓங்கிய அவன் கையைப் பிடித்து இழுத்து அடி வயிற்றில் ஓங்கி மிதித்தார். அவன் பின்புற மாகச் சரிந்தான்.

நாலாவது நபர் அதுவரை நடந்த எதையுமே கவனிக்காதவனைப் போல் சவப்பெட்டிக்கு உள்ளிலிருந்து எதையோ எடுத்து மற்றொரு பெட்டிக்குள் எச்சரிக்கையுடன் வைத்துக் கொண்டிருந்தான். தன் நண்பர்கள் வந்த விருந் தாளியைச் சமாளித்துக் கொள்வார்கள் என்ற அசையாத நம்பிக்கை கொண்டவனைப் போல் இருந்தான்.

அதற்குள் முதலில் விழுந்த இருவரும் எழுந்து விட்டனர். சிலுவை மீது விழுந்தவனது தொடைப் பகுதியிலிருந்து ரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

அதன் பிறகு மூன்று பேரையும் புஷ்பராஜ் ஏககாலத் தில் ஒற்றை மனிதனாக நின்று சமாளித்தார்.

பெட்டியில் அடுக்கிக் கொண்டிருந்தவன், தன்னுடைய வேலையை முடித்துக் கொண்டு காரை நோக்கி நடந்தான்.

அப்போதும் போராட்டம் கடுமையாக நடந்து கொண்டிருந்தது.

ஆகாயத்தில் பயணம் செய்து கொண்டிருந்த மேகத் துண்டுகள் அவ்வப்போது நிலவை மறைத்தன. இந்த நிழல்-வெளிச்ச விளையாட்டில் கல்லறையின் சிலுவைகள் அசைந்து விளையாடின.

சட்டென்று ஒரு பெரிய மேகம் நிலவை மறைத்தது. மொத்தக் கல்லறைப் பகுதியுமே இருட்டில் ஆழ்ந்தது.

அதே விநாடியில் புஷ்பராஜின் தலைமீது ஓர் இடி இறங்கியது. அப்படியே பின்புறம் சரிந்தார் -நினைவிழந்து!

"வேண்டாம்... கொல்லாதீங்க. அதில்லாம எவ்வளவு வழிகள்

இருக்கு?’ அவர்களில் ஒருவன் கொஞ்சம் ஈவு இரக்கம் உள்ளவன் போல் தெரிந்தான்.

பெட்டியை காரில் கொண்டு போய் திரும்பி வந்தவனின் கையில் ஒரு ஜாக்கிலிவர் இருந்தது. அதைக் கொண்டுதான் புஷ்பராஜின் தலையில் போட்டிருந்தனர்.

தெளிவில்லாத வெளிச்சத்தில் அவர்கள் நால்வருமாகச் சேர்ந்து சவப்பெட்டியைப் பழைய இடத்திலேயே வைத்தனர்.

“இவனை என்ன செய்யலாம்?” ஜாக்கிலிவர் வைத்திருந்தவன் கேட்டான்.

“இது மாதிரியே பண்ணிடு!” - யாரோ ஒருவன் சொன்னான்.

இரண்டுபேர் சேர்ந்து புஷ்பராஜைத் தூக்கிக் கல்லறைக் குள் போட்டனர். மேற்புற ஸ்லாப்பை இழுத்து மூடினர்.

நால்வரும் கல்லறை காம்பௌண்டிலிருந்து வெளியே வந்தனர். கார் ஸ்டார்ட் ஆனது. வந்த வழியே திரும்பிப் போகவும் செய்தது.

அதற்குள் தூறலாகப் பெய்த மழை மெதுவாக உயர்ந்து வலுத்தது!

கல்லறை மீது இழுத்து மூடப்பட்டிருந்த ஸ்லாபின் மேல் மழைத்துளிகள் வலுவாக விழுந்து சிதறிக் கொண்டிருந்தன. ஸ்லாபின் மீது விழுந்த மழைநீர் நேரமாக ஆகத் தேங்கி, அதன் இடைவெளி வழியாக உட்புறம் சொட்டியது.

புஷ்பராஜின் முகத்தில் குளிர்ந்த நீர் இடைவிடாமல் சொரிந்து கொண்டிருந்தது.

ஏறத்தாழப் பதினைந்து நிமிடத்துக்குள் மயக்கத்திலிருந்து விடுபட்ட புஷ்பராஜ், கண்களை மெதுவாகத் திறந்தார். அப்போதும் மழைநீர் உட்புறம் சொட்டிக் கொண்டிருந்தது.

கைகளால் தடவிப் பார்த்தபோது, தான் ஏதோ ஓர் இடுங்கிய இடத்தில் கிடக்கிறோம் என்பது புரிந்தது. தன் உடல் கிடப்பது ஒரு பெட்டியின் மீது என்பதும் தெரிந்தது.

புஷ்பராஜின் உடல் ஒரு கணம் நடுங்கியது. தான் கல்லறைக்குள் இருக்கிறோம் என்பது அப்போதுதான் அவருக்கு உறைத்தது.

மேற்புற இடைவெளியிலிருந்து மிகவும் சன்னமான வெளிச்சம் வந்து கொண்டிருந்தது. நிலவு, மேகக் கூட்டங் களின் பிடியிலிருந்து

முற்றிலும் விலகி விட்டதாகத் தெரிந்தது.

எழுந்திருக்க முயன்றார். ஆனால், உடம்பை நிமிர்த் தவே முடியவில்லை!

தலைப் பகுதி கான்கிரீட் ஸ்லாபில் பட்டது. எப்படி இருந்தாலும் மூச்சுத்திணறல் ஏற்படவில்லை என்பதில் நிம்மதியடைந்தார்.

மேற்புற ஸ்லாபை எப்படி நகர்த்துவது என்று ஆலோசித்தார். உடனே வேறொரு யோசனை தோன்றியது. மல்லாக் கப் படுத்துக் கொண்டு, தான் கற்று வைத்திருக்கும் யோகா முறைகள் சிலவற்றைச் சோதித்துப் பார்க்க வேண்டியது தான்.

புஷ்பராஜ் படுத்திருந்த பெட்டியின் மீது உடம்பை நன்றாகப் படிய வைத்துக் கொண்டு கால்களால் ஸ்லாபை நெம்பினார். சற்று நேரம் அந்த நிலையிலேயே இருந்து விட்டு உடலின் மொத்தச் சக்தியையும் திரட்டி விசையுடன் கால்களால் தள்ளினார்.

மெதுவாக உயரத் தொடங்கிய ஸ்லாப், ஒரு கட்டத்துக்கு மேல் சரியத் தொடங்கியது. ஸ்லாபின் இடைவெளி அதிகமாவதை ஒட்டி, அவரது முயற்சியும் முன்னிலும் மூர்க்கம் பெற்றது.

கடைசியாக ஒரு முனகலுடன் அந்த ஸ்லாப் செங்குத்தாகச் சரிந்து, ஒர் ஆள் வெளியேறத் தக்க இடைவெளியை ஏற்படுத்தியது.

"அப்பாடா!" - புஷ்பராஜ் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.

மெதுவாக எழுந்தவர், முதலில் தலையை மட்டும் உயர்த்தி வெளியே பார்த்தார். உயரம் அவரது தோள் வரை இருந்தது. இரண்டு கைகளையும் பக்கவாட்டுகளில் பதித்து ஒர் எம்பு எம்பினார்.

மழை சுத்தமாக நின்று விட்டிருந்தது. எனினும் அவ்வப்போது ஒவ்வொரு துளிகள் மெதுவாகச் சோம்பலுடன் விழுந்தன. வெளிப்புறக் காற்றைச் சுவாசித்தபோது அவருக்குப் புத்துணர்ச்சி தோன்றியது.

மேலே வந்தவுடன் ஸ்லாபை பழையபடி இழுத்து மூடி விட்டு நேராக கேட்டுக்கு வந்தார்.

அவர்கள் வந்த கார் அங்கு இல்லை.

வலது மணிக்கட்டை உயர்த்திப் பார்த்தார். நல்ல வேளையாக வாட்ச் கையிலேயே இருந்தது. மணி இரண்டரைக்கு மேலாகியிருந்தது.

சற்றுத் தொலைவு வந்த பிறகு ஆட்டோ ஸ்டாண்டில், ஆட்டோ ஒன்று தென்பட்டது. நெருங்கினார். டிரைவர் பின்புறம் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார்.

எழுப்பினார்.

ஆட்டோ கிளம்பியது. கல்லறைக்குள் ஒரு பிணத்துடன் கிடந்ததை நினைத்தபோது, அவர் உடல் சிலிர்த்தது.

வாழ்க்கையில் யாருக்குமே நேராத ஓர் அனுபவம். ஒட்டலை அடைந்ததும் மெடிக்கல் ரெப்ரசென்டேட்டிவ்களைப் பற்றி விசாரித்தார். அவர்கள் இரவே அறையைக் காலி செய்துவிட்டுப் போய் விட்டதாகத் தெரிவித்தார் நைட் டூட்டி ரிசப்ஷனிஸ்ட்.

பொழுது விடிவது வரை அறையில் தங்கியிருப்பதென்று தீர்மானித்தார். பாத்ரூமில் நுழைந்து நன்றாகக் குளித்தார். லுங்கிக்கு மாறினார். உடல் அசதி பெருமளவு குறைந்தது போல் தோன்றியது.

தலைப் பகுதியில் அப்போதும் விண்விண்ணென்று தெறித்துக் கொண்டிருந்தது.

கட்டிலில் ஏறிப் படுத்தார். திரும்பியும் புரண்டும் பொழுதை விடிய வைத்தார்.

எட்டு மணிக்கு அங்கிருந்து கிளம்பினார். தனது இடத்துக்கு வந்தவுடன், கிரைம் பிராஞ்ச் எஸ்.பி தாமஸ்"டன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

அவர் அலுவலகத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த வேளை. மிகவும் அவசரமாகச் செல்ல வேண்டியிருப்ப தால் மாலையில் சந்திப்பதாகச் சொல்லி ரிசீவரை வைத்தார்.

பெட்டியிலிருந்து டைரியை எடுத்து, இரவு அனுபவங் களை அதில் எழுதி வைத்தார்.

மாலை நேரத்தில் சொன்னபடியே தாமஸ், புஷ்பராஜை தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

போலீஸ் கிளப்பில் சந்திக்கலாம் என்றார்.

புஷ்பராஜ், காரை ஸ்டார்ட் செய்து கிளப்பை அடைந்தார்.

'ஏதோ முக்கியமான விஷயம் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் புஷ்பராஜ் இவ்வளவு பரபரப்பு அடைய மாட்டார்!' என்று நினைத்துக்

கொண்டார் தாமஸ் ஜேக்கப்.

"நாம இப்படி ரிலாக்ஸா சந்திச்சு ரொம்ப நாள் ஆகுது.” -என்ற ஜேக்கப், சிகரெட் பாக்கெட்டிலிருந்து ஒன்றை உருவிக் கொண்டு புஷ்பராஜிடம் நீட்டினார்.

“சந்தர்ப்பம் வர வேண்டாமா?” புஷ்பராஜ் சிகரெட் ஒன்றை எடுத்துக் கொண்டார்.

“என்னமோ சிக்கியிருக்குன்னு தோணுதே!”

“உண்மைதான். ரொம்ப நாளா டிபார்ட்மெண்டுக்கு டிமிக்கி கொடுத்திட்டிருந்த ஒரு விஷயம்” - என்று தொடங்கிய புஷ்பராஜ் நடந்ததை விவரித்தார்.

ஜேக்கப் எல்லாவற்றையும் கவனமாகக் கேட்டுக் கொண்டார்.

“நீங்க சொன்னதெல்லாம் உண்மைன்னு நம்பவே கஷ்டமா இருக்கு. அந்த ஸ்லாபில மட்டும் இடைவெளி இல்லாம இருந்தா என்ன ஆகியிருக்கும்? நெனைச்சுப் பார்க்கவே பயங்கரமா இருக்கு." ஜேக்கப் இடது கையால் நெற்றியைத் தாங்கியபடி பேசினார்.

“எந்த ஒரு லூப்ஹோலும் இல்லாம கடவுள் அவ்வளவு சீக்கிரம் கைவிட மாட்டார்.”-சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் போட்டபடி புஷ்பராஜ் சொன்னார்.

“நாம மறுபடியும் அந்த டெட்பாடியை பரிசோதனை பண்ணிப் பார்த்தா என்ன?” சற்று நேர யோசனைக்குப் பிறகு ஜேக்கப் கேட்டார்.

‘'வேண்டாம்... நாம இதையெல்லாம் தெரிஞ்சுக் கிட்டதாகவே காட்டிக்க வேண்டாம். குற்றவாளிங்க தப்பிக்கவும் ஏராளமான வழிகள் இருக்கே!”

"அப்படியானா மறுபடியும் மரணம் நடக்காதா?”

"அதுக்கும் சான்ஸ் இருக்கு. நான் விசாரிச்சதை வெச்சு யூகிச்சா, அந்த நர்ஸ் வேலை செஞ்ச ஆஸ்பத்திரியோட நிர்வாகிகளுக்கும் இந்த விஷயத்துல தொடர்பு இருக்கலாம்னு தோணுது.”

“இருக்கலாம்; இருக்கணும். ஆனா, நம்மகிட்ட அதுக்கு எந்த விதமான ஆதாரமும் இல்லையே?”

“நம்ம வேலையே அதுதானே. தேடுவோம். வெளிநாட்டிலயும் நம்ம

நாட்டிலயுமா செயல்படுற ஒரு அண்டர் கிரவுண்ட் குரூப் இதுல சம்பந்தப்பட்டிருக்கிறது உண்மை." -புஷ்பராஜ் மற்றொரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டார்.

"அப்படித்தான் இப்ப எனக்கும் தோணுது."

“சரி...நான் கிளம்புறேன். அந்தப் பொண்ணோட குடும்பத்தாரை ஒரு தடவை சந்திச்சா நல்லதுன்னு நெனைக்கிறேன்!” புஷ்பராஜ் எழுந்தார்.

அவரது அம்பாஸ்டர் கார் போலீஸ் கிளப்பிலிருந்து கிளம்பியது.

புஷ்பராஜ் தனியாகத்தான் வசிக்கிறார். சமையலுக்கு ஒரு சமையல்காரன். காலையில் வந்தால், வேலைகளை முடித்துவிட்டு மாலை நேரத்திலேயே தனது வீட்டுக்குப் போய்விடுவான். இரவு அங்கு தங்குவதில்லை.

சாப்பாட்டை முடித்துக் கொண்டு மீண்டும் ஒரு தடவை பத்திரிகைகளைப் புரட்டினார்.

அதற்குள் தான் போகவேண்டிய இரண்டு இடங்கள் அவருள் தீர்மானமானது.

உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்து கேஸ்ட் ஒன்றைத் தேடி எடுத்து, வி.சி.ஆரில் திணித்துவிட்டு, பிளே பட்டனைத் தட்டினார்.

ஷெர்லாக் ஹோம்ஸின் துப்பறியும் கதை ஒன்று திரைப் படமாகியிருந்தது. அது திரையில் உயிர் பெற்று ஓடியது.

ஏறத்தாழ பதினோரு மணிக்கு படம் முடிந்தது.

விளக்குகளை அணைத்துவிட்டு படுக்கையில் சரிய முற்பட்டபோது யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. 'காலிங்பெல் இருக்கும்போது ஏன் கதவைத் தட்டுகிறார்கள்? யோசித்தவாறே கதவை நெருங்கினார்.

“யாரது?”-புஷ்பராஜ் கேட்டார்.

“நான்தாங்க கிரேசி மாத்யூ” ஒர் இளம் பெண்ணின் குரல்.

“என்ன!”-புஷ்பராஜ் திடுக்கிட்டார்.

3

துப்பறிவாளர் புஷ்பராஜின் மூளையில் சட்டென்று ஒரு மின்னல் பாய்ந்தது.

இந்த அனுபவமும் புதியதுதான்!

‘கிரேசி மாத்யூ’ என்ற பெயர் அவரது சிந்தனையில் சதா உலவிக் கொண்டிருந்தது. அது, அவ்வளவு சீக்கிரம் மறையக் கூடியதல்ல.

தற்போதைய விசாரணைகளும், தாக்குதல்களும் அவள் தொடர்பானதுதான். உண்மையில் அவள் மரணத்துக்கான அல்லது அந்த விபத்துக்கான காரணத்தைக் கண்டுபிடிக்க வேண்டும்.

அது மட்டுமா?

‘அவளது உடலைப் புதைத்த கல்லறைக்குள், அவளது சவப்பெட்டி மீதுதான் நினைவற்றுப் படுத்திருந்தோம்’- என்பதை எண்ணிப் பார்த்தபோது, அவர் மனத்தில் பல்வேறு உணர்வுகள் முளை விட்டன.

‘கிரேசி மாத்யூ இன்னும் உயிரோட இருக்கீங்களா?’

அப்படியானால் அது ஒரு நாடகமா?

அவளை உயிருடனேயே சவப்பெட்டிக்குள் வைத்திருந்தார்களோ? இந்த விபத்து என்பதே கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள போதைப் பொருளைக் கடத்திக் கொண்டு வர ஒரு வழியா?

"கதவைத் திறங்க... பயமா இருக்கா? வெளியிலிருந்து மறுபடியும் அந்தப் பெண் குரல் கேட்டது.

எது வந்தாலும் சரியென்று புஷ்பராஜ் கதவைத் திறந்தார்.

வெளிப்புறத்தின் அரண்ட வெளிச்சத்தில் ஒர் இளம் பெண்.

வெளிநாட்டு வாசனை மூக்கைத் தாக்கியது. வெள்ளை பிளவுஸ்- புடவை- எண்ணெய் போட்டு வாராத - பாப் கட்டிங் செய்யப்பட்ட தலைமுடி.

திகில் படத்தில் இடம் பெறும் ஒரு கதாபாத்திரம் மாதிரி நின்று கொண்டிருந்தாள்.

சன்னமான பயம் அவர் இதயத்தில் ஒட்டிக் கொண்டிருந்தாலும் புஷ்பராஜ் அவளை உள்ளே வந்து உட்காரச் சொன்னார்.

உள்ளே நுழைந்தாள்.

புஷ்பராஜ் உடனே கதவை மூடித் தாழிட்டார். அவ ளைத் தொடர்ந்து வேறு யாரும் வீட்டுக்குள் நுழையா திருக்கவே அப்படிச் செய்தார்.

ஆவிகள் கூட்டமாக வருமோ இல்லையோ. ஆட்கள் வரலாமே!

அறையின் லைட் வெளிச்சத்தில் புஷ்பராஜ் அவளை ஏற இறங்கப் பார்த்தார். சவப்பெட்டியில் இருந்தவளின் முகத்தை புஷ்பராஜ் கவனிக்கவில்லை. ஆனால், பத்திரிகை யில் வெளியான படம் அவர் மனத்தில் பதிந்திருந்தது.

இருந்தாலும் மீண்டும் ஒரு தடவை சோதித்துப் பார்த்து விடுவது என்று நினைத்தார்.

“ஒரு நிமிஷம்... உட்கார்ந்திருங்க. இதோ வந்துடுறேன்...’
ஃபைலிலிருந்து பேப்பரை எடுப்பதற்காக மற்றோர் அறைக்குள் நுழைந்தார்.

பேப்பரை எடுத்து கிரேசி மாத்யூவின் படத்தைப் பார்க்க முற்ப... திடுமென்று விளக்குகள் அணைந்தன.

வீடு முழுவதும் இருளில் ஆழ்ந்தது.

சட்டென்று தீப்பெட்டியை எடுத்து மேஜை மீது தயாராக வைத்திருந்த பருமனான மெழுகுவத்தியைக் கொளுத்தினார்.

சரியாக அந்தத் தருணத்தில் மின்சாரத் தொடர்பு தடைப்பட்டது, அவருக்குள் சந்தேகத்தை எழுப்பியது.

மெழுகுவத்தி வெளிச்சத்தில் படத்தைப் பார்த்தார். ஏறத்தாழ வந்திருப்பவள் மாதிரியேதான் இருந்தது.

ஒருவேளை வந்திருப்பள்தான் கிரேசி என்றால், அவள் எதற்காகத் தன்னைத் தேடி வர வேண்டும்?

அவளது வீட்டுக்கோ, சொந்தக்காரர்களிடமோதானே போயிருக்க வேண்டும்?

பத்திரிகை மற்றும் மெழுகுவத்தியுடன் வரவேற்பறைக்குத் திரும்புவதற்காக நகர்ந்தபோது, அந்தப் பெண் அவருக்கு அருகில் நின்று கொண்டிருந்தாள்.

“நான்தானாங்கிற சந்தேகத்தைப் போக்க படத்தோட ஒப்பிட்டுப் பார்த்திங்களா?” அவள் கேட்டாள்.

“உண்மைதான். இதுக்கு முன்னால நேர்ல பார்க்காத ஒருத்தரை வேற எப்படி அடையாளம் கண்டுக்கிறது?” புஷ்பராஜ் திருப்பிக் கேட்டார்.

“நியாயம்தான்.” ஒப்புக்கொண்டாள்.

மேற்குப் புறமாகத் திறந்து கிடந்த ஜன்னல் வழியாக உள்ளே வீசிய காற்று மெழுகுவத்தியின் தீ நாளத்தை படபடப்புடன் அசைத்துக் கொண்டிருந்தது. மெழுகுவத்தி அணையாமல் இருக்கப் பருமான புத்தகம் ஒன்றை அதற்குப் பின்னால் எடுத்து வைத்தார்.

“என்னால நம்ப முடியலை!” புஷ்பராஜ், அவள் முகத்தைப் பார்த்தபடி சொன்னார்.

“நம்பலாம்... நான் நானேதான்!” அவள் கட்டிலில் அமர்ந்தாள்.

மெழுகுவத்தி வெளிச்சத்தில் அவர், அவளை ஊன்றிக் கவனித்தார். அவளிடம் ஏதோ ஒரு விபரீதம் இருப்பதாக அவருக்குத் தோன்றியது.

சட்டென்று பின்னோக்கி நகர்ந்தவர், மேஜை டிராய ரைத் திறந்து அதற்குள்ளிருந்து ரிவால்வரை எடுத்தார்.

“ஆவிகளைச் சுட்டாலும் அவங்க சாக மாட்டாங்கன்னு கேள்விப்பட்டிருக்கேன். அதனால், இப்ப அதை சோதிச்சுப் பார்க்கலாம்னு நெனைக்கிறேன்.” புஷ்பராஜ் ரிவால்வரின் குழல் முனையை அவள் தொண்டையில் அழுத்தினார்.

“உண்மையைச் சொல்லு. உன்னை அனுப்பி வெச்சது யார்?” - புஷ்பராஜ் கேட்டார்.

“நம்புங்க. ப்ளீஸ். நான்தான் கிரேசி மாத்யூ!"

“ஆவியெல்லாம் கிடையாதுங்கற?"

“இல்லை!"

“சரி, எதுக்காக இங்க வந்திருக்கிற?”

“உங்களைச் சந்திக்க?"

“எதுக்காக?”

“நீங்தான் என்னைக் காப்பாற்றினீங்க!”

அவரது சிந்தனை பின்னோக்கி நகர்ந்தது. தான் வரும் போது

கல்லறையின் ஸ்லாபை மூடிவிட்டுத்தான் வந்தோம். அதை மறுபடி நகர்த்தி வெளியேறும் சக்தி இவளுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. அது மட்டுமல்ல சவம், பெட்டிக்குள் அல்லவா இருந்தது?

“இன்னும் என் சந்தேகம் விலகலை...” புஷ்பராஜ் சொன்னார்.

"அப்படின்னா வாங்க கல்லறைக்கே போய்ப் பார்க்கலாம்!” -அவள் சொன்னாள்.

“சரி கிளம்பு!”

புஷ்பராஜ் ஷர்ட்டை எடுத்து மாட்டிக் கொண்டு அவளுடன் கிளம்பினார்.

கார் மறுபடியும் செமித்தேரியை நோக்கி விரைந்தது.

கல்லறை மைதானத்தின் கேட் திறந்தே கிடந்தது. இருவரும் காரிலிருந்து இறங்கி உள்ளே நுழைந்தனர்.

கிரேசி மாத்யூவை அடக்கம் செய்த கல்லறையை நெருங்கினர்.

கல்லறையின் மேற்புற ஸ்லாப் முற்றிலுமாக நகர்த்தி வைக்கப்பட்டிருந்தது.

புஷ்பராஜ் அவள் முகத்தைப் பார்த்தார்.

“ம்... வாங்க!” அவர், அழைத்தார்.

இருவரும் காரை நெருங்கினர்.

“ம்... ஏறிக்கங்க...” -புஷ்பராஜ்.

“எங்கே போறோம்?”

“உங்க வீட்டுக்குத்தான்.”

“வேண்டாம். என்னைப் பார்த்தா அவங்க பயப்படு வாங்க?”

“இல்லை. சந்தோஷப்படுவாங்க."

“நான் அங்க போக மாட்டேன்.”

“வேற என்ன பண்ணப் போறதா உத்தேசம்?”

“உங்களோட வரலாமில்லையா?”

சற்று நேர யோசனைக்குப் பிறகு “சரி” என்றார்.

திரும்பு பயணத்தின்போது புஷ்பராஜின் மனம் பல் வேறு சிந்தனைகளால் குழம்பிக் கிடந்தது. வீட்டுக்குப் போன பிறகு மற்றவற்றைப் பற்றிப் பேசி ஒரு தீர்மானத்துக்கு வரலாம் என்று நினைத்தார்.

"கிரேசி... உங்களை நான் பேர் சொல்லிக் கூப்பிடலாம் இல்லையா?” -வீட்டுக்கு வந்த பிறகு கேட்டார்.

"தாராளமா... சந்தேகம் இன்னும் மிச்சம் மீதி இருக்கா? -அவள் கேட்டாள்.

“இது வரைக்கும் நாம ரெண்டு பேரும் நாடகமாடின தாத்தான் தோணுது. யதார்த்தத்துக்குத் திரும்பலாமா?” -புஷ்பராஜ் மறுபடியும் துப்பாக்கியைக் கையில் எடுத்தார்.

“நீங்க இன்னும் என்னை நம்பலையா?” -அவளது குரல் பதற்றத்துடன் ஒலித்தது.

இல்லை. இப்போ நம்பிக்கை வரும்னு நினைக்கிறேன்." - புஷ்பராஜ் அவளை மிக நெருங்கி, அவள் 5 ஸ்களை உற்றுப் பார்த்தார்.

"உண்மையைச் சொல். நீ யார்? நீ பேசலேன்னா, நான் போலீஸில் ஒப்படைக்க வேண்டியிருக்கும். கல்லறையில இருந்த சவம், காணாமல் போன வழக்குகூட உன் மேல் வரும். சொல்லு... உன்னை அனுப்பினது யார்?”- புஷ்ப ராஜ் அவள் நெஞ்சுக்கு நேராகத் துப்பாக்கியை நீட்டியபடி கேட்டார்.

“நான் கிரேசி மாத்யூ!" அவள் எந்த விதமான பயமும் இல்லாமல் பேசினாள்.

"உன் பேரும் கிரேசி மாத்யூவா இருக்காலம். ஆனா, நீ இறந்து போனவ இல்லை. அதனால், உன்னை நான் அந்தக் கல்லறையிலேயே போட்டு மூடவேண்டி வரலாம். ஒரு பொட்டுச் சத்தம் கூட வெளியே கேட்காம ஆளைக் கொல்ற வித்தை எனக்குத் தெரியும்.” -என்றவர் சட் டென்று ஆணியில் தொங்கிய பிளாஸ்டிக் கயிறை இழுத்து அவள் கழுத்தில் போட்டு இறுக்கத் தொடங்கினார்.

ஒரு விநாடி!

அவள் வேதனையால் துடித்தாள்.

“இப்பவாவது சொல்லு... இல்லேன்னா உனக்கு மட்டும் பொழுதே விடியாமல் போயிடும்.’’ -புஷ்பராஜ் கழுத்துக் கயிற்றை மேலும் இறுக்கினார்.

"சொல்றேன். என்னைக் கொன்னுடாதீங்க!” -அவள் புஷ்பராஜின் இரண்டு கைகளையும் சேர்த்துப் பிடித்தாள்.

‘‘நீ சொல்லக்கூட வேண்டாம். உன்னைச் சொல்லியனுப்பினவனோட விலாசத்தைச் சொல்லு, வா என் கூட!” கயிற்றை உருவியெடுத்தபடி சொன்னார்.

அவர் சொல்வதைக் கேட்பதைத் தவிர அவளுக்கு வேறு வழியில்லை. அவருடன் வீட்டுக்கு வெளியே வந்தாள்.

கார், கேட்டைக் கடந்து மெயின் ரோட்டுக்கு வந்தது.

“எந்தப் பக்கம் போகணும்?” விசாரித்தார்.

நேராகவே போகச் சொல்லி அவள் சைகை செய்தாள்.

சற்றுத் தொலைவு சென்றதும் ரோட்டின் இடது புறம் வளர்ந்திருந்த மரத்தின் கீழ் நின்றிருந்த அம்பாசிடர் காரின் முன்புற மஞ்சள் விளக்கு எரிந்தது.

மெதுவாக அது நகர்ந்து சாலையைத் தொட்டது. புஷ்ப ராஜின் காரைப் பின்தொடர்ந்து வந்தது. ஏறத்தாழ ஐந்து கிலோமீட்டர் பயணத்துக்குப் பிறகு புஷ்பராஜின் கார் இடது புறமாகத் திரும்பியது.

தார் படாத சாலையது.

ஒரே ஒரு கார் மட்டும்தான் அந்தப் பாதையில் போக முடியும்.

பாதையின் இரு புறமும் புதர் மண்டி வளர்ந்திருந்தது. பாதை புதிதாகப் போட்டது போல் பளிச்சென்று இருந்தது.

“வலது புறம்.” -அவள் சொன்னாள்.

"அந்தப் பக்கம் பாதை இல்லையே?”-அவர், அவளைச் சந்தேகத்துடன் பார்த்தார்.

"ஆமாம் வழியில்லை!” -அவள் பின்புறம் திரும்பிப் பார்த்தாள். அப்போது பின்னால் வந்த காரின் மஞ்சள் லைட் அணைந்தது.

புதர்ச்செடிகளின் மீது புஷ்பராஜ் காரைச் செலுத்தினார்.

தொலைவில் ஒரு கேட் தெரிந்தது.

4

தன்னமோ ஒரு திட்டத்துடன்தான் இவள், தன்னை இந்த இடத்துக்கு அழைத்து வந்திருக்கிறாள் என்று புஷ்பராஜுக்குப் புரிந்தது.

மேற்கொண்டு புத்திசாலித்தனமாக நடந்து கொண்டால் தான் தப்பிக்க முடியும். எனவே, அவர் காரின் அருகேயே நின்றார்.

எதிர்பாராமல்தான் அந்தத் தாக்குதல் நிகழ்ந்தது. பின்னால் வந்த காரிலிருந்து நாலைந்து பேர்தாவிக் குதித்து வந்தனர். அவர்களின் கைகளில் ஆயுதங்கள் இருந்தன. விஷ்பராஜ் ரிவால்வரை எடுத்து முதலில் வந்தவனைச் சுட்டார். அவன் துடித்து விழுந்தான்.

சட்டென்று கிரேசி மாத்யூவைப் பிடித்து முன்புறம் ஒரு கேடயம் மாதிரி நிறுத்திக் கொண்டார்.

வந்தவர்களிடமும் துப்பாக்கிகள் இருந்தன. ஆனால், தங்கள் ஆள் ஒருவர் துப்பாக்கி குண்டை உடம்புக்குள் வாங்கி விழுந்ததில் சற்றுச் சோர்ந்துதான் போனார்கள். துப்பாக்கியை அவர்கள் புஷ்பராஜுக்கு நேராக நீட்டினாலும் கேடயமாக இருந்தவளைப் பார்த்ததும் தயங்கினர்.

"துப்பாக்கிகளைக் கீழே போடுங்க!" புஷ்பராஜ் கர்ஜித்தார்.

அதற்குப் பணிந்தார்கள்.

தன்னிடம் அகப்பட்டிருக்கும் பெண் மீது அவர்களுக்கு பயமோ, மரியாதையோ உண்டு என்பது தெரிந்தது. இல்லாவிட்டால், தன் பொருட்டு அவர்கள் இவளைக் கொல்லத் தயங்கியிருக்க மாட்டார்கள்!

அவளைத் திரையாகப் பிடித்துக் கொண்டே பின்புறமிருந்த காருக்கு வந்தார். கதவைத் திறந்து அவளை முதலில் உட்புறம் தள்ளிவிட்டுச் சட்டென்று அவரும் காருக்குள் ஏறி உட்கார்ந்தார்.

அதிர்ஷ்டவசமாக காரின் சாவி சரியான இடத்திலேயே இருந்தது.

காரைச் சற்றுத் தொலைவு ரிவர்ஸ் எடுத்துத் திருப்பி ஆக்ஸிலேட்டரில் காலை அழுத்தினார்.

கார், வந்த வழியிலேயே திரும்பியது.

தன்னிடம் அகப்பட்டிருப்பவள் சாதாரணமானவள் அல்ல என்று தெரிந்ததால், நேராக போலீஸ் கிளப்புக்குப் போனார்.

காரை, கிளப்பின் போர்ச்சில் நிறுத்திவிட்டு, அவளிடம் இறங்கச் சொன்னார்.

“என்னை எதுக்காக இங்க கூட்டீட்டு வந்திருக்கிங்க?" -அவள் காரிலிருந்து இறங்காமலே கேட்டாள்.

“அதெல்லாம் விவரமா அப்புறம். இப்ப இறங்கு." -அவரது குரல் கண்டிப்புடன் ஒலித்தது.

“ஒரு விஷயத்தை நீங்க தெரிஞ்சுக்கணும். என்னை நீங்க இங்க கொண்டு வந்ததுக்கான பரிசு பயங்கரமா இருக்கும்!” அவள் எச்சரிக்கை செய்தாள்.

“பரிசுகளுக்கு நான் பயப்படுறதும் இல்லை, பறக்கிறது மில்லை. இப்ப இறங்கு...ம்!” புஷ்பராஜ் கதவைத் திறந்து விட்டார்.

அவள் காரிலிருந்து இறங்கி சுற்றுமுற்றும் பார்த்தாள்.

“எந்த விதமான தொந்தரவும் இருக்காது... வரலாம்.” -அவளுக்கு வழிவிட்டு ஒதுங்கி நின்றார்.

வாசலில் துப்பாக்கி ஏந்திக் காவலிருந்த சென்ட்ரி சல்யூட் வைத்தான்.

“ஜேக்கப் சார் இருக்காரா?” -புஷ்பராஜ் சென்ட்ரி. பிடம் கேட்டார்.

“மாடியில இருக்கார்."

புஷ்பராஜ் அவளுடன் மாடிப்பகுதியை அடைந்தார். நேரங் கெட்ட நேரத்தில் அழகி ஒருத்தியுடன் வரும் புஷ்பராஜைப் பார்த்த தாமஸ் ஜேக்கப் அதிசயப்பட்டார்.

"இவங்க..?” விசாரித்தார்.

"எல்லாத்தையும் இவளே சொல்லுவாள்.”-புஷ்பராஜ், அவள் முகத்தைப் பார்த்தார்.

ஜேக்கப் தொலைபேசியின் ரிசீவரை எடுத்தார்.

சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ரேணுகாவுடன் பேசி, உடனடியாக

கிளப்புக்கு வந்து சேருமாறு சொன்னார்.

"இப்படிப்பட்ட விசாரணைக்கு ஒரு லேடி ஆபீஸர் இருக்கிறதுதான் நல்லது. இல்லேன்னா, விஷயத்தை வேற மாதிரியெல்லாம் திசை திருப்பிடுவாங்க!" - எஸ்.பி சொன்னார்.

"இதைத்தான் நான் உங்ககிட்டச் சொல்லணும்னு நெனைச்சேன்." - புஷ்பராஜ் காலியாக இருந்த நாற்காலி யில் உட்கார்ந்தார்.

ஜேக்கப், கிரேசி மாத்யூவையே பார்த்துக் கொண்டிருந்தார். அவளிடம் எந்த விதமான மாற்றமும் தென்பட வில்லை.

"உங்காரும்மா" -எஸ்.பி அவளிடம் பேசினார்.

நாற்காலியில் உட்கார்ந்தாள்.

"பேரு?"

"கிரேசி மாத்யூ!" -அவள் சாதாரணமான குரலில் பதிலளித்தாள்.

"மரணமடைந்ததாகச் சொல்லப்படுகிற கிரேசி மாத்யூ!" -புஷ்பராஜ் திருத்தினார்.

"அவளேதான்!"

"பரவாயில்லை. நல்ல பேருதான். இருந்துட்டுப் போகட்டும். நான் கேட்குறது உன்னோட உண்மையான பேரை! அப்பா-அம்மா வெச்ச பேரை. உண்மையைச் சொல்லலேன்னா, எங்களோட உபசரிப்புல நிறைய மாற்றங்கள் தென்படும்." -தாமஸ் ஜேக்கப் அவள் கண்களைப் பார்த்தபடி பேசினார்.

அதே சமயம் கீழே ஒரு வண்டி வந்து நிற்கும் சத்தம் கேட்டது. சற்று நேரத்தில் மிஸஸ் ரேணுகா அந்த அறைக் குள் நுழைந்தார்.

"குட் ஈவ்னிங் சார்!"

"குட் ஈவ்னிங். உட்காருங்க. இவங்க நமக்கு ரொம்ப வேண்டியவங்க. நிறைய விஷயங்களை இவங்க சொல்ல வேண்டியிருக்காம். என்னன்னு கேளுங்க... எஸ்.பி ஜேக்கப் அறிமுகப்படுத்தினார்.

"இனிமேல் பேசலாமில்லையா? பாப்பா, நீ யாரும்மா?" -எஸ்.பி கேட்டார்.

"என் கிட்டேருந்து உங்களுக்கு எந்த விதமான தகவ லும்

கிடைக்காது, என் உயிரே போறதா இருந்தாலும்.”

“ஒகோ... அப்படியொரு சிக்கல் இருக்கா. மிஸஸ் ரேணுகா ஒரு நிமிஷம்.” புஷ்பராஜ் அறை வாசலுக்குச் சென்று அழைத்தார்.

ரேணுகா அவரை நோக்கி நடந்தார்.

“நாங்க ரெண்டு பேரும் கீழே போய் உட்கார்ந்திருப்போம். அந்தப் பெண்ணைத் துரங்க விடாதீங்க. தரோவா செக்கப் பண்ணுங்க. விபரீதமா ஏதாவது கிடைச்சா. எங்களைக் கூப்பிடுங்க!” -புஷ்பராஜ் தாழ்வான குரலில் சொன்னார்.

பிறகு எஸ்.பி-யும், புஷ்பராஜூம் அங்கிருந்து வெளி யேறினர்.

நள்ளிரவு தாண்டி இரவு இரண்டு மணிக்குப் பிறகு...

பயங்கரமான வெடிச்சத்தம் ஒன்று கேட்டது. போலீஸ்கிளப் கட்டடமே ஒரு தடவை நடுங்கி அதிர்ந்தது. சுவர்களில் விரிசல்கள். லைட்டுகள் அணைந்தன. எங்கும் ஒரே கும்மிருட்டு.

பாராக்காரர் உட்புறமாகத் துள்ளிப் பாய்ந்தார்.

தன் மேலதிகாரிகளுக்கு ஏதாவது நேர்ந்து விட்டதோ என்பதை அறிய டார்ச் லைட்டை அடித்துப் பார்த்தார்.

"ராமகிருஷ்ணன்... அந்த டார்ச் லைட்டை இப்படிக் குடுங்க.” - புஷ்பராஜ் கையை நீட்டினார்.

டார்ச் லைட்டை வாங்கிக் கொண்டு ரேணுகாவும், கிரேசியும் இருந்த அறையை நோக்கி நடந்தார். கதவு உட்புறமாகத் தாழிடப்பட்டிருந்தது.

உதைத்துத் திறந்தார்.

உட்புறம் தென்பட்ட காட்சி மிகவும் பயங்கரமானதாக இருந்தது!

இரண்டு உடல்கள் சின்னாபின்னமாகிச் சிதைந்து கிடந் தன. அறை முழுவதும் ரத்தம் ஸ்பிரே செய்தது போல்...

வெடி மருந்தின் கடுமையான நெடி.

கருகிய தசைத் துணுக்குகளின் நாற்றம்.

புஷ்பராஜ் சட்டென்று கீழ்த்தளத்துக்கு வந்தார்.

“என்ன ஆச்சு?” -ஜேக்கப் கேட்டார்.

“ரெண்டு பேரும் சிதறிக் கிடக்குறாங்க. வாங்க முதல்ல நாம மத்தவங்களுக்குத் தகவல் தெரிவிக்கணும்.”

தொலைபேசியின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருந்தது.

ராமகிருஷ்ணனை எச்சரித்து விட்டு இருவரும் ஜீப்பில் ஏறி கண்ட்ரோல் ரூமை அடைந்தனர்.

மறு நாள் காலைப் பத்திரிகைகளில் இந்தச் செய்தி இடம்பெறவில்லையானாலும் அதற்குள் ஊருக்குள் பரவி விட்டது.

நடந்த விவரம் என்னவென்று ஊராருக்குப் புரிய வில்லை.

போலீஸ் துறையின் மீது களங்கம் சுமத்துவது மாதிரி தான் ஜனங்கள் பேசிக் கொண்டனர்.

ஆனால், போலீஸார் தேவையான உடனடி நடவடிக்கைகளையும், விசாரணைகளையும் மேற்கொள்ளவே செய்தனர்.

மரணமடைந்த கிரேசி மாத்யூ என்ற பெண்ணின் இடுப்புப் பகுதியிலிருந்த பெல்ட்டில் சக்தி வாய்ந்த வெடிகுண்டு இருந்ததுதான் விபத்துக்குக் காரணம் என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

மட்டுமின்றி, அந்த வெடிகுண்டை குறிப்பிட்ட தொலைவுக்கு அப்பாலிருந்து ரிமோட் கண்ட்ரோல் மூலம் இயக்கி வெடிக்க வைத்துள்ளனர் என்பதும் தெரிந்தது.

இந்தத் தகவல்கள் வெளியானதும் நகர மக்களின் மத்தியில் பீதியின் நிழல் படிந்தது. எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்ற பதற்றம் பரவியது.

இரவு நேரத்தில் மனிதர்களின் நடமாட்டம் பெருமளவு குறைந்து போனது.

கிரேசி மாத்யூ என்ற பெண்ணைப் பற்றி எப்படியெல்லாமோ விசாரித்தும் எந்த விதமான தகவலும் கிடைக்கவில்லை.

விசாரணை தொடர்ந்தது.

“நீங்க பார்த்த கட்டடம் எங்கே இருக்குதுன்னு உங்களால சொல்ல முடியுமா?” தாமஸ் ஜேக்கப், புஷ்பராஜிடம் கேட்டார்.

"வெறும் யூகம் மட்டும்தான்...”

"இருக்கட்டுமே! நாம் நேரடியா அங்கேயே போய்ப் பார்த்துடலாமே?”

“போகலாம்!”

இருவரும் புறப்பட்டனர்.

அன்று இரவு கிரேசி மாத்யூவுடன் திரும்பி வந்த வழியை ஒட்டி கார் விரைந்து கொண்டிருந்தது.

மெயின் ரோட்டிலிருந்து இடது புறமாகப் பிரிந்து செல்லும் செம்மண் பாதையில் கார் திரும்பியது. அந்த வழியில்தான் அன்று பயணம் செய்தோம் என்பது புஷ்பராஜுக்கு ஞாபகம் வந்தது.

ஏறத்தாழ ஐந்து கிலோமீட்டர் தூரம் பயணம் செய்ததும் பாதை முற்றுப்பெற்றது. அதையொட்டி புதர் மண்டிய பகுதி. ஊன்றிக் கவனித்தபோது பாழடைந்த ஒரு கேட் தட்டுப்பட்டது.

“இதுதான் அந்த இடம்!” -புஷ்பராஜ் கூறினார்.

இருவரும் காரிலிருந்து இறங்கினர்.

கேட்டைத் தாண்டி உள்ளே நுழைந்தபோது பழைய இரண்டு மாடிக் கட்டடம் ஒன்று தட்டுப்பட்டது.

முன்புறமாக உந்தி நிற்கும் ஒரு போர்ட்டிகோ பழைய காலப் பாணியிலான பிரமாண்ட கட்டடம். எப்போதோ கார், ஜீப் போன்ற வாகனங்கள் அந்தப் பகுதியில் பயணம் செய்ததை விளக்கிய நசுங்கி உலர்ந்த புல்பரப்பு. வீட்டின் பின் பகுதியில் உயரமான மரங்கள் கூட்டமாக வளர்ந்திருந்தன.

அந்தப் பகுதியில் எங்கும் மனித வாசனையே தட்டுப் படவில்லை.

“கதவைத் திறந்து பார்த்துடலாம்." புஷ்பராஜ் சொன்னார்.

அந்த நேரம் பார்த்துக் கட்டடத்தின் பின் பகுதியி லிருந்து தலையில் விறகுக்கட்டைச் சுமந்து கொண்டு ஒரு பெண்மணி நடந்து வந்தார்.

“கொஞ்சம் இப்படி வர்றிங்களாம்மா?” புஷ்பராஜ், அந்தப் பெண்மணியை அழைத்தார்.

விறகுக் கட்டைக் கீழே இறக்கி வைத்துவிட்டு, சேலைத் தலைப்பால் முகத்தைத் துடைத்தபடி அவர்களிடம் வந்தார் அந்தப் பெண்மணி.

"இந்த வீட்டுல யாராவது குடி இருக்கிறாங்களா?" தாமஸ் விசாரித்தார்.

“இல்லிங்களே!”

“இந்த வீடு யாருதுன்னு தெரியுமா?”

“தெரியாதுங்க!”

“நீங்க எங்க இருக்கீங்க?”

“பக்கத்துலதான். விறகு பொறுக்க வந்தேன்."

“சரி... நீங்க போகலாம்.”

விறகைத் தலையில் ஏற்றிக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தாள் அந்தப் பெண்மணி.

“எனக்கென்னமோ அந்த அம்மா மேல சந்தேகமா இருக்கு” - புஷ்பராஜ் சொன்னார்.

“அந்த உருவத்து மேலயா? உங்க சந்தேகத்துக்குக் காரணம்?”

“என்னோட யூகம் என்னன்னா, இந்தப் பெண்மணி தான் இந்தக் கட்டடத்தோட காவல்காரியா இருக்கணும். இந்த இடத்துக்கு யாரெல்லாம் வர்றாங்கன்னு வேவு பார்க்க ஏற்பாடு செஞ்சிருக்கலாம். அதோ பாருங்க... அவங்க நம்மளைத் திரும்பித் திரும்பிப் பார்க்கிறதை!”

“கொஞ்சம் நில்லுங்கம்மா." ஜேக்கப் குரல் கொடுத்தார்.

அவள் அப்படியே நின்றாள்.

“கொஞ்சம் இப்படி வாங்க. ஒரு சின்ன சந்தேகம்!”- என்றபடி புஷ்பராஜ் அவளை நெருங்கினார்.

அவள் ஓடிப்போக முற்படவில்லை.

“உங்களுக்குத் தெரியாம இருக்காது. உண்மையைச் சொன்னிங்கன்னா நல்லது. இங்க யாரெல்லாம் வர்றாங்க. எந்த மாதிரி நேரங்கள்ல இந்த கட்டடத்தோட வாசல், ஜன்னல்கள் திறக்கும்? இந்த வீட்டுல விளக்கு ஏதாவது எரியறதுண்டா?” - புஷ்பராஜ் சற்று விறைப்பான குரலில் மடக்கினார்.

அவருக்கு பதில் சொல்லாமல் அந்தப் பெண்மணி மேற்புறம் பார்த்தாள். அதே சமயம், அந்தக் கட்டடத்தின் இரண்டாவது மாடியிலிருந்து ஒரு ஜன்னல் கதவு திறக்கப்பட்டது.

5

புஷ்பராஜும், தாமஸ் ஜேக்கப்பும் அந்த ஜன்னல் கதவு திறக்கப்பட்டதைக் கவனிக்கவில்லை.

"நாங்க கேட்டது காதுல விழலியா?" ஜேக்கபின் குரல் உயர்ந்தது.

"நிஜமாத்தான்... எனக்கு எதுவுமே தெரியாது."- அவள் கடைக்கண்ணால் மேற் புறத்தைக் கவனித்தவாறே சொன்னாள்.

"அப்படின்னா நீ தெரிஞ்சதைச் சொல்றதில்லேன்னு வெச்சிருக்கிற, உன்னை இங்கேருந்து கொண்டு போறதைத் தவிர எங்களுக்கு வேற வழியே இல்லை.” -புஷ்பராஜ், அவள் தப்பித்து ஓடி விடாமல் பார்த்துக் கொண்டார்.

அதே நேரம் ஏற்கெனவே திறந்து மூடிய ஜன்னல் மறுபடி திறந்து கொண்டது.

இம்முறை புஷ்பராஜும், ஜேக்கபும் சத்தம் கேட்டதால் ஜன்னல் திறப்பதைக் கவனித்தனர்.

ஜன்னலின் இடைவெளி வழியாக ஒர் இரட்டைக்குழல் வெளியே துருத்திக் கொண்டு தெரிந்தது.

“தேவையான தோட்டா இதுல இருக்கு!” குழலுக்குப் பின்னாலிருந்து ஒரு குரல் கேட்டது.

என்ன செய்வதென்று தெரியாமல் புஷ்பராஜும், ஜேக்கபும் ஒரு கணம் தயங்கி நின்றார்கள்.

விறகைச் சுமந்து கொண்டு வந்தவள் அதன் பிறகு எதுவும் பேசாமல் மேற்குத் திசையில் நடக்கத் தொடங்கினாள். சற்று நேரத்துக்குள் அவள் புதர்க்காட்டில் மறைந்து போனாள். அவள் மறைந்த அதே விநாடியில் இரட்டைக் குழல் துப்பாக்கியும் உள்வாங்கிக் கொண்டது.

வித்தியாசமான இந்தச் சூழ்நிலையைக் கவனித்த இருவரும் எதுவும் பேசாமல் பரஸ்பரம் பார்த்துக் கொண்டனர். தற்போது இரண்டு வேலைகளில் எதை யாவது ஒன்றைச் செய்யலாம். ஒன்று, வந்த வழியே திரும்பிப் போக வேண்டும்; அல்லது அந்தக் கட்டடத்துக்குள்

நுழைய வேண்டும்.

கட்டத்துக்குள் நுழைவது என்பது அந்த நேரத்தில் புத்திசாலித்தனமான காரியமாகத் தோன்றவில்லை. முன்பின் பழக்கமில்லாத இடத்திலுள்ள பாழடைந்த கட்டடத்துக்குள் நுழைவது நல்லதா?

“என்ன செய்யலாம்?” -புஷ்பராஜ், ஜேக்கபிடம் கேட்டார்.

அவரும் பதில் எதுவும் சொல்லவில்லை.

திரும்பிச் செல்வதற்கும் அவர்களுக்குத் தயக்கமாக இருந்தது. வந்த வழியே திரும்புவதானாலும் மேற்புற ஜன்னலிலிருந்து குறிதவறாமல் சுட முடியும்.

எனவே, திரும்பிப் போவதை விட, அந்தக் கட்டடத் துக்குள் நுழைவதுதான் நல்லது என்று தீர்மானித்தனர்.

இருவரும் தங்களது துப்பாக்கிகளைக் கையில் பிடித்துக்கொண்டு கட்டட வாசலை நோக்கி நடந்தனர்.

கதவைத் தள்ளிப் பார்த்தனர்.

அது, திறந்து கிடந்தது.

வரவேற்பு அறைக்குள் நுழைந்தவர்கள், சத்தம் எழுப்பாமல் ஒவ்வோர் இடத்தையும் சோதனை இட்டனர். கீழ்ப்புற அறைகளுக்குச் செல்ல இரண்டு வாசல்களும், மேற்புறமாடிக்குச் செல்ல ஒரு படிக்கட்டும் தென்பட்டன.

மாடிப்படியின் கடைசியில் இருந்த கதவு மூடியிருந்தது. எனவே, கீழ்த்தளத்தின் அறைகளைப் பரிசோதிக்கலாம் என்று நினைத்தனர். வலது புறமிருந்த கதவை நோக்கிச் சென்றனர். அதுவும் வெறுமனே சாத்தி வைக்கப்பட்டிருந்தது.

அதற்குள் வெளிச்சம் இல்லை.

"லைட்டரை யூஸ் பண்ணாதிங்க!” புஷ்பராஜ் மிகவும் தாழ்ந்த குரலில் சொன்னார்.

சுவரில் ஒரு ஜன்னல் தெரிந்தது. அதன் இடைவெளியில் வெளிச்சம் ஒரு பட்டுநூல் தொங்குவது மாதிரி வந்து கொண்டிருந்தது. அந்த வெளிச்சம் அறையிலுள்ள பொருள்களைத் தெளிவாகக் காட்டவில்லை.

புஷ்பராஜ் மெதுவாக ஜன்னலை நெருங்கினார்.

தாழ்ப்பாளைத் தேடி, அதன் கொக்கியை விடுவித்தார்.

அறைக்குள் வெளிச்சம் பரவியது.

சட்டென்று அவர்கள் இருவரும் நின்ற இடத்திலிருந்து பின்வாங்கினர்.

அறைக்குள் சவப்பெட்டி ஒன்று இருந்தது.

வெளிநாட்டிலிருந்து பிணத்துடன் கொண்டு வரப்பட்ட சவப்பெட்டி போலிருந்தது.

அருகே சென்று பார்த்தனர்.

பெட்டியின் அகலமான பகுதியில் கண்ணாடித் துண்டு துண்டு பதிக்கப்பட்டிருந்தது.

கண்ணாடியின் பின்புறம் ஒரு பெண்ணின் முகம் தெளிவற்றுத் தெரிந்தது.

கிரேசி மாத்யூவின் உடல் கொண்டு வந்த சவப்பெட்டி மாதிரியே அது இருந்தது. அதன் அடிப்பகுதியில் அதைப் பிரித்துப் பார்த்த அடையாளம் எதுவும் இருக்கவில்லை.

“அசையாதிங்க!” -வாசல் பக்கத்திலிருந்து திடுமென்று ஒரு குரல் கேட்டது.

நிதானமாகத் திரும்பிப் பார்த்தனர். துப்பாக்கியை நீட்டியபடி ஒருவன் நின்று கொண்டிருந்தான்.

என்ன செய்வது என்று புரியாமல் இருவரும் அவனையே பார்த்துக் கொண்டு நின்றனர்.

அவனிடமிருந்ததும் இரட்டைக் குழல் துப்பாக்கிதான். இரண்டே இரண்டு தடவை டிரிக்கரை இழுத்தால் போதும் குறி தவறும் என்ற பயம்கூட வேண்டியதில்லை. துப்பாக்கிக்கு அருகில்தான் இருவரும் இருந்தனர். இருவரி டமும் ரிவால்வர் இருக்கிறது. ஆனால், அதை வெளியே எடுக்கச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. எடுக்க முற்படுவ தற்குள் எதிராளி சுட்டு விடலாம்.

"நாங்க தனியா வரலை!" -புஷ்பராஜ் சொன்னார்.

"இருக்கலாம். என்ன இருந்தாலும் நீங்க தப்பிக்க முடியாது" -என்றபடி அவன் துப்பாக்கியின் விசையை அழுத்த முற்படுவதற்குள் புஷ்பராஜ் ஒரு புலிபோல அவன் மீது பாய்ந்தார்.

அதற்குள் அவன் டிரிக்கரை இழுத்து விட்டதால், அடுத்தடுத்து இரண்டு குண்டுகள் மச்சுப் பகுதியில் பாய்ந்து காரையை உதிர்த்தன.

துப்பாக்கிக்காரன் புஷ்பராஜை ஒரு குழந்தை மாதிரி எடுத்து வீசியெறிந்தான். அதற்குள் தாமஸ் ஜேக்கப்ட டஅவனுடன் மோதத் தொடங்கினார் துப்பாக்கிக்காரனைக் குறைவாக மதிப்பிட முடியாது!

விறுவிறுப்பான போராட்டம் ஆரம்பமானது.

கடைசியில் புஷ்பராஜின் மிதியை வாங்கிப் பின்புறமாகச் சரிந்தான். விழுந்த அதே வேகத்திலேயே தனது பாக்கெட்டிலிருந்து எதையோ சடக்கென்று வாயில் போட்டுக் கொண்டான். ஒரு சில நிமிடங்களுக்குள் அந்த உடல் அசைவற்றுப் போனது.

இருவரும் அவனை நெருங்கிப் பார்த்தனர்.

"சயனைடு சாப்பிட்டிருக்கான்று நெனைக்கிறேன்." புஷ்பராஜ் சொன்னார்.

"மேற்கொண்டு...?"

"தகவல் சொல்லிடலாம்."

"அப்ப நானே நேர்ல போயிட்டு வர்றேன்." -ஜேக்கப் வெளியேறினார்.

மனித நடமாட்டமோ வாசமோ இல்லாத அந்தக் கட்டடத்தில் என்னென்னமோ ரகசியங்கள் மறைந்திருப்பதாக புஷ்பராஜுக்குத் தோன்றியது.

அங்கிருந்த சவப்பெட்டிக்குள் சடலத்தைத் தவிர வேறு ஏதாவது கூட இருக்கலாம் என்று தோன்றியது.

ஏதோ ஒரு கல்லறையைப் பெயர்த்து அதிலிருந்து கொண்டு வரப்பட்ட சுவப்பெட்டியாகத்தான் அது இருக்க வேண்டும் என்று நினைத்தார்.

கீழே விழுந்து இறந்து கிடப்பவன் கட்டடத்தைப் பார்த்துக் கொள்பவனாகவோ, பராமரிப்பவனாகவோ இருக்க வேண்டும். எந்த விநாடியிலும் எந்தத் திசையிலிருந்து வேண்டுமானாலும் ஆபத்து

வரலாம் என்பதால், சிவால்வரை எந்த விநாடியிலும் இயக்கத் தயாராக இருந்தார் புஷ்பராஜ்.

ஏறத்தாழ ஒரு மணி நேரத்துக்குள் இரண்டு வேன் நிறைய போலீஸ்காரர்கள் மேலதிகாரிகளுடன் வந்து சேர்ந்தனர். அதிரடியாக நடந்த சோதனையில் அந்தக் ட்டடத்திலிருந்து யாருமே எதிர்பார்க்காத அளவு வெடி பொருட்கள் சிக்கின.

உடலை அடக்கம் செய்த சவப்பெட்டியைத் திறந்து பார்த்தனர். அதற்குள்ளும் வெடிபொருட்கள்தான் இருந்தன.

இதிலிருந்து போலீஸாருக்கு ஒரு விஷயம் தெளிவாகத் தெரிந்தது. இதுபோல் ஏராளமான இடங்களில் இப்படிப் பட்ட ரகசிய சேமிப்புகள் இருக்கக் கூடும் என்ற முடிவுக்கு வந்தனர். பத்திரிகைகளில் செய்தி வெளியானதும் ஜனங்கள் பரபரப்பு அடைந்தனர். எந்த நேரம் என்ன நடக்குமோ என்று பயத்துடன் உலாவத் தொடங்கினர். காவல் துறை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டது.

அது ஒரு ஞாயிற்றுக்கிழமை.

புஷ்பராஜ் தனது வீட்டில் உட்கார்ந்து சில கேஸ் ஃபைல்களைப் புரட்டிக் கொண்டிருந்தார்.

இரவு மணி பதினொன்றுக்கு மேல் இருக்கும்.

வெளியே ஒரு கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. நின்ற சில விநாடிகளுக்கு உள்ளேயே திரும்பிப் போகவும் செய்தது. உடனேயே காலிங் பெல் முழங்கியது.

புஷ்பராஜ் ஜன்னல் வழியாக வெளியே பார்த்தார்.

யாரோ ஒருவர் வெளியே நின்று கொண்டிருந்தார்.

“யாரது?” -புஷ்பராஜ் கேட்டார்.

“கதவைத் திறங்க சார்... ரொம்பவும் முக்கியமான விஷயம்.’’ - வெளியிலிருந்தவர் பேசினார்.

“முதல்ல நீங்க யாருன்னு சொல்லுங்க. தெரியாமக் கதவைத் திறக்கிறதா இல்லை!”

"நான் உங்க விரோதி இல்லை... நண்பன்தான்."

புஷ்பராஜ் ஒரு விநாடி யோசித்தார்.

என்ன செய்யலாம்?

ஒருவேளை வந்திருப்பவரிடமிருந்து ஏதாவது முக்கியமான தகவல் கிடைக்கலாம். கள்ளக்கடத்தல் மற்றும் அண்டர்கிரவுண்டு கூட்டங்களுக்கு இடையே கடுமை யான போட்டி இருக்கத்தான் செய்கிறது. பரஸ்பரம் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ளச் சந்தர்ப்பம் பார்த்் திருக்கிறார்கள்- ஒவ்வொருவரும்.

எனவே, வந்திருப்பவன் யாராக இருந்தாலும் அவனிடமிருந்து தனக்கு உபயோகமான தகவல்கள் ஏதாவது பெய ரலாம் என்ற முடிவுக்கு வந்த பிறகு கதவைத் திறந்தார்.

“உள்ளே வாங்க!” -புஷ்பராஜ் கூறினார்.

இளைஞன் ஒருவன் உள்ளே வந்தான்.

அவன் திகைப்பிலிருந்து விடுபடாதவன் மாதிரி தென்பட்டான்.

“நீங்க யாருன்னு..." -புஷ்பராஜ் வார்த்தையை முடிக்கவில்லை.

"எல்லாத்தையும் விவரமா சொல்றேன் சார்” -வந்தவன் நாற்காலி ஒன்றில் உட்கார்ந்தான்.

புஷ்பராஜ் அவனை ஏற இறங்கப் பார்த்தார்.

அதிகபட்சமாக இருபத்தேழு வயதிருக்கலாம். ஆரோக்கியமான உடம்பு விடாமல் ஜிம்முக்குச் செல்பவன் என்று தோன்றியது. அரைக் கைச் சட்டையும், டைட் பாண்ட் டும் அணிந்திருந்தான்.

"என் பேரு சந்துரு. எனக்கு ரெண்டு சகோதரிகள் இருக்காங்க. இருபத்துநாலு, இருபத்திரண்டு அவங்களோட வயசு, அவங்களை மும்பையில இருக்கிற ஒரு கம்பெனி வேலைக்காகத் தேர்ந்தெடுத்தது. நான்தான் என் சகோதரிகளை அந்த விலாசத்துல கொண்டு போய்விட்டுட்டுதேன். இப்ப அவங்களைப் பத்தி எந்த விவரமும் தரியலை. நான் போய் விசாரிச்சப்போ, அந்த கம்பெனிக்ம் பயங்கரவாதிகள் சிலருக்கும் தொடர்பு இருக்க வாம்னு எனக்குத் தோணுது...” - பேசியவன் தனது பாக்கெட்டிலிருந்து கர்ச்சீஃப் எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

புஷ்பராஜ் மேஜை மீதிருந்த வாட்டர் ஜக்கை எடுத்து, கண்ணாடி டம்ளரில் நிறைத்து அவனிடம் நீட்டினார்.

அவன் இரண்டு டம்ளர் தண்ணிரைக் குடித்தான். பிறகு நீண்ட பெருமூச்சு விட்டான்.

“நீங்க என்னைத் தேடி வந்ததுக்கு என்ன காரணம்?” -புஷ்பராஜ் கேட்டார்.

“எனக்கும் அவங்க ஒரு வேலை போட்டுக் கொடுத்தாங்க.. கார் டிரைவரா! முந்தாநாள் நான் ஒட்டுற காரோட டிக்கியில் ஒரு பிணத்தை வெச்சுட்டு எங்கே யாவது போய், எப்படியாவது டிஸ்போஸ் பண்ணிடுன்னு சொன்னாங்க. இப்ப போலீஸ் ரொம்ப அலர்ட்டா இருக் கிறதால நான் முடியாதுன்னு சொன்னேன். அவங்களோட ரகசியங்கள்ல சிலதை நான் தெரிஞ்சுக்கிட்டதா அவங்க நினைச்சிருக்கணும். என்னையே தீர்த்துக்கட்டத் திட்டம் போட்டாங்க. நான் தற்காலிகமா அதுலேர்ந்து தப்பிச்சு வந்திருக்கேன். எப்படி இருந்தாலும் அவங்க என்னைக் கொன்னுடுவாங்க. அதுக்கு முன்னால எனக்குத் தெரிஞ்ச விவரங்களை உங்ககிட்டச் சொல்லணும்னு நெனைச்தேன்.”

"நோக்கம் நல்லதுதான். ஆனா, அதுக்கு என்னை எதுக்காகத் தேர்ந்தெடுக்கணும்?” புஷ்பராஜ் கேட்டார்.

“ரெண்டு மூணு நாளுக்கு முன்னால ஒரு பொண்ணை நான் உங்ககிட்டக் கொண்டு வந்தேன்."

"அந்த கிரேசி மாத்யூங்கிற பொண்ணைத்தானே சொல்றீங்க?”

"ஆமாம்... அவங்களையேதான், அதனாலதான் போலீஸ் அந்தக் கட்டடத்தையும் அதுக்குள்ள இருந்த வெடி மருந்துகளையும் கண்டுபிடிச்சாங்க. உண்மையைச் சொன்னா, உங்களைக் கொல்றதுக்காகத்தான் அந்தப் பொண்ணை இங்க அனுப்பி வெச்சாங்க. ஆனால், நீங்க தப்பிச்சிட்டீங்க."

'நீங்க சொல்றதெல்லாம் உண்மையா இருக்கலாம். இருந்தாலும் நீங்க..?”

"அந்தக் கூட்டத்தோட தலைவர் நாளைக்கு சாயந்திரம் ஃபிளைட்டில கொச்சிக்கு வர்றார்!” வந்தவன் சொன்னான்.

"அப்ப இன்னும் உங்க சகோதரிகளைப் பத்தி எந்தத் தகவலும் தெரியலை?"

"அவங்களை வெளிநாட்டுக்குக் கொண்டு போயிருப் பாங்களோன்னு பயப்படுறேன். ஒருவேளை அவங்க திரும்பிவர்றது சவமா

இருக்கலாம். அதனாலதான் அதுக்கு முன்னாடியே அந்தக் கூட்டத்தையே ஒழிச்சிடணும்னு நினைக்கிறேன்.”

“நீங்க சொல்றதை நான் நம்புறேன், ஒப்புக்கறேன். ஆனா, அதையெல்லாம் நான் உறுதிப்படுத்திக்கிற வரைக்கும் நீங்க போலீஸ் கிளப்புலயே தங்கணும். சட்டம் உங்களை எந்த வகையிலையும் தண்டிக்காம நான் பார்த்துக்கிறேன்." -புஷ்பராஜ் சொன்னார்.

அவன் சம்மதித்தான்.

சந்துருவை போலீஸ் கிளப்பில் தங்க வைத்தார்கள்.

குறிப்பிட்ட நாளன்று கொச்சி விமான நிலையத்துக்கு விபராஜூம், தாமஸ் ஜேக்கபும் செல்வதென்று தீர்மானித்தனர்.

அதிகாரபூர்வமல்லாத ரகசியப் பயணம்.

6

மணி ஏழு முப்பத்தைந்து நட்சத்திரங்கள் வெடித்துத் தெறிப்பது மாதிரி நகரசபை விளக்குகள் பிரகாசித்தன.

விமானதளத்தில் பகல் வெளிச்சம்.

அனௌன்ஸ்மென்ட் முழங்கியது.

"ஏர் இந்தியா 747 ஜாம்போஜெட் ஒவர் தி அவுட்டர் மார்க்கர். சற்று நேரத்துக்குள் விமானம் தரையிறங்கும்.”

இந்த விமானத்தில்தான் பயங்கரவாதிகளின் தலைவன் வருகிறான். அந்த நபரைப் பற்றி ஏறத்தாழ சில விவரங்கள் மட்டும்தான் புஷ்பராஜிடமும், ஜேக்கபிடமும் உள்ளன. அதுவும் சந்துரு சொல்லிக் கொடுத்த அடையாளங்களின் படி நாற்பத்தைந்து வயது. ஆறடி உயரம்.

பாண்ட்டும் கோட்டும் அணிந்திருப்பார். பின்புறமாகப் பதியவைத்து வாரிய சுருள் தலைமுடி. தடித்த ஃபிரேம் போட்ட மூக்குக் கண்ணாடி, கையில் ஒரு பிரீஃப் கேஸ்.

யாரும், எப்படியும் கண்டுபிடிக்க முடியாத ஆயுதம் ஒன்று அவர் கையில் இருக்கும். அவரது கோட் பட்டன்கள் கூட சக்தியேறிய குண்டுகளாக இருக்கும். எனவே, இந்த நிலையில் அவரைக் கீழ்ப்படுத்துவது சாத்தியமல்ல.

ஏர்போர்ட்டிலிருந்து சற்றுத் தொலைவில் புஷ்பராஜூம், எஸ்.பி தாமஸ் ஜேக்கப்பும் ஒரு மாருதி வேனுக்குள் காத்திருந்தனர்.

எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அந்த நபர் ஏர் போர்ட்டைவிட்டு வெளியே வந்தால் உடனே பிடித்துக் கொள்ள எல்லாவிதமான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

புஷ்பராஜ் தன் கையிலிருந்த நுட்பமான பைனாகுலர் மூலம் அடிக்கடி ரன்வேயைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஏறத்தாழ நாற்பது கமாண்டோக்கள் பயிற்சியில் தேர்ந்தவர்கள், சாதாரணப் பொதுமக்கள் மாதிரியும், ஊழியர்கள் மாதிரியும் ஆங்காங்கே நின்றிருந்தனர்.

உயிருடன் பிடிக்க முடியாத பட்சத்தில் சுட்டுக் கொன்று பிணத்தையாவது கொண்டு வந்து சேர்க்கும்படி மிகவும் கடுமையான உத்தரவு பிறக்கப்பட்டிருந்தது.

ஃபிளைட்டின் இரைச்சல் கேட்டது.

எங்கோ வெகுதொலைவில் ஒரு புள்ளி மாதிரித் தெரிந்த விமானம் விரைவில் பிரமாண்டமான உருவத்தில் கண்ணுக்குத் தெரிந்தது.

கமாண்டோக்களுக்கு உத்தரவு கொடுப்பதற்காக புஷ்ப ராஜ் வயர்லெஸின் ரிசீவரை எடுக்கக் குனிந்தார்.

திடுமென்று மாருதி வேனின் கதவைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு ஓர் இளம்பெண் வேனுக்குள் நுழைந்தாள்.

“ஹலோ சார் இங்க பாருங்க!” வந்தவள் வலது கையை நீட்டினாள்.

ஒரு காமிரா!

“என்னன்னு தெரியுதா?” கேட்டாள்.

“தெரியுது!” -புஷ்பராஜ் அதை உற்றுப் பார்த்தபடி சொன்னார்.

“என்ன தெரியும் இந்த ஏர்போர்ட் மட்டுமில்லாம இந்தப் பகுதியையே நாசமாக்க நான் இதோ இங்க இருக்கிற ஒரு பட்டனை அழுத்தினாலே போதும்!” அவள் மிகவும் லாகவத்துடன் சொன்னாள்.

“சரிதான். அப்படி ஏதாவது ஆகிட்டா நீங்க... நாங்க எல்லோருமே காணாமல் போயிட மாட்டமா? இதைத் தந்து விட்டவர்...?” புஷ்பராஜ் எந்த விதமான பதற்றமும் இல்லாமல் பேசினார்.

"அவர் இதுல வரலை. அப்புறமாத்தான் வர்றார்.' -அவள் வேனின் பின் ஸிட்டில் ஏறி அமர்ந்தாள்.

உடனடியாக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாமல் முன்புறத்திலிருந்த இருவரும் தவித்தனர். அவசரப்பட்டு எதையாவது செய்யப் போனால்... அவள் சொன்னபடியே கூட செய்துவிடலாம். அவளுக்கு இடப்பட்டுள்ள கட்டளைப்படி நடக்காவிட்டால், அவள் வெடிவிபத்தைவிட மோசமான மரணத்தைச் சந்திக்க வேண்டி இருக்கும் என்பதும் அவருக்குப் புரிந்தது.

இதுபோல் தற்கொலைப் படையாகச் செயல்படும் நபர்கள், ஒப்புக்கொண்ட வேலையை நிறைவேற்றாமல் திரும்பிச் சென்றால், மிகவும் குரூரமான முறையில் தண்டிக்கப்படுவார்கள் என்பதை இருவருமே அனுபவத்தில் உணர்ந்திருந்தனர்.

அதை கண்ணாரப் பார்த்தவர்களைத்தான் இப்படிப் பட்ட பொறுப்புடன் அனுப்பி வைப்பார்கள்.

"நீ ரொம்ப அழகாகவும் இருக்கிற இளம்பெண் வேற? எதுக்காகம்மா இந்த வயசிலேயே வாழ்க்கையை இப்படி நாசமாக்கிக்கிறே?" - ஜேக்கப் பேச்சில் புகுந்தார்.

“சாகிறதா இருந்தா நம்ம எல்லோரும் சேர்ந்துதான் போவோம்." அவள் காமிராவை அசையாமல் பிடித்தபடி பேசினாள்.

அப்போது விமானம் கீழ்ப்புறமாக இறங்கிக் கொண்டிருந்தது. அதிலிருந்து பயணிகள் இறங்குவதைப் பார்க்கும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஏர்போர்ட்டிலிருந்து பயணிகள் காரில் ஏறிப் புறப்பட்டுக் கொண்டிருந்தனர்.

தயாராக இருந்த கமாண்டோக்கள் எந்த விதமான உத்தரவும் கிடைக்காததால் தவித்தனர்.

“அடுத்த ஃபிளைட்டும் வந்துட்டா நீ போய்டுவ இல்லையா?" - புஷ்பராஜ் அவளிடம் கேட்டார்.

‘ஆம்’ என்பது போல் அவள் தலையாட்டிக் கொண்டாள். சட்டென்று அம்பாஸ்டர் கார் ஒன்று அந்த வேனின் அருகே வந்து நின்றது.

ஒரு காட்டுப் பூனையின் வேகத்துடன் அவள் வேனிலிருந்து துள்ளிப் பாய்ந்து இறங்கினாள். அம்பாஸ்டரில் ஏறினாள். அதற்காகவே நின்றது மாதிரி தென்பட்ட அம்பாஸ்டர் மின்னல் வேகத்தில் புறப்படவும் செய்தது.

"இதை அவள் கொண்டுட்டுப் போகலையே?" அவள் விட்டுவிட்டுப் போன காமராவைப் பார்த்தபடி ஜேக்கப் சொன்னார்.

"அது புத்திசாலித்தனமான திட்டம்னு நெனைக்கிறேன். எதுக்கும் இதை நாம உடனடியாக கொண்டு போயிடணும்." சொல்லியவர், உடனே வேனை ஸ்டார்ட் செய்தார்.

அவர்களே நம்ப முடியாத விரைவில் அவர்கள் போலீஸ் ஹெட்குவார்ட்டர்ஸை அணுகினார்கள். வெடி குண்டு நிபுணர்கள் அங்கு இருந்தனர். அவர்களது நீண்ட நேரப் பரிசோதனையில் அவள் சொன்னதெல்லாம் உண்மைதான் என்பது நிரூபணமானது. அது எந்த இடத்தில் வெடித்தாலும் சுற்றிலுமுள்ள மூன்று கிலோமீட்டர் பரப்பளவிலுள்ளதை முற்றிலுமாக அழித்து விடக் கூடிய வல்லமையுள்ள ஒரு குண்டு அது. உடனேயே அதைச் செயல் இழக்க வைக்கவும் அவர்கள் மறக்கவில்லை.

"அப்படியானால் நாம காத்திருந்த மனிதன்?' -ஜேக்கப் கேட்டார்.

"அடுத்த ஃபிளைட்டில் வரப்போறதா அவள் சொன்னது பொய். வந்த ஃபிளைட்லதான் அந்த நபர் இருந்திருக்கணும். நம்மளை திசை திருப்புறதுக்கு அவள் அப்படிச் சொல்லியிருப்பாள்னு நெனைக்கிறேன்." -புஷ்பராஜ் சொன்னார்.

"அந்தச் சூழ்நிலையில நாம அவள் சொற்படி நடக்கிறதைத் தவிர வேற வழியில்லை!" ஜேக்கப் ஏமாற்றத்துடன் சொன்னார்.

"தங்களோட சக்தியைக் காண்பிக்கத்தான் இந்த வெடி குண்டை வெச்சுட்டுப் போயிருக்கணும். மட்டுமில்லாம நமக்கு ஒரு முன்னெச்சரிக்கையும் கூட."- புஷ்பராஜ் இருந்த இடத்திலிருந்து எழுந்தார்.

மறு நாள் பத்திரிகைகளில் இந்தச் செய்தி இடம் பெறாமலிருக்க, புஷ்பராஜ் பெரிய அளவில் கவனம் செலுத்தினார். இந்தச் செய்தி வெளியானால், மக்கள் மத்தியில் வீணான பீதி ஏற்படுவதுடன், அது இந்த வழக்கு விசாரணையையே கூட திசைதிருப்பி விடும் என்று நினைத்தார் அவர்.

பயங்கரவாதிகளின் தலைவன் கொச்சிக்கு வந்து சேர்ந்து விட்டான் என்கிற செய்தி போலீஸ் வட்டாரங்களில் ரகசியமாகப் பரிமாறப்பட்டது. ஆனால், அந்த மனிதன் எப்படிப்பட்டவன், உருவம் எப்படி? என்பது போன்ற எதுவும் போலீஸாருக்குத் தெரியவில்லை. அதனால் நகரின் முக்கியமான ஒட்டல்களில் உருவத்தைக் காட்டி

எச்சரிக்கை செய்யவோ, ரெய்டு நடத்தவோ முடியாமலிருந்தது.

அதே நேரம் நகரின் முக்கியமான எல்லா ஓட்டல் களிலும் ரகசிய போலீஸார் என்னென்னவோ வேஷங் களில் காத்திருந்தனர்.

அந்தச் சூழ்நிலையில்தான் பத்திரிகைகளில் மற்றொரு செய்தி வந்தது.

கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள ரத்தினங்கள் மற்றும் தங்க பிஸ்கெட்டுகளுடன் ஒருவர் காரில் நேஷனல் ஹைவேஸில் பயணம் செய்தார். பயணம் செய்த கார் மாருதி 1000. காரின் விரைவைப் பார்த்து சந்தேகப்பட்ட ரோந்து போலீஸார் பார்த்து மறித்துச் சோதனை போட முற்பட்டபோது, அந்த மனிதரிடம் சக்தி மிகுந்த வெடி குண்டு இருந்ததால் போலீஸாரிடமிருந்து சுலபமாகத் தப்பித்துவிட்டதாகவும் அந்தச் செய்தி கூறியது.

அந்தச் செய்தி மிகவும் முக்கியத்துவத்துடன் முதல் பக்கத்தில் வெளியாகியிருந்தது.

செய்தி வெளியான விநாடியிலிருந்து மக்கள் மத்தியில் ஒரு பரபரப்பு தென்பட்டது. அதன் பிறகு இரவு நேரங் களில் தனியாக விரைந்து செல்லும் வாகனங்களை மக்கள் அச்சத்துடன் கவனித்தனர்.

ஓட்டல் புளூபார்க்கின் நூற்றியெட்டாம் நம்பர் அறைக்குள் டேபிள் லாம்ப்பின் வெளிச்சம் தெரிந்தது.

இரவு மணி பதினொன்றுக்கு மேல் ஆகிவிட்டிருந்தது.

ரிசப்ஷன் கௌண்ட்டரில் இருந்த இளைஞன் சுவாரஸ்யமில்லாமல் தூங்கி வழிந்து கொண்டிருந்தான். பார் பகுதி அப்போதும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது.

ஓட்டலுக்கு வெளியே மாருதி கார் ஒன்று வந்து நின்றது.

இளம்பெண் ஒருத்தி காரிலிருந்து இறங்கி நேராக ரிசப்ஷனுக்கு வந்தாள். இருபத்துமூன்று வயதிருக்கலாம். சினிமா நடிகை மாதிரி இருந்தாள். சுருண்ட முடி, தலையை அலங்கரித்தது. ஒருவேளை விக் ஆகக்கூட இருக்கலாம். கழுத்தில் ஒரு வெள்ளை நிற பவழமாலை. கையில் வாட்ச். வேறு எந்த விதமான நகைநட்டுகளும் கிடையாது.

தோளில் பேக் ஒன்று கிடந்தது. நிறையப் பொருள்கள் கொள்ளக் கூடிய ஒரு சாம்சனைட் பேக். ஆனால், அதன் வயிற்றுக்குள் போதுமான தீனி இல்லை.

"மிஸ்டர் ராபின்சன் எந்த ரூம்ல இருக்கார்? -வந்தவள், ரிசப்ஷனிஸ்டிடம் கேட்டாள்.

அவன் அவளை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்தான்.

“உங்க பேர் ரோஸியா?” அவன் திருப்பிக் கேட்டான்.

"எஸ்."

"ரூம் நம்பர் நூற்றுப்பதினெட்டு. செகண்ட் ஃப்ளோர்.” -லிஃப்டைச் சுட்டிக் காட்டியபடி சொன்னான்.

“தாங்க்ஸ்!” -என்றவள் படிக்கட்டை நோக்கி விரைந்தாள்.

அவள் அங்கிருந்து மறைந்தவுடன் ரிசப்ஷனிஸ்ட் பழையபடி கண்களைமூடி முன்புறமாகச் சாய்ந்தான்.

"ஹலோ... ஹலோ... கொஞ்சம் எழுந்திருங்களேன்." யாரோ ஒருவர் டெஸ்க்கைத் தட்டியது கேட்டு ரிசப்ஷனிஸ்ட் தலையை உயர்த்தினான்.

“என்ன... என்ன சார்... என்ன வேணும்? -தூக்கக் கலக்கத்தில் விசாரித்தான்.

வந்திருந்தவன் பாரிலிருந்து வந்திருக்க வேண்டும். நீண்ட தாடி வளர்த்திய ஓர் இளைஞன். பயிற்சியால் சீராக வைக்கப்பட்டிருக்கும் உடம்பு. சராசரி உயரத்தை விடச் சற்றுக்குள்ளம் என்று சொல்லலாம். உடம்பைக் கவ்வும் பணியனுடன், பாண்ட் அணிந்திருந்தான். இறக்கை விரித்துப் பறக்க முற்படும் வெளவால் மாதிரி அவனது இருபுறப் புருவங்களும் அடர்த்தியுடன் இருந்தன.

“இப்ப வந்த லேடி... எந்த ரூமுக்குப் போனாங்க?" -வெகு சாதாரணமாக விசாரித்தான்.

“உங்களுக்கு என்ன சார் வேணும்?” ரிசப்ஷனிஸ்ட் சுறுசுறுப்புக்காக சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்தான்.

“நல்ல கேள்வி. அந்தப் பெண்ணுக்காகத்தான் நான் இவ்வளவு நேரமும் பார்ல காத்திட்டிருந்தேன்." -தாடியை வருடியபடி பதிலளித்தான்.

ஒரு தடவை எதிரே இருப்பவனை ஊன்றிக் கவனித்த ரிசப்ஷனிஸ்ட் பிறகு கண்களைச் சுளித்தான்.

“நீங்க சொல்றது நல்லதாத் தோணலையே?” -நிதான மாகப் பேசியபடி சிகரெட் சாம்பலை ஆஷ்ட்ரேயில் தட்டினான்.

சட்டென்று வலதுகையை உயர்த்திய தாடிக்காரன், ரிசப்ஷனிஸ்ட்டின் நெஞ்சுப் பகுதிச் சட்டையைக் கொத்தாகப் பிடித்தான். அவன் கை மேற்புறமாக உயர்ந்தது. அவன் பக்கமாக விசையுடன் இழுத்தது. இப்போது ரிசப்ஷனிஸ்ட் கௌண்டரின் இந்தப் பக்கம் வந்து விட்டிருந் தான்.

“இப்ப சொல்லிடலாம்னு தோணுதா?” -அவனது பிடி மேலும் சற்று இறுகிய பின்பு தளர்த்திவிட்டுக் கையை எடுத்தான்.

ரிசப்ஷனிஸ்ட்டுக்கு உண்மையைச் சொல்வதைத் தவிர வேறு வழி எதுவும் தெரியவில்லை.

“என்னை விட்டுத் தள்ளி நில்லுங்க. எங்க ஆளுங் களைக் கூப்பிடுவேன்." -ரிசப்ஷனிஸ்ட் பிடிவாதக்காரன் மாதிரி பேசினான்.

“தம்பி... தேவையில்லாம பிரச்சினையைக் கிளப்பாத. இந்தா... இதைப் பார்த்தியா? சட்டென்று அவனது பாக் கெட்டிலிருந்து எதையோ எடுத்து கிளிக்கினான். இரு புறமும் கூர்மையான கத்தி ஒன்று நீளமாகப் பளபளத்தது. பட்டன் தட்டினால் நீண்டு விடும் கத்தி!

மேற்கொண்டு பிரச்சினையை உண்டாக்குவதில் விருப்பமில்லாததாலோ என்னவோ, ரிசப்ஷனிஸ்ட் சரியான பதிலைச் சொன்னான்.

முழுவதையும் கேட்டவுடன் சட்டென்று லிஃப்ட் பக்கமாக விரைந்தான் தாடிக்காரன். ரிசப்ஷனிஸ்ட் உடனே இன்டர்காமில் நூற்றுப் பதினெட்டை எச்சரித்தான்.

நூற்றுப் பதினெட்டில் தொலைபேசி விநோதமாக மணியடித்தது.

“உங்களுக்குதான் போன்.” ரோசி, அங்கிருந்தவனிடம் கொடுத்தாள்.

சந்தேகம் நிரம்பியவனாக ராபின்சன் ரீசிவரை எடுத்தான். முப்பத்திரண்டு வயதான ராபின்சன் திடகாத் திரமான உடம்பின் சொந்தக்காரன்.

கழுத்தில் சிலுவை போட்ட ஒரு மாலை. இடதுகையின் மோதிர விரலில் மண்டையோட்டின் வடிவில் ஒரு பிளாட்டின மோதிரம். தீட்சண்யமான கண்கள். கச்சிதமாக வெட்டப்பட்ட மீசை

மேல்தாடைப் பகுதியிலேயே நிறுத்தித் திருப்பப்பட்ட தாடி, நீல நரம்புகள் புடைத்து நிற்கும் முன்கைப் பகுதிகள்.

ரிசீவரை எடுத்த உடனேயே யாரோ கதவைத் தட்டும் சத்தம். ரிசீவரை அப்படியே வைத்தான்.

"கதவைத் திறக்கணுமா?" -ரோஸி கேட்டாள்.

“திறந்து விடு!” -ராபின்சன் தனது பாக்கெட்டிலிருந்து சுருட்டு ஒன்றை எடுத்து அதன் மேற்புற பாலித்தீன் கவரைப் பிரித்து உருவி எறிந்தபடி சொன்னான். சிகார் லைட்டை எரியவிட்டான்.

அதற்குள் ரோஸி கதவைத் திறந்து விட்டிருந்தாள்.

சட்டென்று ரோஸியைக் கையில் தூக்கிக்கொண்டு கீழேயிருந்து வந்தவன் நேராக அறைக்குள் நுழைந்தான்.

7

அந்தக் காட்சியைக் கண்ட பிறகும் ராபின்சன் அசையவே இல்லை!

"இதைப் பார்த்தீர்களா!” ரோஸியின் கழுத்தில் உத்தியைப் பதித்தபடி தாடிக்காரன் பேசினான்.

"இதில் என்ன இருக்கிறது? என்னைப் போன்ற ஒருவனுக்கு ஒரு பெண் மரணமடைவதில் என்ன ஆச்சரியம் இருக்கப் போகிறது? நான் எவ்வளவோ பேரைக் கொலை செய்திருக்கிறேன்.'' என்ற ராபின்சன் மிகவும் ஸ்டைலாகச் சுருட்டுப் புகையை வளையமாக வெளியேற்றிக் கொண்டிருந்தான்.

இந்த வார்த்தைகளைக் கேட்டவன் ரோஸியைத் தூக்கிக் கட்டிலில் வீசியெறிந்தான். அதன் பிறகு கத்தியை மேஜை மீது குத்தி நிற்க வைத்தான்.

“நீங்கள் இங்குதான் இருப்பீர்கள் என்ற தகவல் கிடைத்ததால் நான் நீண்ட நேரமாகக் காத்திருக்கிறேன். பாருக்கு வருவீர்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால், வரவில்லை. இவள் வந்த பிறகுதான் எனக்கு விஷயம் பிடிபட்டது.”

“அதற்கு ரோஸியை உங்களுக்குத் தெரியுமா என்ன?” ராபின்சன் கேட்டான்.

“நல்ல கேள்வி! அண்டர்வேர்ல்டில் இவளைத் தெரியாதவர்கள் யாராவது இருக்கிறார்களா என்ன? அந்த அளவுக்குக் கெட்டிக்காரியாயிற்றே!” பேசியவாறே காலால் நாற்காலி ஒன்றை இழுத்துப் போட்டு அதில் உட்கார்ந்தான்.

“நீங்கள் எதற்காக வந்திருக்கிறீர்கள்? அதை இன்னும் சொல்லவில்லையே?” ராபின்சன் சுருட்டுச் சாம்பலைத் தட்டிவிட்டபடி கேட்டான்.

“வந்திருப்பது உங்களைச் சந்திக்கத்தான். பத்திரிகை படித்தேன். இந்த அளவுக்கு தங்க பிஸ்கட்டுகள் மற்றும் வைரக் கற்களை நீங்கள் ஒருவர் மட்டுமே அனுபவிப்பதும் சரியல்லவே!” அவன் கட்டிலின் அடிப்பகுதியைக் கண்களால் துழாவினான்.

“உங்களைச் சொல்லியனுப்பியது யார்?”

“கங்காபிரசாத்! உங்களைப் பற்றிக் கேள்விப்பட்டதுமே அவர் என்னை அனுப்பி வைத்தார்.”

“யார் இந்த கங்காபிரசாத்?” ராபின்சன் கேட்டான்.

“நல்ல கேள்வி. உங்களுக்கு உண்மையிலேயே அவரைத் தெரியாதா? அவர் உங்களை இதுவரை நேரில் பார்க்க வில்லை என்றாலும் நிறையக் கேள்விப்பட்டிருக்கிறார். டெல்லியின் திஹார் ஜெயிலிலிருந்து தப்பித்த நீங்கள், இங்குதான் வெளிப்படுவீர்கள் என்று நாங்கள் கணக்குப் போட்டோம்.”

"அப்படியானால், உங்களுக்கு எல்லாம் தெரியும்... இல்லையா?” ராபின்சன் இண்டர்காமை எடுத்தான்.

“விஸ்கி ஒரு கோர்ஸ். கொரிப்பதற்கு கொஞ்சம் முந்திரிப்பருப்பு.” ஆர்டர் செய்தான்.

சற்று நேரத்துக்குள் ரூம்பாய் கதவைத் தள்ளித் திறந்து கொண்டு டிரே ஒன்றுடன் அறைக்குள் வந்தான்.

“இந்த நள்ளிரவு வேளையிலும் நீங்கள் குடிப்ப துண்டா?” தாடிக்காரன் கேட்டான்.

"எனக்கு மட்டுமல்ல... உங்களுக்கும் சேர்த்துதான்."

"ஒரு விஷயத்தைச் சொல்லி விடுகிறேன். நான் வந்திருப்பது குடிப்பதற்கு அல்ல. நீங்கள் எடுத்து வந்திருக்கும் வைரக்கற்களைக்

கொண்டு செல்வதற்காகத்தான். தங்க பிஸ்கட்டுகள் எனக்குத் தேவையில்லை. அதற்கு இப்போது மார்க்கெட் கிடையாது!”

"அப்படியானால், அவற்றுக்குரிய விலை?”

"அதையெல்லாம் அவர் தீர்மானிப்பார்!”

"யார்... கங்காபிரசாத்தா?”

"ஆமாம்.”

"அப்படியென்றால் சுமார் மூன்று கோடி ரூபாய் பெறுமானமுள்ள வைரக்கற்கள் என்னிடம் உள்ளன. அவற்றில் ஒன்றை நான் உங்களுக்குக் காட்டுகிறேன்.” என்ற ராபின்சன் கட்டிலின் கீழே, காலைச் சாய்த்து வைத்த பிறகு முன்புறமாக இழுத்தான். பிரீஃப் கேஸ் ஒன்று விசையுடன் முன்னால் வந்தது.

அதைக் கையில் எடுத்துத் திறந்தவன் அதிலிருந்து சிவப்பு நிறப் பட்டுப்பை ஒன்றை வெளியில் எடுத்தான். 24 கிரேடுள்ள கல் ஒன்றை டேபிள் லேம்ப்பின் வெளிச்சத்தில் பிடித்தான்.

ஆச்சரியம்!

அந்த அறை முழுவதும் வானவில்லின் வண்ணங்கள் தத்தித் தவழ்ந்தன. தாடிக்காரன் வியப்பினால் அசை வற்றுப் போனான்.

ரோஸி கண்ணிமைக்க மறந்தாள்.

ராபின்சன் அந்தக் கல்லை அசைத்தபோது சுவர், மச்சுப்பகுதி போன்றவற்றில் கேலக்ஸிகள் பிறப்பெடுத் தன. பல்வேறு வண்ணத்திலான நட்சத்திரங்கள் வெடித்துத் தெறித்தன.

"இதைப் பார்த்து விட்டால் அவர் உங்களைச் சும்மா விடுவார் என்று தோன்றவில்லை!"

“புரியவில்லை...”

“எதையும் கேட்டு வாங்கும் வழக்கம் கங்காபிரசாத் துக்குக் கிடையாது.

“வேறு..." ராபின்சன் கேட்டான்.

"வேறு வழியில் வாங்க அவருக்குத் தெரியும்.”

"நான் இதை அவரிடம் கொண்டு போய்க் கொடுக்க வேண்டுமா என்ன?" ராபின்சன் அந்தக் கல்லைச் சிவப்புப் பைக்குள் போடத் தொடங்கியதும் தாடிக்காரன் அதைக் காலால் தட்டிவிட்டதும் ஒரே நேரத்தில் நிகழ்ந்தன.

ராபின்சனின் கையிலிருந்து அந்தப் பட்டுத் துணிப்பை தொலைவில் போய் விழுந்ததால் வைரங்கள் அறை யெங்கும் சிதறி விழுந்தன.

தாடிக்காரனின் கையில் கண்ணிமைப்பதற்குள் கத்தி ஒன்று பளபளத்தது. அவன் கத்தியை ஓங்கியபடி ராபின்சனை நோக்கிப் பாய்ந்தான். சட்டென்று மேற்புறமாகப் பாய்ந்த ராபின்சன் மின் விசிறியின் இதழ்களைப் பிடித்துக் கொண்டு தாடிக்காரனை ஓங்கி மிதித்தான்.

அவனின் கீழ்த்தாடையில் ஷூவின் முனைபட்டது. அதனால் மட்டமல்லாக்க விழுந்தான். ராபின்சன் அவன் நெஞ்சின் மீது பாய்ந்தான். அப்போது மேலும் இருவர் அந்த அறைக்குள் நுழைந்தனர். அதில் ஒருவன் கதவை உட்புறமாகத் தாழிட்டான்.

தன்னிடமிருக்கும் வைரக் கற்களையும் தங்க பிஸ்கட்களையும் கவர்ந்து செல்வதற்காக முறையாகத் திட்டமிட்டு வந்திருப்பவர்கள் அவர்கள் என்பது ராபின்சனுக்கு விளங்கியது.

சட்டென்று ராபின்சன் துள்ளியெழுந்தான்.

அதற்குள் புதியவர்கள் இருவரும் ராபின்சனைத் தாக்கத் தொடங்கியிருந்தனர். அவர்களில் ஒருவன் கராத்தேயில் கெட்டிக்காரன்.

கராத்தேக்காரனின் முகத்தை லட்சியமாக்கி காலை உயர்த்தினான். விநாடிக்குள் அதை உணர்ந்து கொண்ட ராபின்சன் பின்னுக்கு நகர்ந்து இடதுகால் பூட்ஸை தரையில் ஓங்கி மிதித்தான்.

'டக்' என்றொரு சத்தம் கேட்டது.

ராபின்சன் அந்தக் காலை உயர்த்தி ஒரு முறை சுழன்றான்.

கராத்தேக்காரனின் வலது காலின் முன் பகுதியில் ராபின்சனின் ஷூ பதிந்தது. 'ஐயோ' என்று அலறியபடி அவன் பின்புறமாக மல்லாந்தான். அவன் கால் துளைத்துக் கொண்டு கீறியது போலிருந்தது. அதற்கான காரணம் அங்கிருந்த எவருக்கும் விளங்கவில்லை.

உடனே மற்றவன் தனது பாண்ட்டை மேற்புறமாகச் சற்றுச் சுருட்டி முழங்கால் பகுதியில் பெல்ட் போட்டு வைத்திருந்த வாளை உருவினான். லைட் வெளிச்சத்தில் அந்த வாள் பளபளத்தது.

அவன் வாளை ராபின்சனின் கழுத்துக்கு நேராக வீசினான். கண்ணிமைப்பதற்குள் குனிந்த ராபின்சன் விசையுடன் அவன் நெஞ்சில் தலையால் மோதினான். அதே நேரம் அவன் இடதுகால் வந்தவனை ஓங்கி மிதிக்கவும் செய்தது.

அவன் உரத்த குரலில் அலறினான். அவன் நெஞ்சி லிருந்து ரத்தம் பீரிட்டுக் கொண்டிருந்தது.

அதற்குள் முதலில் வந்தவன் வைரக் கற்களை வாரிப் பையில் போட்டு விட்டிருந்தான்.

ஒரு விநாடி நேரம் அவனைக் கவனித்த ராபின்சன் ஒரே பாய்ச்சலில் அவன் கை மீது கால்களை ஊன்றி நின்றான். வைரப்பை வைத்திருந்தவனின் கை, அந்தக் கால்களுக்கு அடியில் நெரிபட்டுக் கொண்டிருந்தது.

நடுங்கிய அந்தக் கைகளிலிருந்து வைரப்பை நழுவியது.

“எழுந்திரு!” ராபின்சன் அவன் கண்களை ஊன்றிப் பார்த்தபடி கட்டளையிட்டான்.

அவனுக்கு அப்போது கீழ்ப்படிவதைத் தவிர வேறு வழியில்லை.

பாத்ரூம் கதவைத் திறந்த ராபின்சன் அவனை அதற்குள் போட்டான். அதன் பிறகு மற்ற இருவரையும் இழுத்துக் கொண்டு போய் அதற்குள் தள்ளினான். பிறகு கதவை இழுத்துச் சாத்தி வெளிப்புறமாகத் தாழிட்டான்.

வைரக்கல் பையுடன் ராபின்சன் நாற்காலி ஒன்றில் அமர்ந்தான். எதுவும் நடக்காததுபோல் இயல்பாக சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்து, வைரப் பையை பழையபடி பிரீஃப் கேஸாக்குள் வைத்துப் பூட்டினான்.

“நீங்கள் இங்கு இருப்பதாக யார் தகவல் சொல்லி யிருப்பார்கள்?” ரோஸி கேட்டாள்.

“நானும் அதைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தேன். கங்காபிரசாத் இங்கு வந்திருக்கிறார் என்று எனக் குத் தெரியும். ஆனால், என்னிடம் இதெல்லாம் இருப்பது அவருக்கு எப்படித்

தெரிந்தது?” ராபின்சன் இருக்கையிலிருந்து எழுந்து நிம்மதியற்றவனாக அறைக்குள் அங்கும் இங்கும் உலவினான்.

நடுநடுவே அவன் தனது கைக்கடிகாரத்தைக் கவனிக்கவும் செய்தான்.

"ஒரு விஷயம் எனக்கு உறுதியாகத் தெரிகிறது. இன்னும் ஒரு மணி நேரத்துக்குப் பிறகு விஷயம் வேறொரு பாதைக்குத் திரும்பும்!” அவன் தனக்குத்தானே பேசிக் கொண்டான்.

"அது எப்படி?’ ரோஸி கேட்டாள்.

"நான் இங்கு இருப்பது தெரிந்துவிட்ட நிலையில் அவர்கள் சும்மா இருக்க மாட்டார்கள். இங்கு வந்தவர்கள் என்னை அவரிடம் கொண்டுபோய்ச் சேர்க்காவிட்டால், அவர் அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்வார்!”

அப்போது போலீஸ் கிளப்பில் துப்பறிவாளர் புஷ்பராஜும், தாமஸ் ஜேக்கபும் கங்காபிரசாத்தைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தனர். அந்தச் சந்தர்ப்பத்தில் தான் திஹார் ஜெயிலிலிருந்து புகழ்பெற்ற அண்டர்வேர்ல்ட்டு நாயகன்களில் ஒருவனான கிளமெண்ட் டிசூஸா தப்பித்த தகவல் அவர்களுக்குக் கிடைத்தது. அவனுக்கு பிளாக் டைகர் (கருஞ்சிறுத்தை) என்றொரு பெயரும் உண்டு. அதுதான் வெளியுலகத்துக்குத் தெரிந்த புகழ்பெற்ற பெயரும் கூட.

“இவன்தான் பிளாக்டைகர்!” குற்றவாளிகளின் புகைப் படங்கள் அடங்கிய ஆல்பத்தைத் திறந்து காட்டியபடி தாமஸ் ஜேக்கப் கூறினார்.

புஷ்பராஜ், அந்த உருவத்தை வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

தாமஸ் ஜேக்கப் அந்தப் புகைப்படத்தையும், புஷ்ப ராஜின் முகத்தையும் மாறிமாறிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஆல்பத்தைக் கையில் எடுத்த புஷ்பராஜ் அங்கிருந்த நிலைக் கண்ணாடியை நெருங்கினார். அந்தப் படத்தையும் தன் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தார்.

தன் நெற்றியின் இடது புறத்தில் அவர் விரலால் வருடினார்.

"மிஸ்டர் புஷ்பராஜ், உங்களுக்கும் பிளாக் டைகருக் கும், நல்ல உருவ ஒற்றுமை இருக்கிறது. நெற்றியில் வடுவும், தாடியும் இணைந்தால் நீங்கள் பிளாக் டைகரே தான்!” எஸ்.பி கூறினார்.

"உண்மைதான்!" ஒப்புக்கொண்ட புஷ்பராஜ் தனது இருக்கையில் வந்து அமர்ந்தார்.

‘பிளாக்டைகரின் பிரத்தியேகத் தன்மைகள்’ என்று புகைப்படத்தின் வலப்புறத் தாளில் கொடுக்கப்பட்டிருந்த தகவல்களை அவர்கள் பரிசோதித்தனர்.

‘உறுதியான தசைப்பிடிப்பான உடம்பு. கராத்தேயில் திறமைசாலி. காட்டுப்புலியின் வேகமும், தந்திரமும் கொண்டவன். எவரையும் சட்டென்று நம்பும் இயல்பு அவனுக்கு இல்லை. பெண்களிடம் அவனுக்கு விரக்தி தான். எந்தவித ஆயுதமும் இன்றி ஐந்து அல்லது ஆறு பேரைச் சமாளிக்கும் வல்லமை கொண்டவன். கண்ணில் கருவிழியை ஒட்டி சிறு மச்சம் ஒன்று உண்டு.

புஷ்பராஜ் வாசித்தார்.

“கண்ணின் மச்சம் இப்போது செயற்கையாகப் பொருத்தக்கூடிய ஒன்றுதான். மற்றவை எதுவும் குறிப் பிடத் தக்க விஷயம் கிடையாது.” எஸ்.பி கூறினார்.

"கிளமெண்ட் டிசூஸா இப்போது எங்கிருக்கிறான் என்று நமக்கு உடனடியாகத் தெரிந்தாக வேண்டும்.” டெலிபோனை நெருங்கிய புஷ்பராஜ் கண்ட்ரோல் ரூமைத் தொடர்பு கொண்டார்.

கடிகாரத்தில் விநாடி முள் விரைவாக நகர்ந்து கொண்டிருந்தது. அந்த அறைக்குள் அதைத் தவிர வேறு சத்தம் எதுவும் கேட்கவில்லை.

“இப்போது நகரிலுள்ள எல்லா ஒட்டல்களிலும் ரகசிய போலீஸாரின் கண்கள் பதிந்துள்ளன. எனவே, எப்படியும் உடனே தகவல் கிடைக்கும் என்று நம்புகிறேன்.’’ என்ற புஷ்பராஜ் மறுபடியும் கிளமெண்ட் டிசூஸாவின் படத்தை ஊன்றிக் கவனிக்கத் தொடங்கினார்.

சட்டென்று எதுவோ ஞாபகம் வந்தவரைப் போல் இருக்கையிலிருந்து எழுந்த புஷ்பராஜ் தனது பிரீஃப் கேஸைத் திறந்தார். அதிலிருந்து சிறிய பெட்டி ஒன்றை வெளியே எடுத்தார்.

அதற்குள் பல்வேறு வகையான காண்டாக்ட் லென்ஸ்கள் இருந்தன. கண்மணியின் நிறத்தை மாற்றக் கூடிய வெவ்வேறு வகையான லென்ஸ்கள் அதில் நிறைய இருந்தன. நீண்ட நேரத் தேடலுக்குப் பிறகு கரும்புள்ளி கொண்ட லென்ஸ் ஒன்றைத் தேடி எடுத்தார்.

அதை எடுத்துக் கண்ணில் பொருத்தினார்.

கண்ணாடியில் பார்த்தார். படத்தில் இருப்பது போல் துல்லியமாக இருந்தது. அவர் உதட்டில் புன்னகை ஒன்று விரிந்தது.

"சந்தேகமே வேண்டியதில்லை. உங்கள் கண்ணிலும் துல்லியமான அதே மச்சம் இடம்பெற்றுவிட்டது. தாமஸ் ஜேக்கப் சற்று நேரம் ஊன்றிக் கவனித்த பிறகு கூறினார்.

“இனி மற்ற பொருட்களுடன் மேக்கப் போட வேண்டியதுதான். அதற்கு முன் பிளாக்டைகர் எங்கிருக்கிறான் என்று கண்டுபிடிக்க வேண்டும்!” என்ற புஷ்பராஜ் டெலிபோனைப் பார்த்தார்.

அப்போது டெலிபோன் மணியடித்தது.

புஷ்பராஜ் ரிசீவரை எடுத்தார்.

8

“யார் பேசியது?” தாமஸ் ஜேக்கப் கேட்டார்.

“நமக்கு வேண்டிய ஒரு வெயிட்டர்தான். ஒட்டல் புளு பார்க்கிலிருந்து பேசினார். நூற்றுப் பதினெட்டாம் நம்பர் ரூமில் நாம் சந்தேகப்படுபவர்கள் வசிக்கிறார்களோ என்ற சந்தேகமாம்.” புஷ்பராஜ் பதிலளித்தார்.

அப்போது நகரின் பரபரப்புக் குறைந்த பகுதி ஒன்றில் ‘நர்சரிப் பள்ளிக்கூடம்’ என்று போர்டு மாட்டப்பட்ட பெரிய கட்டடம் ஒன்றுக்குள் கங்காபிரசாத் வெகு பத்திர மாகத் தனது அடுத்த கட்ட நடவடிக்கைகளைக் குறித்துத் திட்டமிட்டுக் கொண்டிருந்தார்.

ஏறத்தாழ இரண்டு வருடங்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் அந்த மழலையர் பள்ளி, கங்கா பிராசத்தின் செயற்கூடமாகவும் விளங்கியது. வெளிப்புறத் தோற்றத்துக்கு அது சின்னஞ்சிறு குழந்தைகள் படிக்கும் ஒரு பள்ளிக்கூடம். அந்தப் பகுயிலேயே அது ஒன்றுதான் அப்படிப்பட்ட பள்ளிக்கூடம். அங்கு படிக்கும் குழந்தைகள் பெரும்பாலும் மேல்தட்டுக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். நிர்வாகமும், ஆசிரிய-ஆசிரியைகளும் மேனாட்டு முறையிலேயே நடந்து கொண்டனர்.

இப்படிப்பட்ட ஒரு திரையின் மறைவில் கள்ளக்கடத்தல் மற்றும் போதை மருந்து விற்பனை அந்த மையத்தில் அமோகமாக நடந்து வந்தது. எவருக்கும் ஒருபோதும் எப்படிப்பட்ட சந்தேகமும் ஏற்பட்டது இல்லை. அந்த இரண்டு மாடிக் கட்டடத்தின் கீழே தரைத்தளத்தில்

மற்றொரு பகுதியும் ரகசியமாக இயங்கி வந்தது. அதற்குள் எல்லா விதமான சௌகரியங்களும் இருந்தன.

கங்காபிரசாத் எக்ஸ்கியூட்டிவ் நாற்காலியில் அமர்ந்து கொண்டு எதிரிலுள்ள திரையையே பார்த்துக் கொண்டிருந்தார்.

திஹார் ஜெயிலிருந்து தன் எதிராளிகளில் ஒருவனான பிளாக்டைகர் தப்பித்த தகவல் அவருக்குத் தெரிந்தது. பிளாக் டைகரை அவர் இதுவரை கேள்விப் பட்டிருக் கிறாரே தவிர, நேரில் பார்த்தது இல்லை.

அண்டர்கிரவுண்ட் வேர்ல்டில் எத்தனையோ, சக்ரவர்த்திகள் இருந்தனர். ஆனால், அவர்களுக்குள் நேரடியான சந்திப்புகளுக்கோ, பழக்கத்துக்கோ வாய்ப்பு இருப்ப தில்லை. பெரும்பாலானவர்கள் எதிராளியைத் தொலைப்ப திலேயே குறியாக இருப்பவர்கள். இந்தக் கணக்குகளைச் சரிசெய்யாவிட்டால், தங்களது வியாபாரம் சிதறி நாசமாகி விடும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

பிளாக்டைகர் கெட்டிக்காரன் என்பது கங்காபிரசாத்துக்கும் நன்றாகவே தெரியும். கொலம்பியாவிலிருந்து நேரடியாக போதை மருந்தைக் கடத்தும்போது அவனை ஒரு இண்டர்நேஷனல் ஏர்போர்ட்டில் போலீஸ் சுற்றி வளைக்கவும் செய்தது. முப்பது வருடக் கடுங்காவல் தண்டனை வழங்கி அவனைச் சிறையில் அடைக்கவும் செய்தனர். அங்கிருந்தும் கெட்டிக்காரத்தனமாக அவன் தப்பிக்கவே செய்தான்.

அவனுக்குப் பெரிய அளவில் ஒரு ரசிகர் மன்றமே இயங்கியது. அதில் அதிகமானவர்கள் பெண்கள்தான். அவன் கையாட்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள். ஏறத்தாழ எல்லோருமே பட்டப் படிப்பு பெற்றவர்கள். பெண்களுக்குத் தேவையான எந்த ஒரு பொருளையும் கொண்டுவந்து கொடுப்பதில் அவர்கள் ஒருபோதும் தயக்கம் காட்டியதில்லை.

புகழ்பெற்ற வழக்கறிஞர் பெண்மணி ஒருவர் சிறையதி காரிகளை வசப்படுத்தி, கிளமெண்ட் டிசூசாவைச் சந்தித்தார். ஒருமுறை டிசூசாவின் பிறந்தநாள் என்று கூறி, சிறையில் உள்ள மொத்தப் பேருக்கும் அவர் இனிப்பு வழங்கவும் செய்தார்.

போதை மருந்து கலந்த அந்த சாக்லெட்டைச் சாப்பிட்ட மொத்தப் பேரும் மயங்கிய நிலையில் இருக்கும் போதுதான் டிசூசா, ஜெயில் வார்டனின் உடையில் அங்கிருந்து தப்பித்தான்.

அவன் தப்பித்த மறு விநாடியே கங்காபிரசாத் தகவல் தெரிந்து கொண்டார். அவர் கேரளாவுக்கு வந்ததேகூட அப்படியொரு நோக்கத்துடன்தான்.

பிளாக் டைகரின் கைவசம் விலையுயர்ந்த ரத்தினக் கற்கள் இருப்பது கங்காபிரசாத்துக்குத் தெரியும்.

அவருக்கு எதிரிலிருந்த திரையில் கள்ளக் கடத்தல் காரர்கள் மற்றும் குற்றவாளிகளின் புகைப்படங்கள் மாறிமாறித் தெளிவடைந்து கொண்டிருந்தன.

பிளாக் டைகர் குறித்த தகவல் மற்றும் உருவ அடையாளங்களை ஜெயில் அதிகாரிகளிடமிருந்து கைப்பற்றிய கங்காபிரசாத், ஒவ்வொரு புகைப்படத்தையும் ஊன்றிக் கவனித்துக் கொண்டிருந்தார்.

அவர் எதிர்பார்த்த ஒரு புகைப்படம் தட்டுப்பட்டதும் கையை உயர்த்தி அப்படியே நிறுத்துமாறு கூறினார். திரையில் அந்தப் படம் மட்டும் அப்படியே அசைவற்று நின்றது. அது, பிளாக்டைகரின் படம்தான்.

“அந்த வலது கண்ணை ஃபோகஸ் செய்யுங்கள்.” கங்காபிரசாத் உத்தரவிட்டார்.

அந்தக் கண் பகுதி மட்டும் தொடர்ந்து பெரிதாகிக் கொண்டே வந்தது. கடைசியில் அந்தக் கண் திரை முழுவதிலும் பரவி நின்றது.

"அப்படியானால் இது ஒன்றுதான் அவனுடைய சிறப்பு அடையாளம்' கங்காபிரசாத் கூறினார்.

அவருக்குப் பின்னால் புரொஜக்டரை இயக்கிய நபரைத் தவிர மேலும் நான்கு பேர் இருந்தனர். அது கபார்சிங்கின் கூட்டம்.

“கபார் சிங், நம் ஆட்கள் இப்போது ஒட்டல் புளூ பார்க்கை அடைந்திருப்பார்கள் இல்லையா?” கங்கா பிரசாத் கேட்டார்.

“வெறும் ஒரு சந்தேகத்தின் அடிப்படையில்தான் நம் ஆட்கள் அங்கு போயிருக்கிறார்கள். சந்தேகத்துக்கு உரிய நபர் ஒருவர் அங்கு தங்கியிருக்கிறார் என்பதுதான் நமக்குக் கிடைத்த தகவல். அதனால் எதையும் உறுதியாகச் சொல்வதற்கு இல்லை!” கபார்சிங் பதிலளித்தார்.

"அந்த இடத்தின் இப்போதைய நிலைமையைத் தெரிந்துகொள்ள ஏதாவது வாய்ப்பு இருக்கிறதா?”

“முயற்சி செய்யலாம். இதுதான் போன் நம்பர்!” கபார்சிங் துண்டுக் காகிதத்தில் எழுதிக் கொடுத்தார்.

கங்கா பிரசாத் காட்லெஸ் போனில் நம்பரை டயல் செய்தார்.

எதிர் முனையில் ரிசப்ஷனிஸ்ட், "ஹலோ...” என்று தொடங்கி ஒட்டல் பெயரைத் தெரிவித்தார்.

“... ... ...”

“நீங்கள் குறிப்பிட்ட அடையாளம் உள்ளவர் போல் தான் ஒருவர் இருக்கிறார். அவருடன் ஒரு பெண்ணும் இருக்கிறார்.”

“வேறு ஏதாவது தகவல்கள்...”

"அவர் அறையில்தான் இருக்கிறார். வெளியே எங்கும் போனதாகத் தெரியவில்லை!”

“முடிந்த அளவுக்கு வெளியே போகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். அதற்குரிய பரிசு உங்களுக்கு நிச்சயம் கிடைக்கும்.”

“அது எப்படி என்னால் முடியும்?”

“உங்களால் அது முடியாவிட்டால், அதற்கான பலனை அனுபவிக்க வேண்டியிருக்கும்!”

சிரியாக அந்த நேரம் டிடெக்டிவ் புஷ்பராஜ் ஒட்டல் புளூபார்க்கை அடைந்திருந்தார்.

அவரைப் பார்த்த ரிசப்ஷனிஸ்ட் வியப்படைந்தான்.

‘நூற்றுப் பதினெட்டாம் நம்பர் அறையில் வசிக்கும் ராபின்சன் இதோ எதிரில் நின்று கொண்டிருக்கிறாரே!’

'இது எப்படிச் சாத்தியம்? நீங்கள் வெளியே போனதை நான் கவனிக்கவில்லையோ?” வரவேற்பாளர் புலம்பினான்.

“என்னுடைய அறைச்சாவி தொலைந்துவிட்டது..." ராபின்சனின் வேடத்தில் வந்திருந்த புஷ்பராஜ் தனது பாக்கெட்டுகளில் தீவிரமாகத் தேடியவாறு கூறினார்.

“நீங்கள் எப்போது அறையை விட்டு வெளியே போனீர்கள்?” ரிசப்ஷனிஸ்ட் கேட்டான்.

“நான் வெளியே போனபோது நீங்கள் அரை மயக்க நிலையில் தூங்கிக் கொண்டிருந்தீர்கள்.” புஷ்பராஜ் தயங்காமல் பொய் சொன்னார்.

‘அவர் சொல்வது ஒருவேளை உண்மையாகவும் இருக்கலாம்!” என்று அவன் நம்புவதாகத் தோன்றியது.

“ஒவ்வோர் அறைக்கும் இரண்டு சாவிகள் மட்டும் தான். தயவு செய்து இதையும் தொலைத்துவிடாதீர்கள்.” மேஜை டிராயரிலிருந்து ஒருசில நிமிடங்களுக்குள் மாற்றுச் சாவியை எடுத்துக் கொடுத்தான் அவன்.

புஷ்பராஜ் அந்தச் சாவியை அப்படியும் இப்படியுமாகத் திருப்பிப் பார்த்தார்.

அதன் வளையத்தில் பொறிக்கப்பட்டிருந்த ரூம் நம்பரை புஷ்பராஜ் கவனித்தார். அறை எண்ணைக் கண்டுபிடிப்பது அவரது நோக்கம். தெரிந்து விட்டது... நூற்றுப் பதினெட்டு.

லிஃப்ட்டுக்கு முன்னால் வந்து நின்றார். சோம்பலுடன் அது அவரை மேற்புறம் கொண்டுவந்து சேர்த்தது.

கண்ணிலிருந்து மறைவதுவரை ரிசப்ஷனிஸ்ட் அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

புஷ்பராஜ் நூற்றுப் பதினெட்டின் முன்னால் வந்து நின்றார். இரு புறமும் பார்த்தார். சாவித்துவாரம் வழியாக உட்புறத்தைக் கவனித்தார். பிளாக்டைகர் பிரீஃப் கேஸுடன் வாசலை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

‘ஒரு நிமிடம் தாமதித்திருந்தால் கூட எல்லாம் வீணாகி யிருக்கும்!’ புஷ்பராஜ் எச்சரிக்கை அடைந்தார்.

கதவு உள்வாங்கித் திறந்த அதே விநாடியில் புஷ்ப ராஜின் வலது கை மிகுந்த விசையுடன் ராபின்சன் டிசூசாவின் நெஞ்சில் பதிந்தது.

எதிர்பாராத இந்தத் தாக்குதலால் அவன் அறைக்குள் மட்டமல்லாக்க விழுந்தான். அந்த அதிர்ச்சியில் அவன் கையிலிருந்த பிரீஃப் கேஸாசம் தொலைவில் வழுக்கியபடி விரைந்து போய்ச் சுவரில் மோதியது.

ராபின்சன் சுதாரித்து எழுந்திருக்க முற்படுவதற்குள் ஆச்சரியம் அடைந்தான். தன்னைப் போலவே தோற்ற மளிக்கும் ஒருவர் தனக்கு முன்னால் நிற்கிறார்!

ரோஸியும் ஆச்சரியமடைந்தாள்.

இருவரில் யார் அசல், யார் போலி என்ற சந்தேகம் அவனுள் உயர்ந்தது.

"யார் நீ?" ராபின்சன் அலறினான்.

“உஷ்... மெதுவாக, மெதுவாகப் பேசினால் இருவருக்குமே நல்லது” புஷ்பராஜ் டிசூசாவின் கண்களை ஊன்றிப் பார்த்தபடி பேசினார்.

அவனும் அவரை அப்படியேதான் பார்த்தான்.

“உண்மையைச் சொல்... யார் நீ?” இம்முறை அவன் குரல் தாழ்வாக ஒலித்தது.

"அதை நாம் இருவரும் சேர்ந்துதான் தீர்மானிக்க வேண்டும்!" வார்த்தைகள் முடிவதற்கு முன்பாக தரையில் நின்றிருந்த ராபின்சனின் நெஞ்சில் எம்பிக் குதித்துப் பாய்ந்த கால்கள் இரண்டும் விசையுடன் தாக்கின. அவன் கட்டிலில் மட்டமல்லாக்கச் சரிந்தான். இம்முறை அந்தத் தாக்குதலை எதிர்பார்த்தவன் போல் சட்டென்று துள்ளி யெழுந்தான். இடது காலைத் தரையில் அழுத்தி நின்றான்.

‘டக்’ என்றொரு சத்தம் கேட்டது.

சுமார் இரண்டரை அங்குல நீளமுள்ள ஸ்டீல் கத்தி ஒன்று ஷகுவின் முனையில் துருத்திக் கொண்டு நின்றது.

புஷ்பராஜும் தாமதிக்காமல் தன் வலதுகாலைத் தரையில் அழுத்தினார். சுமார் அரையடி நீளமுள்ள அதே போன்ற பளபளப்பான ஸ்டீல் கத்தி நீண்டு வந்தது.

“இப்போது என்ன செய்யலாம்?” புஷ்பராஜ் கேட்டார்.

ராபின்சனின் முகத்தில் அதுவரை தென்பட்ட குரூர உணர்ச்சி சட்டென்று மாறியது. வந்திருப்பவர் ‘சாதாரண மனிதர் அல்ல!’ என்ற எச்சரிக்கை உணர்வு அதில் தென்பட்டது.

உடலால் எதிராளியைச் சமாளிப்பது சுலபமல்ல என்பது விளங்கியவுடன், கண்ணிமைப்பதற்குள் பாண்ட் பாக்கெட்டிலிருந்து பிஸ்டலை உருவினான்.

அதைவிட விரைவாகச் செயல்பட்ட புஷ்பராஜின் வலதுகால் அந்தக் கையைப் பலமாகத் தட்டியது. விசை யுடன் மேற்புறம் உயர்ந்த பிஸ்டல் சுழலாமல் கிடந்த ஃபேனின் இதழ்கள் ஒன்றில் போய்ப்

படுத்துக் கொண்டது.

ராபின்சன் மீண்டும் தோல்வியடைந்தான். புஷ்பராஜின் ஷஜூவில் இருக்கும் கத்தி, தன் உடலைக் கிழித்து விடுமோ என்று ராபின்சன் முதல் தடவையாக பயந்தான். எனவே, கடைசி முயற்சியாகத் தன் கைக்குக் கிடைத்த பிரீஃப் கேஸை புஷ்பராஜின் முகத்தை நோக்கி வீசினான்.

இம்முறை அவன் பயந்ததுபோல் புஷ்பராஜின் கத்தி முனை அவன் முழங்காலில் பதியவே செய்தது.

அவன் ஒர் அலறலுடன் புரண்டான்.

“மேற்கொண்டு அசைந்தால் கொல்வதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை!" எச்சரித்த புஷ்பராஜ் அவனை இழுத்துச் சென்று குளியலறைக்குள் தள்ளி கதவை இழுத்துச் சாத்தினார்.

“உன் பெயர் என்ன?” புஷ்பராஜ் மிரண்டு போய் நின்றிருந்த ரோஸியிடம் கேட்டார்.

"ரோஸி...” நடுக்கத்துடன் வந்தது அவள் குரல்.

“நான்தான் உண்மையான பிளாக்டைகர். இனி நீ என்னுடன் இணைந்து பணியாற்றினால் போதும்!”

அவள் அதை உண்மையென்று நம்பினான் என்றே சொல்லலாம். நடந்ததைப் பார்த்தால் அது உண்மை யாகவே இருக்க வேண்டும்.

“முதலில் நாம் இங்கிருந்து வெளியேற வேண்டும். கங்காபிரசாத் என்கிற தாதா இங்கு வந்து சேர்ந்திருக்கிறான். அது உனக்குத் தெரியுமா?” புஷ்பராஜ் கேட்டார்.

"கேள்விப்பட்டேன்."

“எப்படி?”

"நான் ஏழு வருடங்களாக இவர்களுடன் செயல்படுறேன். தகவல் தெரிந்து கொள்ள எங்களுக்கு வாய்ப்புகள் அதிகம்.”

“என்னை நீ எப்படித் தெரிந்து கொண்டிருக்கிறாய்?”

"நீங்கள் சிறையிலிருந்து தப்பித்து இங்கு வந்திருப்பதாக வக்கீல் ஜெயமாலினி எனக்குத் தகவல் தெரிவித்தார்.”

"ஜெயமாலினியை உனக்கு எப்படிப் பழக்கம்?"

"அது ஒரு நீண்ட கதை!" என்றவள் பாத்ரூம் பக்கம் பார்த்தாள்.

அப்போது கதவை யாரோ வலுவாகத் தட்டினர்.

9

'யாராக, இருக்கும்?' என்ற யோசனையுடன் புஷ்பராஜ் எச்சரிக்கையுடன் அறைக் கதவைத் திறந்தார்.

ஆறடி உயரத்துடன் ஆஜானுபாகுவான ஒருவர் அறைக்குள் நுழைந்தார். பாண்ட்- ஷர்ட் அணிந்திருந்த அவர் கருமையான போர்வையால் உடலின் மேற்புறத் தைப் போர்த்தியிருந்தார். தலையில் 'வி' தொப்பி இருந்தது. கைகள் இரண்டும் போர்வைக்குள் மறைந்திருந்தன.

"உன்னைத் தேடித்தான் வந்திருக்கிறேன்" வந்தவரின் குரல் அவ்வளவு மென்மையானது என்று சொல்ல முடியாது.

வந்திருப்பவர் தன்னை பிளாக்டைகர் என்று நினைக்கிறார் என்பது புஷ்பராஜுக்கு விளங்கியது. நினைவு மண்டலத்தில் ஒருசில விநாடிகள் தேடியபோது வந்திருப் பது கங்காபிரசாத் என்பது துல்லியமாக விளங்கியது.

"வீணாக எதிர்ப்பதால் எந்த விதமான பலனும் கிடையாது. என் கையில் மெஷின்கன் உள்ளது. கருணை இல்லாதவன் என்று எனக்கு ஒரு கெட்ட பெயரே உண்டு. மற்றவர்கள் கடைசியாகச் செய்வதை ஆரம்பத்திலேயே செய்வது என் வழக்கம்!" அந்தக் குரல் நிதானமாக ஒவ்வொரு வார்த்தையாகப் பேசியது.

சூழ்நிலை சரியில்லை. மோதலைத் தவிர்ப்பதே புத்திசாலித்தனம்.

"சரி... உங்கள் விருப்பப்படியே!" புஷ்பராஜ் வாசலை நோக்கி நடந்தார்.

கங்காபிரசாத் அவரைப் பின்தொடர்ந்தார். அறைக்கு வெளியே வராந்தாச் சுவரில் சாய்ந்தபடி பன்னிரண்டு உருவங்கள் நின்று கொண்டிருந்தன.

புஷ்பராஜ் நடக்க நடக்க ஒவ்வொருவராக அவருடன் சேர்ந்து கொண்டிருந்தனர்.

அவர்கள் லிஃப்டை நெருங்கும்போது இருவர் மட்டுமே புஷ்பராஜுடன் மீதமாயினர். லிஃப்ட் கீழ் நோக்கி இறங்கும்போது புஷ்பராஜ் கேட்டார். "நீங்கள் எல்லாம் யார்?"

“இங்கு அதிகமாகப் பேச வேண்டாமே...” ஒருவன் ரகசியமாகக் கிசுகிசுத்தான்.

அதன் பிறகு எவரும் எதுவும் பேசவில்லை.

கீழ்த்தளத்தில் சுமார் எட்டுப் பேர் இயல்பாக நிற்பது போல் வளைத்திருந்தனர்.

‘ஒரு பெரிய கூட்டமே வந்திருக்கிறது. பிளாக்டைகர் என்ற பெயரில் இவர்களுடன் செல்வதும் நல்லதற்குத் தான்! புஷ்பராஜ் தனக்குத்தானே சமாதானம் செய்து கொண்டார்.

ஒட்டலுக்கு முன்னால் வேன் ஒன்று தயாராக நின்றிருந்தது. அங்கும் இரண்டு பேர் காவலிருந்தனர். எல்லாம் திரைப்படத்தில் நடப்பதுபோல், திட்டமிட்ட கச்சிதமான ஏற்பாடுகள்!

புஷ்பராஜ் வேனை நெருங்கியதும் திறந்திருந்த கதவின் வழியாக ஏறி இருக்கை ஒன்றில் அமர்ந்தார். ஏற்கெனவே அதற்குள் நால்வர் இருந்தனர்.

அவருக்காகவே காத்திருந்தாற் போல் வேன் நகரத் தொடங்கியது. அதன் கண்ணாடிக் கதவுகளை உட்புறம் கடினமான திரை மறைத்திருந்தது. வண்டி விரைகிறது என்பதைத் தவிர அவரால் வேறு எதையும் தெரிந்து கொள்ள முடியவில்லை.

முப்பது நிமிடங்களுக்குப் பிறகு வேன் நின்றது.

யாரோ வெளியிலிருந்து வேன் கதவைத் திறந்தனர்.

வெளியே கூரிருட்டு. எதையும் நிதானிக்க முடியவில்லை.

ஒர் அறைக்குள் நுழைந்தபோதுதான் மின்சார விளக்கு வெளிச்சம் தென்பட்டது.

"அப்படி உட்கார்!”

எக்ஸ்கியூட்டிவ் சேர் ஒன்று முன்னால் தென்பட்டது. புஷ்பராஜ் அதில் அமர்ந்தார்.

ஒட்டல் அறையில் மேற்கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல்

ரோஸி தவித்துக் கொண்டிருந்தாள்.

சட்டென்று அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது. குளியலறையில் கிடப்பவரை முதலில் விடுவிப்போம். அங்கிருந்து வெளியேறுவது பாதுகாப்பு அல்ல.

அவள் கதவைத் திறந்தவுடன் ராபின்சன் கழுத்தைத் தடவிக் கொண்டே வெளியே வந்தான்.

“எங்கே அவன்?” பார்வையால் அறையைத் துழாவிய படி அவன் கேட்டான்.

“எனக்கு எதுவும் விளங்கவில்லை. நீங்கள் யார் என்று முதலில் சொல்லுங்கள்!” அவள் கேட்டாள்.

“என்ன உனக்குத் திடீர்ச் சந்தேகம்? நான்தான் ராபின்சன் - பிளாக்டைகர்!” அவன் குரல் பதற்றத்துடன் ஒலித்தது.

"இங்கு என்னவெல்லாமோ நடந்து விட்டது. அவரை, ஒருவர் வந்து அழைத்துப் போனார்.”

“வந்தவர்கள் போலீஸ்காரர்கள் என்றால், நான் தப்பித்து விட்டதாக அர்த்தம்!”

“வந்தவர்கள் போலீஸாகத் தெரியவில்லை. உங்களைப் போல் இருந்தவர், அவர்களுடன் எந்தவித மோதலும் இல்லாமல் கிளம்பிப் போனார்.”

"அப்படியானால், இதற்குப் பின்னணியில் வேறு ஏதோ நோக்கங்கள் உள்ளன. நாம் முடிந்த விரைவில் இங்கிருந்து கிளம்ப வேண்டும். இங்கு நாமிருக்கும் ஒவ்வொரு நொடியும் ஆபத்தானது!” ராபின்சன் தாடையை வருடிய படி பேசினான்.

"எங்கே போவது? போலீஸ் உங்களைத் தேடிக் கொண்டிருக்கிறதே?”

"அதையெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். நீ உடனே கிளம்பு!”

“இதே வேடத்தில் நீங்கள் பயணம் செய்வது நல்ல தல்ல.” ரோஸி எச்சரித்தாள்.

“சரி... நீ முதலில் கீழே போய் டாக்ஸி ஒன்றை அமர்த்து. நான் பின்னாலேயே வருகிறேன்."

“உங்களிடம் பணம் உள்ளதா? எல்லாவற்றையும் வந்தவர்கள்

வாரிக்கொண்டு போய்விட்டார்களே!”

"இருக்கிறது. நம் தேவைக்கும் அதிகமாக அது என்னி டம் பத்திரமாக உள்ளது. நீ பயப்பட வேண்டாம்.”

ரோஸி கதவைத் திறந்து கொண்டு கீழ்நோக்கி விரைந்தாள்.

சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்த ராபின்சன் பாத்ரூமை எட்டிப் பார்த்தான். அங்கு எந்த விதமான அசைவும் இல்லை.

ரோஸி திரும்பி வந்தாள்.

“டாக்ஸி ரெடி!"

இருவரும் ரிசப்ஷனை அடைந்ததும் ராபிசன்சன் இரண்டு ஐந்நூறு ரூபாய் நோட்டுகளை ரிசப்ஷனிஸ்ட் டிடம் கொடுத்துவிட்டுச் சாவியை எடுத்துப் போட்டான்.

டாக்ஸியில் அவர்கள் ஏறியதும், "எங்கே சார் போக வேண்டும்?” டிரைவர் கேட்டார்.

“போய்க் கொண்டே இருங்கள் சொல்கிறேன்."

வண்டி மெயின் ரோட்டில் அவசரமில்லாமல் விரைந்தது. ஏறத்தாழ இரண்டு கிலோ மீட்டர் போனதும் ராபின்சன், டிரைவரின் தோளைத் தொட்டான் “அந்த இரண்டு மாடிக் கட்டடத்துக்கு முன்னால் நிறுத்துங்கள்!”

கார் நின்றது.

ரோஸி அங்கிருந்த போர்டை வாசித்தாள்: “டாக்டர் சாராம்மா எம்.டி.”

கார் நின்றதும் ராபின்சன் நூறுரூபாயை நீட்டினான். டிரைவர் அறுபது ரூபாயைத் திருப்பித் தந்தார்.

வீட்டுக்கு வெளியே லைட் ஒன்று எரிந்து கொண்டிருந்தது. ராபின்சன் காலிங்பெல்லை அழுத்தினான். ஒரு சில விநாடிகளில் கதவு திறந்தது.

நைட்டி அணிந்த, முப்பத்தைந்து வயது மதிக்கத் தக்க பெண்மணி ஒருவர் தூக்கக் கலக்கத்துடன் கேட்டாள் “என்ன விஷயம்?”

“உள்ளே போய்ப் பேசலாமே!” ராபின்சன் சொன் னான்.

ரோஸியை ஒரு தடவை பார்த்த பிறகு அந்தப் பெண்மணி வழிவிட்டு

ஒதுங்கி நின்றாள்.

இருவரும் வீட்டுக்குள் நுழைந்தனர்.

வரவேற்பு அறையின் வெளிச்சத்தில் சாராம்மா ஜேக்கப் இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

“உங்களுக்கு என்ன வேண்டும்?” சாராம்மா கேட்டாள்.

"நாங்கள் இங்கு தங்க வேண்டும்!’ சோபாவில் அமர்ந்தபடி ராபின்சன் கூறினான்.

“நீங்கள் யார் என்றே எனக்குத் தெரியாது. உங்கள் நடவடிக்கைகள் எனக்குப் பிடிக்கவில்லை. நான் போலீஸைக் கூப்பிட வேண்டியிருக்கும். நீங்களாகவே வெளியேறினால் நல்லது!” சாராம்மா டெலிபோனை நெருங்கினாள்.

"டெலிபோனைத் தொடாமலிருந்தால் நல்லது. என் பெயர் கிளமெண்ட டிசூசா. உங்கள் சகோதரர் ஜான் ஜேக்கபின் நண்பன்."

ராபின்சனின் வார்த்தைகளைக் கேட்டதும் சாராம்மா திடுக்கிட்டாள். கால்கள் தரையில் ஒட்டவைத்தது போல் அசைவற்று நின்றுவிட்டன. சற்று நேரத்துக்குப் பிறகே அவள் சுயநினைவு பெற்றவள் போல் மற்றொரு சோபா வில் அமர்ந்தாள்.

போதை மருந்துக் கடத்தலில் புகழ்பெற்றவனான ஜான் ஜேக்கப், சாராம்மாவின் சகோதரன் என்பது வெளியுலகில் எவருக்கும் தெரியாது. வெளியுலகில் அவன் 'ஜாக்கல்’ என்று பெயர் பெற்றிருந்தான். ஒரு தடவை பம்பாய் போலீஸாரால் கைது செய்யப்பட்டபோது, நீதிமன்றத்துக்குப் போகும் வழியில் தப்பித்தான். ராபின்சனின் கூட்டத்தார்தான் அவனை அப்போது காப்பாற்றியவர்கள். வெடி குண்டு ஒன்றை வெடிக்கச் செய்து போலீஸின் கவனத்தைத் திசைதிருப்பிக் கெட்டிக்காரத்தனமாக அவர்கள் அதை நிறைவேற்றினர்.

சாராம்மா ஆழ்ந்து மூச்சுவிடுவது அந்த இரவின் அமைதியில் தெளிவாகக் கேட்டது.

“அவன் இப்போது எங்கிருக்கிறான்?” சாராம்மா கேட்டாள்.

"பம்பாயில்தான். தற்போது அவனைப் பற்றி அதிகமான தகவல்களைத் தெரிந்து கொள்ள என்னால் முடிய வில்லை. மிச்சத்தை நாளை இரவில் பேசிக் கொள்ளலாம். பகல் நேரத்தில் உங்களுக்கு

நேரமிருக்காதே. நாங்கள் இப்போது ஒய்வு எடுக்க வேண்டும்.'' பேசிய ராபின்சன் எழுந்தான்.

சாராம்மா அவர்களை மேல் மாடிக்கு அழைத்துச் சென்றாள். திருமணம் புரியாத சாராம்மா தனியாகத்தான் வசிக்கிறாள். வேலைக்காரி ஒருத்தி துணை. அவள் பெரும்பாலும் இரவைக் கழிப்பது அவளது வீட்டில்தான். அதனால் அன்று அவளும் இல்லை. இது பழக்கமாகி விட்டதால் தனியாக வசிப்பது சாராம்மாவுக்குப் புதிய விஷயமில்லை.

மறு நாள் மருந்துவமனைக்குச் சென்ற சாராம்மா மாலையில் சீக்கிரமாகவே வீடு திரும்பினாள். மொத்தத்தில் சாராம்மா நிம்மதி இழந்தவளைப் போல் தென்பட்டாள். கள்ளக்கடத்தல் கும்பலைச் சேர்ந்தவன் தனது வீட்டில் வசிப்பது வெளியே தெரிந்தால் சமூகத்தில் தனது நிலைமை எப்படி இருக்கும் என்பதை யோசிக்க யோசிக்க அவளால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. அதே சமயம் அவர்களை வெளியேற்றி அனுப்பவும் அவள் பயந்தாள் என்பதும் உண்மை.

வேலைக்காரி வழக்கம்போல் கிளம்பி விட்டாள். இரவுச் சாப்பாட்டுக்குப் பிறகு மேல்மாடிக்கு வந்த சாராம்மா கேட்டாள். "மேற்கொண்டு என்ன செய்வதாக உங்கள் திட்டம்?"

"தற்சமயம் என்னால் எதுவும் சொல்ல முடியவில்லை. அப்படிப்பட்ட ஒரு நிலையில் இருக்கிறேன் நான். போலீஸ் வெளியே என்னை வேட்டையாடுகிறது. கொஞ்சம் அசந்தாலும் நான் உயிரிழக்க நேரும்!" சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்ட ராபின்சன் கூறினான்.

"என்னுடைய நிலையையும் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். இங்கு எனது தொழில் தொடர்பான டாக்டர் களும், மருந்து கம்பெனிக்காரர்களும் அடிக்கடி வருவார்கள். அவர்களிடம் நான் உங்களை என்னவென்று சொல்ல முடியும்?"

"உங்கள் தூரத்துச் சொந்தக்காரர்கள் என்று சொல்லுங்கள்."

சாராம்மா யோசனையில் ஆழ்ந்தாள். 'தான் ஒரு சிக்கலில் அகப்பட்டிருக்கிறோம். ராபின்சனைப் பகைத்துக் கொள்வது பல்வேறு ஆபத்துகளை வரவழைக்கும். அனாவசியமாக சகோதரனின் பெயரும் வெளியே வரலாம். எனவே, தற்சமயம் மௌனமாக இருப்பதுதான் நல்லது. "சரி..." என்ற சாராம்மா எழுந்து கீழ்த்தளத்துக்குப் போனாள்.

“இங்கு தங்குவதுதான் உங்கள் திட்டமா?” ரோஸி, அவனிடம் கேட்டாள்.

“இல்லை. முதலில் என் வேடத்தில் வந்தவன் யாரென்று கண்டுபிடிக்க வேண்டும். அவனை எங்கே கொண்டு போனார்கள்? இதையெல்லாம் நான் செய்யா விட்டால் எனக்கு பதிலாக நான் என்று நம்பிப் பிடித்துக் கொண்டு போனவனால் நான் மேலும் மேலும் சிக்கலுக்குள் அமிழலாம். எனவே, அவனையும், அவனைக் கடத்திச் சென்றவர்களையும், உடனடியாக நான் கண்டு பிடித்தாக வேண்டும்.” ராபின்சன் எழுந்து ஜன்னல் வழியாகச் சாலையை வேடிக்கை பார்த்தான்.

ரோட்டில் வாகனங்கள் போய்க் கொண்டும் வந்து கொண்டுமிருந்தன. தனக்குப் பழக்கமான இடம். இந்த நகரின் ஒவ்வொரு மூலையும் முடுக்கும் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

‘அவன் எங்கு கொண்டு போகப்பட்டிருக்கலாம்?’ -ராபின்சன் யோசித்தான்.

டிடெக்டிவ் புஷ்பராஜ், கங்காபிரசாத்துக்கு முன்னால் அமர்ந்திருந்தார்.

"மிஸ்டர் கிளமெண்ட் டிசூசா, இப்போதைய உங்களது அவதாரப் பெயர் என்னவோ?” கங்காபிரசாத் கேட்டார்.

“ராபின்சன். அதைத் தவிர நீங்களாக வேறு ஏதாவது பெயரைக் கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ள நான் தயார்!” புஷ்பராஜ் கூறினார்.

“ராபின்சனே நன்றாக இருக்கிறது. உங்களை நான் இங்கு கொண்டு வந்திருப்பது ஒரு குறிப்பிட்ட நோக்கத் துக்காகத்தான். அதன்படி நாம் இருவரும் முன்னோக்கிப் பயணம் செய்ய வேண்டியதுதான். என்ன சொல் கிறீர்கள்?” கங்காபிரசாத் கேட்டார்.

“நான் எப்போதுமே தனியாகச் செயல்படுவதையே விரும்புபவன்!”

"இருக்கலாம். அதிலும் ஒரு மாற்றம் ஏற்படுத்தலாம். இனிமேல் நாம் இருவரும் இணைந்தே செயல்படுவோம். நாளைக்கு நாம் முக்கியமான ஒரு வேலையைச் செய்ய வேண்டியுள்ளது. அதற்குத் தயாராக இருங்கள்.’’ என்ற கங்காபிரசாத் சுருட்டு ஒன்றை உதட்டில் பொருத்திப் பற்ற வைத்தார்.

10

கங்காபிரசாத்தின் நோக்கம் என்னவென்று தெரிந்து கொள்ளும் ஆர்வத்துடன் புஷ்பராஜ், அவர் முகத்தைப் பார்த்தார்.

“இன்னும் இரண்டு நாள் கழித்து, அதாவது வரும் வெள்ளிக்கிழமையன்று நாம் இந்த நகரின் மிகப்பெரிய கட்டடத்தை வெடிகுண்டு வைத்துத் தகர்க்கப் போகிறோம். அந்தக் கட்டடம் எதுவென்று உங்களால் யூகிக்க முடியும்!” சுருட்டுச் சாம்பலை ஆஷ்ட்ரேயில் தட்டிய கங்காபிரசாத் மேஜை மீதிருந்த காலிங்பெல்லை அழுத்தினார்.

அது விநோதமான சத்தம் எழுப்பியது.

உடனேயே சுவரில் மாட்டப்பட்டிருந்த திரையில் படம் ஒன்று தெளிவடையத் தொடங்கியது.

அதில் கங்காபிரசாத் குறிப்பிட்ட, நகரின் மையப் பகுதியிலுள்ள ஐந்து மாடிக் கட்டடம் தென்பட்டது.

இரண்டு வங்கிகள், இன்ஷஜூரென்ஸ் நிறுவனம், ஸ்டாக் எக்சேஞ்ச் நிறுவனம் ஒன்று, தங்கநகைக் கடை ஒன்று ஆகியவை அந்தக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருந்தன.

“அதோ தெரிவதுதான் கார் போர்ச்” கங்காபிரசாத் கையால் சுட்டிக்காட்டினார். அதற்குள் நின்று கொண்டிருக்கும் அதே நம்பர் கொண்ட ஒரு காரில் வெடிகுண் டைப் பொருத்தி, காலை நேரத்திலேயே நாம் காரை அங்கு கொண்டுபோய் நிறுத்தி விடுவோம். அவர் விவரித்தார்.

“அப்படியானால் வழக்கமாக வரும் அந்த கார்?” புஷ்பராஜ் கேட்டார்.

“அந்த காரையும், அதில் பயணம் செய்யும் நகைக்கடை உரிமையாளரையும் நம் ஆட்கள் கடத்திக் கொண்டு போயிருப்பார்கள்.”

“அது சாத்தியமா?”

"அவர் காலையில் ஒன்பதே முக்கால் மணிக்குத் தனது வீட்டிலிருந்து புறப்படுவார். வழியில் நம் ஆட்கள் அதைச் சாத்தியமாக்குவார்கள். நாம் தயாராக வைத்துள்ள அதே நம்பர் கொண்ட காரில் அவரைப் போல் வேடமிட்ட நபர் ஒருவர் அப்போது அந்தக் கட்டடத்தை அடைவார். காரை அங்கு நிறுத்திவிட்டு நம் ஆட்கள் அங்கிருந்து வெளியேறு வார்கள். அதன் பிறகு நமது திட்டம் எந்தவிதத் தடையு மின்றிச் சுலபமாக நிறைவேறும்.’’ என்ற கங்காபிரசாத் அதன் பிறகு

சுருட்டை ஆழ்ந்து உறிஞ்சினார்.

‘அவரது திட்டம் அபாரம்தான்!’ புஷ்பராஜ் வியப்பு அடைந்தார்.

“நமது காரில் பயணம் செய்யப் போகிறவர்?" புஷ்பராஜ் கேட்டார்.

“அதுதான் மிகவும் முக்கியமான விஷயம். நகைக்கடை அதிபராக அதில் பயணம் செய்யப் போகிறவர் நீங்கள் தான்!”

“நானா... சரி... ஒப்புக்கொள்கிறேன்.” புஷ்பராஜ் ஒப்புக்கொண்டார்.

“அதில் உங்களுக்கு எந்த விதமான ஆபத்தும் ஏற்படாது. காரை தொலைவிலிருந்து ரிமோட் மூலம் இயக்குவோம்.”

புஷ்பராஜ் சந்தேகத்துடன் அவரை வெறித்துப் பார்த்தார்.

“பயமே தேவையில்லை. நீங்கள் இருவரும் பாதுகாப்பான தொலைவை அடைந்த பிறகே ரிமோட் செயல் படும்.”

“ஒரு யோசனை... இதற்கு நீங்கள் வேறு யாரையாவது பயன்படுத்துவதுதானே நல்லது. வெறும் ஒரு டம்மியாக காரில் உட்கார்ந்திருக்க நான் விரும்பவில்லை. அதில் எனக்கு எந்த ஒரு த்ரில்லும் கிடையாதே!” என்ற புஷ்பராஜ் சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்ற வைத்தார்.

“இதில் த்ரில் இல்லையென்றா சொல்கிறீர்கள்? யோசித்துப் பாருங்கள். நீங்கள் பயணம் செய்யும் காரில் ஐந்து மாடிக் கட்டடம் ஒன்றைத் தூளாக்கும் சக்தியுள்ள வெடிமருந்து இருக்கிறது. தைரியம் இல்லாத ஒருவர் அதில் பயணம் செய்ய முடியுமா? இன்னொரு முக்கியமான விஷயம், அந்த நகைக்கடைக்காரரைப் போல் ஒப்பனை செய்யவும் நீங்கள்தான் பொருத்தமானவர். உயரம், உடல் வாகு எல்லாம் கச்சிதம்.” கங்காபிரசாத் விவரித்தார்.

அதை அப்போதைக்கு ஒப்புக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. எப்படி இருந்தாலும் அவர் தற்போது விவரித்தபடி எதுவும் நடக்கப் போவதில்லை. எப்படியும் உயிர் ஆபத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறது. கார் ஷெட்டில் நுழைந்ததும் ரிமோட் செயல்பட்டால் பிறகு தனது சாம்பல்தான் மிஞ்சும்.

"அப்படியானால் நான் அதையொட்டி சில காரியங்களைச் செய்ய வேண்டியுள்ளது. நீங்கள் குறிப்பிடும் நேரத்தில் நான் சரியாக நகைக்கடை முதலாளியின் வீட்டுக்கு அருகில் வந்து விடுகிறேன். சரிதானே? புஷ்பராஜ் கேட்டார்.

“வேடம் போட வேண்டுமே?”

"அதை நான் பார்த்துக் கொள்கிறேன்.”

“உங்களை வெளியே அனுப்புவதில் எனக்கு எந்த விதமான ஆட்சேபனையும் இல்லை. போலீஸ் உங்கள் மீது ஒரு கண் வைத்திருக்கிறார்கள். உங்களைப் பின்தொடரும் அவர்கள் என்னை நெருங்கும் வாய்ப்பு உள்ளதே?”

“உண்மைதான். நான் சுயமாகத் தொழில் புரிபவன். எனக்கு லாபமில்லாத வேலையில் நான் ஈடுபடுவதில்லை. இந்த குண்டு வெடிப்பில் யாருக்கு என்ன லாபம் இருக்கிறது?” புஷ்பராஜ் கேட்டார்.

“நல்ல கேள்வி! உங்களது வழக்கமான வேலை போன்றதுதான் இதுவும். நான் மட்டும் லாபம் இல்லாத வேலையில் ஈடுபடுவேனா என்ன? சில சமயம் அது கோடிகளைத் தாண்டவும் செய்யவும்.” கங்காபிரசாத் சுருட்டை ஆஷ்ட்ரேயில் போட்டு நசுக்கி அணைத்தபடி எழுந்தார்.

"நான் உடனடியாகக் கிளம்புவதற்கு வேறொரு அவசியமும் இருக்கிறது. என்னுடன் வந்த பெண்ணை நான் கண்டுபிடிக்க வேண்டும். இல்லாவிட்டால், அது எனக்கு ஆபத்தாகிவிடும்!” புஷ்பராஜ் மற்றோர் உபாயத் தைப் பயன்படுத்தினார்.

கங்காபிரசாத் சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தார். அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாகச் சற்று நேரம் உலாவினர்.

‘புஷ்பராஜ் சொல்வதும் சரிதான். எனினும் தனது திட்டத்தை முழுவதுமாக வெளிப்படுத்திய பிறகு ராபின்சனை இப்படி வெளியே விடலாமா?’

"நாம் பரஸ்பரம் அளவுக்கு அதிகமாக நம்பிக்கை கொள்வது நியாயமா? கங்காபிரசாத் கேட்டார்.

“தேவையில்லைதான். என்னைப் பொறுத்தவரை இது எதிர்பாராத ஒரு நிகழ்ச்சி. துரதிர்ஷ்டவசமாக அவள் கண்டுபிடிக்கப் பட்டால், அவள் உங்களைப் பற்றி போலீஸில் சொல்லலாம். போலீஸ் உங்களையும் தேடிக் கொண்டிருப்பதை நான் தனியாக உங்களுக்கு ஞாபகப் படுத்த வேண்டுமா என்ன?”

இந்த உபாயம் பலித்தது. உண்மைதான். இருப்பினும் புஷ்பராஜை வெளியே விட அவர் மனம் ஒப்புக் கொள்ள வில்லை.

“நீங்கள் சொல்வதெல்லாம் சரிதான். நீங்கள் அவளைத் தேடுவீர்கள். கண்டுபிடிக்க முடியாமலும் போகலாம். அதே சமயம் போலீஸ் உங்களை அடையாளம் தெரிந்து பின்தொடர்ந்தால் நிலைமை மேலும் சிக்கலாகிவிடாதா?” கங்காபிரசாத் கேட்டார்.

“நானும் இதையெல்லாம் யோசிக்கவே செய்தேன். அதனால் அவளைத் தேடாமல் இருக்கவும் முடியாது. நான் எச்சரிக்கையானவன். எந்த வேலைக்கு நடுவிலும் என்னைத் தற்காத்துக் கொள்ளும் உள்ளுணர்வு ஒளிந்திருக்கும். அதனால் வேறு எதுவும் பாதிக்கக் கூடாது என்பதும் எனக்குத் தெரியும். எனவே, நான் குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட வேலையைக் கச்சிதமாக முடிப்பேன். எது எப்படியிருந்தாலும் நீங்கள் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் நான் இருப்பேன். என்னை நம்பும் நீங்கள், என் வார்த்தையை நம்பாவிட்டால் எப்படி?”

“சரி... உங்களது யோசனைக்கு நான் ஒப்புக் கொள்கிறேன். உங்கள் வேலையை முடித்துக் கொண்டு பார்க்குக்கு முன்னால் காரை ரிப்பேர் செய்யும் சாக்கில் காத்திருங்கள். சரியாக நள்ளிரவு பன்னிரண்டு மணி பத்து நிமிடத்துக்கு நான் பார்க்குக்கு வருவேன். எங்கிருந்தாவது கார் ஒன்றை அமர்த்திக் கொள்வதோ, நிறுத்திக் கொள்வதோ உங்கள் விருப்பம். ஆனால், அந்த காரை அங்கேயே விட்டுவிட வேண்டும்!”

"அப்படியே செய்கிறேன். புஷ்பராஜ் ஒப்புக் கொண்டார்.

மறு விநாடி அவர் கண்கள் இரண்டும் கட்டப்பட்டன. அவர் வெளியே அழைத்து வரப்பட்டார். நகரின் பரபரப்புக் குறைந்த ஒரு பகுதியில் அவரை இறக்கிவிட்ட கார், சட்டென்று அவர் பார்வையிலிருந்து மறைந்தது.

அந்த இடம் எதுவென்று சட்டென்று அவருக்கு அடையாளம் தெரிந்தது. பக்கத்தில் தென்பட்ட பொதுக் கழிப்பறைக்குள் நுழைந்தவர் தனது பிரீஃப்கேஸைத் திறந்தார். வேடம் மாறி வெளியே வந்தார். ஒருவேளை தன்னை கங்காபிரசாத்தின் ஆட்கள் தொடர்ந்து வருவதாக இருந்தால், அவர்கள் ஏமாறட்டும் என்பதற்காகவே இந்த நடவடிக்கை.

கங்காபிரசாத்தின் கூடாரத்தில், புஷ்பராஜை இறக்கி விட்டவர்களும், பின்தொடர்ந்தவர்களும் வந்து சேர்ந்தனர்.

“ராபின்சன் எங்கு போனான் என்று உங்களுக்குத் தெரியவில்லையா?” கங்காபிரசாத் கேட்டார்.

“காரிலிருந்து இறங்கிய மறு விநாடி அவர் எங்கே, எப்படி மறைந்தார் என்று எங்களால் கண்டுபிடிக்க முடிய வில்லை.” கார் ஒட்டி வந்தவர் கூறினார்.

“கையாலாகாத நீங்கள் எந்த விதமான சமாதானமும் சொல்லத் தேவையில்லை. அவனது பிடி என்னிடம் இருக்கிறது. நான் அவனைக் கவனித்துக் கொள்கிறேன். அவன் என்னைவிட்டு எங்கும் செல்லமுடியாது!” கங்காபிரசாத் தின் முகம் இருளடைந்தது.

"அந்தக் கட்டடத்துடன் அவனும் சேர்ந்து அழியப் போவது அவனுக்குத் தெரியாது. மட்டுமின்றி, அதைச் சிதைத்தது அவன்தான் என்றும் உலகம் புரிந்து கொள்ளும்.” கங்காபிரசாத் சுருட்டு ஒன்றை எடுத்துப் பற்ற வைத்தார்.

போலீஸ் கிளப்பை அடைந்த புஷ்பராஜ் அங்கிருந்து தாமஸ் ஜேக்கபுக்கு போன் செய்தார்.

அவரும் உடனே வந்து சேர்ந்தார்.

நடந்ததை புஷ்பராஜ் விவரித்தார். அதே நேரம் கங்கா பிரசாத்தின் இருப்பிடத்தையும், கிளமெண்ட் டிசூசா எங்கே போனான் என்பதையும் அவரால் தெளிவாகக் கூற முடியவில்லை.

“எப்படியிருந்தாலும் நீங்கள் ஒட்டலுக்குப் போனது ஒரு நல்ல விஷயம்தான். இல்லாவிட்டால், அந்தக் கட்டடம் சிதிலமடைவது நமக்குத் தெரியாமல் போயிருக்கும். சரி. மேற்கொண்டு இதில் நாம் என்ன செய்யலாம்?”

"நான் நகைக்கடைக்காரராக வேடம் போடப் போகிறேன். எனவே, அவன் என்னையும் சேர்த்தே தொலைத்துக் கட்டலாம். முதலில் அதற்கு ஒரு மாற்றுவழி கண்டுபிடிக்க வேண்டும்.” புஷ்பராஜ் கூறினார்.

“உண்மைதான். அதற்குச் சரியான மாற்றுவழி இல்லை யென்றால் மொத்தத் திட்டமும் பாழாகிவிடும். அதே நேரம் அவன் தன் திட்டப்படி முன்னேறவும் செய்வான்!” தாமஸ், என்ன செய்வது என்று தெரியாமல் குழம்பினார்.

எனவே, தலையைப் பிய்த்துக் கொண்டு அது தொடர் பாக யோசித்தனர்.

காலை நேரம். எட்டு மணி. புஷ்பராஜ் போலீஸ் கிளப்பிலேயே நேரம் கடத்தினார்.

மறு நாள் அரங்கேறவிருக்கும் விபத்தை எப்படித் தடுப்பது என்பது குறித்து புஷ்பராஜூம், தாமஸ் ஜேக்கபும் யோசித்தனர்.

காலையில் நகைக்கடை அதிபராக விட்டுக்கு அருகில் செல்ல வேண்டும். அதற்கு கங்காபிரசாத்தின் காரைத்தான் பயன்படுத்த வேண்டும். அந்த காரின் கட்டுப்பாடு கங்கா பிரசாத்தின் ஆட்களிடம் இருக்கும்.

கங்காபிரசாத் வஞ்சகன். அவன் சொன்னபடி நடந்து கொள்வான் என்பதற்கு எந்த விதமான உத்திரவாதமு மில்லை. பிளாக்டைகர் என்று நினைத்திருக்கும் தன்னை அத்துடன் தொலைத்துக் கட்டவும் அவன் ஒருவேளை திட்டமிட்டிருக்கலாம்.

அப்படி எதுவும் நடக்கக் கூடாது!

மாலை நேரமாவதற்குள் நகைக்கடை முதலாளி தொடர்பான எல்லாத் தகவல்களும் புஷ்பராஜூக்குக் கிடைத்தன.

மணி பன்னிரண்டு பத்து.

துப்பறிவாளர் புஷ்பராஜ், கங்காபிரசாத்தின் யோசனைப்படி பார்க்குக்கு முன்னால் காரை ரிப்பேர் செய்யும் பாவனையில் பானெட்டை உயர்த்தி வைத்து குனிந்து எதையோ கவனித்துக் கொண்டிருந்தார்.

11

புஷ்பராஜ் அதிக நேரம் காத்திருக்க நேரவில்லை. விரைவிலேயே மோட்டார் பைக் ஒன்று அவருக்கு அருகே வந்து நின்றது.

“உங்கள் கார் ரிப்பேராகி விட்டதா?”

"ஆமாம்!”

"அப்படியானால் வாருங்கள்...”

சரியான அந்த நேரம் கார் ஒன்று வந்து நின்றது. பின்புறக் கதவை யாரோ திறந்தனர்.

“ம்... ஏறிக் கொள்ளுங்கள்!” பைக்குகாரர் விண்ணப்பித்தார்.

புஷ்பராஜ் ஏறிக் கொண்டார்.

கார் புறப்பட்டது.

காரின் பின்புற இருக்கையில் ஏற்கெனவே இரண்டு பேர் அமர்ந்திருந்தனர். முன்புறம் அமர்ந்திருப்பவர்கள் யாரென்று தெரியவில்லை. முன்புறம் கனமான திரையால் மறைக்கப்பட்டிருந்தது. காருக்குள் இருட்டு நிரம்பியிருந்தது.

அரை மணி நேரப் பயணத்துக்குப் பிறகு கார் நின்றது. புஷ்பராஜின் கண்களைக் கட்டியபடிதான் காரிலிருந்து அவரை இறக்கி அழைத்துச் சென்றனர். கட்டை அவிழ்த்த போது கங்காபிரசாத் எதிரில் நின்று கொண்டிருந்தார்.

“இனி நீங்கள் ஒய்வெடுக்கலாம். நாளைக்கு நீங்கள் நகைக்கடை முதலாளியாகப் பயணப்பட வேண்டுமே. என் நம்பிக்கைக்கு உகந்தவர்தான் உங்கள் டிரைவர்.” கங்காபிரசாத் கூறினார்.

புஷ்பராஜ் ஒர் அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

காலையில் நடைபெற விருப்பது குறித்து எந்த விதமான சிந்தனையுமின்றி புஷ்பராஜ் சுகமாகத் தூங்கினார்.

அவரைத் தட்டி எழுப்பியவள் ஒரு பெண்மணி.

அவளை அப்போதுதான் முதல் தடவையாக அவர் பார்த்தார். அழகி. வயது இருபதுக்கு மேல் மதிப்பிட முடியாது.

அவள் கொடுத்த காபியைப் பருகிவிட்டு, சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டு புஷ்பராஜ் பாத்ரூமை நோக்கி விரைந்தார்.

குளித்துவிட்டு வரும்போது காலைச் சிற்றுண்டி தயாராக இருந்தது. அதைப் பரிமாறியவளும் அவளேதான்.

“உன் பெயர்?” புஷ்பராஜ் கேட்டார்.

“இங்கு என் பெயர் சாந்தினி!” அவள் சிரித்தாள்.

"அப்படியானால் நீயும், என்னைப் போல்தான் இல்லையா?” புஷ்பராஜ் அவளைத் தலையிலிருந்து கால் வரை பார்த்தார்.

சிவந்த நிறம். மெலிந்த உடல். அழகி.

ஏதோ ஒரு சோப்பு விளம்பரத்தில் அவளைப் பார்த்திருப்பதாக புஷ்பராஜாக்குத் தோன்றியது.

"இங்கு... எப்படி?" புஷ்பராஜ் வார்த்தையை முடிக்க வில்லை.

அவள் சுற்றுமுற்றும் பார்த்தாள். நெருங்கி வந்தவள், "வேலை கேட்டு வந்துதான்!" அவள் மென்மையான குரலில் பேசினாள்.

"படித்திருக்கிறாயா?"

"எம்.எஸ்.ஸி. கெமிஸ்ட்ரி."

"உன்னைப் பார்த்தால் அவ்வளவு படித்திருப்பதாகச் சொல்ல முடியவில்லை."

அதைக் கேட்டதும் அவள் முகம் சிவந்தது.

"அப்படியும் இந்த வேலைதான் கிடைத்ததா?" புஷ்பராஜ் கேட்டார்.

"ஓரளவுக்கு நல்ல சம்பளம். வேலை என்னவென்று வெளியே சொல்லிக் கொள்ள முடியாது!"

"இதைவிட அதிகச் சம்பளம் கிடைத்தால்..?"

"வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை."

"கிடைத்தால்..."

"இதுதான் உடை." அவள் மேஜை டிராயரிலிருந்து பிரீஃப் கேஸ் ஒன்றை எடுத்தாள்.

புஷ்பராஜ் அதைத் திறந்து பார்த்தார். ஜிப்பா ஒன்று. சரிகை வைத்த எட்டு முழ வேட்டி. வாட்ச், மோதிரம் ஒன்று. சுமார் ஐந்து பவுன் மதிப்புள்ள செயின் ஒன்று.

புஷ்பராஜ் அவற்றை அணிந்து கொண்டு எதிரிலுள்ள நிலைக் கண்ணாடியில் பார்த்தார்.

தான் நகைக் கடைக்காரனாகி விட்டோம்!"

"மீண்டும் சந்திப்போம்." அவள் விடைபெற்றாள் பரபரப்புடன்.

சற்று நேரத்தில் இருவர் வந்தனர்.

அவர்கள் புஷ்பராஜின் கண்களைக் கட்டி அங்கிருந்து அழைத்துச் சென்றனர். ஒரு காரில் ஏற்றினர். சற்றுத் தூரம் சென்றதும் கார் நின்றது.

"கட்டை அவிழ்த்து விடலாம் சார்'முன்புறத்திலிருந்து ஒரு குரல்.

கட்டு அவிழ்க்கப்பட்டது.

‘நகரின் மேற்குப் பகுதியில் இருக்கிறோம் என்பது புஷ்பராஜுக்கு விளங்கியது.

புஷ்பராஜ் சுற்றுமுற்றும் பார்த்தார். டிரைவரைத் தவிர வேறு எவரும் அங்கு இல்லை. பின்புறம் அமர்ந்தவாறே புஷ்பராஜ் இடுப்பிலிருந்து உருவிய ரிவால்வரை டிரை வரின் கழுத்துப் பகுதியில் பதித்தார்.

“சொன்னபடி நடக்காவிட்டால் துப்பாக்கிக்கு அறிவு கிடையாது. அது ஏடாகூடமாக உன் நெற்றியைத் துளைத்து குண்டைத் துப்பும்.”

கார், புஷ்பராஜின் கட்டுப்பாட்டில் வந்தது.

மணி ஒன்பதே முக்கால்.

புஷ்பராஜ் காரில் பின்புற இருக்கையில் சாய்ந்து கிடந்தார்.

கார் நகைக் கடையின் போர்ச்சில் நுழைந்தது. இருவரும் காரிலிருந்து இறங்கினர். கடை திறக்காமல் அவர்கள் நேராகச் சாலைக்கு வந்தனர். அப்போது சொல்லி வைத்தது போல் அம்பாஸ்டர் கார் ஒன்று அவர்களுக்கு அருகே வந்து பிரேக்கிட்டது.

"இதில் ஏறலாமே!” புஷ்பராஜ், டிரைவரிடம் கூறினார்.

இருவரும் ஏறினர்.

கார் முன்னோக்கி விரைந்தது.

நகரப் பகுதியிலிருந்து சுமார் ஐந்து கிலோமீட்டர் கிழக்குத் தொலைவில் இருந்த ஆள் குடியிருப்பில்லாத ஒர் இரண்டு மாடி கட்டடத்தின் முன்னால்- போர்ச்சில் கார் நின்றது.

நகைக் கடைக்கு முன்னால் நிகழ்ந்தது எவரும் திட்ட மிடாத சம்பவம்.

கண் மூடித் திறப்பதற்குள் அங்கு வந்த போலீஸ் ஜீப்பும் போலீஸ் வேனும் சட்டென்று நின்றன. போலீஸ் அதிகாரி ஒருவர் போர்ச்சில் இருந்த காரை ஸ்டார்ட் செய்தார்.

நகரின் பரபரப்பான வேளையில் எவரும் அதைக் கவனித்ததாகத் தெரியவில்லை.

அன்று இரவு பத்து மணிக்கு புஷ்பராஜூம் தாமஸ் ஜேக்கபும் சந்தித்துக் கொண்டனர்.

புஷ்பராஜூடன், கங்காபிரசாத்தின் டிரைவரும் இருந்தார்.

"இவர்தான் டிரைவரா?" தாமஸ் ஜேக்கப் கேட்டார்.

"ஆமாம். பெயர் ரவீந்திரன். நானும் இவரும் ஒருவழியாக உயிர் பிழைத்தோம்." புஷ்பராஜ் கூறினார்.

"ரவீந்திரன், உங்களுக்கு ஏதாவது புரிந்ததா?" தாமஸ் ஜேக்கப் கேட்டார்.

"புரியவில்லை சார்!" அவர் விழித்தபடி பதிலளித்தார்.

"அப்படியானால் கேட்டுக் கொள்ளுங்கள்."

"சொல்லுங்கள் சார்!"

"நீங்கள் அவரிடம் வேலைக்குச் சேர்ந்து எவ்வளவு நாளாகிறது?"

"நான்கு நாட்கள் ஆகிறது!"

"அவர்கள் யாரென்று தெரியுமா?"

'அவ்வளவு சரியாகத் தெரியாது!"

"அவர்களுக்காக எங்கெல்லாம் கார் ஒட்டினிர்கள்?"

"நகரின் தென்புறமுள்ள ஒட்டல்வரை. அதன் பிறகு அவர்கள் என் கண்களைக் கட்டி, பின்னால் உட்கார வைப்பார்கள்."

"சம்பளம்?"

"ஒரு நாளைக்கு ஐந்நூறு ரூபாய்!"

"மூன்று நாட்கள் அப்படி சம்பளம் வாங்கியிருக்கிறீர்கள்... இல்லையா?"

"ஆமாம்."

"நாலாவது நாளான இன்று நீங்கள் வெடித்துச் சிதறியிருப்பீர்கள்!"

"எனக்கு இப்போதும் விளங்கவில்லை சார்." அவர் பயத்துடன் கேட்டார்.

“நீங்கள் காலையில் ஒட்டிவந்த காரில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருந்தது. தொலைவிலிருந்து ரிமோட் கண்ட் ரோல் மூலமாக வெடிக்கக் கூடிய வெடிகுண்டு!”

"சார்... சத்தியமாக எனக்கு எதுவும் தெரியாது!”

“பயப்படாதீர்கள். நீங்கள் போய்ச் சேர்ந்தது பயங்கர மாணவர்களிடம். உங்கள் இருவருடன் அந்த ஐந்து மாடிக் கட்டடத்தையும் சிதைப்பது அவர்களது நோக்கம். நடுவழியில் கார் மாறியது, உங்கள் இருவரின் உயிரையும் காப்பாற்றுவதற்காத்தான்!” தாமஸ் ஜேக்கப் கூறினார்.

நகைக் கடைக்காரரைக் கைது செய்த பிறகு அதே போன்றதொரு காரில்தான் புஷ்பராஜ் பயணம் செய் தோர். பாதையில் கார் மாறிய தகவல், கங்காபிரசாத்துக்குத் தெரியாது. மாற்றப்பட்ட காரில் அவர்கள் மாற்றி அனுப்பப்பட்டனர். வெடிகுண்டு இல்லாத அந்த கார்தான் ஐந்து மாடிக் கட்டடத்துக்கு முன்னால் வந்து நின்றது. கங்காபிரசாத்துக்குச் சந்தேகம் ஏற்படாமல் இருப்பதற்காகவே. அதுவும் உடனடியாக அங்கிருந்து அப்புறப் படுத்தப்பட்டது.

அதற்குள் கங்காபிரசாத் ஏற்பாடு செய்திருந்த காரிலிருந்த வெடிகுண்டை, வெடிகுண்டு நிபுணர்கள் செயலிழக்கச் செய்தனர். புஷ்பராஜை மறுபடியும் கங்கா பிரசாத்திடம் அனுப்புவதற்காகச் செய்யப்பட்ட ஒர் ஏற்பாடும் கூட.

உண்மையான பிளாக் டைகர், டாக்டர் சாராம்மா ஜேக்கபின் வீட்டில் பாதுகாப்பாக இருந்தான். ரோஸியும் அவனுடன் இருந்தாள்.

மருந்துவமனைக்குச் சென்ற சாராம்மா ஒரு புதுத்தகவலுடன் மாலை நேரத்தில் வந்து சேர்ந்தாள்.

“பயங்கரவாதி ஒருவர் நகரத்துக்குள் வந்திருப்பதாகத் தகவல்!” ராபின்சன் கேட்பதற்காகவே அவள் கூறியது போலிருந்தது.

அது அவனுக்கும் விளங்கியது.

“என்ன தகவல்?” அவன் கேட்டான்.

“இன்று காலையில் நகரிலுள்ள ஐந்து மாடிக் கட்டடத்தை வெடிகுண்டு வைத்துத் தகர்க்க முயற்சி செய்தார். களாம். கடைசி நிமிடத்தில் போலீஸாரின் கெட்டிக்காரத் தனத்தால் அது தவிர்க்கப்பட்டதாம்.”

"நிஜமாக எனக்கு எதுவும் விளங்கவில்லை!" ராபின்சன் குழப்பத்துக்கு உள்ளானான். அப்படியானால் அது யாராக இருக்கும்?'

ஒருவேளை கங்காபிரசாத்தின் ஆட்களா? தன்னைத் தாக்க வந்ததும் அவர்களாகத்தான் இருக்க வேண்டு மென்று தோன்றியது.

"நீங்களும் அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்தான் என்று எனக்குத் தெரியும்!" சொல்லிய சாராம்மா, சோபாவில் அமர்ந்தாள்.

"இல்லை. உங்கள் கருத்து தவறு. நான் எப்போதும் தனியாகச் செயல்படுபவன். நான் எவருக்கும் கீழ்ப்படிந்து நடப்பவன் அல்ல."

"நான் எப்படி அதை நம்புவது?"

"நீங்கள் நம்ப வேண்டும் என்பதற்காக என்னை நான் மாற்றிக் கொள்ள முடியாது!"

"இது தொடர்பாக யாரையாவது அடையாளம் காட்டினாலோ, தகவல் தெரிவித்தாலோ ஐந்து லட்சம் ரூபாய் பரிசு அளிப்பதாகக் காவல் துறை அறிவிப்பு வெளியிட்டிருக்கிறது." சாராம்மா ஜேக்கப் எட்டாக மடித்த மாலைப் பத்திரிகை ஒன்றை எடுத்து ராபின்சனிடம் கொடுத்தாள்.

அவன் அதை நிதானமாக வாசித்தான்.

அதில் அவனைப் பற்றிக் குறிப்பிடவில்லையாயினும், பயங்கரவாதிகளைக் குறித்து விவரிக்கப்பட்டிருந்தது. அவர்கள் பல இடங்களில் வன்முறைக்காக ஆயுதங்கள் பதுக்கி வைத்திருப்பதாகவும் அது குறிப்பிட்டது.

சாராம்மா ஏகத்துக்குத் திகைப்பு அடைந்திருந்தாள். எந்தக் காரணத்தினாலாவது ராபின்சன் இங்கு கைது செய்யப்பட்டால், நிரபராதியான தானும் அவனுடன் வீணாகப் பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியிருக்கும். ஊரார் மத்தியில் அனாவசியமாக ராஜத்துரோகியாகப் பெயரெடுக்க வேண்டியிருக்கும். அதை நினைத்தபோதே சாராம்மாவின் உடல் நடுங்கியது.

அவளுக்கு வேறொரு பிரச்சினையும் அப்போது விசுவ ரூபமெடுத்தது. சாராம்மாவின் மாமா, திருவனந்தபுரத்தில் டி.எஸ்.பியாக இருக்கிறார்.

இந்தப் பக்கம் வேலையிருந்தால் கண்டிப்பாக வீட்டுக்கு வருவார். பெரும்பாலும் மாதத்தில் ஒரு நாள் அப்படி வருவா. அவர் வந்து

விட்டால் அவரிடம் என்னவென்று சொல்வது?

ஓர் ஆணும் பெண்ணும் தனது வீட்டில் வசிக்கிறார்கள். அதுவும் முன்பின் அறிமுகம் இல்லாதவர்கள். தனது விருப்பத்துக்கு மாறாக அவர்கள் தங்குகிறார்கள் என்று அவரிடம் சொல்ல முடியுமா? சொன்னால் நம்புவாரா? இதற்கு என்ன செய்யலாம்? நீண்ட நேர யோசனைக்குப் பிறகு சாராம்மா, ராபின்சனை நோக்கித் திரும்பினாள். "மிஸ்டர்!" அழைத்தாள்.

“சொல்லுங்கள் டாக்டர்!” என்றவாறே சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்ற வைத்தான் ராபின்சன்.

"நீங்கள் வீட்டுக்குள் சிகரெட் புகைப்பது, மற்றவர் களின் உடல் நலத்தையும் பாதிக்கும்.”

"அப்படியா?”

"அது மட்டுமின்றி, இந்த வீட்டில் சிகரெட் புகைப்பவர்கள் வேறு எவருமில்லை.”

“அதற்கென்ன?”

“என் மாமா கிரைம் பிராஞ்ச்சில் டி.எஸ்.பி-யாக இருக்கிறார். அவர் அடிக்கடி இங்குவருவதுண்டு.”

"இருக்கட்டுமே. எதிர்பாராமல் அவர் இங்கு வந்தால் நான் ஒரு டாக்டர் என்று அறிமுகப்படுத்துங்கள்.”

"அவரைப் பற்றி உங்களுக்குத் தெரியவில்லை. ஒரே கேள்வியிலேயே அவர் உங்களை அடையாளம் தெரிந்து கொள்வார்."

"அப்படியெதுவும் நடக்காது. ஒருவேளை அவர் என்னை அடையாளம் தெரிந்துகொண்டால், அதன் பிறகு அவர் இந்த வீட்டைவிட்டு வெளியேற மாட்டார்!”

சாராம்மா ஜேக்கப் அவன் கண்களை உற்றுப்பார்த்தாள்.

அவன் எந்த விதமான தயக்கமும் இன்றி சிகரெட்டை ஆஷ்ட்ரேக்குள் போட்டு நசுக்கினான்.

“இப்படியொரு சூழ்நிலையில் என்னுடன் நீங்கள் வசிப்பது நல்லதல்ல!” என்ற சாராம்மா தொலைபேசியின் பக்கமாகப் பார்த்தாள்.

அப்போது தொலைபேசி அலறியது.

சாராம்மா உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்திருக்க முயன்றாள்.

12

சோபாவிலிருந்து பாய்ந்து வந்த ராபின்சன் ரிசீவரை எடுக்காமல் அதை அழுத்திப் பிடித்தான். தொடர்ந்து அது மணியடித்துக் கொண்டே இருந்தது.

"பேசுவது யாராக இருந்தாலும் என்னைப் பற்றி எதுவும் பேசக் கூடாது. யார் வந்தாலும் நான் எதுவும் செய்ய மாட்டேன். அநேகமாக உங்கள் மாமாவாக இருக்கலாம். என்னைக் காப்பாற்றிக் கொள்ள என்னால் முடியும்.” இவ்வளவும் பேசிய பிறகு ரிசீவரை எடுத்து சாராம்மாவிடம் கொடுத்தான்.

"ஆமாம்... நான்தான். இப்போது எங்கு இருக்கிறீர்கள்? கெஸ்ட் ஹவுஸிலா... உடனே வருகிறீர்களா?” என்ற வாறே அவள் ராபின்சனைப் பார்த்தாள்.

வரட்டும் அவர்!’ என்று ராபின்சன் சைகை காட்டினான்.

“சரி... வாருங்கள்!” சாராம்மா ரிசீவரை வைத்துவிட்டு அங்கிருந்து நகர்ந்தாள்.

"பயப்படாதீர்கள். வேஷம் மாறுவது எனக்குக் கைவந்த கலை. சமாளித்து விடுகிறேன்."

இருப்பினும் சாராம்மாவினால் நிம்மதியாக இருக்க முடியவில்லை.

மாமா சாதாரணமானவரல்ல. ஒரு குற்றவாளி போடும் எந்த வேடத்தையும் கண்டுபிடிக்க அவரால் முடியும். உயர்ந்தபட்சமாக அறுபத்துநான்கு உருவ மாற்றங்களை அவர் நிதானிக்க முடியும். ஸ்காட்லாந்தில் சிறப்புப் பயிற்சி பெற்றவர். அவரை ராபின்சனால் எந்த அளவுக்கு ஏமாற்ற முடியும்?

எனவே, ராபின்சனை அவர் முதல் பார்வையிலேயே கண்டுபிடித்து விடுவார் என்று சாராம்மா திடமாக நம்பினாள். அப்படி எத்தனையோ சம்பவங்கள் நடந்துள்ளன. ஒருவேளை அவர் கண்டுபிடித்து விட்டால், தன்னைப் பற்றி என்ன நினைப்பார்? தன்மீது அனாவசிய மான சந்தேகம் ஏற்படுமே!

“எனக்கு பயமாக இருக்கிறது!” சாராம்மா படபடப்புடன் பேசினாள்.

“நீங்கள் பயப்பட வேண்டியதில்லை. அந்தக் கவலையை என்னிடம் விட்டுவிடுங்கள். நான் சமாளித்துக் கொள்கிறேன்.” ராபின்சன் அவளுக்கு ஆறுதல் கூறினான்.

பிறகு ஆஷ்ட்ரேயில் இருந்த சிகரெட் துண்டுகள் மற்றும் சாம்பலைக் குப்பைக் கூடையில் கொட்டினான்.

பிரீஃப் கேஸ் ஒன்றைக் கையில் பிடித்தபடி சோபாவில் அமர்ந்து கொண்டான். ரோஸியை அவனுக்கு அருகில் உட்கார வைத்துக்கொண்டான்.

கார் ஒன்று கேட்டைத் தாண்டி வரும் சத்தம் கேட்டது. நின்றது.

அதிலிருந்து ஆஜானுபாகுவான மனிதர் ஒருவர் இறங்கி மிடுக்காக நடந்து வந்தார்.

காலிங்பெல்லை ஒரு தடவை அழுத்திவிட்டு, கதவைத் திறந்து கொண்டு ஹாலுக்குள் வந்தார்.

எஸ்.பிஜோஸப் மாத்யூவுக்கு ஆறடி, இரண்டங்குல உயரம். உயரத்துக்கு ஏற்ற சரியான உடல்வாகு. முன் நெற்றியில் வழுக்கை உரமேறிய கை கால்கள். நீண்ட மூக்கு. கூர்மையான பார்வை. சதுர முகம்.

வரவேற்பு அறைக்குள் நுழைந்த ஜோஸப் உடனே சுற்றுமுற்றும் பார்த்தார்.

சாராம்மா ஜேக்கப் எழுந்து நின்று கொண்டு இருந்தாள். ரோஸியும் உடனே சோபாவிலிருந்து எழுந்தாள். ஆனால், ராபின்சன் இருந்த இடத்திலேயே உட்கார்ந்திருந்தான்.

“இவர் என் அங்கிள். கிரைம்பிராஞ்ச் எஸ்.பிஜோஸப் மாத்யூ!” சாராம்மா அறிமுகப்படுத்தும் முறையில் ராபின் சனைப் பார்த்துக் கூறினாள்.

உடனே ராபின்சன் தனது இருக்கையிலிருந்து எழுந்து கை நீட்டினான்.

"ஐயாம் டாக்டர் ராபின்சன், ஃபிரம் மெட்ராஸ்’ எந்த விதத் தயக்கமும் இன்றிப் பேசினான்.

எஸ்.பி ஜோஸப் மாத்யூ அவனுடன் கை குலுக்கினார்.

இருவரும் அமர்ந்தனர்.

"அங்கிள், சாப்பிட ஏதாவது கொண்டு வரட்டுமா?" சாராம்மா, அவரது கவனத்தை எப்படியாவது திருப்பி அவரை அங்கிருந்து அப்புறப்படுத்துவதில் குறியாக இருந்தாள்.

"முதலில் நான் குளிக்க வேண்டும். அங்கு வெந்நீர் கிடையாது." அவர் எழுந்து உட்புறம் சென்றார்.

சாராம்மா பெருமூச்சு விட்டாள்.

"மிஸ்டர் ராபின்சன், நல்ல வேளையாக அவர் இன்னும் உங்களை அடையாளம் தெரிந்து கொள்ளவில்லை. அவர் திரும்பி வருவதற்குள் கூட நீங்கள் தப்பித்துச் செல்ல வாய்ப்பு இருக்கிறது. நீங்கள் கிளம்பிவிட்டதாக நான் அவரிடம் சொல்லிக் கொள்கிறேன்."

"திடுதிப்பென்று இந்த மாலை நேரத்தில் நான் எங்கே போவது?"

"அது எனக்கு என்ன தெரியும்? உங்களது நன்மைக்காகத்தான் சொல்கிறேன். இல்லாவிட்டால், ஒட்டு மொத்தமாக நாம் எல்லோருமே மாட்டிக் கொள்வோம்." சாராம்மா உட்புறத்தைப் பார்த்தபடி பேசினாள்.

"நான் ஏற்கெனவே சொல்லி விட்டேன். நீங்கள் பயப்பட வேண்டியதில்லை. உடனே போய் அவருக்கு விருப்பமானதைச் சமைத்துப் போடுங்கள்." ராபின்சன் எந்தவிதப் பதற்றமும் இன்றிப் பேசினான்.

"என்ன நடக்கப் போகிறது என்றே எனக்குத் தெரியவில்லை!" என்ற சாராம்மா சமையற்கட்டை நோக்கி நடந்தாள்.

அப்போது போலீஸ் கிளப்பில் புஷ்பராஜை மீண்டும் எப்படி கங்காபிரசாத்திடம் அனுப்பி வைப்பது என்பது தொடர்பான ஆலோசனை நடந்து கொண்டிருந்தது. உயர் அதிகாரிகள் ஒன்று கூடி விவாதித்தனர்.

"நான் ஒன்று சொல்லலாமா?" ஐ.ஜி. ஜமாலுதீன் பேசத் தொடங்கினார்.

புலனாய்வுத் துறையில் நெடுநாள் அனுபவம் வாய்ந்த வர் ஜமாலுதீன், ஐம்பதைக் கடந்த அவர் மிகவும் புத்திக் கூர்மையானவர். போலீஸ் வட்டாரத்தில் அவர் பலருக்கு வழிகாட்டி என்று கூடச் சொல்லலாம்.

எல்லோரும் அவர் முகத்தை ஊன்றிக் கவனித்தனர்.

“கங்காபிரசாத் சாமானியமானவன் அல்ல. புஷ்பராஜை, அவன் இதுவரை பிளாக்டைகர் என்றுதான் நினைத்துக் கொண்டிருக்கிறான். உண்மையான பிளாக் டைகர் எங்கோ தலைமறைவாக இருக்கிறான். அவன் கங்காபிரசாத்துடன் எப்போது வேண்டுமானாலும் தொடர்பு கொள்ளலாம்.’’ என்றவர் தனது பேச்சை நிறுத்தி விட்டு புஷ்பராஜைப் பார்த்தார்.

அவர் என்ன சொல்ல வருகிறார் என்பதைத் தெரிந்து கொள்ளும் ஆவலுடன் புஷ்பராஜ் அவர் முகத்தையே பார்த்தார்.

“எனவே, நாம் எப்படியாவது பிளாக்டைகரை உடனே கண்டுபிடித்தாக வேண்டும். அவன் இப்போது எந்த ஒட்ட லிலோ, லாட்ஜிலோ இல்லை. என்னுடைய சந்தேகம் என்னவென்றால், அவன் உறவினர்கள் யாராவது இந்த நகரத்தில் இருக்க வேண்டும். அத்துடன் மிக முக்கியமான விஷயம் ஒன்றை நான் இப்போது உங்களிடம் சொல்லப் போகிறேன்.’’ என்ற ஐ.ஜி. ஜமாலுதீன் தனது கோட் பாக் கெட்டிலிருந்து நீண்ட கவர் ஒன்றை வெளியே எடுத்தார்.

அதைப் பிரித்தார்.

இப்போதும் எல்லோரும் அவரையே பார்த்தனர்.

“இதன் சுருக்கம் இதுதான்..." என்று கூறியவர் காகிதத்தைப் பழையபடி மடக்கிவிட்டுப் பேசத் தொடங்கினார். “நாளை மறு நாள் அதாவது பன்னிரண்டாம் தேதி, வியாழக்கிழமையன்று கனடாவிலிருந்து பிரபல விஞ்ஞானியான டாக்டர் டிக்சன் கொச்சிக்கு வருகிறார். மிகவும் தந்திர பூர்வமான போர்க் கருவி ஒன்றின் ரகசியம் அவரிடம் உள்ளது. விண்வெளியிலிருந்து கட்டுப்படுத்தி இயக்கக் கூடிய ஆயுதங்கள் மற்றும் ஆயுதலுழிப்பு தொடர் பான சில தகவல்களை நம்முடன் பகிர்ந்து கொள்வதற்காகவே அவர் வருகிறார். அவரது பாதுகாப்பு முழுக்க நம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. எந்தக் காரணத்தைக் கொண்டும் அவரை எவரும் கடத்திச் செல்லாமல் நாம் கண்காணிக்க வேண்டும்.”

அப்போது அந்த அறை அளவுக்கு மீறி அமைதியாக இருந்தது. பஞ்சுத் துண்டு ஒன்று தரையில் விழுந்தால் கூடச் சத்தம் கேட்கும் அமைதி அங்கு நிலவியது.

“மற்றொரு முக்கியமான விஷயத்தையும் உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன்.” தன் கையிலிருந்த சுருட்டுச் சாம்பலை ஆஷ்ட்ரேயில் தட்டியவர் மேலும் தொடர்ந்தார் 'கங்காபிரசாத் இந்த ஊருக்கு வந்திருப்பதன் நோக்கமே டாக்டர்

டிக்சனைக் கடத்திச் செல்வதுதான் என்ற ஒரு சந்தேகம் எங்களுக்கு உண்டு. அதிலிருந்து காவல்துறையின் கவனத்தைத் திசை திருப்பத்தான் அவர் வெடிகுண்டு வைத்துக் கட்டடத்தைத் தகர்க்க முயன்றது.”

யாரும் எதுவும் பேசவில்லை.

“அது மட்டும் வெற்றி பெற்றிருந்தால், போலீஸின் மொத்தக் கவனமும் இந்த வழக்கின் பக்கம் திரும்பியிருக்கும். அதைப் பயன்படுத்தி கொச்சியில் அவர் டாக்டர் டிக்சனைக் கடத்தத் திட்டமிட்டு இருக்கலாம்.” ஜமாலுதீன் ஒருவாறாகப் பேசி முடித்தார்.

‘அதற்கு நாம் இப்போது என்ன செய்ய வேண்டும்?’ என்ற கேள்வி ஒவ்வொருவரின் முகத்திலும் வெளிப்படை யாகத் தெரிந்தது.

துப்பறிவாளர் புஷ்பராஜை, ஜமாலுதீன் மீண்டும் கவனித்தார். இந்த விஷயத்தில் தன்னால் என்ன செய்ய முடியும்? என்று புஷ்பராஜ் யோசித்தார்.

கங்காபிரசாத்தை நேருக்கு நேராகச் சமாளிப்பது அவ்வளவு சுலபமல்ல. அவர், இதற்காக என்ன திட்டம் வகுத்திருக்கிறார் என்பதை எவராலும் யூகிக்க முடிய வில்லை. கங்காபிரசாத் அந்த அளவுக்குத் தந்திரசாலி. ஒவ்வோர் அடியையும் கவனமாக வைப்பவர். ஏதோ ஒரு வெளிநாட்டின் பின்னணிச் சக்தி அவருக்கு இருக்கிறது என்பதும் நிச்சயம்.

டாக்டர் டிக்சனைக் கடத்திக் கொண்டு வந்துவிட்டால் அவருக்கு உதவும் நாட்டில் வாழ்நாளின் மீதியை வெகு பத்திரமாகக் கழிக்கலாம். மட்டுமின்றி, இந்தியாவிலுள்ள எந்த ஒரு வழக்கையும் நேரிடாமல், சுலபமாக அவற்றிலிருந்து தப்பிக்கவும் செய்யலாம். இதெல்லாம் அவரது தீர்க்கதரிசனமான திட்டங்கள் என்பது ஓரளவு எல்லோருக்கும் விளங்கவே செய்தது.

"நான் ஏற்கெனவே குறிப்பிட்ட பிளாக்டைகர், ஒருவேளை கங்காபிரசாத்துடன் இணையாமல் தனியாகவும் செயல்படலாம். எனவே, நாம் அந்த வகையிலும் எச்சரிக் கையுடன் செயல்பட வேண்டும்.'' ஜமாலுதீன் கூறினார்.

"அப்படியானால் நமது அடுத்த திட்டம் என்ன?” புஷ்பராஜ் கேட்டார்.

“நீங்கள் கங்காபிரசாத்திடம் செல்ல வேண்டும். சில சமயம் அவர், அந்த வேலையை உங்களிடம் ஒப்படைக் கவும் செய்யலாம்.”

இஸ்மாயில் கூறினார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் பிளாக்டைகர் ராபின்சனும் எஸ்.பிஜோஸப் மாத்யூவும் டைனிங் டேபிளில் அமர்ந்் திருந்தனர்.

13

சாப்பிட்டவாறே எஸ்.பி ஜோஸப் மாத்யூ எதிரில் அமர்ந்திருக்கும் இளைஞனை ஊன்றிப் பார்த்தார்.

‘இந்த முகத்தை எங்கேயோ பார்த்து மறந்து விட்டதாக' அவருக்குத் தோன்றியது. எவ்வளவுதான் யோசித்துப் பார்த்தும் நினைவின் கிட்டங்கியிலிருந்து அந்த ஞாபகம் மட்டும் மேலெழும்பி வரவில்லை.

ஆனால், ஒன்றிரண்டு தடவை பிளாக்டைகர் கிள மெண்ட் டிசூஸாவின் முகம் அவர் மூளைக்குள் எட்டிப் பார்க்கவும் தவறவில்லை.

பிளாக்டைகரின் கண்ணுக்குள் ஒரு கரும்புள்ளி இருந்தது. அது, இந்த இளைஞனிடம் தென்படவில்லை. இந்த மாதிரி ஒரு சூழலில் எதிரே இருக்கும் இளைஞனை எப்படிச் சந்தேகிக்க முடியும்? அவர் இருப்பது சகோதரி மகளின் வீட்டில் அல்லவா?

“இப்போது எங்கே பிராக்டீஸ் செய்கிறீர்கள்?” எஸ்.பி கேட்டார்.

“இரண்டு வருட காலம் இங்குதான் இருந்தேன். தற்சமயம் கனடாவில் இருக்கிறேன். விடுமுறையைக் கழிக்க வந்திருக்கிறேன். இவள் என் மனைவி.”

“எனக்கு மிகவும் தெரிந்த முகம்போல் இருக்கிறது உங்களுடையது!” எஸ்.பி கூறினார்.

அது யாருடைய முகம் என்று ராபின்சனும் கேட்க வில்லை, சாராம்மாவும் கேட்கவில்லை. ராபின்சனுக்கு அந்த உண்மை நன்றாகவே தெரியும்.

“ஏதாவது வழக்குத் தொடர்பாக வந்திருப்பீர்கள் இல்லையா சார்?” ராபின்சன் அவரிடம் கேட்டான்.

"ஆமாம்... அதனால் நான் உடனடியாகக் கிளம்ப வேண்டும். இவ்வளவு தூரம் வந்துவிட்டதால் சாராவைப் பார்க்கலாமே என்றுதான் வந்தேன்.” சாராம்மாவைப் பார்த்தபடி ஜோஸப் மாத்யூ கூறினார்.

அந்த விநாடியில் சாராம்மாவின் இதயத்துடிப்பின் வேகம் அதிகரித்தது. தனது திகைப்பை மறைக்க அவர் மிகவும் சிரமப்பட்ட நேர்ந்தது. இதுவரை எந்த அசம்பா விதமும் நிகழாததில் அவள் ஒரளவு ஆறுதல் அடையவும் செய்தாள்.

ஆனால், முழுமையான நிம்மதி ஏற்படவில்லை. ராபின்சனால் எவ்வளவு தொலைவுக்கு அவரை ஏமாற்ற முடியும் என்பது தெரியவில்லை. அதனால் எந்த விநாடியிலும் எதுவும் நடக்கலாம் என்ற ஒர் அமைதியின்மை அவளைத் தொற்றிக் கொண்டது.

‘எல்லாவற்றையும் தெரிந்து கொண்டு அங்கிள் நடிக்கிறாரா? அதற்கும் வாய்ப்பு உண்டு. அவருடைய துறை அப்படிப்பட்டதாயிற்றே. ஒருவேளை, இந்தச் சூழ்நிலை யில் தனியாக அவனுடன் மோத வேண்டாம் என்று அவர் தீர்மானித்திருக்கலாம். முன்னெச்சரிக்கைகள் செய்வதற்காக அவர் தற்காலிகமாக இங்கிருந்து கிளம்பலாம். விரைவிலேயே சற்றும் எதிர்பாராமல் திரும்பி வரவும் செய்யலாம்?’ எனினும் சாராம்மாவால் ஒரு தீர்மானத்துக்கு வர முடியவில்லை.

சாப்பாட்டை முடித்துக் கொண்டு எஸ்.பி எழுந்தார். விரைவிலேயே அங்கிருந்து கிளம்பவும் செய்தார்.

“வரட்டுமா? அநேகமாக நான் கொஞ்ச நாட்கள் இந்தப் பகுதியில் இருக்க வேண்டியிருக்கும். பார்க்கலாம்!” கிளம்பும்போது அவர் கூறியிருந்தார்.

ஜோஸப் மாத்யூவின் கார் கேட்டைக் கடந்து வெளியேறிய பிறகுதான் சாராம்மா ஜேக்கப் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.

“ஒவ்வொரு விநாடியும் நான் பயந்துடன் போராடிக் கொண்டிருந்தேன்." சாராம்மா கூறினாள்.

“எனக்கும் அது தெரியும். பதறினால் காரியம் சிதறி விடும்!” என்ற ராபின்சன், சாராம்மாவின் முகத்தைப் பார்த்தான்.

சாராம்மா அவன் கண்களைப் பார்த்தாள். அப்போது அந்தக் கண்ணில் கரும்புள்ளி தென்படவில்லை. அவள் வியப்பு அடைந்தாள்.

"கரும்புள்ளிதான் உங்களைக் குழப்பி இருக்கிறது இல்லையா... இப்போது பாருங்கள்..." -என்ற ராபின்சன் தன் விரல்களைக் கண்மணிக்குள் கடத்தினான். வட்டமான சிறிய பிளாஸ்டிக் துண்டு ஒன்றை வெளியில் எடுத்தான்.

“இதுதான் கரும்புள்ளியை மூடியது. இனிமேல் தேவைப்படும்போது வைத்துக் கொள்கிறேன். எப்போதும் இதைச் சுமந்து கொண்டிருக்க வேண்டியது இல்லையே!” என்றவன் அதை பத்திரமாக ஒரு காகிதத்தில் பொதிந்து தனது பாக்கெட்டில் பத்திரப்படுத்தினான்.

எந்தவொரு பரபரப்போதிகைப்போ இல்லாமல் அவன் பேசிக் கொண்டிருந்தான். ஓர் உயர்ந்த போலீஸ் அதிகாரி யிடம் பேச நேர்ந்தபோதும் அவனிடம் எந்த விதமான சஞ்சலமும் இருந்ததில்லை.

“உங்களால் எப்படி இப்படியெல்லாம் நடந்து கொள்ள முடிகிறது?’ சாராம்மா வாய்திறந்து கேட்டேவிட்டாள்.

“நானும் உயிர் வாழவேண்டுமே.” சிகரெட் ஒன்றை எடுத்து உதட்டில் பொருத்தியவன் என்ன நினைத்தானோ அதை மறுபடியும் பாக்கெட்டில் போட்டுக் கொண்டான்.

"சரி... நான் சாதாரணமாகக் கேட்கிறேன். நீங்கள் எப் போது இங்கிருந்து கிளம்புவீர்கள்?” சாராம்மா கேட்டாள்.

"அதை என்னால் தீர்மானமாகச் சொல்ல முடியவில்லை. நாங்கள் இப்போது வெளியேறினால் எதிரிகளிடம் சிக்கிக் கொள்ள நேரிடும். முதல் எதிரி போலீஸ், இரண்டாவது நபர் என்னைப் போன்ற மற்றொருவன். அந்த எக்ஸ் யாரென்று இப்போதும் எனக்குத் தெரியாது!” என்ற ராபின்சன் அறை ஒன்றுக்குள் நுழைந்தான்.

சாராம்மா அவன் போன திசையையே பார்த்துக் கொண்டு இருந்தாள். ரோஸி எந்த விதமான பதிலும் சொல்லாமல் மௌனமாக இருந்தாள்.

கங்காபிரசாத் தனது ரகசிய இருப்பிடத்தில் உட்கார்ந் திருந்தார். நேரம் நள்ளிரவைத் தாண்டி விட்டிருந்தது.

அப்போது அவரைச் சந்திக்கும் வேண்டுகோளுடன் விண்ணப்பம் ஒன்று வந்தது. அவரின் நெருக்கமானவர் களில் ஒருவரான கபார்சிங் அனுப்பியிருந்த செய்தி அது.

அனுமதி வழங்கியதும் தன்னுடன் மற்றொருவர் இருப்பதாகவும், அவர் ஒரு வெளிநாட்டுக்காரர் என்றும் கபார் தெரிவித்தார். சந்தேகத்துக்கு உரிய நபர் அல்ல வென்றால், இந்த ரகசிய இடத்தைத் தெரியப்படுத்தாமல் அழைத்து வருமாறு கங்காபிரசாத் தெரிவித்தார்.

சரியாக முப்பது நிமிடங்களுக்குப் பிறகு கபர்சிங் வெளிநாட்டுக்காரர் ஒருவருடன் அந்த அறைக்கு வந்து சேர்ந்தார்.

நடுவயதான அந்த மனிதன் ஒரு வெள்ளைக்காரனைப் போல் தோற்றமளித்தான்.

தனது நாட்டின் பெயரைச் சொல்லி, அவன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். பெயர் ரிச்சர்ட் ஜான்ஸன். வயது ஐம்பது. அவன் கையில் ஒரு சூட்கேஸ். பாண்ட்-ஷர்ட்-கோட் அணிந்திருந்தான். கண்ணில் கறுப்புக் கண்ணாடி.

அவன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட பிறகு நாற்காலி ஒன்றில் போய் அமர்ந்து கொண்டான்.

“உங்களைச் சந்திப்பதற்காகத்தான் நான் இந்தியாவுக்கு வந்திருக்கிறேன்.” வந்தவன் பேசத் தொடங்கினான்.

“சொல்லுங்கள்... நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?” கங்காபிரசாத் அவரை ஊன்றிக் கவனித்தபடி கேட்டார்.

“எல்லாவற்றையும் வெளிப்படையாகச் சொல்கிறேன். மிகவும் முக்கியமான ஒரு விஷயத்துக்காக நான் சுற்றுலாப் பயணி என்ற விசாவில் இங்கு வந்திருக்கிறேன். எங்களது திட்டத்தை நிறைவேற்ற என்ன விலை தரவும் நாங்கள் தயாராக இருக்கிறோம்!”

“நீங்கள் சொல்ல வருவது எனக்கு விளங்கவில்லை." கங்காபிரசாத் சுருட்டு ஒன்றைப் பற்ற வைத்தபடி சாய்வுநாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்தார்.

"விலை மதிக்க முடியாத மனிதர் ஒருவர் இன்னும் இரண்டு நாட்களுக்குள் இங்கு வந்து சேருவார். உலகம் முழுக்கத் தெரிந்த பயங்கரமான இயக்கத்தின் தலைவர் அவர் இங்கு அவர் வருவது ஓர் அமைதி உடன்பாட்டுக்காக. அவர் பெயர் டாக்டர் டிக்சன். அவர் ஒரு விஞ்ஞானியும் கூட. அவரை உயிருடன் பிடிக்க வேண்டும். என்றவன் தனது சூட்கேஸை மேஜை மீது வைத்தான்.

“இதற்குள் ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள வெளிநாட்டு கரன்ஸி இருக்கிறது. இது வெறும் அட் வான்ஸ் மட்டும்தான்." அவர் சூட்கேஸைத் திறந்து நோட்டுக் கற்றைகளை எடுத்து வெளியே வைத்தார்.

கங்காபிரசாத் நோட்டுக் கற்றைகளை வெறித்துப் பார்த்தார்.

‘அப்படியானால் சாதாரணமான ஒரு விஷயத்துக்கு அவர் வரவில்லை என்று கங்காபிரசாத்துக்கு விளங்கியது. அது சட்டென்று செய்து தீர்க்கிற ஒரு செயலும் அல்ல. பேங்க் ஒன்றைக்

கொள்ளையடிப்பதோ, கூட்டமாக ஒரு சிலரைக் கொல்வதோ கங்காபிரசாத்தைப் பொறுத்தவரை ஒருபெரிய விஷயம் இல்லை.

ஆனால், இது அப்படிப்பட்ட ஒன்று அல்ல.

ஒருவரை உயிருடன் பிடித்து ஒப்படைக்க வேண்டும். அதுவும் சாதாரணமான ஒரு மனிதர் அல்ல அவர் உலகப் புகழ்பெற்ற ஒரு பயங்கர இயக்கத்தின் தலைவர்.

அவரை இழப்பது என்பது அவரை வரவேற்கும் நாட்டுக்கு அது ஒரு தீராக் களங்கம். அதைப் போலவே, அந்த விஞ்ஞானியின் ஆட்களுக்கு இந்தச் செயல் ஒரு பெருத்த இழப்பாக இருக்கும்.

எனவே, இது அவ்வளவு சுலபத்தில் நிறைவேற்றக் கூடிய காரியம் அல்ல. மிகவும் எச்சரிக்கையுடன், திட்டமிட்டுச் செயல்பட வேண்டும். ரிமோட் கண்ட்ரோலை பயன்படுத்தி ஏதாவது ஓர் இடத்தில் வெடிகுண்டு வைப்பதைப் போல் அல்லாமல் கவனமாகச் செயல்படவேண்டும்.'

கங்காபிரசாத்தின் யோசனை, ஜான்ஸனுக்கும் விளங்கி யிருக்க வேண்டும்.

"உங்களது யோசனை எனக்குப் புரிகிறது. இங்கு நாங்கள் நினைத்தாலும் செய்ய முடியாத காரியம் இது. எனவே, உங்களை அணுகியிருக்கிறோம். எங்களில் எவராவது அவர் வசிக்கும் பகுதியில் நடமாடினால் சந்தேகத் துக்கு ஆளாகிக் கைது செய்யப்படுவோம். ஆனால், உங்களுக்கு இப்படிப்பட்ட சிக்கல்கள் எதுவும் இல்லை. எனவேதான் உங்களிடம் உதவி கோருமாறு கேட்டு என்னை அனுப்பி வைத்திருக்கிறார்கள்!" ஜான்ஸன் தெளிவு படுத்தினான்.

"புரிகிறது. எங்கள் கூட்டத்தில் அதற்குப் பொருத்தமான ஒருவர் இருக்கிறார். ஆனால், தற்சமயம் அவர் எங்கு இருக் கிறார் என்று தெரியவில்லை." கங்காபிரசாத் கூறினார்.

"நீங்கள் குறிப்பிடுவது பிளாக்டைகரையா?" வந்தவன் கேட்டான்.

கங்காபிரசாத் மலைத்துப் போனார். 'தன் மனத்தி லிருப்பது எப்படி இவனுக்குத் தெரிந்தது?'

ஆள் மாறாட்டம் செய்வதில் உலக அளவில் கெட்டிக்காரன் என்று பெயர் எடுத்தவன் பிளாக்டைகர். ஒரு வகை யில் அதில் அவனை மிஞ்சக் கூடியவர்கள் எவரும் இல்லை யென்றே சொல்லலாம். ஆனால், தற்சமயம் அவன் எங்கு இருக்கிறான்? அவனிடம் ஒரு

வேலையை ஒப்படைத்தால் தைரியமாக இருக்கலாம். கடந்த முறை என்னவோ ஒரு தவறு நிகழ்ந்திருக்கிறது. ரிமோட்டும் அந்த நேரம் செயல் படவில்லை. இல்லாவிட்டால் அந்த வெடிகுண்டு சம்பவத் திலும் நிச்சயமாக அவன் வெற்றி பெற்றிருப்பான்.

கங்காபிரசாத்தின் ஆட்கள் வெடிகுண்டை இயக்கும் ரிமோட்டைச் செயல்படுத்தியும் அந்த கார் வெடிக்காத தால் அவர் அந்த முடிவுக்குத்தான் வந்தார். அதனால் எலெக்ட்ரானிக்ஸ் இன்ஜினியர் கண்டபடி திட்டு வாங்கினார்.

"பிளாக்டைகர் சிறையிலிருந்து தப்பித்த தகவல் எனக்குத் தெரியும். அவர் இந்த ஊரில்தான் இருக்கிறார் என்பதும் தெரியும்.'' ஜான்ஸன் கூறினான்.

"அவர் என்னுடன்தான் இருக்கிறார். விரைவிலேயே என்னைத் தொடர்பு கொள்வார் என்றும் கருதுகிறேன்." கங்காபிரசாத் நம்பிக்கையுடன் பேசினார்.

அப்போது ராபின்சன், சாராம்மாவின் பங்களாவி லிருந்து வெளியேறினான். சாராம்மாவின் மாருதி கார் அவர்களை ஒட்டல் வரை சுமந்து சென்றது.

ராபின்சன் சீக்கிய வேடத்தில் இருந்தான். ரோஸியும் பஞ்சாபிப் பெண்மணியாக வேடம் போட்டிருந்தாள். சரியான பஞ்சாப் தம்பதி.

கார் ஒட்டலின் போர்ச்சில் நின்றது. தகவல்கள் பரிமாறப்பட்டன.

பழைய அறையே மறுபடியும் கிடைத்தது.

அறைக்குள் நுழைந்தவுடன் அவன் சாராம்மா ஜேக்கபுக்கு போன் செய்தான். கார் ஒட்டல் வாசலிலேயே உள்ளதால் எடுத்துச் செல்லுமாறு தெரிவித்தான்.

அடுத்த ஒரு சில நிமிடங்களுக்குள் போன் மணி படித்தது.

உடனே பார்க் பகுதிக்கு வரவேண்டும். விஷயம் மிக முக்கியம்!' என்பது தகவல். பெயர் சொல்லவில்லையானாலும் பேசியது கங்காபிரசாத் என்பது ராபின்சனுக்கு விளங்கியது.

எப்படியாவது கங்காபிரசாத்திடம் செல்ல வேண்டும் என்று ராபின்சனும் அப்போது விரும்பினான். தன்னுடைய தலைமறைவு வாழ்க்கைக்கு அது பாதுகாப்பான ஓரிடம் என்பதில் ராபின்சனுக்கு எந்த விதமான சந்தேகமும் இல்லை. சாராம்மா ஜேக்கப்பின் வீட்டில்

தங்கியிருப்பது ஆபத்தான விஷயம் என்பது, எஸ்.பி-யைச் சந்தித்த பிறகு புரிந்தது.

“ரோஸி, நாம் உடனே கிளம்ப வேண்டும். இங்கு அவரின் ஆட்கள் இருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. உடனே தகவல் போயிருக்கிறது. நாம் அங்கு செல்வதுதான் பாதுகாப்பு. உடனே கிளம்பு.”

“நாம் வந்த கார் வாசலிலேயே நிற்கிறதே?” ரோஸி கேட்டாள்.

"பரவாயில்லை... அதை பார்க் அருகே விட்டுவிட்டுத் தகவல் தெரிவிப்போம்.”

அவர்கள் உடனே கிளம்பவும் செய்தனர். அந்த கார் பார்க்கை நெருங்கியபோது சொல்லி வைத்தது போல் துல்லியமாக அம்பாஸ்டர் கார் ஒன்று அவர்களுக்கு முன்பாக வந்து நின்றது.

ராபின்சனும் ரோஸியும் அதில் ஏறிக்கொண்டனர்.

14

அப்போதும் போலீஸ் கிளப்பில் உயர்போலீஸ் அதிகாரிகள், விஞ்ஞானி டாக்டர் டிக்சனின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாகத் தீவிர விவாதம் நடத்திக் கொண்டிருந்தனர்.

டி.ஜ.ஜி. இஸ்மாயிலின் யோசனைப்படி, துப்பறிவாளர் புஷ்பராஜ் கங்காபிரசாத்தின் டிரைவராகச் செல்லும் யோசனையை ஒப்புக் கொண்டார். ஆனால், அதை எப்படிச் செயல்படுத்துவது என்பது ஒரு கேள்விக் குறியாக நின்றது.

அதற்கும் ஒரு மாற்றுவழியை புஷ்பராஜே முன் வைத்தார்.

“வெடிமருந்து கொண்ட அதே காருடன் பட்டணத்தில் உலாவ வேண்டும். அவரின் ஆட்கள் இந்தத் தகவலைக் கண்டிப்பாக அவருக்குத் தெரிவிப்பார்கள். அதனால், நான் கங்காபிரசாத்தை அடைவது சுலபமாகி விடும்.”

அதை எல்லோரும் ஏற்றுக் கொண்டனர்.

அன்று இரவே டிரைவரும் புஷ்பராஜூம் காரில் கிளம் பினர். பார்க்கை நெருங்கியபோது மாருதிகார் ஒன்று பார்க் செய்யப்பட்டிருப்பதை புஷ்பராஜ் கவனித்தார்.

தனது காரிலிருந்து இறங்கிய புஷ்பராஜ், அந்த காரை ஒரு முறை வலம் வந்து ஊன்றிக் கவனித்தார். அருகில் எங்கும், எவரும் தென்படவில்லை.

கதவை இழுத்துப் பார்த்தார். அந்த கார் பூட்டப்பட வில்லை. உள்ளே நுழைந்தார். டாஷ்போர்டைத் திறந்து பார்த்தார். ஆர்.ஸி.புத்தகம் மற்றும் வண்டியின் நகல்கள் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. கவனித்தார். சாராம்மா ஜேக்கப்பின் வண்டி.

"மிஸ்டர் ரவி, நான் இந்த மாருதியில் ஏறி ஒட்டி வருகிறேன். நீங்கள் அம்பாஸ்டரைச் செலுத்தி வாருங்கள். நாம் உடனடியாக போலீஸ் கிளப்பை அடைய வேண்டும். நாம் எதிர்பாராத ஏதோ ஒன்று நடந்திருக்கிறது!”

உடனேயே இரண்டு கார்களும் அங்கிருந்து கிளம்பின.

அங்கிருந்த அதிகாரிகள், இருவரையும் சந்தேகத்துடன் பார்த்தனர்.

புஷ்பராஜ் தகவல் தெரிவித்தார்.

"அப்படியா!” என்றவாறு எஸ்.பி ஜோஸப் மாத்யூ எழுந்தார். உடனே அவர் சாராம்மாவின் வீட்டுக்கு டயல் செய்தார். மறு புறம் ரிசீவர் எடுத்த சத்தம் கேட்டது.

“நான்தான் ஜோஸப் மாத்யூ பேசுகிறேன். பார்க்குக்கு அருகில் உன் கார் நின்று கொண்டிருக்கிறது. என்ன விஷயம்?”

“... ... ...”

“சரி. நான் நேரில் வந்து கேட்டுக் கொள்கிறேன்!” என்ற எஸ்.பி தொடர்பைத் துண்டித்தார்.

“கார் சாராம்மாவினுடையதுதான். நான் நேரில் போனால்தான் தகவல் ஏதாவது தெரியும் என்று தோன்று கிறது.’ ஜோஸப் மாத்யூ உடனே அங்கிருந்து கிளம்பினார்.

கார் டிரைவ் செய்யும்போது அவரது யோசனை, சாராம்மாவின் வீட்டில் பார்த்த இளைஞனின் முகம் ஏனோ அவருக்கு ஞாபகம் வந்தது. எனினும் அவர் அதைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

சாராம்மா வீட்டின் கேட் திறந்து கிடந்தது.

‘ஒரு வேளை காரை யாராவது கடத்திக் கொண்டு போயிருக்கலாம்!’

என்று அவர் நினைத்தார்.

கார் சத்தம் கேட்டதும் சாராம்மா ஜேக்கப் வாசற் கதவைத் திறந்தாள்.

ஜோஸப் மாத்யூ வரவேற்பு அறையை நோட்டமிட்ட வாறே சோபாவில் அமர்ந்தார்.

“எனது கார் கிடைத்ததா?” அவள் கேட்டாள்.

"ஆமாம். என்ன நடந்தது? சொல் பார்க்கலாம்!” அவர் கேட்டார்.

“எனக்கு ஒன்றும் புரியவில்லை.” சாராம்மா பதிலளித்தாள்.

எஸ்.பி ஜோஸப் மாத்யூ சாராம்மாவின் கண்களை உற்றுப் பார்த்தார். ஆனால், அவளிடம் எந்தவொரு மாற்ற மும் தென்படவில்லை. எஸ்.பி-க்கு அவள் மீது சந்தேகம் தோன்றியது.

"சரி... இங்கு இருந்த பிளாக்டைகர் எங்கே?’ அவளை ஊன்றிப் பார்த்தபடி எஸ்.பி கேட்டார்.

"பிளாக்டைகரா... யார் அது? எனக்கு எதுவும் புரிய வில்லையே!”

“சாராம்மா, நீ என்னை ஏமாற்றப் பார்க்காதே, அப்போதோ எனக்கு அவன் மீது சந்தேகம் ஏற்பட்டது. கெட்டிக்காரக் குற்றவாளியானதால் நன்றாக நடித்தான். மேற்கொண்டு நேரம் கடத்தாமல் இப்போதாவது உண்மையைச் சொல். இல்லாவிட்டால், நீ அனாவசியமான வம்புகளில் மாட்டிக் கொள்வாய்!”

அதைக் கேட்ட சாராம்மா திகைத்தாள்.

'உண்மையைச் சொல்லாவிட்டால், அங்கிளே ஒரு வேளை எல்லாவற்றையும் கண்டுபிடித்து விடலாம்.’ சாராம்மா நினைத்தாள். எனவே, நடந்ததையெல்லாம் அப்படியே தெரிவித்தாள்.

ஜோஸப் மாத்யூவினால் அதையெல்லாம் நம்ப முடியவில்லை.

அகில உலகக் குற்றவாளி ஒருவன் தன் மருமகளின் வீட்டிலா இவ்வளவு நாளாக ஒளிந்திருந்தான்?

“அவன் இங்கு வரக் காரணம்?” எஸ்.பி கேட்டார்.

"பம்பாயின் புகழ்பெற்ற அட்வகேட் ஜெயமாலினி மூலமாக அவன் என்னைப் பற்றிக் கேள்விப்பட்டிருக் கிறான். ஜெயமாலினி என் சிநேகிதி.” சாராம்மா, தன் சகோதரன் விஷயத்தை அவரிடம்

முற்றிலுமாக மறைத்தாள்.

“எப்படிப்பட்ட சம்பவங்கள்! எப்படியானாலும் நடந்தது நடந்தபடியே இருக்கட்டும். இதை வேறு எவரிடமும் சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம். பிளாக் டைகருக்கு இந்த விஷயத்தை வெளியே சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. பொதுவாக உதவியவர்களைத் தொல்லைப்படுத்துவது அவன் இயல்பு அல்ல. சரி... நான் கிளம்புகிறேன்." அவர் அங்கிருந்து கிளம்பினார்.

அவர் வண்டியைச் செலுத்தும்போது மிகுந்த ஏமாற்றத் துக்கு உள்ளானது தெரிந்தது.

சற்று நேரத்துக்கு முன்னால் அவனைக் கையும் களவுமாகப் பிடித்திருந்தால் அவார்டு ஒன்றும், பிரமோஷன் ஒன்றும் நிச்சயமாகக் கிடைத்திருக்கும். ஆனால், அது முடியவில்லை!

“காரை யாராவது திருடிக்கொண்டு போனார்களா என்ன?” இஸ்மாயில் கேட்டார்.

"ஆமாம்."

"அப்படியானால், அது அவனாகத்தான் இருக்கும். அந்த இடத்தில் அவன் கங்காபிரசாத்தின் ஆட்களுடன் சேர்ந்து விட்டான்!’ புஷ்பராஜ் கூறினார்.

"அப்படியானால் அவன் இவ்வளவு நாள் எங்கே தங்கியிருந்தான் என்பது மற்றொரு கேள்விக்குறி.”

என்ன காரணத்தாலோ, புஷ்பராஜ் உடனே மாத்யூவைப் பார்த்தார்.

எஸ்.பி தனது நிலையை பத்திரப்படுத்த மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது.

புஷ்பராஜ் கெட்டிக்காரர் என்பது, எஸ்.பி-க்குத் தெரியும். அவர் சரியான கோணத்தில் காரண காரியங்களுடன் பலவற்றைக் கண்டுபிடித்திருக்கிறார். அந்தக் கோணத்தி லேயே அவருடைய யூகங்களும் இருக்கும். இது வழக்கம் தான்.

“இந்த நிலைமையில் நாம் நமது திட்டத்தை மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கிறது. வேறு வழிகள் பற்றி யோசிக்க வேண்டும்.” இஸ்மாயில் கூறினார்.

“நீங்கள் சொல்ல வருவது எனக்கு விளங்கவில்லை!” மற்றொரு

எஸ்.பி-யான ராம்குமார் கேட்டார்.

“கிளமெண்ட் டிசூஸா இப்போது கங்காபிரசாத்திடம் சேர்ந்து விட்டான் என்பது பொருள். அவனை அவர் சந்தேகப்படவும் வாய்ப்பு இல்லை. அவர்கள் உடனடியாக அடுத்த கட்ட நடவடிக்கைக்கு வடிவம் கொடுப்பார்கள்.”

அந்த எதிர்பார்ப்பு சரியானதுதான்.

கங்காபிரசாத் தனது ரகசியமான இருப்பிடத்தில் பிளாக்டைகருடன் பேசிக் கொண்டிருந்தார்.

“இதுவரை நீங்கள் தங்கியிருந்தது டாக்டர் சாராம்மாவின் வீட்டில்தானா?” கங்காபிரசாத்தால் அந்தத் தகவலை நம்ப முடியவில்லை.

"ஆமாம்... எனக்கு வேறு வழி எதுவும் தெரியவில்லை."

"அப்படியானால் இதற்கு முன்பு இங்கு வந்திருந்தது.”

"நானல்ல, என்னைப் போன்ற மற்றொருவன்!"

“இது உண்மையா?”

"நான் வேறு என்ன சொல்ல? உங்களிடம் இதற்காகப் பொய் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. என்னை நீங்கள் நம்பாவிட்டால், நான் என் வழியைப் பார்த்துக் கொண்டு கிளம்புகிறேன். இப்போது என்னைத் தொலைத்துக்கட்ட நீங்கள் தந்திரமாக எதையாவது செய்தால், நாம் ஒட்டுமொத்தமாக இந்த இடத்திலேயே சாம்பலாகி விடுவோம். ஏன், எப்படி என்றெல்லாம் என்னிடம் கேள்வி கேட்காதீர்கள்!” பிளாக்டைகர் சிக ரெட் ஒன்றைப் பற்ற வைத்தபடி லாகவமாகப் பேசினான்.

‘அதில் உண்மை இருக்கிறது’ என்று கங்காபிரசாத்துக்கும் தோன்றியது.

“தேவையே இல்லை. நான் உங்களை நம்புகிறேன். நான் உங்களை இங்கு வரவழைத்தது இவரது வேண்டு கோளின் படிதான். இவர், மிஸ்டர் ரிச்சர்டு ஜான்ஸன்." கங்காபிரசாத் அந்த வெள்ளைக்காரரை ராபின்சனுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

அவன் சிரித்தவாறு கை நீட்டினான்.

“என்ன விஷயம்?” பிளாக்டைகர் கேட்டான்.

கங்காபிரசாத், அவனுக்கு விளக்கினார். அதன் பிறகு புரொஜெக்டரை இயக்குமாறு கூறினார்.

திரையில் பெரிய கட்டடம் ஒன்று தென்பட்டது.

"இதில்தான் டாக்டர் டிக்சன் தங்கப் போகிறார். அடுத்தது..." கங்காபிரசாத் ஆபரேட்டரைப் பார்த்தார்.

கட்டடத்தின் பிளான் திரையில் தெரிந்தது.

"அதற்குள் மொத்தம் ஆறு அறைகள். மையத்திலுள்ள அறை, அவரது படுக்கை அறை. மேற்கில் தெரிவது வரவேற்பு அறை. அதற்கு முன்புறம் இருப்பது பால்கனி. அந்த பால்கனி ஏரியைப் பார்த்தபடி இருக்கிறது. அந்த ஏரியில் பொதுமக்கள் நீச்சலடிக்கும் பகுதி பால்கனிக்கு எதிரில் உள்ளது. நீச்சலை இதுவரை எவரும் தடை செய்ய வில்லை. ரகசியம் வெளியே தெரியக் கூடாது என்பதற்காக அதை ஒருவேளை அப்படியே விட்டிருக்கிறார்களோ என்னவோ?" கங்காபிரசாத் விவரித்தார்.

ராபின்சன், கங்காபிரசாத்தின் முகத்தைப் பார்த்தான்.

"இந்த நீச்சலடிக்கும் ஏரிப்பகுதி வழியைப் பயன் படுத்தி, டாக்டர் டிக்சனை எந்த ஒர் ஆபத்தும் இல்லாமல் இங்கு கொண்டு வந்து சேர்க்க வேண்டும்!"

"கொண்டு வந்தால்." பிளாக்டைகர், ரிச்சர்டு ஜான்ஸ்னைப் பார்த்தான்.

"எங்களது நாட்டில் நீங்கள் விரும்புவது வரை பத்திரமாகத் தங்கியிருக்கலாம். வசதியான வீடு. மாதந்தோறும் உங்கள் செலவுக்குப் பணம் வருவதுபோல் ஒரு பெரிய தொகை பேங்கில் போடப்படும்."

"நீங்கள் சொல்வதை நான் எப்படி நம்புவது?" ராபின் சன் கேட்டான்.

"எங்களுக்கு உதவி செய்தவர்களுக்கு நாங்கள் ஒரு போதும் துரோகம் செய்ய மாட்டோம். நீங்கள் விரும்பினால், எங்கள் அரசாங்கத்தின் ஒற்றர் படையில் உங்களுக்கு ஒரு பதவியும் வழங்கப்படும்."

ராபின்சன் திருப்தி அடைந்ததாகத் தோன்றியது. சாதாரணமாக இப்படிப்பட்ட சாகசச் செயல்களில் ஈடுபடுவது ராபின்சனுக்கு மிகவும் விருப்பமான விஷயம்.

“சரி... இதற்கு நான் ஒப்புக் கொள்கிறேன். எனக்கு சிறந்த ஒரு கேமரா வேண்டும். நல்ல நீச்சல் உடை, என்னி டம் தரும் பணம் மொத்தமும் நூறுரூபாய் நோட்டுகளாக இருக்க வேண்டும். இரண்டு அல்லது மூன்று அழகான இளம்பெண்கள். தற்சமயம் இதெல்லாம்தான் எனது கோரிக்கைகள்!” ராபின்சன் கூறினான்.

“உங்கள் பட்டியல்படி எல்லாமும் தரப்படும்!” கங்காபிரசாத் கூறினார்.

விடியற்காலையில் ராபின்சன் கண் விழித்தான்.

காலைச் சிற்றுண்டிக்குப் பிறகு இளம்பெண் ஒருத்தி, அவனை கங்காபிரசாத்திடம் அழைத்துச் சென்றாள்.

ராபின்சனின் தலைமுடியை மாற்றவும் முகத்தில் மாற்றங்களைச் செய்யவும் பியூட்டீஷியன் ஒருவர் வந்திருந்தார்.

அவள் மற்றோர் அறைக்குள் அழைத்துச் செல்லப்பட்டாள். அடுத்த ஒரு மணி நேரத்துக்குள் ராபின்சன் ஒட்டுமொத்தமாக ஆளே மாறிப் போயிருந்தான்.

அவனை இப்போது ராபின்சன் என்று சொன்னால் எவருமே நம்ப மாட்டார்கள்!

“இது ஒரு ஐ.டி கார்டு. மிகப்பெரிய கம்பெனி ஒன்றின் பிரதிநிதியாக வேலை செய்கிறீர்கள். அதற்காக விசிட்டிங் கார்டுகள் இதில் உள்ளன.” கங்காபிரசாத் கூறினார்.

ராபின்சன் அவற்றைப் பெற்றுக் கொண்டான்.

அன்று மாலை நேரத்தில் ராபின்சன் ஏரிக்கரையை அடைந்தான். அவனுடன் ரோஸியும் இருந்தாள்.

15

ஏரிக்கரையில் வந்து நின்ற ராபின்சன் சுற்றுமுற்றும் பார்த்தான். ஏரிக்கரையில் உயர்ந்து நிற்கும் பிரமாண்ட மான பங்களாவின் முன்பாக ஏறத்தாழ சமதொலைவில் நான்கு செக்யூரிட்டிகள் காவல் இருந்தனர்.

அவர்கள், தங்களது ரைஃபிள்களைத் தரையில் ஊன்றி பொம்மைகள் போல் நின்று கொண்டிருந்தனர்.

கட்டடத்துக்குக் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ராபின்சனைப் பொறுத்தவரை இதெல்லாம் புதிய அனுபவங்கள் அல்ல.

இதைவிடக் கடுமையான பாதுகாப்புகள் போட்டிருந்த இடங்களிலெல்லாம் அவன் கெட்டிக்காரத்தனமாகச் செயல்பட்டிருக்கிறான். ஆனால், இங்கு செய்ய வேண்டியது பொருள் திருட்டு அல்ல; கொலையும் அல்ல, இங்கு கடத்த வேண்டியது மனிதனை. எனவே, மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்படவேண்டி உள்ளது.

சூரியன் மேலைக் கடலில் இறங்கியதால், ஆகாயத்தில் குங்கும நிறம் பரவியது. தொலைவில் கடல், ரத்தம் கொதிப்பது போல் தெரிந்தது.

அந்த நிறம் கட்டடத்துக்கு இருள் கலந்த சிவப்பைப் பூசியிருந்தது.

காவல்காரர் ஒருவர் அவர்களைக் கவனித்தார். உடனே துப்பாக்கியை வலது கையால் உயர்த்திப் பிடித்தவாறு அவர்களை நெருங்கினார்.

“யார் நீங்கள்?” காவல்காரர் கேட்டார்.

"நாங்கள் எல்லோரையும் போலவே இங்கு வந்திருக்கிற சுற்றுலாப் பயணிகள்.' ராபின்சன் இயல்பாகப் பேசினான்.

சட்டென்று மேற்கொண்டு என்ன கேட்பது என்று தெரியாமல் குழம்பியவரைப் போல் நின்றார் காவலாளி.

"நாங்கள் இங்கு நிற்கக் கூடாதா என்ன?” ரோஸி சிரித்தவாறே கேட்டாள்.

"அப்படியெல்லாமில்லை. இந்தக் கட்டடத்தின் அருகே வரக் கூடாது!” என்றவர் வந்தது போலவே திரும்பிச் சென்றார்.

“நல்லவேலை செய்தாய். கேள்வி கேட்டவருக்கு அசடு வழிந்திருக்கும்” ராபின்சன் சொன்னான்.

“பிரச்சினை அதுவல்ல. அவர் திரும்பிப் போனது எதற்கு என்று எனக்குத் தெரியும்.” ரோஸி கூறினாள்.

அவர்களிடம் வந்த காவல்காரர் வலது புறமிருந்த மற்றொரு காவல்காரரை நெருங்கினார்.

போலீஸ் கிளப் வழக்கம்போல் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. உயர் அதிகாரிகள், விஞ்ஞானியின் பாதுகாப்பு

குறித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது ஐ.ஜி இஸ்மாயில் புதுத் தகவல் ஒன்றைக் குறிப்பிட்டார் “இப்போது ஒரு புதிய செய்தி கிடைத்திருக்கிறது!”

மற்றவர்கள் ஆவலுடன் அவர் முகத்தைப் பார்த்தனர்.

“டாக்டர் டிக்சன் ஒரு பயங்கர இயக்கத்தின் தலை வரும்கூட. உலகின் பல பகுதிகளில் அவருக்கு ஆதரவாளர் களும், ரசிகர்களும் இருக்கிறார்கள். மிகப்பெரிய அளவுக்கு அழிவை ஏற்படுத்தும் ஆயுதம் தொடர்பான ரகசியமும் அவரிடம் உள்ளது. எனவே, அவரைப் பாதுகாப்பது தொடர்பான விஷயத்தில் நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.”

தங்களிடம் அவர் என்ன பொறுப்பை ஒப்படைக்கப் போகிறார் என்று தெரிந்து கொள்ளும் ஆவலில் எல்லோ ரும் அவரைக் கவனித்தனர்.

அவர் புஷ்பராஜைப் பார்த்தார்.

"அந்த பங்களாவின் பாதுகாப்புப் பொறுப்பை நான் புஷ்பராஜிடம் ஒப்படைக்கிறேன்." அவர் கூறினார்.

“சரி... சார்!” புஷ்பராஜ் ஒப்புக் கொண்டார்.

"மிஸ்டர் ஜோஸப் மேத்யூ பங்களாவின் வெளிப்புறப் பாதுகாப்புக்குப் பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும்."

அவரும் ஒப்புக் கொண்டதற்கு அடையாளமாக எழுந்து நின்று போலீஸ் முறையில் சல்யூட் அடித்தார்.

"மிஸ்டர் தாமஸ் ஜேக்கப், புஷ்பராஜ் ஒய்வு எடுக்கும் வேளைகளில் அவருக்கு பதிலாக அவருக்கு உதவ வேண்டும். மேற்கொண்டு செலவிட அதிக நேரமில்லை. எல்லோரும் உடனேயே தங்கள் வேலையைத் தொடங்க வேண்டும்.”

தொடர்ந்து அங்குள்ள ஒவ்வொருவரிடமும் உத்தரவுகளைப் பிறப்பித்தார். கூட்டம் முடிந்ததற்கு அடையாள மாக ஒவ்வொருவராக அங்கிருந்து வெளியேறினர்.

இரவுச் சாப்பாட்டுக்குப் பிறகு புஷ்பராஜ், தனது இருப்பிடத்திலிருந்து மோட்டார் சைக்கிளில் ஏறி, டிக்சன் வசிக்கும் பங்களாவுக்குப் புறப்பட்டார்.

கேட்டின் முன்பாக பைக்கை நிறுத்தினார்.

செக்யூரிட்டி ஆபீஸர், புஷ்பராஜை நெருங்கி வந்தார். அவர் ஒரு வட இந்தியர்.

அவர் புஷ்பராஜை வரவேற்று உட்புறம் அழைத்துச் சென்றார்.

பழைய கட்டடம் ஆனதால் அதன் வராந்தாப் பகுதிகள் ஆங்காங்கே இருளடைந்திருந்தது. பல்புகளின் மேல் படிந் துள்ள ஒட்டடைகள் வெளிச்சத்தை வடிகட்டி அனுப்பிக் கொண்டிருந்தன.

சுமார் இருபது தப்படிகள் நடந்த பிறகு மேற்புறமாகச் செல்லும் படிக்கட்டு ஒன்று தென்பட்டது.

“இந்த வழியாகப் போகலாம் சார்!’ உடன் வந்த அதிகாரி கூறினார்.

மரத்தாலான படிக்கட்டுகளை மிதித்துக் கொண்டு புஷ்பராஜ் மேற்புறத்தை அடைந்தார். அங்குள்ள வராந்தாவில் நடக்கத் தொடங்கினார்.

“இந்த அறைதான் சார்!” உடன் வந்தவர் கூறினார்.

புஷ்பராஜ் அந்தக் கதவின் மேற்புறம் பொருத்தப் பட்டிருந்த காலிங்பெல்லை ஒரு தடவை அழுத்தினார்.

கதவு உட்புறமாகத் திறக்கப்பட்டது.

“உள்ளே வரலாம்!” திடகாத்திரசாலியான ஒரு மனிதன் ஆங்கிலத்தில் கூறினார்.

புஷ்பராஜ் அறைக்குள் நுழைந்தார்.

"உட்காருங்கள்!” அங்கிருந்த மனிதர் நாற்காலி ஒன்றைச் சுட்டிக்காட்டினார்.

அமர்ந்தார்.

“டிடெக்டிவ் புஷ்பராஜ் நீங்கள்தானே?” அவர் கேட்டார்.

"ஆமாம்.”

“தகவல் வந்தது. என் பெயர் அப்துல் கபூர். நான் மிஸ்டர் டிக்சனின் பிரைவேட் செக்ரெட்டரி.” அவர் தன்னை அறிமுகம் செய்து கொண்டார்.

ஆறடி உயரம். அதற்கேற்ற வஞ்சகமற்ற உடல். பாண்ட்-கோட்

அணிந்திருந்தார். தாடியை ஒர் அங்குல நீளத்தில் டிரிம் செய்திருந்தார். கம்பளித் துணியை வெட்டி ஒட்டவைத்தது போல் தெரிந்தது. தீட்சண்ணியமான கண்கள். கறுப்பு நிறப் புருவங்கள். நீண்டு வளைந்த மூக்கு, பருமனான உதடுகள்.

“உங்களைப் பற்றி ஒரளவுக்குக் கேள்விப்பட்டிருக்கிறேன். சிக்கலான நிறைய வழக்குகளைக் கண்டுபிடித் திருக்கிறீர்கள் என்றும் கேள்விப்பட்டேன்.” கபூர் பேசினார்.

"அவரவர் தொழிலைச் சரியாகச் செய்ய வேண்டும் என்பது என் கொள்கை. அப்படியானால் நான், என் கொள்கையைச் சரியாகக் கடைப்பிடிக்கிறேன் என்று பொருள்.” புஷ்பராஜ் சிரித்தபடி பேசினார்.

“தொழில் என்றது சரிதான். ஆனால், நீங்கள் உயிரைப் பயணம் வைக்க வேண்டியுள்ள தொழிலைச் செய்கிறீர்கள். அதுவும் அந்தச் சூழலை நீங்கள் அடிக்கடி சந்திக்க வேண்டியிருக்கும்!” சுருட்டு ஒன்றைப் பற்ற வைத்த கபூர் கூறினார்.

“இப்படியொரு தொழிலைத் தேர்ந்தெடுத்த பிறகு அப்படியெல்லாம் யோசிக்க முடிவதில்லை."

“உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது மிகவும் பொறுப்பு வாய்ந்த பணி.”

“மன்னிக்கவும்... நான் உங்களிடம் ஒன்று கேட்கலாமா?” புஷ்பராஜ் கேட்டார்.

"தாராளமாகக் கேளுங்கள்.”

புஷ்பராஜ் அந்த அறையைப் பார்வையால் ஒரு முறை அலசினார்.

ஒர் இரும்பு அலமாரி, இரண்டு நாற்காலிகள், அரை வட்ட வடிவமான டீப்பாய் ஒன்று, அதன்மீது மிகப்பெரிய 'குளோப் ஒன்று இடம் பெற்றிருந்தது.

"மிஸ்டர் டிக்சன் ஒரு பயங்கரவாத இயக்கத் தலைவர் என்று சொல்லப்படுகிறதே... அது உண்மைதானா?” புஷ்பராஜ் கேட்டார்.

"ஆமாம்!” கபூர் பதிலளித்தார்.

"அப்படியானால் அவர் சொந்த நாட்டிலிருந்து வெளியேறி இருக்கிறாரா?”

“நிச்சயமாக இல்லை. அமைதி உடன்பாட்டுக்காக வந்திருக்கிறார். ஆனால், அவரைப் பிடித்துச் செல்ல ஒரு சில நாட்டினர் முயற்சி செய்கின்றனர். அவர்கள் எதை வேண்டுமானாலும் செய்து அவரைக் கடத்த விரும்புகிறவர்கள். அப்படி ஏதாவது ஒன்று நிகழ்ந்தால் அது இரண்டு நாட்டின் உறவுகளையும் பாதிக்கும். மட்டும் இன்றி, எல்லா நாடுகளிலும் அவருக்கு ஆதரவாளர்கள் இருக்கின்றனர்.” கபூர் பேசிவிட்டு, சுருட்டை ஆழ்ந்து இழுத்துப் புகையை வெளிவிட்டார்.

‘நிலைமை தான் எதிர்பார்த்ததைப் போலவே சிக்கலானதுதான்.’ புஷ்பராஜ் நினைத்தார். ‘அப்படியானால், தன்னுடைய பொறுப்பு அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்று அர்த்தம்.'

“எத்தனையோ நாடுகளைச் சேர்ந்தவர்கள் இங்கு இருக்கிறார்கள். அவர்களில் யார் நல்லவர், யார் கெட்ட வர் என்பது தெரியாது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையான திட்டங்கள் இருக்கும். எனவே, எந்தச் சந்தர்ப் பத்தில் என்ன நடக்கும் என்று சொல்ல முடியாது. அதனால், எப்போதும் மிகுந்த விழிப்புடன் இருக்க வேண்டும். இது நல்லபடியாக முடிவது வரை நிறைய விஷயங்களைத் தியாகம் செய்ய வேண்டி இருக்கும் புஷ்பராஜ் யோசனையில் ஆழ்ந்தார்.

அதனால்தான் ஐ.ஜி. இஸ்மாயில் தன்னிடம் இந்த வேலையை ஒப்படைத்திருக்கிறார். தன்னைப் பற்றிய அவரது கணிப்பு தவறவில்லை என்று அவருக்கு நிரூபித்தாக வேண்டிய கட்டாயம். இதெல்லாம் முடிவது வரையில் இதில் சம்பந்தப்பட்டுள்ள எவருமே நிம்மதியுடன் இருக்க முடியாது. யார், யாரிடமிருந்து, எப்படிப்பட்ட தகவல்களையெல்லாம் கறக்க முயற்சி செய்வார்களோ... கறப்பார்களோ? யார் கண்டது?

டாக்டர் டிக்சனைக் கடத்திச் செல்லத் திட்டமிட்டிருப் பவர்களில் கங்காபிரசாத்தும் ஒருவர். அவர் சாதாரண மனிதர் அல்ல. அவர் கட்டளைப்படி நடக்க ஒரு கூட்டமே காத்திருக்கிறது. அதுவும் பயங்கரமான கூட்டம். போதாக்குறைக்கு பிளாக்டைகரும் அவருடன் சேர்ந்து கொண்டிருக்கிறான். எனவே, மிகுந்த எச்சரிக்கை தேவை.

"மிஸ்டர் டிக்சனுக்கு உணவு பரிமாறுவது யார்?” புஷ்பராஜ் கேட்டார்.

“அவர் சகோதரியும் அவருடன் இருக்கிறார்.”

“ஏன்... அவர் திருமணம் செய்து கொள்ள வில்லையா?”

“இல்லை... டிக்சனைப் போன்றவர்கள் திருமணம் செய்து கொள்வது

ஆபத்தை அதிகமாக்கி விடும். மனைவி, மனைவியின் உறவினர் என்று பலவீனத்தின் அளவு அதிகமாகி விடும். மட்டுமின்றி, அவரால் நிம்மதியான ஒரு குடும்ப வாழ்க்கையை மேற்கொள்ள முடியாது. அவரைத் திருமணம் செய்யும் பெண்ணும் எந்த நேரமும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு பயத்துடன் வாழ நேரிடும்.” கபூர் விவரித்தார்.

"நான் ஒரு முறை மிஸ்டர் டிக்சனைச் சந்திக்க முடியுமா?”

"தாராளமாக! அதற்கு என்ன... என்னுடன் வாருங்கள்.” கபூர் எழுந்தார்.

புஷ்பராஜ் அவரைப் பின்தொடர்ந்தார்.

அந்த அறையிலிருந்து வெளியேறிய அவர்கள் வராந்தால் சற்றுத் தூரம் நடந்து வலது புறம் திரும்பி, மற்றொரு வராந்தா வழியாக வந்து அறை ஒன்றின் வாசலுக்கு முன்னால் நின்றனர்.

கபூர் கதவைத் தட்டினார். அழைப்பு மணியைப் பயன் படுத்தவில்லை. நான்கு முறை தட்டினார். முதல் இரண்டு முறை உடனுக்கு உடனும் மற்ற இரண்டுமுறை சற்று அதிக இடைவெளியுடனும் தட்டினார். அது ஓர் அடையாளம் என்று புஷ்பராஜுக்கு விளங்கியது.

பெண்மணி ஒருவர் கதவைத் திறந்தார்.

முப்பது வயது மதிக்கலாம். நைட் கவுன் எனப்படும் இரவு உடை அணிந்திருந்தாள்.

புஷ்பராஜ் அறைக்குள் நுழைந்ததும் அப்துல் கபூர் அங்கிருந்து கிளம்பிவிட்டார்.

அந்தப் பெண்மணி புஷ்பராஜிடம் உட்காருமாறு சைகை செய்தபிறகு தானும் சோபா ஒன்றில் அமர்ந்தாள்.

புஷ்பராஜுக்கு எதிரில் அமர்ந்திருந்த அந்தப் பெண்மணி தெளிவான ஆங்கிலத்தில் பேசினாள்.

“மேடம். நீங்கள் அவர் சகோதரி என்று நினைக் கிறேன். உங்களைப் பற்றி நான் தெரிந்து கொள்ளலாமா? புஷ்பராஜ் மென்மையுடன் கேட்டார்.

“பெயர் டயானா, கெமிஸ்ட்ரியில் டாக்டரேட் வாங்கி யிருக்கிறேன்.” சன்னமான புன்னகையுடன் அவள் பேசினாள்.

அழகியாகவும் இருந்தாள்.

பளபளப்பான கண்கள். துடிப்பான கன்னங்கள். கழுத் தில் மிகவும் விலை உயர்ந்த வைரமாலை ஒன்று கிடந்தது.

அதிகமான வெளிச்சம் இல்லாத அந்த அறையிலும் மாலையின் வைரங்கள், நட்சத்திரங்கள் போல் பளபளத்தன.

"மிஸ்டர் புஷ்பராஜ், உங்களுக்கு மிஸ்டர் மார்க்ஸைத் தெரியுமில்லையா?" அவள் கேட்டாள்.

"தெரியும்... நாங்கள் ஒருசில சந்தர்ப்பங்களில் இணைந்து வேலை செய்திருக்கிறோம்."

"ம்... நல்லது. நான் மகத்தான ஒன்றைக் கண்டுபிடித் திருக்கிறேன். ஒரு பெரிய போரைக் கூட அதன்மூலம் சுலபமாகச் சமாளிக்கலாம். அதைப் பற்றி நாம் இன்னொரு தடவை பேசலாம். இருங்கள்... நான் மிஸ்டர் டிக்சனை கூப்பிடுகிறேன்." டயானா எழுந்தாள்.

16

அதைக் கேட்ட டிடெக்டிவ் புஷ்பராஜ் வியப்பு அடைந்தார். டயானா எவ்வளவு பெரிய விஷயத்தைப் போகிற போக்கில் மிகச்சாதாரணமாகச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறாள்! அந்த வியப்பை அவரால் அடக்க முடியவில்லை.

புஷ்பராஜ் ஆவலுடன் டயானா சென்ற திசையையே கவனித்துக் கொண்டிருந்தார்.

அதோ டிக்சன்.

ஆறடி, மூன்றங்குல உயரம்.

மெலிந்த உருவம்.

ஒவர் கோட் தொப்பி. நீண்ட முகம். முனை வளைந்த மூக்கு. சன்னமான உதடுகள். ஒட்டிய கன்னக் கதுப்புகள். தீட்சண்ணியமான கண்கள். நீண்டு நிமிர்ந்து நிற்கும் மெலிந்த உடம்பு.

"ஹலோ மிஸ்டர் புஷ்பராஜ்!" டிக்சன் கை நீட்டினார்.

அவர் கைகளுக்கு அபாரமான வலு இருப்பது புஷ்ப ராஜுக்கு விளங்கியது.

இருவரும் அமர்ந்தனர். அதன் பிறகு டயானா அங்கு வரவில்லை.

“உங்களைப் பற்றி நான் கேள்விப் பட்டிருக்கிறேன். அதற்கும் மேலாக உங்கள் டி.ஐ.ஜி. மிஸ்டர் இஸ்மாயில் உங்களைப் பற்றி என்னிடம் நிறையச் சொல்லியிருக் கிறார்.” மிஸ்டர் டிக்சன் கூறினார்.

“உங்களைப் பாதுகாக்கும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்திருக்கிறார்கள்" புஷ்பராஜ் சிரித்தவாறே கூறினார்.

“இதையெல்லாம் பார்க்குபோது நாம் அளவுக்கு மீறிப் புகழ் பெறாமல் இருப்பதே நல்லதென்று தோன்றுகிறது. அப்படியிருந்தால் இந்த மாதிரிச் சிக்கல்களையெல்லாம் தவிர்க்கலாம். டிக்சன் தனது பாக்கெட்டிலிருந்து மிகவும் உயர்தரமான சுருட்டு ஒன்றை வெளியில் எடுத்தார். அதன் மீதுள்ள பாலித்தீன் உறையைக் கிழித்தவர், அதை உதட்டில் பொருத்திக் கொண்டு பற்ற வைத்தார்.

சுருட்டின் முனைப்பகுதி சிவந்து கனிந்தது.

“உங்களது கண்டுபிடிப்பும் இப்போதைய உங்கள் தலைமையும் எதிரெதிர் விஷயங்களாக எனக்குத் தோன்றுகிறது.” கூறிய புஷ்பராஜ் தனது வழக்கமான சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டார்.

“சரியான கேள்வி. ஒரு விஞ்ஞானியான நான் ஒரு போதும் அப்படியொரு பதவிக்கு வந்திருக்கக் கூடாது தான். ஆனால், நான் அப்படிச் செய்தது மற்றொரு மனிதனின் கீழ்ப் பணி புரிய முடியாததால்தான். ஒரு வகையில் அப்படிச் செயல்படத்தான் என்னால் முடிந்தது. என்ன செய்வது?” அவர் கேட்டார்.

புஷ்பராஜ் அதற்கு பதில் எதுவும் சொல்லவில்லை.

“உங்களுக்கு இப்போது இங்கு எல்லா வித வசதிகளும் இருக்கிறது இல்லையா?” புஷ்பராஜ் விசாரித்தார்.

“இந்த வசதிகளே எனக்கு தாராளம்.”

"அப்படியானால் நான் கிளம்பலாம் இல்லையா?” புஷ்பராஜ் எழுந்தார்.

அவர் அந்த அறையிலிருந்து வெளியேறியபோது வாசலில் அப்துல் கபூர் நின்று கொண்டிருந்தார்.

அவர்கள் இருவரும் கபூரின் அறைக்குள் வந்து அமர்ந்தார்.

“ஒரு விஷயம் எப்போதும் உங்கள் கவனத்தில் இருக்க வேண்டும்.

உங்கள் மதிப்புக்கு உரிய விஞ்ஞானியைக் கடத்திக் கொண்டு செல்ல வெளியே பெரிய அளவில் முயற்சி நடக்கிறது. எனவே, நீங்கள் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். இந்த வீட்டின் சுவர்களைக் கூட நீங்கள் நம்பக் கூடாது!" புஷ்பராஜ், கபூரிடம் நினைவூட்டினார்.

"இங்கு மட்டுமல்ல, மிஸ்டர் புஷ்பராஜ் போகிற இடத்தில் எல்லாம் இந்தப் பிரச்சினை உண்டு. இங்கு கங்கா பிரசாத் என்பவர் அதற்குப் பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கிறார். பிளாக்டைகரும் இந்த முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக் கேள்விப்பட்டேன்." கபூர் பேசினார்.

"அப்படியானால் உங்களிடம் நான் அதிகமாக எதையும் சொல்ல வேண்டியதில்லை. சரி... நான் கிளம்புகிறேன்." புஷ்பராஜ் விடைபெற்றார்.

அப்துல் கபூர் நிலைவாசல் கதவுவரை புஷ்பராஜுடன் வந்தார்.

அப்போதும் ராபின்சனும் ரோஸியும் அந்தக் கட்டடத்தின் மேற்குப் புறமுள்ள ஏரிக்கரையிலேயே அமர்ந்திருந்தனர்.

காவல்காரர்கள் இருந்த இடத்திலிருந்து அசைவதை ராபின்சன் கவனித்தான்.

"அவர் எதையோ சொல்கிறார். ஒருவேளை நம்மீது அவர்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டிருக்குமோ?" ரோஸி கிசுகிசுத்த குரலில் ராபின்சனிடம் கேட்டாள்.

"அதற்கு வாய்ப்பு இல்லை. என் மனத்திலுள்ள சந்தேகம் என்னவென்றால், அவன் உன்னைப் பார்த்து மயங்கி விட்டானோ என்பதுதான்." ராபின்சன் அவளுக்கு மட்டும் கேட்கும் படியாகக் கூறினான்.

"இருக்க முடியாது. அவர்கள் பல்வேறு பயிற்சிகளுக்குப் பிறகு தேர்வு செய்யப்பட்டவர்கள்."

"இருக்கட்டுமே... அவர்களின் இதயம் மட்டும் இரும்பால் வடிவமைக்கப்பட்டதா என்ன? உன்னை இப்படிப்பட்ட தோற்றத்தில் பார்த்ததால் அவர் மனம் இளகியிருக்கலாம்."

"நீங்கள் சொல்வது உண்மையாக இருந்தால் நாம், நமது திட்டத்தில் முன்னேறிக் கொண்டிருக்கிறோம் என்பது பொருள்."

"டிக்சனை நாம் உயிருடன் பிடித்து விட்டால், உனக்கு மட்டும்

கிடைக்கப்போகும் தொகை எவ்வளவு தெரியுமா? ஒரு கோடி ரூபாய்!” ராபின்சன் அவளுக்குள் உத்வேகம் ஊட்டினான்.

அந்த வார்த்தைகளே அவளைக் கனவில் மிதக்க விட்டன. தனக்குக் கிடைக்கவிருக்கும் ஊதியம் நூறு லட்சம் ரூபாய்.

அவளது சூழ்நிலையில் அந்தத் தொகை அவளால் கற்பனைகூடச் செய்ய முடியாத ஒன்று. அதன் பிறகு வாழ்க்கையில் எந்த விதமான சிக்கல்களிலும் ஈடுபடாமல் சுகமாக ஒதுங்கி வாழலாம் அவள்.

ஏரியில் அலைகள் இருளை ஏற்றுக் கொண்டு பிரமாண்டமான சுறாமீன்களைப் போல் கரையில் வந்து மோதிக் கொண்டிருந்தன. அவை கொஞ்சம் கூட சலிப்பு இன்றி மறுபடி மறுபடி அதே விளையாட்டைத் தொடர்ந்தன.

பங்களாவுக்குச் சுற்றிலும் விளக்குகள் எரியத் தொடங்கின.

ஏரிக்கரையிலிருந்த விளக்குகளால் இருட்டைச் சுத்தமாக அகற்ற முடியவில்லை. அதனால் கருமை படிந்த நிழல்கள் ஆங்காங்கே இடைவெளிகளில் தென்பட்டன.

"அதோ அவர் இந்தப் பக்கமாக வருகிறார்!’ ரோஸி பரபரப்புடன் கூறினாள்.

அந்தக் காவல்காரர் அவர்கள் நின்று கொண்டிருந்த பகுதிக்கு வந்தார். அவர் கையில் சக்தி வாய்ந்த குண்டு களை உமிழும் ஏ.கே.-46துப்பாக்கி இருந்தது. ராபின்சன் அதை கவனிக்கத் தவறவில்லை.

ஒரு சிறு சந்தேகம் ஏற்பட்டால் போதும்... அந்தக் காவல்காரரின் கை, குதிரையைத் தூண்டிவிடும். அப்படி ஏதாவது நடந்தால் தானும் ரோஸியும் நூறு நூறு துண்டு களாகச் சிதறி விடுவோம்.

“என்ன... நீங்கள் இருவரும் இங்கேயே சுற்றிக் கொண்டிருக்கிறீர்கள்?” வந்தவர் கேட்டார்.

“ஒகோ... நீங்களும் மலையாளிதானா? அப்படி யானால் நல்லதாயிற்று. என் பெயர் ரவி மோகன். நான் ஒரு பத்திரிகை நிருபர். இவர் என் நண்பர். பெயர் லீனா. சினிமாவில் சின்னச் சின்ன வேடங்களில் நடிப்பவர்.” ராபின்சன், ரோஸியை அவருக்கு அறிமுகப் படுத்தினான்.

சினிமா நடிகை என்றதும் காவல்காரர் முகம் மலர்ந்தார். அவர்

ரோஸியை தலையிலிருந்து பாதம் வரை பார்த்தார். போதாக்குறைக்கு அவளது நீச்சல் உடை அவரது கற்பனையை மேலும் அதிகமாக்கி விட்டது. அவர் உணர்ச்சி வசப்பட்டார்.

“ஒகோ... சினிமா நடிகையா!” அவர் மேலும் நெருங்கி வந்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ராபின்சன் சட்டென்று நீருக்குள் டைவ் அடித்தான்.

அவர்கள் இருவரும் பேசிக் கொள்ளட்டும் என்பதுதான் ராபின்சனின் நோக்கம். அது நிறைவேறவும் செய்தது.

“லினா, இதுவரை நீங்கள் எத்தனை படங்களில் நடித்திருக்கிறிர்கள்?” அவர் கேட்டார்.

அதைக் கேட்டதும் அவள் மிகவும் கவர்ச்சியாக ஒரு முறை நெளிந்தாள். காவல்காரரைக் கவரும் விதத்தில் பார்வை ஒன்றை எறிந்தாள் ரோஸி. மங்கலான வெளிச்சத்திலும் அவள் முகத்தை அவரால் நன்றாகக் காண முடிந்தது.

“ஏழு அல்லது எட்டுப் படங்கள். அது எனக்குப் புதிய துறை. வாய்ப்புகள் நிறையக் கிடைக்கின்றன. என்னுடன் இருக்கும் ரவிசாருக்கு சினிமாவில் நிறையத் தொடர்புகள் உள்ளன. அதனால்தான் நான் அவருடன் சுற்றிக் கொண்டிருக்கிறேன்.”

அதையெல்லாம் அவரும் அப்படியே நம்பிவிட்டார் என்றே தோன்றியது.

"நாம் அந்தப் பக்கமாக நின்று பேசுவோமே!” காவல் காரர் அவளை அழைத்தார்.

ரோஸி திரும்பிப் பார்த்தாள்.

அப்போது ராபின்சன் நீரின் மேற்பரப்பில் தலையை உயர்த்திப் பார்த்தான். அவன் தலையாட்டி சைகை செய்தான்.

ரோஸி, அந்த காவல்காரருடன் நடக்கத் தொடங்கினாள்.

அவர்கள் சற்றுத் தொலைவு நடந்து ஒரளவு இருளான பகுதியை நெருங்கினர். ரோஸி, அதற்குள் பேச்சைத் திட்டமிட்டே நிறுத்திக் கொண்டாள்.

“இந்தப் பகுதியைச் சுற்றிப் பார்க்க வந்திருக்கிறீர்களா இருவரும்?” அவர் கேட்டார்.

அவர்கள் இருவரும் மூன்றாவது காவல்காரரை நெருங்கியிருந்தனர்.

“இவர் ஒரு சினிமா நடிகை!” முதல் காவல்காரர் புதியவருக்கு விளக்கினார்.

மூன்றாவது காவல்காரர் திரும்பிப் பார்த்தார்.

மற்ற இரண்டு காவல்காரர்களும் பங்களாவை ஒட்டி இரண்டு திசைகளில் நின்று கொண்டிருந்தனர். அந்தக் கட்டடம் வட்ட வடிவில் அமைந்திருந்ததால், மற்ற இருவராலும் இந்த மூவரையும் பார்க்க முடியவில்லை.

ராபின்சன் தலையை மட்டும் நீரின் மேற்பரப்பில் வைத்தபடி அங்கு நடப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். நடுவில் உள்ள அந்த இரண்டு காவல்காரர் களுக்கும் பக்கவாட்டில் உள்ளவர்களுக்கும் நடுவே சுமார் நாற்பது மீட்டர் தொலைவு இருக்கலாம். ராபின்சன் கண்களால் கணக்கிட்டான்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அந்த பங்களாவுக்குள் நுழைவது என்று ராபின்சன் தீர்மானித்தான். அவன் நிதானமாகத் தலையை மட்டும் மேற்புறம் வைத்தபடி கரையை நோக்கி நீந்தினான்.

பங்களாவை ஒட்டியுள்ள ஏரிப்பகுதி மிகவும் ஆழமானது என்பது, அங்கு நீரில் எந்த விதமான சலனமும் இல்லாததால் விளங்கியது. எனவே, அதை நோக்கி நீந்தினான்.

அப்போது மேற்றிசையிலிருந்து அடிக்கும் ஊதல் காற்றிலிருந்து தப்பிப்பதற்காக அங்கு இருக்கும் காவல்காரர் தனது ஷர்ட்டின் காலரை உயர்த்தி விட்டார். பின்பு தனது பாக்கெட்டிலிருந்து சிகரெட் ஒன்றை எடுத்து உதட்டில் பொருத்தி, நெருப்புக் குச்சியைப் பற்ற வைத்தார்.

அப்போது ராபின்சன் அந்தக் காவல்காரரின் முகத்தைக் கவனித்தான். பருமனான, ஆட்டுக்கிடா மீசை வைத்த மனிதர் அவர். அவரின் உருண்டு திரண்ட கைகால்களை அவனால் அடையாளம் தெரிந்து கொள்ள முடிந்தது.

காவலுக்குப் போட்டிருப்பது சரியான பேர்வழியைத்தான். அவனுக்கு ஒரு விஷயம் புரிந்தது. அவனால் விரை வாக ஒட முடியாது. தண்ணீரில் தூக்கிப் போட்டால் விரைவாக நீந்தவும் முடியாது.

பருமனான அந்தக் காவல்காரர் சிகரெட்டை ரசனையுடன் ஆழ்ந்து உறிஞ்சினார். இரண்டு இழுப்புக்குப் பிறகு பாண்ட்

பாக்கெட்டிலிருந்து சப்பையான பாட்டில் ஒன்றை வெளியே எடுத்தார். அது அநேகமாக ரம் ஆகத்தான் இருக்க வேண்டும்.

மூடியை முரட்டுத்தனமாகத் திறந்தவர் அப்படியே வாய்க்குள் கவிழ்த்தார். சோடாவோ, தண்ணீரோ சேர்த்துக் சாப்பிடும் வழக்கம் அவருக்கு இல்லையென்று தோன்றியது.

சற்று நேரத்துக்குப் பிறகு விளக்கு வெளிச்சத்தில் பாட்டிலில் எவ்வளவு மீதி உள்ளது என்பதுபோல் தூக்கிப் பார்த்தார்.

அந்த விநாடியில்தான் ராபின்சன் பின்னிலிருந்து அவர் மீது பாய்ந்து அவர் கழுத்தைப் பிடித்தான். உண்மையிலேயே அப்போது ராபின்சனுக்கு ஒரு கருஞ்சிறுத்தையின் வேகம் இருந்தது.

ராபின்சனின் பிடி விநாடிக்கு விநாடி இறுகிக்கொண்டு வந்தது. எவ்வளவுதான் திமிறியும் முயன்றும் அந்தக் காவ லாளியால் ராபின்சனிடமிருந்து விடுபட முடியவில்லை!

அவர் கண் விழிகள் துருத்திக் கொண்டு வந்தன. ஒரு சில நிமிடங்களுக்குள் அவர் துவண்டு விழுந்தார்.

அவரைக் கீழேவிட்ட ராபின்சன் ஒரு விநாடி நேரம் ஏரிப் பக்கம் பார்த்தான். பின்னர் ‘அது வேண்டாம்!’ என்று நினைத்தவன் போல் அந்த உடலை இழுத்துக் கொண்டுபோய் மெதுவாக பங்களாவின் சுவர்ப் பக்கமாக நகர்ந்து ஒரு தூணின் நிழல் மறைவில் போட்டான்.

ராபின்சன் சத்தம் எழுப்பாமல் பங்களாவின் மையப் பகுதியை நெருங்கியபோது அங்கிருந்த காவல்காரர்கள் இருவரும் ரோஸியுடன் சுவாரஸ்யமாகப் பேச்சில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் ராபின்சனை எதிர்பார்க்காததாலோ என்னவோ அவன் பக்கமாகத் திரும்பவே இல்லை.

இந்த வாய்ப்பை நழுவவிடக் கூடாது என்று தீர்மானித்த ராபின்சன் பங்களாவின் நிலைவாசலை அடைந்தான்.

முன்னும் பின்னும் பார்த்தவாறு மெதுவாகக் கதவைத் தள்ளினான். 'டக்’ என்ற சத்தத்துடன் அந்தக் கதவு உள்வாங்கித் திறந்து கொண்டது.

உட்புறம் பார்த்தான்.

ஒரே இருட்டாக இருந்தது.

ராபின்சன் சற்றும் யோசிக்காமல் அந்த இருளுக்குள் இறங்கினான்.

17

இருளில் தட்டுத்தடுமாறி இரண்டு எட்டுக்களை முன்னோக்கி வைத்தபோது படிக்கட்டு' ஒன்றில் கால் மோதியது.

உள் பாக்கெட்டிலிருந்து பாலித்தீன் கவருக்குள் பத்திரமாக வைத்திருந்த பென் டார்ச்சை எடுத்து இரண்டு விரல்களால் மறைத்துக் கொண்டு லைட்டை எரிய விட்டான்.

தெளிவற்ற வெளிச்சம் அங்கு பரவியது. மேற்புறமாக வளைந்து வளைந்து செல்லும் இரும்புப் படிகள் தென் பட்டன. கீழிருந்து பார்த்தபோது ஒரு ஸ்க்ரூ போல் தெரிந்தது.

அதன் மூலம் மேல் மாடியை அடையலாம். ஒரு பூனை மாதிரி அவன் மேற்புறம் ஏறினான். அப்போது அவன் டார்ச்லைட்டைப் பயன்படுத்தவில்லை. மேற்புறத்தை அடைந்தபோது அவன் தலை கதவு போன்ற ஒன்றில் மோதியது.

அது ஒரு நிலவறையின் மேற்புறக் கதவு மாதிரி இருந்தது. அவன் கையால் உந்தினான். கரகர வென்ற சத்தத் துடன் அது மேற்புறமாக உயர்ந்தது. அந்தக் கதவு பின்புறம் மட்டமல்லாக்க விழுந்து சத்தம் ஏற்படுத்தக் கூடாது என்பதில் ராபின்சன் மிகவும் எச்சரிக்கையுடன் செயல் பாட்டான்.

பக்குவமாக அந்தக் கதவைப் பிடித்துக் கொண்டு மேற்புறம் தலையை மட்டும் நீட்டி எட்டிப் பார்த்தான். சுற்றுமுற்றும் கவனித்தான்.

எங்கும் ஒரே இருள் மட்டுமே. சூழ்நிலை தனக்கு அனுகூலமாகத்தான் இருக்கிறது. உடம்பை எம்பி இடுப்பு வரை உயர்ந்தவன், அங்கு அமர்ந்தபின் கால்களை வெளியே எடுத்தான்.

அறைக்குள் எழுந்து நின்று பார்த்தான். அது இடுங்கிய ஓர் அறை. மிக நெருக்கத்தில் மேலிருந்து கீழ்நோக்கி ஒரு மெல்லிய கோடு மாதிரி வெளிச்சம் தெரிந்தது.

நெருங்கிப் பார்த்தான்.

அது ஒரு கதவு.

திறக்க முயன்றான். முடியவில்லை. அந்தக் கதவை மறுபுறம் தாழ்ப்பாளிட்டுப் பூட்டியிருக்க வேண்டும்.

சுவரில் கை வைத்து நான்கு புறமும் தடவிப் பார்த்தான். அங்கு ஜன்னலோ மற்றும் வேறு எந்த விதமான திறப்போ தென்படவில்லை. அங்கிருந்து மறுபுறம் செல்ல வேண்டுமானால் தாழ்ப்பாளை நீக்க வேண்டும்... வேறு வழியில்லை!

எப்படியிருந்தாலும் அது வரையிலான தனது பரிசோதனை வெற்றி பெற்றிருக்கிறது. திரும்பி நடந்து, படிகளில் இறங்கத் தொடங்கினான்.

அவன் வெளியே வந்தபோதும் ரோஸி அந்தக் காவல் காரர்களிடம் பேசிக் கொண்டிருந்தாள். அவர்களையே கவனித்தபடி தெற்கு நோக்கி மெதுவாக நகர்ந்த ராபின்சன் சத்தம் எழுப்பாமல் நீர்ப்பரப்பை அடைந்து சுமார் ஏழு மீட்டர் தொலைவுக்கு நீருக்குள் நீந்தினான்.

காவல்காரர்களுடன் பேசிக் கொண்டிருந்தாலும் ரோஸியின் கண்கள் அப்போதும் ராபின்சனைத் தேடிக் கொண்டிருந்தன. அவன் சிக்கிக் கொண்டாலோ, பிரச்சினையில் அகப்பட்டுக் கொண்டாலோ... அத்துடன் தன் கதையும் முடிந்துவிடும் என்பது அவளுக்குத் தெரியும். எனவே, அவள் வெளிக்காட்டாத பரபரப்புடன் ஏரிப் பக்கத்தை அடிக்கடி கவனித்தாள்.

ராபின்சனின் தலை தென்பட்டது. அவள் நிம்மதி அடைந்தாள். மேற்கொண்டு அங்கு நிற்க வேண்டியது இல்லை என்று தீர்மானித்த ரோஸி கிளம்ப முற்பட்டாள்.

“நீங்கள் கிளம்புகிறீர்களா?” அவர்களில் ஒருவர் கேட்டார்.

“அதோ என் ஃபிரண்ட். பாவம். அவர் தண்ணீரில் கிடந்து மரத்துப் போகப் போகிறார். நான் வருகிறேன். பிறகு சந்திப்போம்."

"மறு முறை வரும்போது நீங்கள் தனியாக வாருங்கள்!”

"அதை எப்படி நான் அவரிடம் சொல்ல முடியும்?” அவர்கள் இருவரையும் வசியமாகப் பார்த்துவிட்டு ரோஸி அங்கிருந்து கிளம்பத் தொடங்கினாள்.

“நில்லுங்கள்... இன்னொரு விஷயம். இனிமேல் அவர், இந்தப் பகுதியில் எங்கும் தட்டுப்படக் கூடாது!”

"ஏன்... இங்கே வரக் கூடாதா?”

“இது தடை செய்யப்பட்ட பகுதி. நீங்கள் இருந்ததால் தான் அவரை நாங்கள் சும்மா விட்டோம்.”

"நாங்கள் உங்கள் பகுதிக்குள் வரவில்லையே? ஏரியில் நீச்சலடிப்பதற்குத் தடையேதும் இல்லையே? எல்லா வற்றுக்கும் மேலாக அவர் புகழ் பெற்ற ஒரு பத்திரிகையின் நிருபரும் கூட."

"இருக்கலாம். எங்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டால், நாங்கள் எது வேண்டுமானாலும் செய்வோம்."

"என்னால் அவரை விட்டுப் பிரிந்து தனியாக வர முடியாது. என் எதிர்காலமே அவரது நட்புடன் பின்னிப் பிணைந்துள்ளதே!"

"அவர் வரட்டுமே... அதனால் நமக்கு என்ன நஷ்டம்? நாம் எச்சரிக்கையாக இருந்தால் போதாதா?" மற்றவர் கூறினார்.

ரோஸி வந்தவுடன் ராபின்சன் ஏரியிலிருந்து வெளியேறி, நேராக ஒட்டல் ரூமுக்கு விரைந்தான். அவள், அங்கு நடந்ததையெல்லாம் அவனிடம் விவரித்தாள்.

"ஏறத்தாழ இப்போது ஒரு வழி கிடைத்து விட்டது. டிக்சனைக் கடத்தி வர நல்ல ஒரு வழியும் கிடைத்து விட்டது!" ராபின்சன் கூறினான்.

மறு நாள் பொழுது விடிந்ததும் காட்சி விறுவிறுப்பு அடைந்தது.

பங்களாவின் மேற்குப் பகுதியில்- ஏரிக்கரையில் காவல் காரரின் பிண உடல் கிடப்பதைக் காலையில் பணி மாற்ற வந்தவர்கள் கவனித்தனர்.

உடனேயே தகவல் அப்துல் கபூரின் காதுகளுக்கு எட்டியது. அவரும் சற்றும் தாமதிக்காமல் காவல்காரரின் உடல் கிடந்த இடத்தை அடைந்தார்.

அந்த உடலைப் பார்த்த கபூருக்கு முதலில் எதுவும் விளங்கவில்லை. அவர் எப்படி மரணம் அடைந்திருப்பார் என்பதை அவரால் யூகிக்க முடியவில்லை.

அவர் விழுந்து கிடந்த முறையைப் பார்த்த கபூருக்குச் சந்தேகம் தோன்றியது. ஆனால், அவரது துப்பாக்கி அப்போதும் அவர் கையாலேயே வலுவாகப் பொருந்தியிருந்தது.

எனவே, அவர் உடனடியாக இஸ்மாயிலுக்குத் தகவல் தெரிவித்தார். எனினும் அந்த உடல் அங்கேயே கிடக்கட்டும் என்று உத்தரவு போட்டவர், காவலுக்கும் உடனே ஏற்பாடு செய்தார்.

கபூரின் தொலைபேசிச் செய்தி வரும்போது இஸ்மாயிலுடன் புஷ்பராஜ் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார். தகவலை உடனே

இஸ்மாயில், புஷ்பராஜுக்குத் தெரியப் படுத்தினார்.

உடனே புஷ்பராஜ் மோட்டார் பைக்கில் அந்த பங்களாவுக்கு விரைந்தார். அவரைப் பார்த்ததும் கபூர் தனக்குத் தெரிந்ததையும், தோன்றியவற்றையும் ஒளிவுமறைவின்றித் தெரிவித்தார்.

“நாம் நேரடியாக அங்கு செல்லலாமே?” புஷ்பராஜ் கூறினார்.

இருவரும் பங்களாவின் மேற்குப் புறத்தை அடைந்தனர்.

அங்கிருந்து ஏரிப்பகுதியை ஒரு தடவை நோட்டமிட்ட புஷ்பராஜ், நேராகப் பிணத்தின் அருகே சென்று நின்றார்.

பிறகு மையப் பகுதியில் காவல் இருப்பவர்களை அழைத்தார்.

அவர் ஓடி வந்தார்.

"நேற்றிரவு இங்கு காவலிருந்தது நீங்கள்தானா?” புஷ்பராஜ் விசாரித்தார்.

“இல்லை சார்... நாங்கள் காலையில் எட்டு மணிக்கு தான் டுட்டி மாறி வந்திருக்கிறோம்.” வந்த காவலர் கூறினர்.

“சரி... நீங்கள் போகலாம்." அவரை அனுப்பி வைத்த பிறகு புஷ்பராஜ், இறந்து கிடந்த காவல்காரரின் உடலைப் பரிசோதித்தார்.

அவர் கையில் பிடித்திருந்த இயந்திரத் துப்பாக்கி, அவர் கைகளில் இறுகப் பதியாமல் சற்று விலகிக் கிடந்தது. அதைக் கவனித்த புஷ்பராஜின் நெற்றியில் சுளிவுகள் உயர்ந்தன.

"சார், இவரது மரணத்துக்குப் பிறகுதான் இவர் கையில் துப்பாக்கி வைக்கப்பட்டிருக்கிறது!” புஷ்பராஜ் கூறினார்.

"அப்படியா சொல்கிறீர்கள்?”

"அப்படியானால் அவர் ஏன் இந்தத் துப்பாக்கியைப் பயன்படுத்தவில்லை என்பது உங்கள் அடுத்த கேள்வியாக இருக்கும்!” புஷ்பராஜ் ஏரிப் பகுதியைப் பார்த்தபடி கேட்டார்.

"ஆமாம்... அப்படியொரு சந்தேகம் இயல்புதானே?” கபூர் கேட்டார்.

புஷ்பராஜ், ஏரியின் நீர்ப்பரப்பு பங்களாவின் மேற் பகுதியை ஒட்டிப் பரவியுள்ள இடம் வரை சென்று பார்த்துவிட்டுத் திரும்பி வந்தார்.

“எப்படியிருப்பினும் வந்தவன் மிகவும் தந்திரசாலிதான். அதே மாதிரி தைரியசாலி. வந்தவன் காவல்காரனுக்குத் தெரியாமல் பின்புறமாக வந்து தாக்கியிருக்க வேண்டும். அதுவும் திடுமென்று எதிர்பாராமல் நிகழ்ந்திருக்க வேண்டும். அந்தத் தாக்குதலிலேயே இவர் உயிரை இழந்திருக்க வேண்டும். அந்தப் போராட்டத்தில் காவல்காரர்துப்பாக்கியைக் கைநழுவவிட்டிருப்பார். எனவே, மரணத்துக்குப் பிறகு அவர் கையில் அது பொருந்தப்பட்டிருக்கிறது.

"அப்படி நடந்திருக்க வாய்ப்பு உண்டா?” கபூர் சந்தேகத்துடன் கேட்டார்.

“காரணம் உண்டு. ஆயுதத்தை இங்கேயே போட்டு விட்டால் சந்தேகம் ஏற்படாது என்று தாக்கியவன் கருதியிருக்க வேண்டும். இங்கு யாராவது வந்திருந்தார்களா என்று நேற்று சென்ட்ரி நின்றிருந்தவர்களிடம் கேட்க வேண்டும்.” புஷ்பராஜ் கூறினார்.

அதன் பிறகு அவர் பங்களாவின் கீழ்த் தளத்திலேயே நடந்து வந்தார். ஏறத்தாழ நடுப்பகுதிக்கு முன்பாக வந்ததும் அவர் நின்றார்.

உட்புறமாகச் செல்லும் கதவைக் கவனித்தார்.

அதைத் திறந்து பார்த்ததும் சுருள் போல் மேல் நோக்கிச் செல்லும் இரும்புப் படிகளைக் கவனித்தார். அதன் வழியாகச் சுற்றுத் தூரம் மேலே சென்றவர் பின்பு திரும்பி வந்தார்.

“நேற்றிரவு காவல் இருந்தவர்களை உடனடியாக வரவழையுங்கள்.” புஷ்பராஜ் கூறினார்.

அரை மணி நேரத்துக்குள் அவர்கள் வந்து சேர்ந்தனர்.

‘ஏதோ விபரீதம் நடந்திருக்கிறது’ என்று அவர்களுக்கு விளங்கியது.

முதலில் அவர்களில் ஒருவரை உள்ளே வருமாறு புஷ்பராஜ் கூறினார்.

“உங்கள் பெயர்?” புஷ்பராஜ் கேட்டார்.

"ஃபர்னாண்டஸ்.”

“உங்கள் சர்வீஸ்?”

"இருபது வருடங்கள்!”

"நேற்றிரவு நீங்கள் ஒருவருடன் பேசியிருக்கிறீர்கள். அந்த நபர் என்ன சொன்னார்?” புஷ்பராஜ், அவர் கண்களைப் பார்த்தபடி பேசினார்.

"அப்படி யாரும் வரவில்லையே!" சட்டென்று அவர் பதிலளித்தார். அது, அவர் ஏற்கெனவே தீர்மானித்திருந்த பதில்.

"சரி...நீங்கள் போகலாம்."

அவர், அங்கிருந்து போன பிறகு புஷ்பராஜ், கபூரின் பக்கமாகத் திரும்பினார்.

"இன்னொருவரும் இதே பதிலையேதான் சொல்லப் போகிறார்!" புஷ்பராஜ் எச்சரித்தார்.

அப்படியேதான் நடந்தது. மேற்கொண்டு என்ன செய்வ தென்று தெரியாமல் புஷ்பராஜ் ஒரு கணம் தவித்தார். மிகவும் கெட்டிக்காரத்தனமாக அந்தக் கொலை நடத்தப் பட்டிருக்கிறது!

அப்போது ராபின்சன், கங்காபிரசாத்தின் கூடாரத்தில் இருந்தான். முந்தைய நாள் நடந்ததையெல்லாம் அவரிடம் தெரிவித்தான்.

கங்காபிரசாத் நிம்மதி இழந்தார்.

"அந்தக் கொலையை நீங்கள் செய்திருக்கக் கூடாது. இப்போது நிலைமை சிக்கலானதுடன் பாதுகாப்பும், எச்சரிக்கையும் அதிகமாகிவிடும்!"

"அந்த நேரத்தில் வேறு வழி எதுவும் தெரியவில்லை. ஒரு நிழலைக் கண்டால் கூட அவர் சுட்டு விட்டிருப்பார். அந்த நிலைமையில் நான் வேறு என்ன செய்வது? எது, எப்படி இருப்பினும் நான் ஏற்றுக் கொண்ட வேலையைக் கச்சிதமாக முடித்துக் கொடுப்பது என் பொறுப்பு. அதில், உங்களுக்கு எந்த விதமான சந்தேகமும் தேவையில்லை!" ராபின்சன் உறுதியளித்தான்.

"நம்மால் இதைச் செய்ய முடியாது என்று தெரிந்தால் ரிச்சர்டு வேறு ஒருவரிடம் இதை ஒப்படைப்பார். அவர்களைப் பொறுத்தவரை பணம் ஒரு பொருட்டல்ல. நினைத்த காரியம் நடக்க வேண்டும்... அவ்வளவுதான். இந்நேரம் அதுவும் ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்கும்."

"நடக்கட்டுமே. எத்தனை பேர் எப்படி முயற்சி செய்தாலும் அதில் வெற்றி பெறப்போவது என்னவோ நான்தான். ஏமாந்த பிறகுதான் அவர்கள் உண்மையை உணர் வார்கள்!' கூறிய ராபின்சன், தாடையைத் தடவியபடி அங்கிருந்து எழுந்தான்.

இரவு நேரம் எட்டு மணி.

ராபின்சன் படகு ஒன்றில் டிக்சன் தங்கியிருக்கும் பங்களாவிலிருந்து சுமார் ஒரு கிலோமீட்டர் தொலைவில் மேற்குப் புறத்தை அடைந்திருந்தான். அங்கிருந்தவாறே சக்தி வாய்ந்த பைனாகுலர் வழியாக அந்த பங்களாவை ஊன்றிக் கவனித்தான். அப்போது ஏராளமான படகுகள் ஏரியில் அங்குமிங்குமாக உலாவிக் கொண்டிருந்தன.

18

அங்கிங்காக உயரமான விளக்குக் கம்பங்களின் கீழ்ப் புறம் எரிந்து கொண்டிருக்கும் விளக்குகளின் வெளிச்சத்தில் உயர்ந்து நிற்கும் பங்களா ராபின்களின் கண்களுக்குத் தெரிந்தது.

அந்தக் கட்டடத்தின் ஒவ்வோர் அங்குலப் பகுதியும் அவன் மனத்துள் தெளிவடைந்து வந்தன. அவன் மெதுவாக பைனாகுலரின் பார்வை வட்டத்தைப் பெரிதாக்கினான்.

சட்டென்று அதில் ஒரு ஜன்னலில் வெளிச்சம் தெரிந்தது. ஜன்னலின் கண்ணாடிப் பகுதியை ஊடுருவிக் கொண்டு நிழல் ஒன்று தென்பட்டது. அந்த நிழலின் உயரத்தை ராபின்சன் அனுமானித்தான். சுமார் ஆறு அடிக்குமேல் உயரமுள்ள ஒர் உருவம்.

அந்த உருவத்துக்குச் சுமார் எண்பத்தைந்து கிலோ எடையிருக்கலாம். ‘அநேகமாக அவர்தான் டிக்சனாக இருக்க வேண்டும்!’ அவன் யூகித்தான்.

அந்த ஜன்னல் கதவு திறக்கப்பட்டது.

அப்போதும் அந்த உருவம் தெளிவற்றுக் காணப்பட்டது.

அறையின் வெளிச்சம் அந்த உருவத்தின் பின்புறத்திலிருந்து வருகிறது. அந்த உருவம் ஏரிப்பரப்பை வேடிக்கை பார்த்தபடி நிற்கிறது. அவர் கையில் ஏதாவது தட்டுப் படுகிறதா என்று ராபின்சன் கவனித்தான். அவரிடமும் தன்னிடம் இருப்பது போல் பைனாகுலர் ஏதாவது இருந்தால் தன்னை அவர் கண்டுபிடித்து விடலாம்.

இல்லை... அந்த உருவத்தின் கைகள் இரண்டும் ஜன்ன லின் சட்டத்தைப் பிடித்துக் கொண்டு நிற்கின்றன.

உடனே அந்த அறைக்குள் எப்படி நுழைவது என்று ராபின்சன் யோசிக்கத் தொடங்கினான்.

அந்த ஜன்னலில் கம்பிகள் எதுவும் இல்லை.

முந்தைய நாள் சென்ற படி வழியாக மேலே ஏறினால், அதில் வெளிப்புற ஜன்னல் இருந்தால். அதற்குள் நுழை வது சுலபம்.

"ரோஸி..." அவன் அழைத்தான்.

அவள் படகின் உட்புறம் தரையில் சாய்ந்து உட்கார்ந்திருந்தாள். அந்தப் பகுதி இருள் நிறைந்ததாக இருந்த தால், வெளியிலிருந்து எவரும் அவளை பைனாகுலர் மூலமாகக் கூடப் பார்க்க முடியாது.

“என்ன... ராபின்சன்!” அவள் பதில் குரல் கொடுத்தாள்.

“யாரோ இந்தப் பக்கமாகப் பார்க்கிறார்கள்!” அவள் கூறினாள்.

"அதே காவல்காரர்தானா?” அவள் விசாரித்தாள்.

"அப்படித்தான் இருக்க வேண்டும்!” என்ற ராபின்சன் பைனாகுலரைத் தாழ்த்தினான்.

“ஆகா... ஆபத்து!” ராபின்சன் மெதுவான குரலில் கூறினான்.

“என்ன ஆயிற்று?”

"அந்தக் காவல்காரனும் நம்மைக் கவனிக்கிறான். அவனிடமும் பைனாகுலர் இருக்கிறது!” என்ற ராபின்சன் பைனாகுலரின் வியூவை நெருக்கத்தில் கொண்டு சென்றான்.

“ஒருவேளை அவர் ஏரியில் உலாவும் படகுகளை வேடிக்கை பார்க்கலாம்.” ரோஸி கூறினாள்.

அப்போது அவளும் நீச்சல் உடைதான் அணிந்திருந்தாள். இருவரும் ஒரே நிறத்தில் உடையைத் தேர்ந்தெடுத் திருந்தனர். தலையில் காதை மூடியபடி இறங்கிய ரப்பர் தொப்பி இருந்தது. ஏரியின் ஆழப்பகுதிக்குச் செல்ல நேர்ந்தாலும் காது வலிக்காமல் இருப்பதற்காகப் பிரத்தி யேகமாக வடிவமைக்கப்பட்ட டிஸைன் அது.

“சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்கிறதா? நான் தண்ணீரில் இறங்கப் போகிறேன்.” ராபின்சன் மெதுவாக படகு நிற்பதற்கு எதிர்த்திசையில் நீரில் இறங்கினான். இப்போது ராபின்சனின் இடத்தில் ரோஸி நின்று கொண்டிருந்தாள்.

ராபின்சன் நீருக்குள் உள் நீச்சலடித்துச் சென்றான். அவனது லட்சியம் பங்களா இருந்த கரைப்பகுதியாக இருந்தது.

அதே நேரம் பங்களாவின் மேற்குப்புறம் நின்றிருந்த காவல்காரன் படகையே கவனித்துக் கொண்டிருந்தாலும், ராபின்சன் நீரில் குதிப்பதை அவன் கவனிக்கவில்லை. அவ்வளவு குறுகிய இடைவெளிக்குள் ராபின்சனின் இடத்தில் ரோஸி வந்து நின்று கொண்டாள்.

இருப்பினும் ஏதோ ஒரு சந்தேகம் ஏற்பட்டதாலோ என்னவோ அந்த காவல்காரர் பைனாகுலர் மூலம் ஊன்றிப் பார்த்தார். ராபின்சன் நின்ற இடத்தில் அதே உருவம் மறுபடியும் தென்படுகிறது.

“எதை இவ்வளவு நுட்பமாகக் கவனிக்கிறாய்?” தென்மேற்குப் பகுதியில் இருந்த மற்றொரு காவல்காரர் கேட்டார்.

“நீண்ட நேரமாக ஒருவன் படகில் நின்றபடி இந்த இடத்தைப் பார்க்கிறான். அதைத்தான் பார்த்துக் கொண் டிருக்கிறேன்."

உடனே அவர், அங்கிருப்பவரை நெருங்கி பைனா குலரை வாங்கி அந்தப் பக்கமாகப் பார்த்தார்.

அப்போது ரோஸி படகில் நின்று கொண்டு மீன் பிடிக்கத் தூண்டில் போடும் காட்சி தென்பட்டது.

அதைத்தான் ராபின்சன் ஞாபகப்படுத்தி விட்டுப் போனான்.

அவள் கிழக்குத் திசையில் நகர்ந்தாள்.

நடுநடுவே நீரின் மேற்பரப்பில் தென்பட்ட ராபின் சனின் தலைப் பகுதியை அவள் கவனிக்கவே செய்தாள்.

“அந்தத் தூண்டில்காரனுக்கு மீன் ஏதாவது கிடைக்கிறதா என்று கவனியுங்கள்!” வந்து சேர்ந்த காவல்காரர் கூறினார்.

“தூண்டில் போட்டால் மீன் கிடைக்கும். அவன் இந்தப் பக்கமாக வந்தால் தேவைப்பட்டால் நாம் வாங்கிக் கொள்ளலாம்.” பழைய காவல்காரர் கூறினார். அவர் சரியான மீன் விரும்பி.

ராபின்சன் எச்சரிக்கையுடன் அவ்வப்போது தலையை உயர்த்திப் பார்த்தான். ஒரு முறை கரையைப் பார்த்தான். கரைக்குச் சுமார் அறுபது மீட்டர் தூரம் இருந்தது. இனி, எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்!

அப்போதும் தென்மேற்கு மூலைதான் ராபின்சனின் லட்சியமாக இருந்தது. அந்த வழியாக மட்டுமே அதிகச் சிரமமில்லாமல் செல்ல

முடியும் என்பது அவனது நம்பிக்கை.

எனவே, அவன் அந்த இடத்தை நோக்கி நீருக்குள் ளேயே ஒரு மீன் போல் நீந்தினான்.

சற்று நேரத்துக்குப் பிறகு மெதுவாகத் தலையை உயர்த்திப் பார்த்தான்.

அவன் பார்த்த பகுதியில் அப்போதும் எவரும் தட்டுப் படவில்லை. அவனது நம்பிக்கை வலுவடைந்தது.

நிதானமாகக் கரையை அடைந்தவன் பங்களாவை நோக்கி இருளில் நடந்தான். அப்போதும் காவல்காரர்கள் ஏரியின் நீர்ப் பரப்பையே ஊன்றிக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

ஒரு சிறுத்தையின் வேகத்துடன் அவன் பங்களாவின் வடக்குப் பகுதியை நெருங்கினான்.

எல்லோரின் கவனமும் திசை மாறியிருந்ததால் அவன் சுலபமாகப் பழைய சுருள் படிக்கட்டை நெருங்கினான். அதன் பிறகு காரியங்கள் மிகவும் விரைவாக நடந்தன. இரும்புப் படிக்கட்டின் மேற்புறம் வந்தவன், உச்சியிலுள்ள மரப்பலகையை உயர்த்தினான்.

ஏற்கெனவே பார்த்து வைத்திருந்ததால் ஏறத்தாழ ஜன்னல் இருந்த பக்கத்தை நோக்கி நகர்ந்தான். தட்டுப் பட்டது. மெதுவாக அந்த ஜன்னல் கதவின் தாழ்ப்பாளை அகற்றினான்.

குப்பென்று அறைக்குள் குளிர்ந்த காற்று பரவியது. அந்த ஜன்னலுக்குக் கம்பிகள் கிடையாது. மெதுவாகத் தலையை வெளியே நீட்டி ஒரு தடவை சுற்றுமுற்றும் பார்த்தான். எவரும் தென்படவில்லை. ஜன்னலின் திண்டில் கால் பதித்து நின்றான். குழாய் இணைப்புகள் அங்கு படுக்கை வாட்டில் நீண்டு சென்றன. ராபின்சன் தனது உடைக் குள்ளிருந்து இரண்டு கிளவுஸ்களை வெளியில் எடுத்தான். அவை பிளாஸ்டிக் கவரில் பத்திரப்படுத்தப்பட்டிருந்தன.

மறுபடியும் பழைய அறைக்கே திரும்பி வந்தான். பைப்புகளின் வழியாக, தான் முன்பு பார்த்த அறைக்குள் நுழைவது அவன் திட்டம். ஆனால், அது சாத்தியம் இல்லையென்று தோன்றியது.

கிளவுஸ்களைக் கையில் அணிந்து கொண்டு சுவரில் இரண்டு கைகளையும் பதித்துக் கீழ்ப்புறமாகக் கைகளை இழுத்துப் பார்த்தான். கிளவுஸ்கள் உடும்பின் கால்களைப் போல் சுவரைப் பற்றிக்

கொண்டன. வேக்குவம் முறையில் உட்பரப்பு கொண்ட கிளவுஸ்கள் அவை.

மறுபடியும் அவன் வெளியே வந்தான். கவனமாகச் சுவரில் கைகளைப் பதித்து நிதானமாக முன்னேறினான். ஒருவாறாக அவன் தனது லட்சியப் பகுதியை அடைந்தான்.

அப்போதும் அந்த ஜன்னல் திறந்து கிடந்தது.

அவன் உட்புறம் சத்தம் எழுப்பாமல் குதித்தான்.

சட்டென்று அந்த அறையில் விளக்கு எரியத் தொடங்கியது.

ராபின்சனுக்கு முன்னால் காவல்காரர் ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவர் தன் தோளிலிருந்து துப்பாக்கியை எடுக்க முற்படுவதற்குள் ராபின்சன் அவர் மீது பாய்ந்தான். அவர் தனது முயற்சியைத் தொடர்வதற்கு முன்பே, துவண்டு போய்த் தரையில் விழுந்தார். ராபின்சனின் கைகள், அவர் கழுத்தை நண்டுபோல் இரு புறமும் இறுக்கிப் பிடித்திருந்தன.

ஒன்று அல்லது இரண்டு நிமிடங்கள் கடப்பதற்குள் அந்தக் காவல்காரர் தரையில் சரிந்தார்.

ராபின்சன், அவரை ஒரு மூலையில் இழுத்துப் போட்டு விட்டு அறை விளக்கை அணைத்தான். அவன் கைகள் மிகுந்த விரைவுடன் செயல்பட்டன.

மறு கணம் அவன் அந்தக் காவல்காரரின் உடைக்குள் புகுந்து கொண்டான். அந்தத் துப்பாக்கியைக் கையில் எடுத்துக் கொண்டான்.

அடுத்த அறை டிக்சனின் செக்ரெட்டரி கபூரின் அறை.

அவர் புத்தகம் ஒன்றை வாசித்துக் கொண்டு இருந்தார். பக்கத்து அறையில் நடந்த சம்பவங்கள் எதுவும் அவருக்குத் தெரியவில்லை என்று தோன்றியது.

புத்தகத்திலிருந்து பார்வையை உயர்த்தியவர், சுவரி லிருந்த கடிகாரத்தைப் பார்த்தார்.

ஒரு தடவை மணி அடித்தது.

மணி ஒன்றரை.

அப்துல் கபூரின் கண்களில் தூக்கம் படியத் தொடங்கியிருந்தது. எந்த

விதச் சந்தேகமும் இல்லாத நிம்மதியுடன் அவர் தனது ஒய்வு அறையைப் பார்த்தார்.

பிறகு மேஜையைக் கவனித்தார்.

அதில் ஐந்து தொலைபேசிகள் இருந்தன.

ஒன்றின் ரிசீவரை எடுத்தார்.

அது இண்டர்காம்.

வெளிப்புறக் காவலர்களிடம் இருந்த தொலைபேசி மணியடிந்தது.

பைனாகுலரில் கவனித்துக் கொண்டிருந்த காவல்காரர் ஓடிவந்து ரிசீவரை எடுத்தார்.

“தொலைவிலுள்ள படகு ஒன்றில் ஒருவர் நெடுநேரமாகத் தூண்டில் போட்டுக் கொண்டிருக்கிறார்."

“எச்சரிக்கை. தேவைப்பட்டால் நீங்கள் துப்பாக்கியைப் பயன்படுத்துங்கள்."

“தேவையென்று தோன்றவில்லை. உண்மையிலேயே மீன் பிடிப்பதாகத்தான் தெரிகிறது."

“இருப்பினும் கவனம் தேவை!”

19

அப்துல் கபூர் சற்று நேரம் ஓய்வு எடுக்க விரும்பினார். உறக்கம் அல்ல... வெறும் ஒய்வு.

எனவே, அங்கிருந்த சோபாவில் படுத்துக் கொண்டார்.

ராபின்சன் வெளிப்புறமிருந்த சாவித் துவாரத்தின் வழியாக எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தான்.

அவனுக்கு ஒரு விஷயம் விளங்கியது.

அப்படியானால், இதுவரை எந்த விதமான சந்தேகமும் ஏற்படவில்லை. அப்துல் கபூர் அமைதியாக ஒய்வு எடுக் கிறார் என்றால் சந்தேகப்பட வேண்டிய தேவை இல்லை என்றுதானே அர்த்தம்.

அப்படியானால் நிம்மதியாக இனி டிக்சனின் அறையைக் கண்டுபிடிக்கலாம். அது கபூரின் அறைக்கு அருகில்தான் எங்காவது இருக்க வேண்டும்.

அவன் மெதுவாக இடப்புறம் நகர்ந்தான்.

அங்கு ஒரு பெரிய கதவு தென்பட்டது. அந்த பங்களாவின் மேல் மாடியிலுள்ள முக்கியமான அறையாக அது இருக்க வேண்டும்.

அது வெளிப்புறம் பூட்டப்பட்டிருந்தது. சுற்றுமுற்றும் ஒரு தடவை பார்த்தவன் தனது பாக்கெட்டிலிருந்து பென் டார்ச்சை வெளியே எடுத்தான். பூட்டின் சாவித் துவாரத்தை சிறிய வட்ட வெளிச்சத்தின் உதவியால் சில விநாடிகள் ஆராய்ந்தான்.

டார்ச்சை பாக்கெட்டில் போட்டுவிட்டுச் சிறிய உருக்குக் கம்பி ஒன்றை எடுத்து பூட்டின் துளையில் விட்டுச் சுழற்றியபடி காதை அதன் அருகில் கொண்டு சென்றான்.

உள்ளிருந்து இரண்டு முறை "டிக். டிக். என்ற சத்தம் கேட்டது.

அவன், பூட்டைத் திறந்து, கதவை உட்புறம் தள்ளினான். வெற்றி இவ்வளவு சுலபத்தில் எட்டும் என்று அவன் கருதவில்லை!

சன்னமான சத்தத்துடன் கதவு உள்வாங்கித் திறந்திருந் தது. உள்ளே நுழைந்தவன் சட்டென்று கதவை மூடினான்.

அப்போது தென்புற வராந்தாவில் இருந்த காவல்காரர் திடுக்கிட்டார். ஏதோ ஒரு சத்தம் கேட்டது போல் அவருக்குத் தோன்றியது.

இயந்திரத் துப்பாக்கியுடன் அவர் வராந்தாவிலிருந்து உட்புறமாகக் கதவைத் திறந்தார். ராபின்சன் நுழைந்திருந்த அறைக்கு முன்பாகத்தான் அவர் வந்து சேர்ந்திருந்தார்.

தன் கையிலிருக்கும் டார்ச் லைட்டை அடித்து ஒரு தடவை சுற்றுமுற்றும் பார்த்தார்.

எதுவும் தென்படவில்லை. அந்த அறைவாசலை நெருங்கினார். சந்தேகத்துடன் கதவைத் தள்ளிப் பார்த்தார். அது உட்புறம் தாழிடப்பட்டிருந்தது. அவரது சந்தேகம் அகன்றதா, வலுத்ததா என்று விளங்கவில்லை.

அதற்குள் மற்றொரு காவல்காரரும் அங்கு வந்து சேர்ந்தார்.

“ஏதோ சத்தம் கேட்ட மாதிரி இருந்தது!” வந்தவர் கேட்டார்.

“எனக்கு எதுவும் தென்படவில்லை.”

“ஏதோ ஒரு முனகலோ அசைவோ ஏற்பட்ட மாதிரி இருந்தது. அதனால்தான் கேட்டேன்.”

"சந்தேகப்படுவது போல் எதுவும் தென்படவில்லை."

அப்போது ராபின்சன் கதவை ஒட்டி உட்புறம்தான் நின்று கொண்டிருந்தான். அமைதி அந்தப் பகுதியை ஆக்கிரமித்திருந்தது கனமான இருட்டு. அருகில் எங்கோ ஒலிக்கும் சுவர்க்கடிகாரத்தின் டிக் டிக் சத்தம். அதுவும் காற்றின் போக்கை ஒட்டி இடைவெளிவிட்டுக் கேட்டது.

மேற்கொண்டு செய்ய வேண்டியது குறித்து அவன் சட்டென்று தீர்மானித்தான்.

அநேகமாகப் பக்கத்து அறைதான் டிக்சனுடையதாக இருக்கும். சரி... அதற்குள் நுழைந்தால் முதலில் என்ன செய்வது?

டிக்சனைச் சந்திக்கும்போது சமாளிப்பது எப்படி?

எல்லாவற்றையும் மிகவும் விரைவாகச் செய்து முடிக்க வேண்டும். இல்லாவிட்டால், பல்வேறு திசைகளிலிருந்தும் பாய்ந்து வரும் குண்டுகளை ஏற்று வாங்கி உடல் சல்லடை போலாகிவிடும்.

அப்போது எங்கேயோ தொலைபேசி மணியடிப்பது கேட்டது. அவன் கவனித்தான்.

"ஆமாம்... அப்துல் கபூர்தான் பேசுகிறேன்... இல்லை... எந்தவொரு சிக்கலும் கிடையாது. அதைப் பற்றி நான் விசாரிக்கிறேன். அது, அங்கேயேதான் நின்று கொண்டிருக்கிறது. யாரோ மீன் பிடிக்கிறார்கள். யெஸ்... ஒகே!”

ரிசீவரை, கிராடிலில் வைக்கும் சத்தம் கேட்டது. கடி காரத்தில் மணி மூன்று அடித்தது. மீண்டும் கபூரின் அறையில் போன் மணியடித்தது.

‘'இப்போது நிலைமை எப்படி?’ போலீஸ் கிளப்பி லிருந்து ஐ.ஜி. இஸ்மாயிலின் கேள்வி.

“ஏரியில் மீன் பிடித்துக் கொண்டிருப்பவரைக் காணோம். கிளம்பிப் போயிருக்க வேண்டும்.” கபூரின் பதில்.

உடனே புஷ்பராஜ், இஸ்மாயிலிடம் கேட்டார், "சார், நான் பேசிப் பார்க்கிறேன்."

புஷ்பராஜிடம் ரிசீவரைக் கொடுத்தார்.

“படகைக் காணவில்லையா? எப்போது கிளம்பியது?”

"சுமார் அரைமணி நேரத்துக்கு முன்னால்.”

“காவல்காரர்கள் கூறிய தகவலா?”

"ஆமாம்."

“எந்தப் பகுதியிலிருந்த காவல்காரர் கூறிய தகவல்?”

"வடக்குப்புறக் காவல்காரர்.”

“மற்ற காவல்காரர்களுடன் கொஞ்சம் தொடர்பு கொள்கிறீர்களா?”

“செய்கிறேன்..." என்ற கபூர், உடனே இண்டர்காமின் ரிசீவரை எடுத்தார்.

இம்முறையும் வடக்குப் புறத்திலுள்ள காவல்காரர்தான் பேசினார்.

"சார்... நான்தான்!”

“மற்றவர்களை ஒவ்வொருவராக வரச் சொல்லுங்கள்." புஷ்பராஜ் கேட்டுக்கொண்டார்.

காவல்காரர் மற்றவர்களிடம் தகவல் தெரிவிக்கப் போனார்.

அங்கு காவலிருந்த எவரையும் காணவில்லை. தேடிப் போனவர் பரபரப்பு அடைந்தார்.

‘அவர்களுக்கு என்ன நேர்ந்தது? அவர் அங்குமிங்கும் ஒடித் தேடத் தொடங்கினார். ஒவ்வொருவருக்கும் ஒதுக்கப்பட்டிருந்த இடத்தில் அவர்கள் எவருமே இல்லை!

ஒவ்வொருவரையும் உரத்துக் குரல் கொடுத்து அழைத்தும் பயனில்லை.

உடனே அவர், கபூரிடம் தகவல் தெரிவித்தார்.

“என்ன!” புஷ்பராஜ், இஸ்மாயிலின் முகத்தைப் பார்த்தார்.
“அவர்களைக் காணவில்லையா?” புஷ்பராஜ், உட்கார்ந்த இருக்கையிலிருந்து துள்ளியெழுந்தார்.

இஸ்மாயில் திடுக்கிட்டவராக புஷ்பராஜின் முகத்தைப் பார்த்தார்.

"அவர்கள் எங்கே போயிருப்பார்கள்? நாம் உடனடியாக டாக்டர் டிக்சனிடம் போக வேண்டும். மணி மூன்று ஆகியிருக்கிறது. இப்போது அவரை எழுப்பித் தொல்லை கொடுக்க வேண்டுமா?" இஸ்மாயில் தனது கைக்கடி காரத்தைப் பார்த்தார்.

"உடனடியாகப் போக வேண்டும். அங்கு ஏதோ நடந்திருப்பதாகத் தோன்றுகிறது!" என்ற புஷ்பராஜ் தாமதிக்காமல் அந்த பங்களாவை நோக்கிக் கிளம்பினார்.

இஸ்மாயில் என்ன செய்வது என்று தெரியாத குழப்பத் தில் ஆழ்ந்திருந்தார்.

கபூர் என்னென்னவோ யோசனைகள் செய்தபடி அங்குமிங்குமாக அலைந்தார்.

புஷ்பராஜ் வந்து சேர்ந்ததும் இருவருமாகச் சேர்ந்து டிக்சனது அறையை நோக்கி விரைந்தனர். அந்த அறையை வெளியிலிருந்து திறக்கும் சாவியை கபூர் எடுத்தார்.

சாவியை துவாரத்தில் செலுத்தித் திருப்ப முயன்றார். முடியவில்லை. சந்தேகத்துடன் தள்ளிப் பார்த்தபோது கதவு திறந்திருப்பது தெரிந்தது.

இருவரின் இதயத்துடிப்பின் வேகமும் அதிகரித்தது. அந்த இடத்திலிருந்து டிக்சனது அறையை நோக்கி ஓடினர்.

கதவைத் தட்டினர்.

உட்புறத்திலிருந்து எந்த ஒரு சத்தமும் கேட்கவில்லை.

புஷ்பராஜ் நான்கு எட்டுகள் பின்னுக்கு நகர்ந்து மூச்சைப் பிடித்துக் கொண்டு பாய்ந்து வந்து தோளால் கதவை ஓங்கி இடித்தார்.

கதவின் ஒரு புறத் தாழ்ப்பாள் பிய்த்துக் கொண்டு வந்தது. இருவரும் உட்புறம் சென்றனர்.

லைட் சுவிட்சைத் தட்டினார் கபூர்.

டாக்டர் டிக்சனின் சகோதரி டயானா, சோஃபாவில் படுத்திருந்தாள்.

சன்னமாக மூச்சு வந்து கொண்டிருந்தது.

புஷ்பராஜ் அவள் நாடியைச் சோதித்தார்.

"மயக்கமடையச் செய்திருக்கிறார்கள்.'' என்ற புஷ்ப ராஜ், டிக்சனது

அறைக்கு விரைந்தார்.

கதவு விரியத் திறந்து கிடந்தது.

அங்கு டாக்டர் டிக்சன் இல்லை.

"அப்படியானால் அவர் கடத்தப்பட்டார்!" புஷ்பராஜ் மென்மையான குரலில் கூறினார். ஜன்னல் பக்கமாகப் பார்த்தார்.

அதுவும் திறந்து கிடந்தது.

ஜன்னலை நெருங்கிக் கீழ்ப்புறமாகப் பார்த்தார். அவருள் ஏதோ ஒரு யோசனை தோன்றியது.

சட்டென்று பங்களாவின் கீழ்ப்புறத்தை அடைந்து மேற்குப்புறமாக ஏரிக்கரையை அடைந்தார்.

அங்கு காவல்காரர் ஒருவர் நின்று கொண்டிருந்தார்.

"நீங்கள் யாரையாவது பார்த்தீர்களா?"

"இல்லை சார்!"

"அப்படியானால் உங்கள் கடமையில் நீங்கள் தோல்வியடைந்து விட்டீர்கள்! ஆமாம்... மற்றவர்கள் என்ன ஆனார்கள்?"

"எதுவும் தெரியவில்லை சார்."

"அந்த விசாரணை மற்றும் தேடுதலை அப்புறம் வைத்துக் கொள்ளலாம். முதலில் மோட்டார் போட் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யுங்கள்." புஷ்பராஜ் கூறினார்.

உடனே காவல்காரர் வட திசையில் விரைந்தார். சற்று நேரத்தில் போட் ஒன்று ஸ்டார்ட் ஆகும் சத்தம் கேட்டது. படகு ஒட்டி வந்தவருடன் அந்தக் காவல்காரரும் இருந்தார்.

அதற்குள் கபூர் அங்கு வந்து சேர்ந்தார்.

"நேரத்தை வீணாக்காமல் படகில் ஏறுங்கள். கடத்திச் சென்றவர் இந்த வழியாகத்தான் சென்றிருக்க வேண்டும்." புஷ்பராஜ் கூறினார்.

படகு ஒட்டுபவன் மற்றும் காவல்காரரிடம் இறங்கு மாறு கூறிய புஷ்பராஜ் படகின் ஸ்டீயரிங்கைப் பிடித்துக் கொண்டார். கபூர் அவருக்கு அருகில் நின்று கொண்டார்.

படகு நீரில் விரைந்தது.

அலைகளைக் கீறிக் கொண்டு படகு முன்னேறியது.

“அதோ... அந்தப் படகு!” அடிவானப் பரப்பை நோக்கிச் சென்று கொண்டிருந்த படகு ஒன்றைச் சுட்டிக் காட்டினார் கபூர்.

உண்மைதான்!

படகு ஒன்று அவர்களுக்கு முன்னால் தொலைவில் சென்று கொண்டிருந்தது.

அந்தப் படகை நோக்கி புஷ்பராஜ் தனது படகைச் செலுத்தினார்.

20

அந்தப் படகும் விரைந்து கொண்டிருந்தது. அதில் இருள் வடிவில் ஒருவர் உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

“காவல்காரர் குறிப்பிட்ட தூண்டில்காரர்தான் அந்தப் படகில் இருப்பவர்!” புஷ்பராஜ் கூறினார்.

“நம்மைப் பார்த்தவுடன் அந்தப் படகின் வேகம் அதிகரித்திருப்பதாகத் தோன்றுகிறது. அதில் உள்ளது, மிகவும் விரைவாகச் செல்லக் கூடிய இன்ஜின்.” கபூர் கூறினார்.

"உண்மைதான்!”

“அந்தப் படகில் டாக்டர் டிக்சன் இருப்பார் என்று நம்புகிறேன்.” கபூர் கூறினார்.

"அப்படியானால் நமது வேலை மிகவும் சுலபம். அந்தப் படகையும், அதில் உள்ளவர்களையும் பிடிப்பது நிறை வேறக் கூடியதுதான்.” புஷ்பராஜ் தன்னம்பிக்கையுடன் கூறினார்.

அப்போது முன்னால் சென்ற படகின் வேகம் மேலும் அதிகரித்தது.

“அதன் வேகத்தைப் பார்த்தால், சற்றுத் தொலைவில் பெரிய கப்பல் ஏதாவது நிற்கலாம் என்று தோன்றுகிறது." பிறகு குளிர்காற்றுக்கு இதமாக சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டார் புஷ்பராஜ்.

இரண்டு அல்லது மூன்று முறை சிகரெட் புகையை உள்ளுக்குள் உறிஞ்சியதும் அவருக்கு ஒரு புத்துணர்ச்சி தோன்றியது.

படகு ஏரியைக் கடந்து, கடலுக்குள் நுழைந்ததும் வலுவான அலைகள் ஒய்வு அடைந்தன.

அதுவரை அவர்களை ஆச்சரியப்படுத்திக் கொண்டு முன்னோக்கி விரைந்து கொண்டிருந்த படகு, சட்டென்று கடலில் அப்படியே நின்றது.

“படகுக்கு ஏதோ பழுது ஏற்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது.” புஷ்பராஜ் கூறினார்.

அது ஒரு பந்து போல் கடல்பரப்பில் மிதந்தது.

"ஆமாம்... நாம் வெற்றி பெற்றுவிட்டோம்.” கபூர் கூறினார்.

உடனே புஷ்பராஜ் தனது படகின் வேகத்தைக் குறைத்தார். மெதுவாக அந்தப் படகை நெருங்கினார். ‘இனி சிக்கல் எதுவும் இருக்காது!’ என்று அவர்கள் இருவருமே நினைத்தனர்.

அடுத்த மூன்றாவது நிமிடத்தில் அவர்களது படகு, முதல் படகை நெருங்கியது.

தூண்டில் போடுபவன் அப்போதும் அசைவற்று உட்கார்ந்திருந்தான்.

இரண்டு படகுகளையும் இணைத்துக் கொக்கிபோட்டு நிறுத்திய புஷ்பராஜ், அந்தப் படகுக்குள் இறங்கி, தூண்டில் காரரின் தோளில் கை வைத்தார்.

அப்போதும் அவன் அசையவில்லை.

உடனே அப்துல் கபூரின் முகத்தைப் பார்த்தார் புஷ்பராஜ். பிறகு தனது டார்ச்லைட்டை எரிய விட்டார்.

அது ஒரு பெண் என்பது விளங்கியது.

ஆனால், அவள் இறந்துவிட்டிருந்தாள்!

அதன் பிறகு இணைந்த நிலையிலேயே அந்தப் படகுகள் இரண்டும் பங்களாவை நோக்கி விரைந்தன.

அந்தப் பெண்ணைப் படகிலிருந்து இறக்கிக் கரையில் படுக்க வைத்தனர். அப்போதும் அந்த உருவம் விறைத்தபடியே அமர்ந்திருந்தது.

உடனே காவலர் ஒருவர் ஓடி வந்தார்.

"இந்தப் பெண்ணை உங்களுக்குத் தெரியுமா?" புஷ்ப ராஜ் கேட்டார்.

“தெரியும். இவர் ஒரு சினிமா நடிகை.” காவல்காரர் பதிலளித்தார்.

“உங்களுக்கு எப்படித் தெரியும்?”

“இந்தப் பெண் இங்கு வந்து என்னிடம் பேசியிருக்கிறாள்.”

"அப்படியா!” என்றவர், அவள் இருந்த படகை ஒரு முறை தோண்டித் துருவி ஆராய்ந்தார்.

“வந்தவர்கள் இருவராக இருக்க வேண்டும். இவளை இந்தப் படகில் தூண்டில்காரனாக விட்டுவிட்டு, மற்றொரு வன் நீரில் நீந்தி பங்களாவுக்குள் நுழைந்திருக்க வேண்டும்” புஷ்பராஜ் ஒரு தீர்மானத்துக்கு வந்தார்.

கபூர் அவரையே பார்த்துக் கொண்டு இருந்தார்.

“அவன் அதற்குள் தனது திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டான். இப்படியொரு யோசனையை நான் ரஷ்ய நாவல் ஒன்றில் வாசித்திருக்கிறேன்.” புஷ்பராஜ் கூறினார்.

“இப்போது நாம் என்ன செய்வது?” அப்துல் கபூர் கேட்டார்.

“இவளைக் குறித்து போலீஸ்காரர்கள் தங்கள் வழி முறைப்படி அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளட்டும். நாம், டிக்சனை எப்படிக் கண்டுபிடிப்பது என்பது பற்றி யோசிப்போம்.” புஷ்பராஜ், பங்களாவுக்குள் நுழைந்தார்.

இருவரும் கபூரின் அறைக்கு வந்தனர்.

அவன் எப்படி வந்தான், எந்த வழியாகக் கடத்திச் சென்றான் என்பது குறித்தெல்லாம் யோசித்து நேரம் கடத்த அவர்கள் விரும்பவில்லை. அதனால் எந்த வித பயனும் இல்லை என்று அவர்களுக்குத் தெரியும்.

"ஏரிக்கரை வழியாக அவன், அவரைக் கடத்திக் கொண்டு போயிருக்க முடியாது. அப்படிச் சென்றால் நாம் சுலபத்தில் கண்டு பிடித்து விடுவோம் என்று அவனுக்குத் தெரியும். எனவே, நகரில் உள்ள எல்லா ஒட்டல்களையும், அதே மாதிரி நகரைவிட்டு வெளியேறும் எல்லா வண்டிகளையும் சோதனை போட ஏற்பாடு செய்ய வேண்டும்." புஷ்பராஜ் கூறினார்.

உடனே ஜோஸப் மாத்யூவுக்குத் தகவல் தெரிவிக்கப் பட்டது.

அவர் ஒரு கணம் அசைவற்றுப் போனார்.

எனினும், விரைவிலேயே சுயநினைவை அடைந்தவர், உடனுக்குடன் தகவலை எல்லா இடங்களுக்கும் தெரிவிக்க ஏற்பாடு செய்தார்.

ஒரு சில நிமிடங்களுக்குள் நகரின் பிரதான சாலைகள் மற்றும் நாற் சந்திகளிலும் வாகன சோதனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. சாலையில் வரும் எந்த ஒரு வண்டியும் போலீசாரின் சோதனையிலிருந்து தப்பவில்லை.

இந்த ஏற்பாடுகளையெல்லாம் போலீஸார் செய்து முடிப்பதற்குள் மாருதி கார் ஒன்றில் டிக்சனை ஏற்றிக் கொண்டு, ராபின்சன், கங்காபிரசாத்தின் ரகசிய இருப்பிடத்தை அடைந்து விட்டான்.

அங்கு டிக்சனை அழைத்துச் செல்வதற்காக ஜான்ஸன் தயாராகக் காத்திருந்தான்.

“ஹலோ மிஸ்டர் ராபின்சன், இந்தச் செயலை தங்கள் இவ்வளவு விரைவில், இந்த அளவுக்குக் கெட்டிக்காரத் தனமாக நிறைவேற்றுவீர்கள் என்று நான் எதிர்பார்க்க வில்லை.” கங்காபிரசாத் மிகுந்த உற்சாகத்துடன் கூறினார்.

“என்னை இப்படியெல்லாம் புகழ்வது பிடிக்காத விஷயம். எனக்குத் தேவை பணம்தான். அதைக் கொடுத்து விட்டால் நான் கிளம்பி விடுவேன்.” சிகரெட்டைப் புகைத்தபடி ராபின்சன், ஜான்ஸனைப் பார்த்தான்.

ஜான்ஸன், கங்காபிரசாத்தைக் கவனித்தான். அவரோ சுருட்டைப் புகைத்தபடி அறைக்குள் அங்கும் இங்குமாக உலாவிக் கொண்டிருந்தார். அவர் ஏதோ ஒன்றைக் குறித்துத் தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தார்.

சட்டென்று திரும்பிய கங்காபிரசாத், ராபின்சனைப் பார்த்தார்.

“ஒப்புக் கொண்டதை விட உங்களுக்கு அதிகமாகப் பணம் கொடுக்க நாங்கள் தயார். ஆனால், நீங்கள் மற்றோர் உதவியையும் செய்ய வேண்டி உள்ளது.” ராபின்சனிடம் கூறினார்.

“என் வேலை முடிந்து விட்டது!” ராபின்சன் நிம்மதி இழந்தவனாகப் பேசினான்.

“இப்போது நீங்கள் செய்ய வேண்டியதும் முக்கியமான வேலைதான். அதை நீங்கள் மட்டுமே செய்ய முடியும்!” கங்காபிரசாத்தின் குரல்

திடமாக ஒலித்தது.

“சாதாரணமாக நான் மற்றவர்களுக்காக வேலை செய்வதில்லை. இருப்பினும் ஒப்புக் கொண்ட வேலையை முடித்து விட்டேன்.” ராபின்சன் பதிலளித்தான்.

“அதெல்லாம் எனக்குத் தெரியும். மற்றவர்கள் செய்ய முடியாத, இதே வேலையின் தொடர்ச்சியை உங்களிடம் ஒப்படைக்கிறேன். மயக்க நிலையில் கிடக்கும் டிக்சனைப் பாதுகாப்பான இடத்துக்குப் பத்திரமாகக் கொண்டு சென்று சேர்க்க வேண்டும்.”

“முதலில் நீங்கள் என்னிடம் இதைப் பற்றிக் கூற வில்லை.”

“தவறுதான். உங்களைத் தவிர வேறு யார் டிக்சனை அழைத்துச் சென்றாலும் போலீஸாரிடம் சிக்கிக் கொள்வார்கள்.”

‘அவர்கள் சொல்வதிலும் நியாயம் இருக்கிறது. இந்த இரண்டாவது செயலுக்காகவும் அவர்கள் நல்ல ஒரு தொகையைத் தரக் கூடும்.’ என்று ராபின்சன் நினைத்தான்.

“சரி...” ராபின்சன் தற்காலிகமாக அந்த அறையிலிருந்து வெளியேறினான்.

டாக்டர் டிக்சன் அப்போதும் மயக்க நிலையிலேயே கிடந்தார்.

அப்போது புஷ்பராஜ் தனது மோட்டார் பைக்கில் பரபரப்பாகச் சுற்றிக் கொண்டிருந்தார். நகரத்தில் ஓரிடத்தையும் அவர் விட்டு வைக்கவில்லை. எல்லா இடங்களிலும் வாகனப் பரிசோதனை மும்முரமாக நடந்து கொண்டிருந்தது.

இந்த முறை அரசாங்க வண்டிகளுக்குக்கூட, சோதனையிலிருந்து விலக்கு அளிக்கவில்லை. காரணம், போலியாக அப்படி ஒரு போர்டை மாட்டிக் கொண்டு எதிராளிகள் தப்பிக்க வாய்ப்பு இருக்கிறதே.

பொழுது விடியத் தொடங்கியது.

வாகன சோதனை இடைவிடாமல் தொடர்ந்து கொண்டிருந்தது.

எனினும் எந்த ஒரு வண்டியிலும் சந்தேகத்துக்கு உரிய எவரையும் கண்டுபிடிக்க முடியவில்லை. சோதனையில் எந்த விதத் தகவலும் கிடையாது. ஒவ்வொரு வண்டியின் பின்புற டிக்கிப் பகுதிகள் கூட தீவிரமாகச் சோதனையிடப் பட்டது.

எனினும் அதனால் எந்தவிதப் பலனும் ஏற்படவில்லை.

பரிசோதனை செய்யப்பட்ட கார்களின் எண்கள் மற்றும் மாடல்கள் கூட அந்தப் பட்டியல்களில் இடம் பெற்றிருந்தன. மட்டுமின்றி ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இடைவிடாமல் வயர்லெஸ் மூலமாகத் தகவல்களை உடனுக்குடன் தெரிவிக்கவும் செய்தனர்.

புஷ்பராஜ் விடியற்காலை எட்டு மணியளவில் போலீஸ் கிளப்புக்கு வந்து சேர்ந்தார். ஒவ்வொரு லிஸ்ட்டையும் பரிசோதித்தார்.

அந்தச் சூழ்நிலையிலும் டாக்டர் டிக்சனுடன் கிளம்பிய ராபின்சன் எப்படியோ அவரை பத்திரமான மற்றோர் இடத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தான்.

அவன் நகர எல்லையைத் தாண்டும்போது வாகனப் பரிசோதனைக்கு உள்ளானான்.

எனினும் ஆச்சரியகரமான முறையில் ராபின்சன் அதிலிருந்து தப்பித்தான்.

21

நகரிலிருந்து வெளியே சென்ற வாகனங்களின் விவரத்தை புஷ்பராஜ் சோதித்துக் கொண்டிருந்தார்.

அதுவரை சோதனை செய்யப்பட்ட விவரங்கள் அதில் தெளிவாக இருந்தன.

ஜோஸப் மாத்யூ. புஷ்பராஜை நெருங்கினார்.

“என்னுடைய சந்தேகம் என்னவென்றால், அவரைக் கடத்தியவர்கள் சந்துபொந்துகளில் வண்டி ஓட்டிச் சென்றி ருக்கலாம் என்பதுதான்." ஜோஸப் மாத்யூ கூறினார்.

“அதற்கும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால், அவர்கள் மெயின் ரோடுகளில் பயணம் செய்யத்தான் அதிக வாய்ப்பு உள்ளது.* புஷ்பராஜ் கூறினார்.

“ஏன்?”

“பயணம் சுலபம். வேகமாகவும் போகலாம். உடனேயே பரிசோதனை தொடங்குவார்கள் என்று எதிர்பாக் கவும் முடியாதே!”

அவர் சொல்வதிலும் நியாயம் இருப்பதாக ஜோஸப் மாத்யூவுக்குத் தோன்றியது.

சட்டென்று அந்தப் பட்டியலின் ஒரு பகுதியில் புஷ்பராஜிடம் இருந்த பேனா அசைவற்று நின்றது.

புஷ்பராஜ் ரிசீவரை எடுத்தார்.

நகரின் மேற்குப் பகுதியில் பயணம் செய்த வாகனங்களின் பட்டியல் அது.

“அந்த வழியாகச் சற்று நேரத்துக்கு முன்னால் கடந்து சென்ற மில்க் வேனைக் நன்றாகச் சோதித்தீர்களா?” புஷ்பராஜ் கேட்டார்.

“ஒரு நிமிடம் சார்... நன்றாகப் பரிசோதித்தோம். அது உண்மையான மில்க் வேன்தான்."

“நன்றாகச் சோதித்தீர்களா?”

"ஆமாம் சார். வேனில் இருவர் இருந்தனர். இருவரும் உள்ளூர்க்காரர்கள்தான்."

'நீங்கள் சொன்னது சரியாக இருக்கலாம். அதன் பின் புறத்தைப் பரிசோதனை செய்தீர்களா?” புஷ்பராஜ் கேட்டார்.

"அதற்குள் பால் இருந்தது."

“என் கேள்வி அதுவல்ல... அதைச் சோதித்தீர்களா என்பதுதான்.”

மறுமுனையில் பதில் இல்லை.

புஷ்பராஜ் ரிசீவரை கிராடிலில் வைத்துவிட்டு அங்கிருந்து நகர்ந்தார்.

"வாருங்கள்... நாம் உடனே அந்த இடத்துக்குச் செல்ல வேண்டும்.” புஷ்பராஜ், எஸ்.பி-யிடம் கூறினார்.

இருவரும் விரைந்து நடந்து ஜீப்பில் ஏறினர். எஸ்.பி ஜீப்பைச் செல்லுத்தினார்.

பத்தாவது நிமிடத்தில் அவர்கள் குறிப்பிட்ட டெம்பர வரி செக்போஸ்ட்டை அடைந்தனர்.

அங்கு இருவர் டியூட்டியில் இருந்தனர். ஜீப்பைக் கவனித்த அவர்கள் இருவரும் சல்யூட் அடித்தனர்.

“ரிஜிஸ்டரை எடுங்கள்...” புஷ்பராஜ் கேட்டார்.

மில்க் வேன் அந்தப் பகுதியைக் கடந்த சரியான நேரத் தைக் கண்டறிந்தார்.

“இரண்டு மணி பத்து நிமிடத்தில் மில்க் வேன் இந்த இடத்தைக் கடந்திருக்கிறது!” புஷ்பராஜ் கூறினார்.

"ஆமாம் சார்!” அங்கிருந்தவர்களில் ஒருவர் கூறினார்.

“நீங்கள் உட்புறத்தைக் கவனிக்கவில்லை... இல்லையா?” அவர் கேட்டார்.

"உண்மைதான் சார் சந்தேகத்துக்கு உரியதாக எதுவும் தெரியவில்லை. அவர்கள் சரியான யூனிஃபார்ம் அணிந்திருந்தனர்...” இழுத்தவாறு பேசினார் அவர்.

புஷ்பராஜ், தனது பாக்கெட்டிலிருந்து டைரி ஒன்றை வெளியில் எடுத்தார்.

"இதோ பாருங்கள்... அதிலிருந்த இருவரில், யாராவது ஒருவர் இந்த முகத்துடன் பொருந்துகிற மாதிரித் தெரிகிறதா?” என்று கேட்ட புஷ்பராஜ், ராபின்சனின் போட்டோவைக் காட்டினார்.

அந்த இருவருமே போட்டோவை ஊன்றிக் கவனித்தனர்.

“மன்னிக்க வேண்டும் சார். எத்தனையோ முகங்களைப் பார்த்ததால், சட்டென்று எங்களால் ஞாபகப் படுத்திப் பார்க்க முடியவில்லை.” அவர்கள் உண்மையான இயலாமையுடன் கூறினர்.

"அது இயற்கைதான். இருந்தாலும் ஞாபகத்துக்கு வருகிறதா என்று முயற்சி செய்யுங்கள்.'' என்று கூறிய புஷ்பராஜ், அவர்களிடமிருந்த வயர்லெஸ்ஸை வாங்கி, அந்த மில்க் வேனின் நம்பரைக் கூறி, அதை எங்கிருந்தாலும் உடனடியாகக் கண்டுபிடிக்கவும், கொண்டு வரவும் கண்ட்ரோல் ரூமுக்குத் தெரியப்படுத்திவிட்டு, அதை எல்லா இடங்களுக்கும் தெரியப்படுத்தவும் கூறினார்.

“உங்களுக்கு அந்த மில்க்வேன் மீது சந்தேகம் ஏற்படு கிறதா என்ன?” ஜோஸப் மாத்யூ கேட்டார்.

"ஆமாம்... நேரம் துல்லியமாக இருக்கிறது. மொத்தப் பட்டியலிலும் எனக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியது, இது ஒன்றுதான். மட்டுமின்றி, எனக்குள் ஒரு குரல் ‘இது சரி’ என்றே வாதிடுகிறது.”

அவரது சந்தேகம் நியாயம்தான் என்று எஸ்.பி-க்கும் தோன்றியது. அதில் அர்த்தம் உள்ளது.

சாதாரணமாக பால் வண்டி மீது எவருக்கும் சந்தேகம் ஏற்படாது. அதற்குள் எதைக் கடத்திச் சென்றாலும், எவராலும் அவ்வளவு சுலபத்தில் கண்டுபிடிக்கவும் முடியாது தான்.

எனவே, டிக்சனை அதில் கடத்திச் சென்றிருக்க வாய்ப்பு உண்டு.

“நமது அனுமானங்கள் எல்லா நேரத்திலும் சரியாக இருக்குமென்று சொல்ல முடியாதுதான். இருப்பினும் சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்வதில் தவறு இல்லையே?” புஷ்பராஜ், தொலைபேசியைப் பார்த்தவாறு கூறினார்.

கடிகாரத்தில் விநாடி முள் சுறுசுறுப்பாக நகர்ந்து கொண் டிருந்தது. அங்கிருந்த எல்லோரும் மௌனமாக, ஒருவரை ஒருவர் பரஸ்பரம் பார்த்துக் கொண்டனர்.

அதற்குள் கண்ட்ரோல் ரூமிலிருந்து ஜீப்புகள் நான்கு திசைகளிலும் பாய்ந்தன.

பால் வண்டியாக இருந்ததால், அதைக் கண்டுபிடிப்பது சுலபம்தான் என்று அவர்கள் நினைத்தனர்.

இருபது நிமிடங்கள் கடந்தன.

தொலைபேசி அலறியது.

எதிர்பார்ப்பு நிறைந்த கண்கள் சட்டென்று கூர்மை யடைந்தன.

புஷ்பராஜ் ரிசீவரை எடுத்தார்.

“என்ன... அப்படியா? வர வேண்டுமா? இதோ வருகிறேன்." ரிசீவரை கிராடிலில் வைத்த புஷ்பராஜ் பரபரப்பாகச் செயல்பட்டார்.

அடுத்த ஒரு சில நிமிடங்களுக்குள் புஷ்பராஜும், ஜோஸப் மாத்யூவும் ஜீப்பில் ஏறி மேற்குத் திசையில் விரைந்தனர்.

இரண்டு பெரிய பாலங்களைக் கடந்து ஜீப் பாய்ந்து சென்றது.

கடற்கரையை ஒட்டிய நெடுஞ்சாலையில் ஜிப் தென்புற மாகத் திரும்பியது. ஜீப்பின் பாய்ச்சல் சாலையில் சென்ற வர்களைத் திகைப்புக்கு உள்ளாக்கியது.

பத்து நிமிடத்துக்குள் அவர்கள் லட்சியப் பகுதியை அடைந்தனர்.

"அதோ கிடக்கிறது நாம் தேடிய வண்டி.” புஷ்பராஜ் சுட்டிக்காட்டினார்.

அவர்கள் நெருங்கியபோது மீனவர்கள் சிலர் அதைச் சூழ்ந்து நிற்பது தெரிந்தது.

வேனுக்குள் எவரையும் காணவில்லை.

“இந்த வேன் இங்கு எப்போது வந்தது என்று உங்களுக்குத் தெரியுமா?” புஷ்பராஜ், அங்கிருந்தவர்களிடம் கேட்டார்.

“தெரியவில்லை சார் விடியும் போதுதான் இந்த வேன் நிற்பதைக் கவனித்தோம்!”

“இது அடிக்கடி இங்கு வருவது உண்டா?” ஜோஸப் மாத்யூ விசாரித்தார்.

"இங்கு இதற்கு வேலையே கிடையாது சார்!”

"சார் இது பின்னிரவில் வந்தது...” இளைஞன் ஒருவன் தானாக முன்வந்து பேசினான். லுங்கி-ஷர்ட் அணிந் திருந்தான். அவன் கழுத்தில் துண்டு ஒன்றும் கிடந்தது.

“இப்படி வாருங்கள்... நீங்கள் பார்த்தீர்களா? புஷ்ப ராஜ் அந்த இளைஞனிடம் கேட்டார்.

"நான் தூக்கம் வராததால் எழுந்து உலாவிக் கொண்டிருந்தேன். இந்த வேகன் மெதுவாக வந்து நின்றது. இதிலிருந்து இருவர் இறங்கினர்.” அவன் விவரித்தான்.

“பிறகு?”

"அவர்கள் இருவருமாகச் சேர்ந்து மற்றொரு மனிதரைத் தாங்கிப் பிடித்துச் சென்று மோட்டார்ப் படகு ஒன்றில் ஏற்றினார்கள். அந்தப் படகு நடுக்கடலை நோக்கி விரைந்தது...” இளைஞன் படகு சென்ற திசையைச் சுட்டிக் காட்டினான்.

“நாம் உடனே கிளம்ப வேண்டும்!” புஷ்பராஜ், ஜிப்பை நோக்கி விரைந்தார். ஜோஸப் மாத்யூ அவரைப் பின்தொடர்ந்தார்.

“துறைமுகத்தை அடைந்து படகு ஒன்றை விரைவாக ஏற்பாடு செய்ய வேண்டும். நாம் சந்தேகப்பட்ட நபர்தான் இதைச் செய்திருக்கிறான்.

கடலில் நின்றிருக்கும் ஏதாவது ஒரு கப்பலில் ஏற்றியிருப்பான். அந்தக் கப்பல் அநேகமாக லட்சத்தீவுகளை நோக்கிச் செல்லும் என்பது என் யூகம். எனவே, நாம் முடிந்த விரைவில் அந்த இடத்தை அடைய வேண்டும்.”

"நாம் அவரைத் தொடர முடியுமா? அவர்கள் இதற்குள் வெகுதூரம் போயிருப்பார்களே?” ஜோஸப் மாத்யூ சந்தேகம் கேட்டார்.

“இதற்கு உடனடியாக என்னால் பதில் சொல்ல முடிய வில்லை. எப்படியிருப்பினும் கப்பல் அல்லது மோட்டார் படகு மூலம் டிக்சன் லட்சத்தீவுக்குக் கடத்தப்பட்டிருக்கிறார். அதை லட்சத்தீவுடன் தொடர்பு கொண்டுதான் நாம் தெரிந்து கொள்ள முடியும்.’’ புஷ்பராஜ் பதிலளித்தார்.

அவர்கள் துறைமுகத்தை அடைந்தனர்.

அங்கிருந்து லட்சத்தீவைச் சேர்ந்த கவரத்தியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டனர்.

அப்படி எந்த ஒரு கப்பலோ, மோட்டார் படகோ அங்கு வரவில்லை என்ற தகவல் கிடைத்தது.

"அப்படியானால், அவர்கள் மாலத்தீவுக்குச் சென்றிருக்க வேண்டும். நாம் ஒரு ஹெலிகாப்டரின் உதவியை நாட வேண்டியதுதான். இதைவிட அதிகமான தொலைவுக்கு அவர்கள் செல்ல வாய்ப்பு இல்லை. எதற்கும் நமது கடற்கரைக் காவலர்களிடம் தகவல் தெரிவித்து விடுவதும் ஒரு பாதுகாப்புதான்” புஷ்பராஜ், மாத்யூவிடம் கூறினார்.

ஜோஸப் மாத்யூ உடனே அவர்களுடன் தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்தார்.

மோட்டார்ப் படகுகள் அல்லது கப்பல்கள் ஏதேனும் கடல்பகுதியில் தென்பட்டால் உடனே சோதனையிடுமாறு கடற்கரைக் காவல்துறைத் தலைவர் உத்தரவு இடவும் செய்தார்.

எப்படியிருப்பினும் டிக்சன் கடத்தப்பட்டதைத் தற் காலிகமாக வெளியுலகுக்குத் தெரியப்படுத்த வேண்டியது இல்லை என்று அவர்கள் ஒரு தீர்மானத்துக்கு வந்தனர்.

சுமார் அரைமணி நேரத்துக்குள் ஹெலிகாப்டர் ஒன்று அவர்களுக்காகத் தயாரானது. புஷ்பராஜும், மாத்யூவும் தாமதமின்றி அதில் ஏறினர்.

மாலத்தீவில் புஷ்பராஜின் நண்பர் சுதீர் என்கிற டாக்டர், மருத்துவமனை ஒன்றை நிர்வகித்து வந்தார்.

எந்தவித முன்னறிவிப்புமின்றி புஷ்பராஜைச் சந்திக்க நேர்ந்ததில் டாக்டர் சுதீர் வியப்பு அடைந்தார்.

குசல விசாரிப்புக்குப் பிறகு புஷ்பராஜ் நடந்தவற்றை அவரிடம் தெரிவித்தார்.

அதைக் கேட்ட சுதீர் சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தார்.

“என்ன யோசிக்கிறீர்கள்?” புஷ்பராஜ் கேட்டார்.

"நான் வெளியே போய்விட்டு இப்போதுதான் மருத்துவமனைக்குத் திரும்பி வந்தேன். சரக்குக் கப்பல் ஒன்றில் பயணம் செய்யும் நோயாளி ஒருவருக்கு, மருத்து வம் பார்ப்பதற்காக அழைத்துச் சென்றார்கள். நீங்கள் சொன்னதை வைத்துப் பார்த்தால் நான் மருத்துவம் பார்த்த நபர் அநேகமாக டிக்சனாக இருக்க வேண்டும்.”

“நீங்கள் சொன்னது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. எங்களது முயற்சிகள் வீணாகவில்லை!” என்ற புஷ்பராஜ், மகிழ்ச்சி மிகுதியால் டாக்டர் சுதீரைக் கட்டிப் பிடித்தார்!

22

உண்மையிலேயே மிஸ்டர் புஷ்பராஜுக்கு மகிழ்ச்சி அளிக்கும் செய்திதான் அது.

“நீங்கள் சொன்னது உண்மையாக இருக்கும் என்று நானும் நம்புகிறேன். இருப்பினும் அதை நான் உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டுமே?” புஷ்பராஜ் கூறினார்.

“நியாயம்தான்! விஷயத்தைத் தெளிவாகச் சொல்லுங்கள். யார் இந்த டிக்சன்? அவரை உங்களுக்குத் தெரியுமா? சுதீர் கேட்டார்.

"நாங்கள் தேடிக் கொண்டிருக்கும் ஒருவர் டிக்சன்?”

“ஓகோ... அப்படியானால் அவர் ஒரு குற்றவாளியா?”

“குற்றவாளியல்ல... ஆனால், நாங்கள் அவரை அவசியம் கண்டுபிடித்தே ஆகவேண்டும்!”

“என்னிடம் எதையோ மறைக்க முற்படுகிறீர்கள். என்னை நீங்கள்

நம்பவில்லையா?” டாக்டர் சுதீர், புஷ்பராஜிடம் கேட்டார்.

“மறைப்பது நோக்கமல்ல. எந்த விதத்திலும் தகவல் வெளியாகக் கூடாது என்பதற்காகத்தான் இவ்வளவு முன் னெச்சரிக்கை..." என்ற புஷ்பராஜ் அதுவரை நடந்ததைச் சுருக்கமாகக் கூறினார்.

“கப்பலின் உட்புறச் சூழ்நிலை எனக்குள் ஒரு விதச் சந்தேகத்தை ஏற்படுத்தவே செய்தது..” டாக்டர் சுதீர் கூறினார்.

“என்ன சந்தேகம்?”

“அந்தக் கப்பலுக்குள் ஆயுதம் தாங்கிய சிலரைப் பார்த்தேன். நான் சிகிச்சையளித்த நோயாளியின் அறை வாசலிலும் ஆயுதம் தாங்கியவர்கள் காவலிருந்தனர். கப்பலில் இப்படிப்பட்ட ஓர் அமைப்பையே இப்போதுதான் நான் பார்க்கிறேன்.”

"அப்படியானால்...”

“அதற்குள் நுழைவது எப்படி என்பதுதான் உங்கள் யோசனை என்றால், என்னால் ஒரு சிறு உதவி செய்ய முடியும். அந்த நோயாளியை அருகிலிருந்து கவனித்துக் கொள்ள டாக்டர் ஒருவர் தேவை. அந்த டாக்டராக உங்களை நான் அனுப்ப முடியும்!”

"மருத்துவம் பார்க்க நான் போனால் எப்படி? உண்மையான மருத்துவர் அல்லவா அவருக்குத் தேவை!”

“என்னால் அடிக்கடி கப்பலுக்கு வர முடியாது என்று சொல்லி விட்டேன். அப்படியானால், நம்பிக்கைக்கு உரிய மற்றொரு டாக்டரை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டார்கள். அதற்காக நான் ஒரு டாக்டரைத் தேர்ந் தெடுக்கவும் செய்தேன். பயப்படுவது மாதிரியான நிலை எதுவும் நோயாளிக்கு இல்லை. தற்சமயம் அவருக்கு வழங்கியுள்ள மருந்து மாத்திரைகளே அவருக்குப் போதும். எனவே, அந்த மாதிரியான சிக்கல் எதுவும் உங்களுக்கு ஏற்படாது!” சுதீர் விவரித்தார்.

“சரி... நான் ஒரு டாக்டராக அந்தக் கப்பலுக்குள் நுழைந்து விடுகிறேன். நான் ஒரு டாக்டராக மாற, சில மாற்றங்கள் தேவை!” புஷ்பராஜ் கூறினார்.

அப்போது அட்டெண்டர் ஒருவர் கதவைத் தட்டிவிட்டு அந்த அறைக்குள் நுழைந்தார்.

“சார், பெண்மணி ஒருவர் உங்களைப் பார்க்க வந்திருக்கிறார்!’

அட்டெண்டர் தெரிவித்தார்.

உடனே புஷ்பராஜ், அருகிலுள்ள மற்றோர் அறைக்குள் நுழைந்தார்.

“வரச் சொல்லுங்கள்!” டாக்டர் அட்டெண்டரிடம் கூறினார்.

சற்று நேரத்துக்குள் இளம்பெண் ஒருத்தி அந்த அறைக்குள நுழைநதாள.

இருபத்தைந்து வயது இருக்கலாம். ஒரு சினிமா நடிகை மாதிரி மேக்கப் செய்திருந்தாள். பிரவுன் நிறத் தலைமுடி.

கண்களில் கூலிங் கிளாஸ். எனவே, கண் பகுதிகள் தெளிவாகத் தெரியவில்லை.

தோள்வரை புரளும் தலைமுடி, அழகான பெரிய கவுன் அணிந்திருந்தாள். தோளில் ஒரு ஹேண்ட்பேக். நாகரிகத்தில் அதிக ஆர்வம் கொண்டவளாகத் தெரிந்தாள்.

"உட்காருங்கள்...” சுதீர் கூறினார்.

உட்கார்ந்தாள். பேகைத் திறந்து கார்டு ஒன்றை எடுத்து மேஜை மீது வைத்தாள்.

சுதீர் அதை ஊன்றிப் பார்த்தார். அதில் ஒரு கப்பலின் படம் மட்டும் இருந்தது. உடனேயே வந்திருப்பது யார் என்று அவருக்கு விளங்கியது.

“உங்களுக்கு நான் எதையும் விளக்க வேண்டியது இல்லை என்று கருதுகிறேன்." அவள் பேசினாள்.

“வேண்டாம். உங்களுடன் அனுப்புவதற்கு டாக்டர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து விட்டேன். இன்னும் சற்று நேரத்தில் நீங்கள் அவரை அழைத்துக் கொண்டு செல்லலாம்.”

சுமார் பத்து நிமிட இடைவெளியில் ஒரு டாக்டர் வேடத்தில் சட்டென்று அடையாளம் தெரியாத வடிவத்தில் புஷ்பராஜ் ஸ்டெத்தாஸ்கோப் மற்றும் மருந்துப் பையுடன் அந்த அறையிலிருந்து வெளிவந்தார்.

புஷ்பராஜுக்கு அந்தப் பெண் அறிமுகமானவளாகத் தெரியவில்லை.

"இவர் டாக்டர் ஷெரீஃப். எல்லா வகையிலும் உங்க ளுக்கு உதவக் கூடியவர்!” டாக்டர் சுதீர் அறிமுகப்படுத்தினார்.

தாமதமின்றி இருவரும் அங்கிருந்து வெளியேறினர்.

வெளியில் டாக்ஸி ஒன்று காத்திருந்தது. இருவரும் பின்புற இருக்கையில் அமர்ந்தனர்.

“டாக்டர், நீங்கள்..." அவள் பேச்சைத் தொடங்கினாள்.

"அதே மருத்துவமனையில், அவருடன் பணி புரிகிறேன்."

அதன் பிறகு அவள் கேள்விகள் எதையும் கேட்க வில்லை.

“மேடம், நான் எவ்வளவு நாள் நோயாளியைக் கவனிக்க வேண்டும்? நாம் எந்த இடத்துக்குப் பயண மாகிறோம் என்பதை என்னிடம் சொல்ல முடியுமா?” புஷ்பராஜ் கேட்டார்.

“எனக்கு அதைப் பற்றி எதுவும் தெரியாது” அவள் ஜன்னல் வழியாக வேடிக்கை பார்த்தபடி உதாசீனமாக பதிலளித்தாள்.

கப்பலில் ஏறுவதற்குள், அந்தத் துறைமுகத்திலேயே போலீஸின் உதவியுடன் கப்பலின் பயணத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தால் என்ன என்று கூட புஷ்பராஜ் ஒரு கணம் நினைத்தார். ஆனால், அது நிலைமையை மேலும் சிக்கலாக்கி விடலாம் என்பதால் வேண்டாம் என்று முடிவு செய்தார்.

ஒரு சிறிய தவறு நேர்ந்தால்கூட டிக்சனைக் காப்பாற்றும் வாய்ப்பு வெகு சிரமத்துக்கு உரியதாகி விடலாம். மட்டுமின்றி, டிக்சனைப் பின்தொடரவோ, அவரை மீட்கவோ வழியின்றி எதிரிகள் உஷாராகி நிலைமை கவலைக்கு உள்ளாகலாம். எனவே, அதையெல்லாம் தவிர்ப்பது என்ற முடிவுக்கு வந்தார் புஷ்பராஜ்.

கார், துறைமுகத்தை அடைந்தது.

துறைமுகத்துக்குள் நுழைவதற்கு உரிய கெடுபிடிகள் எதுவும் அப்போது ஒரு பிரச்சினையாக இருக்கவில்லை. அந்தப் பெண்ணிடம் இருந்த கார்டு எல்லாவற்றையும் சுலபமாகச் சமாளித்தது. மட்டுமின்றி, செக்யூரிட்டி கார்டுகள் கப்பல் வரை அவர்களை வழி நடத்திச் செல்லவும் செய்தனர்.

கப்பலுக்குள் நுழைவதற்கு முன் அவள் ஓர் உறையை எடுத்து செக்யூரிட்டியிடம் கொடுத்தாள். அதை அப்படியே வாங்கிப் பைக்குள் போட்டுக் கொண்ட அவர், விடை பெற்றுத் திரும்பிச் சென்றார்.

இருவரும் கப்பலுக்குள் நுழைந்தனர்.

அவர்களை வரவேற்றது ஜான்ஸன்தான்.

“டாக்டர் ஷெரீஃப்தானே?” ஜான்ஸன் கேட்டவாறே கை நீட்டினான்.

புஷ்பராஜ், வியப்புடன் ஜான்ஸனைப் பார்த்தவாறே அவனுடன் கை குலுக்கினார்.

‘தான் கப்பலுக்குள் நுழைவதற்கு முன்பாகவே இவனுக்குத் தகவல் தெரிந்திருக்கிறது!’

“ஸெலினா... அந்த டாக்டரின் அறைக்கு இவரைக் கொண்டு போ!” ஜான்ஸன், புஷ்பராஜுடன் வந்த பெண்ணிடம் கூறினான்.

அப்போது கங்காபிரசாத்தின் ரகசிய இருப்பிடத்தில், கங்காபிரசாத்தும், ராபின்சனும் டாக்டர் ஷெரீஃப் குறித்து விவாதித்தனர். அவர்களுக்கு இடையே இருந்த தகவல் தொடர்பு அப்படிப்பட்டது. ரேடியோ டிரான்ஸ்மிட்டர் மூலம் செய்தி அவர்களுக்குக் கிடைத்திருந்தது.

“இப்படிப்பட்ட அடையாளங்கள் கொண்ட ஒருவர் நமது பட்டியலில் இல்லை!” கங்காபிரசாத் ஃபைல் ஒன்றைப் புரட்டிப் பார்த்தபடி கூறினார்.

கங்காபிரசாத்தின் உளவுப் பிரிவினர், போலீஸ் துறையில் உள்ளவர்களின் புகைப்படங்களைச் சேகரித்து அவர்களைப் பற்றிய குறிப்புகளையும் இணைத்து வைத் திருந்தனர். அதில் புஷ்பராஜின் படமும் இருந்தது.

“ராபின்சன், உடனடியாக நாம் ஒரு வேலை செய்ய வேண்டும்!” கங்காபிரசாத் கூறினார்.

“சொல்லுங்கள்!” ராபின்சன் சிகரெட் சாம்பலை ஆஷ்ட்ரேயில் தட்டியபடி கூறினான்.

"புஷ்பராஜ், இப்போது எங்கே இருக்கிறார் என்பது நமக்கு உடனடியாகத் தெரிய வேண்டும்.” கங்காபிரசாத் ஒரு தீர்மானத்துக்கு வந்தவராகக் கூறினார்.

“ஏன்?”

“விஷயம் இருக்கிறது. மட்டுமின்றி, நீங்களும் அந்தக் கப்பலில் பயணம் செய்ய வேண்டும்!”

"புரியவில்லை! மேலும், எனக்கு அதற்கெல்லாம் நேரமும் கிடையாது.

டிக்சன் போகிற இடத்துக்கெல்லாம் நான் போக வேண்டுமென்று நீங்கள் நினைத்தால் அது சாத்தியமும் இல்லை!" ராபின்சன் மறுத்தான்.

"இப்படிச் சொன்னால் எப்படி?" கங்காபிரசாத் கேட்டார்.

"டிக்சனைப் பாதுகாப்பான இடத்தில் கடைசிவரைக் கொண்டு போய்ச் சேர்ப்பதா என் வேலை? அது என்னால் முடியுமென்றும் தோன்றவில்லை" ராபின்சன் ஆர்வம் இல்லாதவனாகப் பேசினான்.

"இதில் உங்களுக்கு விருப்பமான இரண்டு விஷயங்கள் உள்ளன. முதலாவது பேசியதைவிட இரண்டு மடங்குப் பணம். இரண்டாவது உங்கள் ஆயுள் முழுமைக்குமான பாதுகாப்பு."

"ஆயுள் முழுமைக்குமான பாதுகாப்பா?" ராபின்சன் இளக்காரத்துடன் கேட்டான்.

"டிக்சன் காணாமற் போன விநாடியிலிருந்து காவல் துறை சுறுசுறுப்பு அடைந்திருக்கிறது. ஓரளவுக்கு அவர்கள் ராபின்சனை அடையாளம் தெரிந்தும் வைத்திருக்கிறார்கள். எனவே, நீங்கள் வெளியே உலாவுவது நல்ல தல்ல. மட்டுமின்றி, உங்களால் டிக்சனைப் பாதுகாக்கவும் முடியும் என்பது என் நம்பிக்கை!"

ராபின்சன் யோசித்தான். ஒரு வகையில் இந்த யோசனை நல்லதுதான். சில காலம், இந்தியாவிலிருந்து விலகியிருக்கவும் முடியும்.

"நான் எப்படி அந்தக் கப்பலை அடைவது?' ராபின்சன் விசாரித்தான்.

"தகுந்த ஏற்பாடு செய்திருக்கிறேன். அந்தக் கப்பல் அங்கிருந்து கிளம்புவதற்குள் மற்றொரு மீன்பிடிப் படகு உங்களை அங்கு கொண்டுபோய்ச் சேர்க்கும்."

"சரி... ஒப்புக் கொள்கிறேன்..." ராபின்சன் கூறினான்.

போலீஸ் ஜீப் ஒன்றில் ராபின்சன் ஏற்றி அனுப்பப் பட்டான். அதிலிருந்த போலீஸ்காரர்கள் வேடதாரிகள் என்பது அவனுக்கு உடனேயே விளங்கவும் செய்தது.

மீன்பிடிப் படகுகள் ஏராளமாக நிறுத்தி வைக்கப் பட்டிருந்த கரைப் பக்கமாக அந்த ஜீப் வந்து நின்றது.

இரவு பத்து மணியானபோது ராபின்சனைச் சுமந்து கொண்டு

மீன்பிடிப் படகு ஒன்று கடல்பகுதியில் விரைந்தது.

மணி பதினொன்று ஐம்பது.

அலைகளற்ற கடல் பரப்பு.

ஆகாயத்தில் நட்சத்திரங்கள், 'இதோ விழப் போகிறோம்!' என்பது மாதிரி துருத்திக் கொண்டிருந்தன. நிலா இல்லாத வானம்.

அப்போது சற்றுத் தொலைவில் சிவப்பு நிற வெளிச்சம் ஒன்று மின்னி மறைந்தது. இது, மூன்று முறை மீண்டும் மீண்டும் தொடர்ந்தது.

"அவர்கள்தான் அது!" படகோட்டி உற்சாகம் நிறைந்த குரலில் கூறினான்.

23

கப்பலிலிருந்து வெளியான சிவப்பு நிற வெளிச்சத்தை நோக்கி அந்த மீன்பிடிப்படகு விரைந்து கொண்டிருந்தது.

கடல் நீரை இரு புறமாகக் கீறிப் பிளந்து கொண்டு ஒரு பெரிய திமிங்கிலம் மாதிரி அந்தப் படகு விரைந்தது.

முன்பாக விரைந்து கொண்டிருந்த மூன்று படகுகளை பின்தள்ளிக் கொண்டு ராபின்சன் இருந்த படகு அதி வேகத்தில் விரைந்தது.

"அந்தப் படகுக்கு என்ன வேகம்!" வேடிக்கை பார்த்த வேறொரு படகுக்காரர், உடனிருந்தவரிடம் கூறினார்.

"ஒருவேளை நேவிக்காரர்கள் பயிற்சி பெறுகிறார்களோ என்னவோ?" உடனிருந்தவர் பதிலளித்தார்.

"சமீப காலமாக வெடிமருந்துகள் மற்றும் ஆயுதங்களுடன் கப்பல் ஒன்று கடலில் உலா வருவதாக ஒரு தகவலையும் கேள்விப்பட்டேன். ஒருவேளை அவர்களது படகாகக்கூட இது இருக்கலாம்" முதல் நபர், இரண்டாவது நபரிடம் கூறினார்.

ராபின்சனைச் சுமந்து கொண்டிருந்த படகு, கப்பலின் வலப்புறமாக கடல்பரப்பில் மிதந்தபடி நின்றது.

கண் மூடித் திறப்பதற்குள் கப்பலில் இருந்து வெள்ளை நிற நூலேணி ஒன்றுகடல் பரப்பை நோக்கிக் கீழிறங்கியது. சற்றும் தயங்காமல் ராபின்சன் அதன் வழியாகக் கப்பலின் மேல் தளத்தை அடைந்தான்.

அதற்குள் கப்பல் சற்று அசைந்து வடக்குத் திசை நோக்கி நின்றது.

கப்பலின் மேல் தளத்தில் நின்றிருந்த யாரோ, ராபின் சனை மேற்புறமாக உயர்த்தினர்.

“ஹலோ மிஸ்டர் ராபின்சன், உங்கள் வரவு நல்வரவு ஆகுக!” ஜான்ஸன் அவனை வரவேற்றான்.

“ஒகோ... நீங்கள்தானா!” இருட்டில் ஆளை அடையாளம் கண்டுகொள்ளச் சிரமப்பட்ட ராபின்சன் கூறினான்.

“நீங்கள் வந்ததும் நல்லதற்குத்தான். இப்போது என்னுடைய பலம் இரட்டித்து விட்டதாக நினைக்கிறேன். உங்களைப் போன்ற தைரியசாலி ஒருவர் துணை இருப்பது எவருக்குமே பலம்தான்!” என்ற ஜான்ஸன், ராபின்சனைத் தனது அறைக்கு அழைத்துச் சென்றான்.

எல்லாவிதமான சௌகரியங்களும் நிறைந்த ஒர் அறை அது.

செய்திப் பரிமாற்றத்துக்கான நவீன உபகரணங்கள் அந்த அறையில் வசதியாகப் பொருத்தப்பட்டிருந்தன.

“உங்களுக்காக நான் வசதியான அறை ஒன்றை ஏற்பாடு செய்திருக்கிறேன்!” ஜான்ஸன் கூறினான்.

“இந்தக் கப்பல் நம்பிக்கைக்கு உரியதுதானா?” ராபின் சன் கேட்டான்.

"சந்தேகமே வேண்டாம். இது உலகம் முழுவதும் பயணம் செய்யக் கூடிய சரக்குக் கப்பல்.”

“நாம் எங்கே போகிறோம்?”

“அது இன்னும் தீர்மானமாகாத விஷயம். தற்சமயம் கப்பல், அதன் திட்டப்படி அதன் பாதையில் பயணம் செய்யும். இதையெல்லாம் தீர்மானிப்பவர்கள் மேலிடத்தவர்கள். அவர்கள் தெரிவிக்கும்போது மட்டுமே அந்தத் திட்டம் நமக்குத் தெரியும். நாம் நடந்து கொள்ள வேண்டிய வழிமுறைகள் மட்டும் அவ்வப்போது வரும். திட்டமிட்டதற்கு மாறாக ஏதேனும் நடந்தால் மட்டும் நிலைமையைச் சமாளிப்பது நமது பொறுப்பு. இது வெளிப் படையாக ஒரு சரக்குக் கப்பல். இதில் ஏற்றப்படுவது எல்லாம் சட்டப்படி, நியாயமான பொருட்கள்தான். ஆனால், இதன் உரிமையாளர்கள் சர்வதேசக் கடத்தல் காரர்கள். இது அவர்களின் ஒரு சிறுபிரிவு மட்டும்தான். அதனால் நமது விருப்பங்களும், திட்டங்களும் பெரும் பாலும் இதில்

பயன்படுவது இல்லை!"

"அப்படியானால் நாம் இதிலிருந்து வெளியேறுவது அவ்வளவு சுலபமில்லையா?" ராபின்சன், சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டு கேட்டான்.

"இதன் அர்த்தம் நீங்கள் குறிப்பிட்டது அல்ல. நமது இந்த நோக்கம் முழுமையாக நிறைவேறிவிட்டால், நீங்கள் விரும்பினால் உங்கள் எதிர்காலத்தை எங்களுடன் செலவிடலாம். இல்லாவிட்டால், நீங்கள் விரும்பும் நாட்டில், பாதுகாப்பாக வாழ உங்களுக்கு ஏற்பாடு செய்து தரப்படும்."

அப்போது ஸெலினா அந்த அறைக்குள் வந்தாள். அவளிடமிருந்த டிரேயில் விஸ்கி-சோடா- வறுத்த முந்திரிப்பருப்பு ஆகியவை இருந்தன. அவற்றை அங்கிருந்த டேபிள் மீது வைத்தாள்.

"டாக்டர் சாப்பிட்டாரா?" ஜான்ஸன் கேட்டான்.

"சாப்பிட்டார்!"

"யார் அந்த டாக்டர்?" -ராபின்சன் ஆர்வத்துடன் கேட்டான்.

"நம் விஞ்ஞானியை கவனித்துக் கொள்வதற்காக மாலத்தீவிலிருந்து டாக்டர் ஒருவரை அமர்த்தியிருக்கிறோம். விஞ்ஞானியின் உயிர் நம்மைப் பொறுத்தவரை விலை மதிப்பில்லாதது அல்லவா? எனவே, அவருக்கு எந்த விதமான ஆபத்தும் ஏற்படக் கூடாது என்பதற்காகத் தான்!"

"நல்ல வேலை செய்திருக்கிறீர்கள்!" என்ற ராபின்சன், இரண்டு கிளாஸ் விஸ்கியில் சோடாவைக் கலந்தான். கப்பலில் மது அருந்தினால் எந்த எல்லைகளைப் பற்றியும் கவலைப்பட வேண்டியதில்லை.

இருவரும் அருந்தினர்.

டிக்சன் தங்கியிருந்த பங்களாவில் அப்போது ஒரே களேபரமாக இருந்தது. மயக்கம் தெளிந்த டயானா, சகோதரனைக் காணாததால் அலறிக் குரல் எழுப்பினாள். டயானாவின் கேள்விகளுக்கு எந்த அதிகாரியாலும் பதிலளிக்க முடியவில்லை.

"அவர் இப்போது எங்கிருக்கிறார்?" டயானா மறுபடியும் கேட்டாள்.

"நீங்கள் பயப்படாதீர்கள். அவர் உயிருக்கு எப்போதும் எந்த விதமான

ஆபத்தும் ஏற்படாது. அதுதான் எதிராளின் நோக்கம் என்றால், அதற்கு இவர்கள் இவ்வளவெல்லாம் செய்திருக்க வேண்டியதில்லை. எனவே, அது குறித்து நீங்கள் பயப்படாமல் இருங்கள். அவரைக் கண்டுபிடிப்பதற்கு ஒரு துறையே முழுமூச்சில் இயங்கிக் கொண்டிருக் கிறது. கெட்டிக்காரான ஒருவர், டிக்சனைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார். அப்துல் கபூர் ஆறுதல் படுத்தினார்.

“தற்சமயம் அவர் அரபிக்கடல் பகுதியில் ஏதோ ஒரு கப்பலில் இருக்கிறார் என்று மட்டும் தெரியும். கப்பல் எங்கு இருக்கிறது என்றோ, அது எங்கு செல்கிறது என்றோ இன்னும் யாருக்கும் தெரியவில்லை.”

“மேற்கொண்டு தகவல்கள்?”

“தெரியாது மேடம்!”

தனது இருக்கையிலிருந்து எழுந்த டயானா, மேற்குப் புறம் இருந்த ஜன்னலை நெருங்கினாள். பிறகு தனது சூட்கேஸைத் திறந்தாள். அதற்குள் டிரான்ஸ்மிட்டர் ஒன்று இருந்தது.

"அவரைக் கண்டுபிடிக்க முடிகிறதா என்று நான் முயற்சி செய்து பார்க்கிறேன்!” என்ற டயானா மிகச் சிறிய மைக்ரோ போன் ஒன்றை வெளியே எடுத்தாள். அதன் ஏதேதோ பட்டன்களை அழுத்தினாள்.

அதன் ஒரு மூலையில் சிவப்பு விளக்கு ஒன்று எரியத் தொடங்கியது.

“டிக்சன்!”

"ஆமாம்.”

"நீங்கள் இருப்பது எந்த இடம்?”

“தெரியவில்லை. இது ஒரு கப்பல் என்பது மட்டும் தெரிகிறது.”

"வேறெதையும் கவனிக்க முடிந்தால்...”

“முடியாது. கடலைத் தவிர எனக்கு சுற்றிலும் வேறு எதுவும் தெரியவில்லை!"

டயானா மைக்ரோ போனை ஆஃப் செய்தாள்.

டிக்சன் அரைமயக்க நிலையில் இருந்தபோதுதான் அவர் கையிலிருந்த வாட்சில் டிரான்ஸ்மிட்டர் செயல்பட்டது. அதனால், கைப்பகுதியில் அவர் ஒரு சிறு அதிர்வை உணர்ந்தார். எனினும்

அவருக்கு விஷயம் விளங்கியது. எனவே, அந்த நிலையில் தனக்குத் தெரிந்ததைச் சொன்னார்.

நேரம் இரவு பதினொன்று.

டிக்சன், தனது படுக்கையில் எழுந்து உட்கார்ந்தார்.

எதிரிலிருந்த மேஜை மீது கண்ணாடி பாட்டில் ஒன்றில் குடிதண்ணீர் வைக்கப்பட்டிருந்தது. மெதுவாக எழுந்து சென்று தண்ணீர் குடித்துவிட்டு மறுபடியும் பழைய இடத்தில் வந்து அமர்ந்தார்.

அவர்களிடமிருந்து தப்பிக்கும் ஆசை அவரிடமிருந்து எப்போதோ விடை பெற்றிருந்தது. கடலையும், கப்பலையும் அடையும்வரை அந்த ஆசை அவரிடம் இருந்தது. கடலில் முழுக்க அவர்களின் பாதுகாப்பு வளையத்துக்குள் வேறு எதை அவரால் எதிர்பார்க்க முடியும்?

யார் வந்து காப்பாற்றப் போகிறார்கள்?

யாருக்குத் தன் நிலை புரியும்? நேரம் ஊர்ந்து நகர்ந்து கொண்டிருந்தது. உறக்கம் வரவில்லை.

அவரது அறைக்கு அடுத்த அறை டாக்டருடையது என்று ஜான்ஸன் தெரிவித்திருந்தான். இந்தச் சந்தர்ப்பத்தில் டாக்டர் ஒருவர்தான் தனக்கு ஆறுதல் என்ற முடிவுக்கு வந்தார் டிக்சன். டாக்டர் சுதீரை, முதல் பார்வையிலேயே மிஸ்டர் டிக்சனுக்கு மிகவும் பிடித்துப் போனது. எனவே, அவருடன் சற்று நேரம் பேசிக் கொண்டிருக்கலாம் என்று நினைத்தார் டிக்சன். இண்டர்காம் போனைக் கையில் எடுத்தார். அந்த ஒரு தொடர்பு மட்டுமே அந்தக் கப்பலில் அவருக்கு வழங்கப்பட்டிருந்தது. புஷ்பராஜின் அறையில் இண்டர்காம் ஒலித்தது. அவர் ரிசீவரை எடுத்தார்- ஆர்வம் நிறைந்தவராக!

உடனடியாகத் தனது அறைக்கு வர முடியுமா என்று கேட்டார் டிக்சன்.

புஷ்பராஜ் அந்தக் கப்பலுக்குள் வந்ததிலிருந்து அது வரை டிக்சனைச் சந்திக்கவில்லை. ஆனால், டிக்சனின் அறை எதுவென்று அவருக்கு அடையாளம் காட்டப்பட் டிருந்தது. எனினும் அவர் அழைத்தால் மட்டுமே அந்த அறைக்குள் செல்ல வேண்டுமென்று புஷ்பராஜ் அறி வுறுத்தப்பட்டிருந்தார்.

புஷ்பராஜ் மிகுந்த மகிழ்ச்சியுடன் தனது அறையிலிருந்து வெளியேறினார்.

டிக்சனின் அறை வாசலுக்கு அவர் வந்து சேர்ந்தவுடன் கதவு

திறக்கப்பட்டது.

டிக்சன், டாக்டர் புஷ்பராஜைச் சந்தேகத்துடன் பார்த்தார்.

"நான் டாக்டர் சுதீரை எதிர்பார்த்தேன். டிக்சன் ஏமாற்றம் நிறைந்த குரலில் பேசினார்.

"அவர்தான், உங்களைக் கவனித்துக் கொள்ள என்னை அனுப்பி வைத்திருக்கிறார்.” புஷ்பராஜ் கூறினார்.

“சரி... வாருங்கள்” வழிவிட்டு ஒதுங்கி நின்றார் டிக்சன்.

உள்ளே நுழைந்ததும் புஷ்பராஜ் கதவை மூடித் தாழிட்டார்.

“டாக்டர் சுதீர்?” டிக்சன் கேட்டார்.

"அவரால் வர முடியாததால், என்னை அனுப்பி வைத்திருக்கிறார்."

“உங்கள் பெயர்?”

“டாக்டர் ஷெரீஃப். உங்கள் உடல் நிலையில் ஏதாவது பாதிப்பா?”

"அப்படி எதுவும் இல்லை. நான் அறைக்குள் தனியாக இருப்பதால் அலுப்புத் தோன்றியது. எனவே, நான் பேச முடிந்த ஒரே நபர் டாக்டர் என்பதால் டாக்டர் சுதீர் என்று நினைத்து உங்களை அழைத்து விட்டேன். சரி... நாம் இப்போது எங்கு இருக்கிறோம்?” டிக்சன் கேட்டார்.

“அரபிக்கடல் பகுதியில்.”

"நாம் எங்கே போகிறோம்?”

"உண்மையில் அந்த விஷயம் எனக்குத் தெரியாது. நானும் அதைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்.”

"அப்படியானால் என்னால் நீங்கள் இப்படியொரு நிலைமையில் சிக்கிக் கொண்டீர்கள் இல்லையா?”

"இங்கு அது ஒரு பிரச்சினையே அல்ல."

"அப்படியானால் நீங்களும் என்னைப் போல் ஒரு கைதியாகி விட்டீர்கள்!”

“இல்லை... நான் உங்களுக்காக எதைச் செய்யவும் தயாராக இருக்கிறேன். நான் இங்கு வெறும் ஒரு டாக்ட ராக மட்டும்

வரவில்லை!"

"அப்படியானால்... நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லை.” டிக்சன் சந்தேகத்துடன் இழுத்தார்.

"மிஸ்டர் டிக்சன், உங்களை இந்தக் கட்டத்தினர் கடத்திக் கொண்டு வந்திருக்கிறார்கள். எனவே, நானும் வலிய வந்து இவர்களிடம் என்னை ஒப்படைத்திருக்கிறேன். எனது நோக்கம் உங்களை விடுவித்து அழைத்துச் செல்வதுதான்!”

"சாத்தியமில்லாததைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்!” டிக்சன் விரக்தி அடைந்திருப்பது விளங்கியது.

"முயற்சி செய்வோம். நானும் இங்கிருந்து தப்பிக்க வேண்டுமல்லவா சார்?” புஷ்பராஜ் பேசினார்.

"அப்படியானால் எனது யூகம் சரிதான்." என்ற டிக்சன் தனது சுருட்டு ஒன்றை எடுத்துப் பற்ற வைத்தார்.

எதனாலோ, அந்தத் தளத்தில் உலாவிக் கொண்டிருந்த காவல்காரருக்குச் சந்தேகம் தோன்றியது. அவர் ஜான்ஸனின் அறையை நோக்கி விரைந்தார்.

24

ஜான்ஸன் அப்போதுதான் தூக்கத்துள் நழுவிக் கொண்டிருந்தான். கதவைத் தட்டும் சத்தம் கேட்டுக் கண் விழித்தான்.

‘இந்த நேரத்தில் யார் வந்திருப்பார்கள்?’ யோசனையில் ஆழ்ந்தான்.

மறுபடியும் கதவு தட்டும் சத்தம்.

அவன் எழுந்து கதவைத் திறந்தான். எதிரே காவல்காரர் துப்பாக்கியுடன் நின்று கொண்டிருந்தார்.

“என்ன?” ஜான்ஸன் கேட்டான்.

"அந்த அறைக்குள் டாக்டர் போயிருக்கிறார்!”

"பரவாயில்லை.. டாக்டரை அவர் அழைத்திருப்பார். கவலைப்பட வேண்டாம். இருந்தாலும் எச்சரிக்கையுடன் இருந்து கொள்!" என்ற ஜான்ஸன் தூக்கக் கலக்கத்துடன் அறைக்கதவை மறுபடி மூடித் தாழிட்டான்.

எந்த ஒருவரும் தனக்குத் தெரியாமல் அந்தக் கப்பலிலிருந்து வெளியேற முடியாது என்பதில் அவன் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தான்.

புஷ்பராஜுக்கு அங்கு நடந்தது எதுவும் தெரியவில்லை.

“எப்படியாவது நாம் இந்தக் கப்பலிலிருந்து தப்பிக்க வேண்டும். இல்லாவிட்டால் எனக்கு என்ன நடக்கும் என்றே எனக்குத் தெரியவில்லை. மட்டுமின்றி, எனக்கு எதிரான சூழ்நிலையில் நான் இருப்பது, அதைவிட ஆபத்தானது. அவர்கள் செய்யக் கூடாத விஷயத்தை என்னா லேயே செய்ய வைப்பார்கள்.” டிக்சன் மிகவும் உணர்ச்சி வயப்பட்டுப் பேசினார்.

"புரபசர், தாங்கள் எதற்காகவும் பயப்படத் தேவையில்லை. என்னை, நீங்கள் முற்றிலுமாக நம்பலாம்!" புஷ்பராஜ் உறுதியளித்தார்.

“உங்கள் வார்த்தையை நான் நம்புகிறேன். எனக்கு இந்த நேரத்தில் வேறு எந்த நம்பிக்கைக்கும் வழியில்லை!" என்ற டிக்சன் சுருட்டை ஆழ்ந்து இழுத்தார்.

உடனே புஷ்பராஜும் சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்ற வைத்தார்.

கப்பல் இருண்ட நீர்ப்பரப்பில் அமைதியாக நகர்ந்து கொண்டிருந்தது.

அந்தகாரம் முதிர்ந்திருந்த நிலையில் நட்சத்திரங்கள், மேகங்களுக்கு அப்பால் விலகியிருந்தன. அடிவானப் பரப்பில் மட்டும் வெள்ளி ரேகைகள் சில தென்பட்டன.

புஷ்பராஜும் டிக்சனும் அந்த அறையிலிருந்து வெளியே வந்தனர். செக்யூரிட்டிகள் அவர்களைப் பார்த்து சல்யூட் அடித்துவிட்டு ஒதுங்கினார்கள்.

“இந்தப் பகுதியில் எப்போதும், நீங்கள் இருப்பீர்கள் அல்லவா?” புஷ்பராஜ் கேட்டார்.

"இருப்போம் சார்!”

“புரபசர் ஒய்வெடுக்கட்டும். யாரும் அவரைத் தொந்தரவு செய்யாமல் பார்த்துக் கொள்ளுங்கள்."

தன்னை அவர்கள் சந்தேகப்படவில்லை என்பது புஷ்பராஜுக்கு ஆறுதல் அளித்தது. அவர் தனது அறைக்குள் சென்றார்.

சூழ்நிலை அமைதியாக இருந்தது. கப்பலின் வராந்தா மற்றும்

பாதைகளில் மங்கலான நீல நிற விளக்கு எரிந்து

கொண்டிருந்தது. செக்யூரிட்டி தனது கைக்கடிகாரத்தைப் பார்த்தார். மணி பன்னிரண்டு ஐம்பத்தைந்து.

மெதுவாகக் கொட்டாவி விட்ட செக்யூரிட்டி சுவரில் சாய்ந்து நின்றார். பிறகு கண்களை மூடினார்.

புஷ்பராஜ் தனது அறையிலிருந்து வெளியே வந்தார். செக்யூரிட்டி உறங்கத் தொடங்கியிருந்தார். அவர் மெதுவாக வராந்தாப் பாதையில் நடக்கத் தொடங்கினார்.

அது மூன்றடுக்குக் கப்பல் என்பது அவருக்கு விளங் கியது. இரண்டாவது அடுக்கில்தான் அவரது அறை. ஜான்ஸன் தங்கியிருப்பதும் இதே பகுதியில்தான்.

மேற்புற அறையில்தான் ரேடியோ டிரான்ஸ்மிட்டர் இருக்க வேண்டும். அநேகமாக அது கேப்டனின் அறையை ஒட்டியே இருக்கும்.

புஷ்பராஜ் இரும்பு ஏணி ஒன்றின் முன்பாக வந்து நின்றார்.

ஏணியில் ஏறினால் மேல்தட்டை அடையலாம். கடல் பகுதி தெரியும். வேறு ஏதாவது கப்பல்கள் அந்த வழியாகப் பயணம் செய்தால் தட்டுப்படலாம்.

ஆகாயத்தைப் பார்த்து திசையைக் கண்டுபிடிக்கலாம். ஏதாவது ஒரு நட்சத்திரக் கூட்டத்தை அடையாளம் தெரிந்து கொண்டால், அதை வைத்து திசையைக் கணிக்கலாம்.

ஏணிப்படிகளில் ஏறி மேற்புறத்துக்கு வந்தார் புஷ்பராஜ்.

அதோ அங்கும் ஒரு செக்யூரிட்டி.

அவர் சட்டென்று துப்பாக்கியை உயர்த்திக் குறி பார்த்த படி கேட்டார். "யார் நீங்கள்?”

"நான் ஒரு டாக்டர்”

அதன் பிறகு அவர் மௌனமானார்.

டாக்டர் என்ற வார்த்தை அவனுக்குள் மரியாதையை ஏற்படுத்தியது.

“என்ன டாக்டர்... உங்களுக்குத் தூக்கம் வரவில்லையா?”

"ஆமாம்... நான் கடலில் பயணம் செய்து பழக்கம் இல்லாதவன்." புஷ்பராஜ் பதில் அளித்தார்.

"அப்படியானால் கப்பல், கடல் ஆகியவை பற்றி உங்களுக்கு அவ்வளவாகத் தெரிந்திருக்காது."

"உண்மைதான். கப்பல் எந்தத் திசையில் செல்கிறது என்றுகூட எனக்குத் தெரியாது."

"திசை கண்டுபிடிக்கச் சுலபமான ஒரு வழி இருக்கிறது. இப்போது ஆகாயத்தில் தெளிவடைந்து இருப்பது ஓரியன் நட்சத்திரக் கூட்டம். அப்படியானால் கப்பல் மேற்குத் திசையில் பயணம் செய்கிறது."

"ஓகோ..."

"கடலில் வழக்கமாகப் பயணம் செய்பவர்கள் இதை யெல்லாம் வெகு சாதாரணமாகத் தெரிந்து வைத்திருப்பார்கள்."

"நீங்கள் கெட்டிக்காரர்தான்!" புஷ்பராஜ் பாராட்டினார்.

"டாக்டர், இந்த திறந்தவெளிப் பகுதியில் அதிக நேரம் நிற்காதீர்கள். ஒரு சிலருக்கு இந்தக் காற்று சரிப்படாது."

"சரி... நான் வருகிறேன்." புஷ்பராஜ் படியிறங்கித் தனது அறைக்குத் திரும்பினார்.

புஷ்பராஜ் சிந்தனையில் ஆழ்ந்தார். 'கப்பல் இதே திசையில் பயணம் செய்தால், விரைவில் ஆப்பிரிக்காவின் ஏதாவது ஒரு நாட்டுக்கோ அல்லது ஆள் நடமாட்டமற்ற ஒரு தீவுக்கோ செல்லலாம். எனவே, இந்தப் பயணத்தை முடிந்த அளவுக்குத் தவிர்க்க வேண்டும். இல்லாவிட்டால், தப்பிப்பது, டிக்சனை பத்திரமாகக் கொண்டுபோய் சேர்ப்பது உட்பட எல்லாமே பெரும் சிக்கல் ஆகிவிடும்!'

அப்போது டிக்சனின் பங்களாவில் போலீஸ் அதிகாரிகள் அமர்ந்து அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை நடத்தினர்.

ஜோஸப் மாத்யூவும் அப்துல் கபூரும் மிகுந்த கவலை யுடன் தென்பட்டனர்.

புரபசர் கப்பல் ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்டார். அந்தக் கப்பல் தற்போது கடலில் பயணம் செய்கிறது... ஆனால், அது எந்த இடம் என்பது பற்றி இதுவரை தெளிவான எந்த ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

அந்தச் சூழ்நிலையில்தான் மாலத்தீவிலிருந்து டாக்டர் சுதீரிடமிருந்து அவர்களுக்கு தொலைபேசித் தகவல் ஒன்று கிடைத்தது.

‘துப்பறிவாளர் புஷ்பராஜ், டாக்டர் ஷெரீப் என்ற பெயரில் புரபசர் டிக்சன் என்று சந்தேகப்படும் நபர் உள்ள கப்பலில் பயணம் செய்கிறார்!’ என்ற தகவல்தான் அது.

அது, அவர்களுக்கு ஓரளவுக்கு ஆறுதல் அளித்தது.

“இருந்தாலும் எதிரிகளின் கைவசம் உள்ள ஒரு கப்பலில் புஷ்பராஜ் என்கிற ஒரு தனிமனிதர் என்ன செய்ய முடியும்?” கபூர் கேட்டார்.

"அந்த விஷயத்தில் எனக்கு நல்ல நம்பிக்கை இருக்கிறது. அவர் இந்த மாதிரியான சாகசச் சூழ்நிலைகளை எத்தனையோ முறை நேரிட்டு வெற்றி கண்டுள்ளார்." ஜோஸப் மாத்யூ கூறினார்.

"அவர் நன்றாக இருப்பதாக என்னிடம் பேசினார்." டயானா தெரிவித்தாள்.

"அப்படியா... இது எப்போது நடந்தது?’ ஜோஸப் மாத்யூ விசாரித்தார்.

டயானா நடந்ததைக் கூறினாள்.

"அது இரண்டு மணி நேரத்துக்கு முன்னால்... ஆனால், இப்போதைய நிலை குறித்து யாருக்கு என்ன தெரியும்?”

“மீண்டும் ஒரு முறை டிரான்ஸ்மிட்டர் மூலம் தொடர்பு கொள்ள முயற்சி செய்யுங்கள்."

“ஏறத்தாழ நள்ளிரவு ஆகிவிட்டதே... ஒருவேளை அவர் நல்ல உறக்கத்தில் இருக்கலாம்." டயானா கூறினாள்.

“இந்தச் சூழ்நிலையில் அப்படி அவரால் உறங்க முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. ஒருவேளை புஷ்ப ராஜுடன் அவர் பேசிக் கொண்டிருக்கவும் செய்யலாம்.” கபூர் கூறினார்.

"அவர் சொல்வதுதான் சரி. எதற்கும் ஒரு முறை முயற்சி செய்து பாருங்கள்!” ஜோஸப் மாத்யூ கூறினார்.

எனவே, டயானா எழுந்து தனது அறைக்குச் சென்றாள்.

தொடர்பு கொள்வதற்காக டிரான்ஸ்மிட்டரை இயக்கினாள்.

சற்று நேரத்துக்குப் பிறகு பதில் கிடைத்தது. அந்த பதிலில் எந்த

விதமான எதிர்பார்ப்புக்கும் வழியில்லை என்று தோன்றியது. திசை தெரியாமல், கடலில் கப்பலில் பயணம் செய்வது மட்டுமே விளங்கியது. புஷ்பராஜின் விஷயத்தை அவர் தெரிவித்தது மட்டுமே சற்று ஆறுதல் அளித்தது.

“இப்போது நாம் புஷ்பராஜுடன் தொடர்புகொள்ள முடிந்தால் நல்லது!” போலீஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

“நான் டிக்சனிடம் பேசிப் பார்க்கிறேன். அவரிடம் இருப்பது மிகவும் சக்தி வாய்ந்த டிரான்ஸ்மிட்டர். எனவே, அவர் மூலம் நாம் தகவல்களை அறிய முடியும்.”

"இருக்கட்டும். அதை நாம் மிகவும் தந்திரமாகச் செய்ய வேண்டும். இப்போது அவர், புஷ்பராஜைத் தனது அறைக்கு அழைத்தால், கப்பலிலுள்ள கங்காபிரசாத்தின் ஆட்கள் சந்தேகப்படலாம்."

“அதுவும் சரிதான்!” கபூர் ஒப்புக் கொண்டார்.

தனது அறைக்குள் வந்த புஷ்பராஜ் மேற்கொண்டு என்ன செய்வது என்பது பற்றி யோசித்தார்.

கடிகாரத்தைப் பார்த்தார். மணி இரண்டு. கட்டிலில் படுத்த புஷ்பராஜ் அப்படியே கண்மூடி உறக்கத்தில் ஆழ்ந்தார்.

கதவைத் தட்டியது கேட்டுக் கண்விழித்தார் புஷ்பராஜ்.

கதவைத் திறந்தபோது ஸெலீனா காபியுடன் எதிரே நின்றிருந்தாள்.

‘குட்மார்னிங்’குடன் காபியும் வழங்கினாள். பதிலுக்கு அவரும் குட்மார்னிங் கூறினார்.

“நன்றாகத் தூங்கினீர்கள் இல்லையா? அசௌகரி யங்கள் ஏதாவது?”

“இல்லை. இந்த சௌகரியங்களே போதுமானவை!”

“சிற்றுண்டிக்கு டைனிங் ஹாலுக்கு வருகிறீர்களா அல்லது இங்கு எடுத்து வரவா?” ஸெலினா கேட்டாள்.

டைனிங் ஹாலில் சாப்பிடுவது மட்டுமல்ல, முடிந்த வரை அவர்களுக்கு மத்தியில் முகம் காட்ட வேண்டாம் என்று புஷ்பராஜ் தீர்மானித்தார். ஏதாவது ஒரு சந்தர்ப் பத்தில் தனது வேடத்தை அவர்கள் புரிந்து கொள்ளலாம். அது ஆபத்தை வலிய வரவழைப்பது போலாகிவிடும் என்று அவர் நினைத்ததே அதற்குக் காரணம்.

சற்று நேரத்துக்குப் பிறகு சிற்றுண்டியுடன் வந்தாள்.

“ஸெலீனா... நல்ல பெயர்தான்!”

"உங்களுக்குப் பிடித்திருந்தால் அந்தப் பெயரிலேயே என்னை அழைக்கலாம்." அவள் பேசினாள்.

“ஸெலினா, நீங்கள் இந்தக் கப்பலில் எவ்வளவு நாட்களாக வேலை செய்கிறீர்கள்? சாப்பிட்டவாறே புஷ்ப ராஜ் கேட்டார்.

“அதெல்லாம் இங்கு தேவையில்லாத விஷயங்கள். நாம் வேறு எதைப் பற்றியாவது பேசலாமே! அவள் வெடுக் கென்று பேசினாள்.

"நான் அப்படி நினைக்கவில்லை. நாம் எங்கே போகிறோம் என்று தெரியவில்லை. இங்கு எவரும் எதையும் வாய் திறந்து பேசுவதில்லை. இதுதான் சூழ்நிலை என்று தெரிந்திருந்தால், நான் இந்த வேலையையே ஒப்புக் கொண்டிருக்க மாட்டேன்!” புஷ்பராஜ் நெற்றியைச் சுளித்தபடி பேசினார்.

“என்ன செய்வது? கரைப்பகுதி என்றால் ஏதாவது வழி தேடலாம். இந்த நடுக்கடலில் நம்மால் என்ன செய்ய முடியும்?” அவள் இயலாமையுடன் பதிலளித்தாள்.

அந்தக் கப்பல் பயணம் அவளுக்கும் விருப்பம் இல்லாத ஒன்று என்பது விளங்கியது. எனவே, முயன்றால் இவளைத் தன் பக்கம் திருப்பலாம் என்று புஷ்பராஜ் ஒரு தீர்மானத்துக்கு வந்தார்.

மதியச் சாப்பாட்டுக்குப் பிறகு புஷ்பராஜ் சற்று நேரம் ஓய்வு எடுத்தார்.

இரண்டு மணி சுமாருக்கு புஷ்பராஜ், டிக்சனின் அறைக்குச் சென்றார்.

அவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்தபோது டிக்சனின் கடிகாரம் “பீப். பீப்” என்று குரல் கொடுத்தது.

டிக்சன் தனது கடிகாரத்தைக் காதருகே கொண்டு சென்றார்.

25

டிக்சன் கடிகாரத்தின் சில பட்டன்களை அழுத்தியபின் கேட்டார். "யார் டயானாதானே இது!”

"ஆமாம்... நான்தான் இப்போது நீங்கள் எங்கு இருக்கிறீர்கள்?”

“தெரியவில்லை. கப்பல் ஒடிக் கொண்டிருப்பது மட்டும் தெரிகிறது."

"சரி... விசாரிக்கிறோம்.’’ என்ற டயானா டிரான்ஸ் மிட்டரை அணைத்தாள்.

"புதுத் தகவல் ஏதாவது?” ஜோஸப் மாத்யூ கேட்டார்.

“இல்லை... அதே பழைய நிலைமைதான்!”

என்ன ஒரு சிக்கலான நிலைமை இது. ‘ஒரு கப்பலில் அவர் பயணம் செய்கிறார். அது எந்தக் கப்பல், எந்தத் திசையில் பயணம் செய்கிறது? யாரெல்லாம் அவருடன் இருக்கிறார்கள்?” என்று எதுவுமே தெரியவில்லை.

கூடவே மற்றொரு செய்தியும் அவர்களது படபடப்பை அதிகப்படுத்தியது. ‘வெடிபொருட்கள் நிறைந்த கப்பல் ஒன்று அரபிக்கடல் பகுதியில் பயணம் செய்து கொண்டிருக்கிறது!” என்ற பத்திரிகைச் செய்திதான் அது. ஒரு வேளை அந்தக் கப்பலில் டிக்சன் சிறை வைக்கப்பட்டிருப்பாரோ?

அப்படி ஏதாவது நடந்திருந்தால் டிக்சனுடன் புஷ்ப ராஜின் உயிருக்கும் ஆபத்துக் காத்திருக்கிறது. உடனடியாக இதற்குப் பரிகாரம் காண முடியாவிட்டால் எல்லாமே தாறுமாறாகிவிடும்.

அப்போது அந்தக் கப்பல் அரபிக்கடலில் மேற்கு நோக்கி விரைவாகப் பயணம் செய்து கொண்டிருந்தது. நேரம் இரவு எட்டு மணி ஆகாயத்தில் நட்சத்திரங்கள் தெளிவாகத் தெரிந்தன. கிழக்குத் திசையில் நிலா, கடலின் அரைவட்டப் பரப்பில் தலையுயர்த்தி எழும்பியது. சன்ன மான அலைகளில் தங்கத்தை வார்த்து ஊற்றி விட்டிருப்பது போல் கடல் நீர் அங்கங்கே பளளத்தது. மேற்குத் திசையில் கடலின் அடிவானப் பரப்பில் கப்பல் ஒன்று நகர்ந்து கொண்டிருந்தது.

இரவுச் சாப்பாட்டுக்குப் பிறகு புஷ்பராஜ் அறைக்கு வெளியே வந்தார்.

அப்போது அவர் இரவு உணவு அருந்தியது அந்தக் கப்பலின் கேப்டனுடன்தான். அன்று அப்படியொரு சூழல் அமைந்தது.

கேப்டனுக்குத் தாங்க முடியாத வயிற்றுவலி. அவர் கைவசம் வைத்திருந்த எல்லா மருந்து மாத்திரைகளையும் பயன்படுத்திப் பார்த்தார். ம்ஹூம்... எந்த ஒரு பயனு மில்லை.

அப்போதுதான் புரபசர் டிக்சனுக்காக நியமிக்கப்பட் டுள்ள டாக்டரின் நினைவு கேப்டனுக்கு வந்தது.

உடனே கேப்டன், புஷ்பராஜின் அறைக்கு விரைந்தார். கேப்டன் அவருடன் பேசினார்.

டாக்டர் சுதீரின் பட்டியல்படி, புஷ்பராஜ் மருந்து ஒன்றைக் கலக்கி கேப்டனுக்குக் கொடுத்தார் புஷ்பராஜ்.

அந்த மருந்து கேப்டனின் வயிற்று வலியை அரை மணி நேரத்துக்குள் அகற்றியது. அதற்கு நன்றி தெரிவிக்கும் விதமாகவே கேப்டன், புஷ்பராஜைத் தன்னுடன் உணவருந்த அழைத்தார்.

“உங்களுக்கு ஆட்சேபனை இல்லையென்றால், நாம் . கப்பலின் மேற்புற டெக்கில் காற்றாட அமர்ந்து பேசலாமே. கேப்டன் அழைப்பு விடுத்தார்.

இருவரும் மேல் தளத்துக்கு வந்து சேர்ந்தனர். அங்கும் இயந்திரத்துப்பாக்கி ஏந்திய செக்யூரிட்டி ஒருவர் இருந்தார். கேப்டனைப் பார்த்ததும் அந்த செக்யூரிட்டி சல்யூட் அடித்தார்.

அந்த செக்யூரிட்டி தன்னை அடையாளம் தெரிந்து கொள்ளட்டும் என்பதற்காக சற்று நேரம் அங்கு நின்று லைட்டரால் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்தார்.

"இவர்தான் தற்போதைய நம் டாக்டர். மிஸ்டர் ஷெரீப்!” கேப்டன், செக்யூரிட்டியிடம் அறிமுகப்படுத் தினார். செக்யூரிட்டி புஷ்பராஜுக்கும் சல்யூட் அடித்தார்.

புஷ்பராஜ் அங்கிருந்தபடி சுற்றுமுற்றும் பார்த்தார்.

சுற்றிலும் ஒரே நீர்ப்பரப்பு. ஆகாயத்தில் நட்சத்திரங்களும் நிலாவும். அவற்றில் சில கடலில் உதிர்ந்து கிடப்பதைப் போல் தண்ணீரில் பிரதிபலித்தன.

“இந்தக் கப்பல் எங்கே போகிறது கேப்டன்?” புஷ்ப ராஜ் இயல்பான குரலில் கேட்டார்.

"பயங்கரமான ஒரு கேள்வி இது! கேப்டன் மர்மமான முறையில் பதிலளித்தார்.

"கேப்டனான நீங்கள், இன்ன இடத்துக்கு என்று தெரியாமலா கப்பலைச் செலுத்துகிறீர்கள்?”

"உண்மைதான். எனக்கு இது எங்கே போகிறது என்று தெரிந்திருக்க வேண்டும். ஆனால், எனக்குத் தெரியாது. கப்பல் பயணமாகிறது... அவ்வளவுதான். நீங்கள் இப்படிக் கேட்கக் காரணம்?"

"நான், எனது சூழ்நிலையைக் குறித்து யோசித்ததால் கேட்டேன். உண்மையைச் சொன்னால், இது ஒரு நீண்ட பயணமாக இருக்குமென்று எனக்குத் தெரியாது. நான் மிகவும் பரபரப்புடன் செயல்படும் ஒரு பேர்வழி. என் நண்பர் கேட்டுக் கொண்டதால்தான் இந்த வேலையை ஏற்றுக் கொண்டேன்."

"இதில் நீங்கள் பயப்படவோ, குழப்பம் கொள்ளவோ எதுவுமில்லையே?"

கேள்வி கேட்ட கேப்டனை புஷ்பராஜ் ஏறிட்டுப் பார்த்தார்.

நல்ல உயரமும் அதற்கேற்ற உடல்வாகும் கொண்டவர் கேப்டன். இயல்பிலேயே கட்டளை பிறப்பிக்கும் கண்கள் கொண்டவர். அந்தக் கப்பல் அவரது கட்டளைப்படிதான் இயங்க வேண்டும். ஆனால், இங்கு நிலைமை அப்படி அல்ல. அப்படியானால், வேறு ஏதோ சக்தி ஒன்று அவரையும் இந்தக் கப்பலையும் இயக்குகிறது என்று பொருள்.

"உண்மைதான்! எனது ஒவ்வொரு நாளைக்கும் நியாயமான ஊதியம் கிடைக்கும் என்பதிலும் எனக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை. எனினும், இதற்குள் நான் ஒரு கைதியாக இருப்பதாக என் மனம் சொல்கிறது கேப்டன்!"

"பொதுவாகக் கப்பல் பயணமே அப்படிப்பட்ட ஒன்றுதான். இது ஏதாவது ஒரு கரையை நெருங்குவது வரை நாமெல்லாரும் ஒரு வகையில் கைதிகள்தான். இது மனிதர்களுக்கு இயல்பாக ஏற்படும் ஓர் உணர்வுதான்!" கேப்டன் கூறினார்.

அப்போது கிழக்குத் திசையிலிருந்து வெளிச்சம் ஒன்று அவர்களை நோக்கி வருவதை கவனித்தனர்.

"சற்று நேரம் நீங்கள் இங்கேயே இருங்கள்... நான் உடனேயே வருகிறேன்." கேப்டன் கீழ்த்தளத்தை நோக்கி ஓடினார்.

விஷயம் என்னவென்று விளங்காததால் கேப்டன் சென்ற வழியையே பார்த்துக் கொண்டு நின்றார் புஷ்ப ராஜ்.

கேப்டன் நேராக ஜான்ஸனின் அறைக்கு சென்றார்.

ஜான்ஸன் அப்போது ரேடியோ டிரான்ஸ்மிட்டரைப் பயன்படுத்தி

எவருடனோ பேசிக் கொண்டிருந்தான்.

கதவைக் கூடத் தட்டாமல், நேராகத் திறந்து கொண்டு அறைக்குள் நுழைந்திருந்தார் கேப்டன். அதைப் பார்த்த ஜான்ஸன் திகைப்பு அடைந்தான்.

“என்ன கேப்டன்?” விசாரித்தான்.

"மோட்டார் படகு ஒன்று நமது கப்பலை நோக்கி வருகிறது.”

"அப்படியானால் நாம் நமது ரேடியோ அறைக்குச் செல்லலாம்."

இருவரும் அந்த அறையிலிருந்து வெளியேறினர்.

இருவரின் முகத்திலும் ஏதோ ஓர் எதிர்பார்ப்பு பளிச் சிட்டது. அந்தப் பயணத்தில் இப்போதுதான் முதன்முறையாக இப்படியொரு சம்பவம் நடைபெறுகிறது. இதுவரை யாரும் அவர்களைக் கவனித்ததாகத் தெரியவில்லை. முதன்முறையாகப் படகு ஒன்று சந்தேகத்துடன் அவர்களை நெருங்குகிறது.

வானொலி மூலமாக அந்த மோட்டார் படகுடன் தொடர்பு கொள்ள கேப்டன் முயற்சி செய்தார்.

ஜான்ஸனின் தலைமையகம் அனுப்பியுள்ள படகாக அது இருக்கக் கூடுமோ என்பது அவர்களின் மற்றொரு சந்தேகமாக இருந்தது. அதற்காகவே வானொலி மூலம் தொடர்புகொள்ள முயற்சி செய்தனர். அந்த அறையில் நவீனமான எல்லா வசதிகளும் இருந்தன.

கேப்டன் ரிச்சர்டு எவ்வளவோ முயன்றும், அதில் அவரால் வெற்றி பெற முடியவில்லை. அப்படியானால் அது அந்நியரின் படகு என்பது ஊர்ஜிதம் ஆகிறது.

உடனே அந்தப் படகைச் சுட்டுத்தள்ள கேப்டன் உத்தரவிட்டார்.

அடுத்த ஒரு சில நிமிடங்களுக்குள் ஆயுதம் தாங்கிய ஐந்து செக்யூரிட்டிகள் கப்பலின் மேல்தளத்துக்கு விரைந்து வந்தனர்.

அவர்கள் புஷ்பராஜ் நின்றிருந்த இடத்தை அடைந்து அணிவகுத்து நின்றனர். பாய்மரத்தண்டின் ஈகிள்ஸ் நெஸ்ட்டில் காவலிருந்த செக்யூரிட்டியுடன் அவர்கள் ஏதேதோ வார்த்தைகளைப் பரிமாறிக் கொண்டனர். புஷ்பராஜுக்கு அவை எதுவும் புரியவில்லை.

அந்தப் படகின் பச்சை மற்றும் சிவப்பு நிற வெளிச்சம் மிக விரைவாகக் கப்பலை நெருங்கிக் கொண்டிருந்தன.

செக்யூரிட்டிகள் அனைவரும் அதையே குறி பார்த்தபடி தயாராக நின்று கொண்டிருந்தனர். அவர்களிடமுள்ள இயந்திரத்துப்பாக்கியின் சுடும் எல்லைக்குள் வருவது வரை அவர்கள் காத்திருப்பதாகத் தோன்றியது. அது புஷ்ப ராஜுக்கும் விளங்கியது.

புஷ்பராஜ் ஒரு தடவை திரும்பிப் பார்ப்பதற்குள், அங்கிருந்த செக்யூரிட்டிகளின் கைகளில் இருந்த இயந்திரத் துப்பாக்கிகள் மொத்தமும் குண்டுகளைக் கடலை நோக்கி உமிழத் தொடங்கின. கண் மூடித் திறப்பதற்குள் அந்தப் படகில் தென்பட்ட விளக்குகள் மொத்தமும் அணைந்தன. அதைவிட ஆச்சரியம் அடுத்த ஒரு சில விநாடிகளுக்குள் அந்தப்படகு வெடித்துத் தெறிக்கவும் செய்தது.

அதன் பிறகு அங்கு ஒரு வித அமைதி நிலவியது.

அதுவரை துப்பாக்கியைப் பயன்படுத்திய செக்யூரிட்டிகள் எதுவும் நடக்காதது போல் அங்கிருந்து விரைவாக நடந்து மறையவும் செய்தனர்.

புஷ்பராஜுக்கு அதன் மூலம் ஒரு விஷயம் தெளிவாக விளங்கியது. அந்தக் கப்பலுக்குள் யாராவது அத்துமீறி நுழைய முற்பட்டால், விளைவு எப்படி இருக்கும் என்பது நிரூபணம் ஆகியிருக்கிறது.

"சார்...” பின்புறத்திலிருந்து யாரோ அழைத்தனர்.

புஷ்பராஜ் திரும்பிப் பார்த்தார்.

செக்யூரிட்டி ஒருவர் நின்று கொண்டிருந்தார்.

“என்ன... என்ன வேண்டும்?” புஷ்பராஜ் கேட்டார்.

“உங்களை அழைத்து வரச் சொன்னார்கள்!” செக்யூரிட்டி தெரிவித்தார்.

புஷ்பராஜ் அவரைப் பின்தொடர்ந்தார்.

டிக்சனின் அறைக் கதவை நெருங்கியதும் செக்யூரிட்டி நின்று விட்டார்.

வாசலில் டிக்சன் நின்று கொண்டிருந்தார்.

“உள்ளே வந்து உட்காருங்கள்!”

புஷ்பராஜ் உள்ளே வந்தார்.

டிக்சன் கதவை மூடிவிட்டு வந்தார்.

“எனக்கு மிகவும் அலுப்பாக இருந்ததால், சற்று நேரம் உங்களுடன் பேசிக் கொண்டு இருக்கலாமே என்றுதான் அழைத்தேன்." டிக்சன் பேசத் தொடங்கினார்.

"நானும் அதே நிலைமையில்தான் இருக்கிறேன்... சொல்லுங்கள். புஷ்பராஜ் அவரை உற்சாகப் படுத்தினார்.

“ஏதோ துப்பாக்கி சுடும் சத்தம் கேட்டதே!”

புஷ்பராஜ் நடந்ததை விவரித்தார்.

"அப்படி ஏதாவதுதான் நடந்திருக்கும் என்று நானும் சந்தேகப்பட்டேன்."

"நான் ஒரு வழி கண்டுபிடித்திருக்கிறேன்."

“என்ன வழி?”

"கேப்டனுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது!” புஷ்பராஜ் கூறினார்.

"அப்படியா! கேப்டனால் நமக்கு எந்த அளவுக்கு உதவ முடியும்?” டிக்சன் கேட்டார்.

“அதற்கெல்லாம் வழி இருக்கிறது. அவர் நமது பக்கம் சேருவார். அதில் எனக்கு எந்த விதமான சந்தேகமும் கிடையாது!’

அப்போது அந்த அறையின் கதவு வெளிப்புறத்திலிருந்து தட்டப்பட்டது.

26

புஷ்பராஜ் எழுந்து கதவைத் திறந்தார். செக்யூரிட்டி ஒருவர் வாசலருகே நின்றிருந்தார்.

“கேப்டன், உங்களை அழைத்து வரச் சொன்னார்." வந்தவர் தெரிவித்தார்.

டிக்சனிடம் விடை பெற்ற புஷ்பராஜ் அவரைப் பின் தொடர்ந்தார்.

அவர்கள் கேப்டனின் அறையை அடைந்தனர்.

கேப்டன், புஷ்பராஜை வரவேற்றார்.

“என்ன கேப்டன்?” புஷ்பராஜ் கேட்டார்.

“முதலில் உட்காருங்கள்!” கேப்டன் அருகிலிருந்த நாற்காலி ஒன்றைச் சுட்டிக் காட்டினார்.

“ம்... சொல்லுங்கள்!"

“வயிற்று வலிதான் விஷயம். சாதாரணமாகக் கப்பலில் பயணம் செய்யும்போது இது மாதிரியெல்லாம் இதுவரை ஏற்பட்டது இல்லை. சாப்பாடு போன்ற விஷயத்தில் மிகவும் ஒழுங்கு முறையைக் கடைப்பிடிப்பவன் நான்."

“நீங்கள் சொல்வதெல்லாம் சரிதான். பருவகால மாற்றங்களாலும் இது போன்ற சிறிய வயிற்றுவலி ஏற்படலாம்."

புஷ்பராஜின் வார்த்தைகள் அவருக்கு மிகுந்த ஆறுதல் அளித்தன. தனக்கு ஏதோ ஒரு தீராத வியாதி ஏற்பட்ட தாக அவர் கருதியிருந்தார்.

“உங்களது வயிற்றுவலி பயப்பட வேண்டிய ஒன்றல்ல. இதற்கு ஒரே ஒரு மாத்திரை போதும்!” என்ற புஷ்பராஜ் தனது அறையை நோக்கி நடந்தார்.

கேப்டன் அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்.

“இதுதான் அதற்கு உரியது. இப்போதே போட்டுக் கொள்ளுங்கள்."

புஷ்பராஜ் அங்கிருந்து கிளம்ப முற்பட்டார்.

“அந்தக் கைதி எப்படி இருக்கிறார்?’ கேப்டன் கேட்டார்.

“எந்தக் கைதி?”

"உடல்நலமில்லாத அந்தப் பெரியவர்தான். அவர்தான் தற்போதைய நிலைமைக்குக் காரணம். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வீட்டுக்குச் சென்று குழந்தைகளைப் பார்த்து வருபவன் நான். இந்த முறை அந்த வழக்கம் தள்ளிப் போய்விட்டது. இனி எப்போது அவர்களைச் சந்திக்க முடியும் என்று தெரியவில்லை!” கேப்டன் ஏமாற்றம் நிறைந்த குரலில் பேசினார்.

“முடிவு தெரியாத பயணம் என்றால் கவலைக்கு உரியதுதான்!”

“அவரை எங்கே கொண்டு போவது என்று தீர்மான மாகிவிட்டால்

என் கவலை தீர்ந்தது. அது நிச்சயமாகாதது தான் விஷயம்."

“ஒரு வகையில் இப்போது நீங்களும் ஒரு கைதிதான்." புஷ்பராஜ் நெற்றியைச் சுளித்தபடி பேசினார்.

‘டிக்சன் ஒருவருக்காக அந்தக் கப்பலில் உள்ளவர்கள் அனைவரும் நிச்சயம் இல்லாமல் அலைய வேண்டி உள்ளது. அவர் எங்கேயெல்லாம் கொண்டு போகப்படுகிறாரோ, அங்கெல்லாம் மற்றவர்களும் நிர்ப்பந்தமாகப் பயணம் செய்ய வேண்டும்.

யாரோ ஒருவர் எல்லோரையும் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறார். புஷ்பராஜ் யோசனையில் ஆழ்ந்தார்.

“சரி... நான் கிளம்பட்டுமா?”

"கிளம்புங்கள். தேவைப்படும்போது தகவல் தெரிவிக்கிறேன்."

“இண்டர்காமில் அழைத்தால், நானே வந்துவிடுகிறேன். அதுதான் முறை!” புஷ்பராஜ் அங்கிருந்து கிளம்பினார்.

மறு நாள் இரவு. பத்து மணி.

புஷ்பராஜ் மேற்புறத் தளத்துக்குப் போக விரும்பினார். காற்று வாங்கலாம். கடல் பார்க்கலாம். ஆகாயத்தை வேடிக்கை காணலாம். நட்சத்திரங்களையும், தங்கம் உருக்கியது போன்ற கடல்நீரையும் காணலாம்.

புஷ்பராஜ் மேல்தளத்தை அடைந்தார். அங்கிருந்த செக்யூரிட்டி சட்டென்று திரும்பிப் பார்த்தார்.

அவருக்கு சல்யூட் செய்தார் செக்யூரிட்டி.

"கடல் அமைதியாக இருக்கிறது!” புஷ்பராஜ் கூறினார்.

"ஆமாம் சார்... நேற்றிருந்த நிலையைவிட இன்று அமைதி அதிகம்தான்."

அந்த செக்யூரிட்டி ஏற்கெனவே பழக்கமானவர்தான்.

புஷ்பராஜ் தனது பாக்கெட்டிலிருந்து சிகரெட்டை எடுத்து, செக்யூரிட்டிக்கும் ஒன்று கொடுத்தார்.

இருவரும் பற்ற வைத்துக் கொண்டனர்.

“நமது பயணப் பாதையில் தீவுகள் ஏதாவது தட்டுப் படுமா?” புஷ்பராஜ் கேட்டார்.

"தட்டுப்படும். ஆனால், கப்பல் அவற்றை நெருங்குமா என்பது சந்தேகம்தான்."

“ஏன்?”

"நாம் ஒருவேளை மடகாஸ்கர் தீவில் கரையொதுங்கலாம். அங்கிருந்து எரிபொருள் மற்றும், கப்பலுக்குத் தேவையான பொருட்களைச் சேகரிக்கலாம்."

“இது மட்டும் உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"வரும்போது கப்பல் அங்கு நின்றுதான் கிளம்பியது."

“உங்கள் யூகம் நியாயம்தான்!”

அதன் பிறகு புஷ்பராஜ் சற்று நேரம் அங்கு நின்று வேடிக்கை பார்த்த பின் கீழ்ப்புறமாக இறங்கினார்.

வராந்தா வழியாக நடந்தபோது எதிரில் யாரோ வருவதைக் கவனித்தார். ‘தனக்கு நன்கு பழக்கமான ஒர் உருவம் அது என்று சட்டென்று அவருக்குள் ஒரு பொறி தட்டியது.

அந்த மனிதன் அவரை நெருங்கினான்.

அதற்குள் புஷ்பராஜ் அந்த மனிதனை அடையாளம் தெரிந்து கொண்டார். 'ராபின்சன்! புஷ்பராஜ் வியப்பு அடைந்தார்.

அந்தக் கப்பலுக்குள் வந்த பிறகு இப்போதுதான் அவனை முதன்முறையாகப் பார்க்கிறார் புஷ்பராஜ். ‘அவன் அந்தக் கப்பலில் இருக்கிறானோ!" என்ற அவரது சந்தேகம் இப்போது தெளிவாகியிருக்கிறது.

அவன் கப்பலுக்குள் இருப்பதுவரை தனக்கு ஒரு சவால்தான் என்று புஷ்பராஜுக்குத் தோன்றியது.

“யார்... டாக்டர் ஷெரீப்தானே?” மிக நெருங்கி வந்ததும் அவன் கேட்டான்.

"ஆமாம்!”

“எங்கிருந்து வருகிறீர்கள்? அவன் குரலில் கட்டளைத் தொனி

ஒலித்தது.

"மேல்தளத்திலிருந்து வருகிறேன்."

“தவறில்லாத வேலைதான். டாக்டர் உங்களை நீண்ட நாளாகச் சந்திக்க வேண்டுமென்று நினைத்தேன். இன்று தான் அதுவும் இயல்பாகச் சாத்தியமானது. என்னுடன் ஒரு பெக் வாஸ்கி சாப்பிட வருகிறீர்களா?”

"தாராளமாக... அதற்கு என்ன?” புஷ்பராஜ் ஒப்புக் கொண்டார்.

அவன் இடப்புறமாகத் திரும்பினான். அந்தப் பகுதியில் இரண்டாவது அறை அவனுடையது.

அவன் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தான்.

அங்கிருந்த அலமாரியைத் திறந்து ‘ஷிவாஸ் ரீகல்’ விஸ்கி பாட்டில் ஒன்றை எடுத்து மேஜை மீது வைத்தான்.

அதைத் தொடர்ந்து கிளாஸ்கள், முந்திரிப் பருப்பு, ஐஸ், சோடா என்று எல்லாம் வரிசையாக அணிவகுத்தன மேஜை மீது.

“வறுத்த முந்திரிப் பருப்பு உங்களுக்கு மிகவும் பிடிக்கும் என்று எனக்குத் தெரியும்."

"உண்மைதான்... அது எப்படி உங்களுக்குத் தெரியும்!” புஷ்பராஜ் வியப்புடன் கேட்டார்.

அவன் அந்தக் கேள்வியையே கவனிக்காதவன் போல் கிளாஸ்களில் விஸ்கியைப் பகர்ந்தான்.

“எனக்கு உங்களை நன்றாகத் தெரியும். காரணம் நாம் இருவரும் ஒரே மாதிரியான இயல்பு கொண்டவர்கள். ஆனால், துரதிர்ஷ்டவசமாக எதிரெதிர் துருவங்களாகச் செயல்படுகிறோம். எனவே, நாம் பரஸ்பரம் தெரிந்து கொள்ளாமல் இருந்தால் அது முட்டாள்தனம்.” ராபின்சன் சிரித்தபடி பேசினான்.

“நீங்கள் என்னை அடையாளம் தெரிந்து கொண்டீர்கள்!”

"ஆமாம். நீங்கள் இந்தக் கப்பலுக்குள் இருப்பீர்கள் என்று நான் யூகித்தேன். நேற்றிரவு உங்களை நான் மேல்தட்டில் பார்க்கவும் செய்தேன். நாம் அங்கு முதல் முறையாகச் சந்திக்க வேண்டாம் என்பதற்காக நானாகவே ஒதுங்கிச் சென்றேன்?” என்ற ராபின்சன் கிளாஸ் ஒன்றை அவரிடம் எடுத்துக் கொடுத்துவிட்டு மற்றொன்றை

எடுத்துக் கொண்டான்.

இருவரும் சியர்ஸ் சொன்ன பிறகு ஆளுக்கு ஒரு தடவை உறிஞ்சிவிட்டு விஸ்கி டம்பளரை மேஜை மேல் வைத்தனர்.

"முக்கியமான ஒரு விஷயம்." அவன் பேசத் தொடங்கினான்: "இந்தக் கப்பலில் நடுக்கடலில் நமக்கு இடையே எந்த விதமான விரோதமும் வேண்டாம். நாம் இருவரும் ஒரே மாதிரிதான். எனக்கு இங்கு பலம் அதிகம். நீங்கள், யாரைக் காப்பாற்றிக் கொண்டு போக விரும்புகிறீர்களோ, அவரை அதே மாதிரிக் காப்பாற்றிக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டியது என் கடமை. இந்தக் கப்பலில் எவரும் எனக்கு விரோதமாகச் செயல்பட முடியாது- கேப்டன் உட்பட, ஏனெனில், எல்லோருக்கும் அவரவர் உயிர் மீது பயம் உண்டு" என்ற ராபின்சன் தனது கிளாஸைக் காலி செய்தான் ஒரே மூச்சில்!

"அப்படியா!" புஷ்பராஜ் கேட்டார்.

"அதுதான் உண்மை. டிக்சன் லட்சிய இடத்தை அடைந்ததும் நான் உரிய ஊதியம் பெற்றுக் கொண்டு பத்திரமாகி விடுவேன். அதுவரை இதையெல்லாம் இயக்கி நடத்துவது நம் கண்களுக்குத் தெரியாத ஏதோ ஒரு சக்தி. எனவே, நாம் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் கொன்று கொள்வதில் அர்த்தம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை!"

புஷ்பராஜ் அவனை ஊன்றிப் பார்த்தார். உண்மை தான். அவன் சொன்னதில் எந்த விதமான தவறும் இல்லை. மட்டுமின்றி, அவனுக்குக் கொஞ்சம் கூட பயமே இல்லை.

"அதாவது நீங்கள் என்னை மற்றவர்களிடம் காட்டிக் கொடுக்க மாட்டேன் என்று சொல்கிறீர்கள்... இல்லையா?" புஷ்பராஜ் கேட்டார்.

"இந்தச் செயலை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருப்பவன் நான். அதன் முழுப்பலனும் எனக்குத் தான். எனவே, தற்சமயம் நான் இதைப் பற்றித் தீர்மானித்தால் போதும்." சொல்லிவிட்டு சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துச் சிரித்தான் ராபின்சன்.

புஷ்பராஜுக்கு ஒரு விஷயம் தெளிவாக விளங்கியது. தான் இதுவரை சந்தேகித்த, கண்ணுக்குத் தெரியாத சக்தி இந்த ராபின்சன்தான். கங்காபிரசாத் இந்த ஒரு தனி மனிதனிடம் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார் என்பது புஷ்பராஜுக்கு வியப்பு அளிக்கவே செய்தது.

"மிஸ்டர் புஷ்பராஜ், உங்களை நான் உங்களின் உண்மையான பெயரிலேயே இப்போது அழைக்க விரும்பு கிறேன். நமக்குள் இங்கு எந்த ஒரு விரோதமும் தேவையில்லை. நீங்கள் எனக்கு எந்த விதமான தொல்லையும் தராமல் இருந்தால் நானே உங்களுக்கு, என்னுடைய ஊதியத்தில் இருந்து ஒரு பெரும் தொகையைத் தருகிறேன். அந்த விஷயத்தில் நான் ஒரு போதும் கஞ்சன் இல்லை என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். ம்... சாப்பிடுங்கள்!"

ராபின்சன் மீண்டும் கிளாஸை நிறைக்க முற்பட்ட போது புஷ்பராஜ் தடுத்தார்.

"இன்னும் ஒரு ரவுண்டு?" ராபின்சன் கேட்கவும் செய்தான்.

"எனக்கு இதில் ஆர்வம் அதிகமில்லை" புஷ்பராஜ் கூறினார்.

ராபின்சன் திருப்தி ஏற்படும் அளவுக்குக் குடித்தான்.

இறுதியில் பரஸ்பரம் 'குட் நைட்' சொல்லிப் பிரிந்தனர்.

மறுநாள் மதிய நேரத்தில் கப்பல் அசைவற்று நின்றிருப்பதாக புஷ்பராஜ் உணர்ந்தார்... அவர் மேல் தளத்துக்கு விரைந்தார். உண்மைதான்... கப்பல் சுத்தமாக நின்று விட்டிருந்தது!

"என்ன நடந்தது?" அருகில் நின்றிருந்த செக்யூரிட்டியிடம் கேட்டார்.

"தெரியவில்லை சார்... நேற்றிரவு முதல் கப்பலின் வேகம் குறையத் தொடங்கி, இப்போது சுத்தமாக நின்று விட்டது." செக்யூரிட்டி பதிலளித்தார்.

கப்பல் எந்தத் திசையில் பயணம் செய்ய வேண்டும் என்கிற திட்டமான கட்டளை கிடைக்கவில்லை என்று புஷ்பராஜூக்கு விளங்கியது.

கேப்டனிடம் பேசிப் பார்க்கலாம் என்ற நோக்கத்தில், அவரது கேபின் பக்கமாகச் சென்றார்.

அவர் புஷ்பராஜை வரவேற்றார். ராபின்சன், கேப்டனிடம் தன்னைப் பற்றி எதுவும் எச்சரிக்கவில்லை என்று விளங்கியது.

"கப்பல் ஏன் நின்றுவிட்டது கேப்டன்?"

"நேற்றிரவு கிடைத்த கட்டளையை ஒட்டித்தான்!"

"அப்படியானால் மறு உத்தரவு வரும்வரை நாம் இப்படியே கிடக்க

வேண்டியதுதானா?”

"ஆமாம்... ஆனால், இரண்டு மாத காலத்துக்குத் தேவையான உணவுப் பொருள் நம் கைவசம் உள்ளது.”

"அப்படியா!”

அப்போது கேப்டனின் அறையில் இருந்த டிரான்ஸ் மிட்டர் ‘பீப்... பீப்’ என்று ஒலியெழுப்பியது.

புஷ்பராஜ் திரும்பிப் பார்த்தார். சிவப்பு நிற விளக்கு ஒன்று மின்னி மறைந்து மின்னியது.

கேப்டன் அதை நெருங்கினார்.

27

கேப்டன், புஷ்பராஜை ஒரு முறை பார்த்தார்.

‘நான் வெளியேறட்டுமா?’ என்று சைகையால் கேட்டார் புஷ்பராஜ்.

‘வேண்டாம்... உட்காருங்கள்!’ என்று பதிலுக்கு சைகை செய்தார் கேப்டன்.

புஷ்பராஜ் இருக்கை ஒன்றில் அமர்ந்தார்.

“005Z ... 005Z” கேப்டன், ரகசிய எண்ணை இரண்டு முறை கூறினார்.

அப்போது எதிர் முனையிலிருந்து “ZZ05.. ZZ05” என்று கேட்டது.

கேப்டனுக்கு உத்தரவு வழங்கும் தலைமை நிலையத்திலிருந்து அந்தச் செய்தி வருகிறது என்று புஷ்பராஜுக்கு விளங்கியது.

“எஸ் சார்..." கேப்டன்.

“தற்சமயம் கப்பல், அதே இடத்திலேயே ஒரு மீன்பிடி படகுபோல் செயல்படட்டும்.”

“ஒகே. சார்.”

"மறு உத்தரவு வரும்வரை இதையே தொடரலாம்.”

“எஸ் சார்!”

சத்தங்கள் அடங்கின. கேப்டன் டிரான்ஸ்மிட்டரின் பட்டனை அழுத்தினார். சிவப்பு விளக்கு முற்றிலுமாக அனைநதது.

“நீங்கள் மௌனமாகச் செயல்பட்டது நல்ல வேலை டாக்டர் ஷெரீப். இல்லாவிட்டால், நான் சிரமத்துக்கு உள்ளாகியிருப்பேன்."

"அப்படியா!”

"ஆமாம்... இந்த டிரான்ஸ்மிட்டரை நான் அணைத்து விட்டாலும் அவர்களால் செயல்படுத்த முடியும்.”

"அப்படியானால் நாம் இப்போது பேசுவதை அவர் களால் கேட்க முடியுமே!”

"அவர்கள் இயக்கியதும் இந்தச் சிவப்பு விளக்கு எரியும். உடன் அந்த “பீப்” சத்தம் வரும்."

புஷ்பராஜ் அந்தச் சங்கேத வார்த்தைகள் இரண்டையும் மனத்துள் மறக்காமலிருக்க உருவிட்டுக் கொண்டிருந்தார். அதை உடனடியாக ஒரு டைரியில் குறித்து வைக்க வேண்டுமென்று தீர்மானித்தார் புஷ்பராஜ்.

"அப்படியானால் நான் கிளம்புகிறேன்” என்ற புஷ்ப ராஜ் தனது அறைக்குத் திரும்பினார். முதல் வேலையாகத் தனது டைரியைத் தேடியெடுத்து அதை ஞாபகமாக ஒரு மூலையில் குறித்து வைத்தார்.

அதன் பிறகு புஷ்பராஜ் மேல் தளத்துக்கு வந்தார்.

வழக்கமான செக்யூரிட்டியுடன் ராபின்சனும் அப்போது அங்கு நின்று கொண்டிருந்தான்.

“ஹலோ டாக்டர்...” ராபின்சன் ஒரக்கண்ணால் செக்யூரிட்டியைக் கவனித்தவாறு புஷ்பராஜ் பக்கம் திரும்பினான்.

"மிஸ்டர் ராபின்சன், உங்களது நடவடிக்கைகள் என்னை ஆச்சரியப்படுத்துகின்றன!” புஷ்பராஜ் கூறினார்.

"இதில் ஆச்சரியத்துக்கு இடமில்லை. நான் உள்ள நிலைமையைத்தான் சொன்னேன். சரி... நாம் சற்று நேரம் அப்படி நிற்போம்."

இருவரும் டெக்கின் விளிம்பை நோக்கி நடந்தனர்.

விளிம்பை நெருங்கியதும் ராபின்சன், புஷ்பராஜைக் கடலின்

பக்கமாகத் தள்ளினான். முற்றிலும் எதிர்பாராத ஒரு செயலாக இருந்ததால் புஷ்பராஜ் நிலைகுலைந்து கீழே விழவே செய்தார்.

செக்யூரிட்டி உடனே அந்தப் பக்கமாக ஓடிவந்தார்.

“டாக்டர் கால்தவறிக் கடலில் விழுந்து விட்டார். பிடிக்க முயற்சி செய்தேன்... முடியவில்லை!” ராபின்சன், செக்யூரிட்டியிடம் சமாதானம் கூறினான்.

எதிராளியை புத்திசாலித்தனமாகச் சமாளித்து விட்டதாக நினைத்த ராபின்சன், நிதானமாக நடந்து கீழ்த்தளத் துக்குச் சென்றான். அவன் நேராகப் போய் நின்றது கேப்டன் அறை வாசலில்தான். கதவைத் தட்டினான்.

உடனே கேப்டன் கதவைத் திறந்தார்.

“நீங்களா.. என்ன விஷயம்? வாருங்கள்! கேப்டன் அவனை வரவேற்றார்.

ராபின்சன் அறைக்குள் நுழைந்து நாற்காலி ஒன்றில் அமர்ந்தான்.

“உங்கள் டாக்டர் ஒரு விபத்தில் சிக்கிக் கொண்டார்...” சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்த ராபின்சன் தாழ்ந்த குரலில் கூறினான்.

“என்ன நடந்தது?”

“கப்பலின் மேல் தளத்திலிருந்து அவர் கடலில் தவறி விழுந்து விட்டார். அவரைக் காப்பாற்ற முடியவில்லை!"

“என்ன சொல்கிறீர்கள்... காப்பாற்ற முடியவில்லையா? இந்தச் சூழ்நிலையில் நமக்கு டாக்டர் மிகவும் அத்தியா வசியமானவர்."

“உண்மைதான். அதற்கு நாம் என்ன செய்ய முடியும்? நாம் கரைப்பகுதியை அடையும்போது வேறு டாக்டர் ஒரு வரை அமர்த்திக் கொள்ள வேண்டியதுதான்."

“தற்சமயம் அது சாத்தியமில்லை.”

“ஏன்?”

“கப்பலை நிறுத்தி வைக்கும்படி உத்தரவு. இந்த நிலையில் கரையை நெருங்குவதும், டாக்டரைத் தேடுவதும் எவ்வளவு தொலைவுக்குச் சாத்தியம் என்று விளங்க வில்லை."

“கப்பல் பயணம் செய்துகொண்டிருப்பதாக அல்லவா நான் நினைத்தேன்!” என்று கூறிய ராபின்சன் அங்கிருந்து வெளியேறினான்.

இரவு மணி ஒன்று.

இருண்ட கடலில் கப்பல் அசைவற்று நின்றிருந்தது, அலைகள் இல்லாத அமைதியான கடல்.

செக்யூரிட்டி அப்போதும் டெக்கில் துப்பாக்கியுடன் நின்று கொண்டிருந்தார். குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருந்தது. செக்யூரிட்டி தனது கோட்டின் காலர் பகுதியை காதுகளை நோக்கி உயர்த்தினார். துப்பாக்கியைத் தளத்தில் வைத்துவிட்டு அவர் அமர்ந்தார்.

அப்போது டெக்கின் கீழ்ப்புறத்திலிருந்து வளைந்து செல்லும் பால்கனி வழியாக புஷ்பராஜ் மெதுவாக மேலேறி வந்தார்.

ராபின்சன் அவரைக் கீழே தள்ளியதும் புஷ்பராஜ் முதலில் நிலைகுலைந்தாலும் உடல் வளைந்து விழுந்ததால் கையை நீட்டி, கைக்கு எட்டிய இடத்தைப் பிடித்தார். அதிர்ஷ்டவசமாக அந்தப் பிடி நீண்ட பால்கனியை ஒட்டி யுள்ள இரும்புக் கம்பியாக இருந்தது. அங்கிருந்து மேற்புறம் பார்த்தபோது, ராபின்சன் மற்றும் செக்யூரிட்டியின் தலைப்பகுதிகள் ஒரு நிழல் போல் தென்பட்டன.

அவர் மேற்புறம் வருவதற்குள் ராபின்சன் அங்கிருந்து கிளம்பி விட்டிருந்தான். புஷ்பராஜ் சத்தம் எழுப்பாமல் டெக்கின் மேற்புறம் வந்தார்.

செக்யூரிட்டி, யாரோ பதுங்கிப் பதுங்கி மேற்புறம் வந்ததை உணர்ந்த மறு விநாடியில், சட்டென்று தன் கையிலிருக்கும் துப்பாக்கியை உயர்த்திக் குறி பார்த்தார். அவர், அதன் விசையை அழுத்த முற்படுவதற்குள் புஷ்பராஜ், அவர் மேல் பாய்ந்தார். அந்த விசையில் துப்பாக்கி அவர் கையில் இருந்து விடுபட்டுச் சற்றுத் தொலைவில் போய் விழுந்தது. உடனே அவர் தன் கைகளால் புஷ்ப ராஜைத் தாக்கத் தொடங்கினார். இருவருக்கும் இடையே அப்போது கடுமையான ஒரு கைகலப்பு நடந்தது.

ஒரு கட்டத்தில் செக்யூரிட்டியின் தலை பின்புறக் கம்பியில் மோதியதால் அதே நேரம் கழுத்துப் பகுதியில் விழுந்த அடியால் அவர் அசைவற்றுப் போனார்.

புஷ்பராஜ் ஒரு கண்ம் யோசித்தார்.

இந்த நிலையில் செக்யூரிட்டி ஒருவர் இறந்து கிடப்பதை எவராவது கவனித்தால் நிலைமை விபரீதமாகிவிடும். அனாவசியமான ஒரு சோதனைக்குத் தான் ஆளாக வேண்டி இருக்கும்.

சட்டென்று அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. அந்த செக்யூரிட்டியின் உடையை அவசர அவசரமாகக் கழற்றி புஷ்பராஜ் அணிந்து கொண்டார். துப்பாக்கியை எடுத்துப் பக்கத்தில் வைத்துக் கொண்டார். சுற்றுமுற்றும் பார்த்தார். எவரும் கண்ணுக்குத் தட்டுப்படவில்லை எங்கும் ஒரே அமைதி.

செக்யூரிட்டியின் உடலை அதிகமாகச் சத்தம் எழுப் பாமல் நேர் செங்குத்தாகக் கப்பலில் எங்கும் மோதாமல் கடலுக்குள் போட்டார். புஷ்பராஜ் ஓரளவுக்கு ஆறுதல் அடைந்தார்.

கைக்கடிகாரத்தைப் பார்த்தார்.

மணி மூன்று.

செக்யூரிட்டி டியூட்டி மாறும் நேரமானது. அடுத்த செக்யூரிட்டி வந்தார். அவர் எதுவும் பேசாமல், துப்பாக்கியை வாங்கிக் கொண்டு தனது இடத்தில் போய் நின்று கொண்டார்.

புஷ்பராஜ் கீழ்ப்புறம் வந்தார்.

தனது அறையை எவரும் கவனிக்க வாய்ப்பு இல்லை என்று அவருக்குத் தோன்றியது. கேப்டனிடம் கூட, தான் கடலில் தவறி விழுந்து விட்டதாகவே தெரிவிக்கப்பட்டிருக்கும்.

ராபின்சன் தற்போது எந்த விதமான சந்தேகமும் இல்லாமல் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருப்பான் என்று அவருக்கு விளங்கியது.

அது, உண்மைதான்.

ராபின்சன் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தான்.

புஷ்பராஜ் தனது அறைக்குள் நுழைந்து கட்டிலின் அடியில் போய்ப் படுத்துக் கொண்டார். நன்றாகத் தூங்கினார்.

அவர் கண் விழித்தபோது நேரம் ஒன்பது மணி.

காலைக்கடன்களை முடிந்தவுடன் சாப்பிட வேண்டு மென்று

அவருக்குத் தோன்றியது. அதற்கு டைனிங் ரூமுக்குச் செல்ல வேண்டும். அங்கு ராபின்சன் தட்டுப் படலாம்.

எனவே, செக்யூரிட்டியின் வேஷத்திலேயே சிற்றுண்டி சாப்பிடப் போவது என்று தீர்மானித்தார்.

சற்றுநேரம் காத்திருந்த பிறகு டைனிங் ரூமுக்குச் சென்றார்.

சமையல்காரருக்கு எந்த விதமான சந்தேகமும் தோன்ற வில்லை. மட்டும் இன்றி, அங்கு அப்போது வேறு எவரும் தென்படவும் இல்லை.

சாப்பிட்டவுடன் தனது அறைக்குத் திரும்பி வந்தார்.

மதிய உணவுக்கும் தாமதமாகவே சென்றார். இதுவரை எந்தப் பிரச்சினையும் ஏற்படவில்லை. சமையற்காரரை ஏமாற்றி ரொட்டி-ஜாமை எடுத்துக் கொண்டு அங்கிருந்து கிளம்பினார்.

இரவு ஒன்பது மணிக்குதான் செக்யூரிட்டி டியூட்டி மாறுவார் என்று புஷ்பராஜ் நினைத்தார்.

ஒருவேளை வேறு ஏதாவது செக்யூரிட்டி டியூட்டிக்கு வருவாரோ என்ற பயமும் அவருக்குத் தோன்றியது. எனினும் செக்யூரிட்டி வேடத்தில் சரியாக ஒன்பது மணிக்கு அவர் மேல் தளத்துக்கு வந்தார். ஏற்கெனவே காவல் இருந்தவர், தனது துப்பாக்கியை அவரிடம் ஒப்படைத்துவிட்டு அங்கிருந்து கிளம்பவும் செய்தார்.

டிக்சன் சாப்பாட்டுக்குப் பிறகு ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார்.

அப்போது வாட்ச் ஒலித்தது.

அவர், அதன் ஏரியலை உயர்த்தி ரேடியோ டிரான்ஸ் மிட்டரைக் காதோடு சேர்த்து வைத்தார்.

டயானா பேசினாள்.

எஸ்.பி ஜோஸப் மாத்யூ பேச விரும்புவதாக அவள் தெரிவித்தாள்.

“ம்.. பேசச் சொல்!”

“டாக்டர் ஷெரீப் எப்படி இருக்கிறார்?” ஜோஸப் மாத்யூ கேட்டார்.

"அவர்தான் எனக்கு உள்ள ஒரே ஆறுதல்.”

“இன்று அவரைச் சந்தித்தீர்களா?”

“இல்லை. சந்தித்து இரண்டு நாட்கள் ஆகிறது."

“தொடர்பு கொள்ள முயற்சி செய்யுங்கள்!”

“சரி.."

“முப்பது நிமிடத்துக்குப் பிறகு நான் திரும்பவும் தொடர்பு கொள்கிறேன்."

உடனே, டிக்சன் இண்டர்காம் மூலமாக கேப்டனிடம் தொடர்பு கொண்டார்.

“என்ன சார்?” கேப்டன் கேட்டார்.

“பழைய தலைவலி மீண்டும் என்னைத் தொல்லைப் படுத்துகிறது. டாக்டரை உடனடியாக வரச் சொல்லுங்கள்.”

"நான் நேரில் வருகிறேன்."

தாமதமின்றி கேப்டன், டிக்சனது அறைக்கு வந்தார்.

“என்ன கேப்டன், டாக்டருக்கு என்ன ஆயிற்று? எதற்காக நீங்கள் வந்திருக்கிறீர்கள்?” -டிக்சன் கேட்டார்.

“டாக்டருக்கு ஒரு விபத்து நேர்ந்து விட்டது. எப்ப டியோ அவர், கப்பலிலிருந்து கால் தவறிக் கடலில் விழுந்து விட்டார்."

“என்ன ஒரு மோசமான நிலைமை. என் உடலைக் கவனித்துக் கொள்ள வேறு யார் இருக்கிறார்கள்?” டிக்சன், கேப்டனுக்குச் சந்தேகம் ஏற்படாதிருப்பற்காகப் பேசினார்.

‘அப்படியானால் புஷ்பராஜாக்கு ஏதோ ஆபத்து நேர்ந்திருக்கிறது’ என்று அவறுக்கு உறுதியாகத் தெரிந்தது. தனது நிலை, முன்பை விட மோசமாகிவிட்டது. அத்துடன் அந்தக் கப்பலில் இருந்து தப்பிக்கும் முயற்சி பலிக்காது என்பதும் விளங்கியது.

“டாக்டர் இருந்தது எனக்கு கொஞ்சம் ஆறுதலாக இருந்தது. இனி உங்களிடம் மட்டும்தான் நான் பேச முடியும். நாம் எங்கே போகிறோம்? இன்னும் எவ்வளவு நாள் நான் இன்னும் இப்படியே சிறையிருக்க வேண்டும்?”

“உங்கள் கேள்விகள் எதற்கும் நான் தெளிவான பதில் கூற முடியாத

நிலையில் இருக்கிறேன். தற்சமயம் கப்பல் நடுக்கடலில் நங்கூரம் பாய்ச்சி நிற்கிறது.”

"அப்படியானால் என்னைத் தேடிக் கொண்டிருப்ப வர்கள் நெருங்குகிறார்கள் என்று அர்த்தம்."

“நீங்கள் சொல்வது உண்மையாக இருந்தால், இந்த நடுக்கடலில் ஒரு பெரிய போராட்டம் நடக்குமென்பது எனது கணிப்பு."

“நிலைமை அவ்வளவு மோசமாகவா இருக்கிறது?” கேப்டன் தனது சிறிய பெட்டியிலிருந்து இரண்டு சுருட்டு களை எடுத்தார். ஒன்றை கேப்டனிடம் கொடுத்தார்.

“பற்ற வைத்துக் கொள்ளுங்கள்... நாம் ஒரு பெக் விஸ்கி சாப்பிடலாமா?” டிக்சன் கேட்டார்.

கேப்டன் சம்மதித்தார்.

கிளாஸுகளில் விஸ்கியும், சோடாவும் கலந்து உயர்ந்தன. கேப்டன் இரண்டு பெக்குடன் நிறுத்திக் கொண்டார். டிக்சன் அன்று வழக்கத்தைவிட அதிகமாகக் குடித்ததாகத் தோன்றியது.

மணி பதினொன்றைத் தாண்டியது.

“சரி... நான் கிளம்புகிறேன் புரபசர்!” கேப்டன் அங்கிருந்து எழுந்தார்.

வராந்தாப் பகுதியை அடைந்த கேப்டன் அங்கிருந்த மேற்புறப் படிகளில் ஏறத் தொடங்கினார்.

கேப்டனின் தலை மற்றும் கழுத்துப் பகுதி டெக்கின் மட்டத்தை விட்டு உயர்ந்ததும் கடல் காற்று சில்லென்று வீசியது.

அவர் முகத்தைத் திருப்பினார்.

அப்போது செக்யூரிட்டியாக இருந்த புஷ்பராஜ் சட்டென்று திரும்பிப் பார்த்தார்.

28

கேப்டன் படியேறி வருவதை புஷ்பராஜ் கவனித்தார்.

‘இது ஒரு சுவாரஸ்யமான காட்சிதான்! புஷ்பராஜ் தனக்குள் சொல்லிக் கொண்டார்.

தனது துப்பறியும் தொழிலில் இதுவரை மிகவும் அபூர்வ மாகத்தான் அவர் எதிரிகளிடம் கருணையில்லாமல் நடந்து கொள்ள நேர்ந்திருக்கிறது. அதுவும் தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் மட்டுமே அப்படி நடந்து கொண்டார்.

‘இந்தச் சூழ்நிலையும் ஒருவேளை அப்படிப்பட்டதாக இருக்குமோ?’ என்று நினைத்தார் புஷ்பராஜ்.

கேப்டன், புஷ்பராஜை நெருங்கினார்.

கேப்டன் கையில் டார்ச் இல்லாமல் வந்திருந்தார். தொப்பியும், நீண்ட கோட் ஒன்றும்தான் அவரது உடை.

ஒரு செக்யூரிட்டி என்ற முறையில் புஷ்பராஜ் அவரைப் பார்த்து சல்யூட் செய்தார். கேப்டனும் பதிலுக்குக் கையுயர்த்தினார்.

"தனியாக நிற்பதில் அலுப்பு இல்லையா உங்களுக்கு?” கேப்டன் கேட்டார்.

“இது என் தொழிலாயிற்றே!” புஷ்பராஜ் பதிலளித்தார்.

“இன்று குளிர் அதிகமில்லையா?”

"ஆமாம்.”

“என்னிடம் கொஞ்சம் விஸ்கி இருக்கிறது. சாப்பிடுங்கள். குளிருக்கு இதமாக இருக்கும்.’’ என்ற கேப்டன் தனது கோட் பாக்கெட்டிலிருந்து சப்பையான பாட்டில் ஒன்றை வெளியே எடுத்தார். அது சற்றுப் பெரிய பாட்டில். அதில் ஏறத்தாழ பாதி காலியாகி இருந்தது. முதலில் அந்த பாட்டிலை புஷ்பராஜிடம் நீட்டியவர், என்ன நினைத்தாரோ அதன் மூடியைத் திறந்து கொஞ்சம் போல் வாயில் ஊற்றிவிட்டு அப்படியே புஷ்பராஜிடம் கொடுத்தார்.

புஷ்பராஜ் அதைக் கை நீட்டிப் பெற்றுக் கொண்ட அதே விநாடியில் கேப்டன் அப்படியே குப்புறத் தளத்தில் விழுந்தார். உடனே அவர் மரக்கட்டை போல் சுய நினைவை இழந்தார்.

புஷ்பராஜ் தனது நோக்கத்தை மாற்றிக் கொண்டார். உடனே கேப்டனை வாரித் தோளில் போட்டுக் கொண்டு கீழ்ப்புறமாக இறங்கினார்.

சுற்றுமுற்றும் பார்த்தார். அருகில் எங்கும் மனிதர் எவரும் தென்படவில்லை.

ராபின்சன் தட்டுப்படுவானோ என்று புஷ்பராஜ் எதிர் பார்த்தார். அப்போது செக்யூரிட்டி கூட எவரும் தென்பட வில்லை.

‘ராபின்சன் விஸ்கி அடித்து அறைக்குள் நன்றாகத் தூங்கிக் கொண்டிருக்கலாம்.’ என்று நினைத்தார் புஷ்பராஜ்.

நல்லவேளையாக கேப்டனின் அறை பூட்டியிருக்க வில்லை. அவர் தள்ளிப் பார்த்ததும் உடனே திறந்து கொண்டது.

அவர், ஏற்கெனவே அந்த அறைக்கு வந்து பழக்கமிருந்ததால் அவருக்கு எந்த விதத் தயக்கமும் ஏற்படவில்லை. நடுவில் இருந்தது வரவேற்பு அறை. இடப்புறம் கேப்டனின் படுக்கையறை. அதற்கு எதிரில் வலப்புறம் இருந்தது கண்ட்ரோல் ரூம். அதுவும் அப்போது திறந்தே கிடந்தது.

படுக்கையறைக் கதவைத் திறந்து அவரது கட்டிலில் கேப்டனைப் படுக்க வைத்தார். அப்போதும் அவர் சுயநினைவின்றித்தான் இருந்தார். அவரது நிலையைப் பார்த்தால் குறைந்த பட்சம் இரண்டு மணி நேரத்துக்கு அவரால் எழுந்திருக்க முடியாது என்று தோன்றியது. அந்த அறையின் இண்டர்காம் தொடர்பை முதலில் துண்டித்தார். பிறகு கதவிலேயே தொங்கிய சாவியால் அந்த அறையை வெளியிலிருந்து பூட்டினார்.

நேராக கண்ட்ரோல் ரூமை நோக்கி நடந்தார்.

அவர் உள்ளே நுழைந்த விநாடியில் அங்கிருந்த டிரான்ஸ்மிட்டர், ‘பீப்... பீப்...’ ஒலியெழுப்பியது.

கோட் நம்பர் ஒலித்தது.

புஷ்பராஜ் பதில் கோட் கூறினார்.

“தகவல் ஏதாவது உண்டா?” புஷ்பராஜ் கேட்டார்.

“இருக்கிறது!”

“கப்பல் தற்சமயம் நடுக்கடலில் நின்று கொண்டிருக்கிறது. உங்கள் கட்டளை?” புஷ்பராஜ் கேட்டார்.

"மடகாஸ்கரை நோக்கிப் பயணம் செய்யுமாறு ஏற்கெனவே உங்களுக்குச் சொல்லப்பட்டதே." அதற்கு உடனடியாக என்ன பதில் கூறுவது என்று தெரியாமல் புஷ்பராஜ் ஒரு கணம் தயங்கினார். பின்னர் சுதாரித்துக் கொண்டு பதிலளித்தார்.

“உண்மைதான். ஆனால், கிளம்புவதற்குள் மேற்றிசையில் சந்தேகத்துக்கு உரிய வகையில் மற்றொரு கப்பல் தென்பட்டது."

"அப்படியானால், கப்பலை வடக்குத் திசையில் செலுத்துங்கள்."

‘வடக்கில்?”

"பம்பாய்க்கு ஆறு கி.மீ தென்புறத்தில் நங்கூரம் பாய்ச்சுங்கள். அதன் பிறகு அடுத்த கட்டளை வரும்."

“ஒகே."

ரேடியோ டிரான்ஸ்மிட்டர் சட்டென்று அணைந்தது.

புஷ்பராஜ் யோசனையில் ஆழ்ந்தார்.

எப்படியிருப்பினும் அவர்களது பயணப் பாதையைத் திருப்பியதும் நல்லதற்குத்தான்.

தற்சமயம் கப்பலின் கண்ட்ரோல் புஷ்பராஜிடம் உள்ளது.

ரகசியத் தலைமையகம் எங்கே உள்ளது என்று தெளிவாகத் தெரியவில்லை. எப்படியிருப்பினும் அது கடல் பகுதியில் இருக்காது. கரைப் பகுதியில் இருந்தாலும் நிச்சயமாக கங்காபிரசாத்தின் இருப்பிடமாக இருக்காது. கங்கா பிரசாத் நிச்சயமாக இதில் இருக்க மாட்டார் என்றும் புஷ்பராஜாக்கு விளங்கியது.

டிக்சனைக் கடத்தி வருவதும், உரியவர்களிடம் ஒப்ப டைப்பதுமே கங்காபிரசாத் ஒப்புக் கொண்ட விஷயங்கள். டிக்சன் கப்பலை அடைந்ததுடன் அந்த வேலை முடிந்து விட்டிருக்கும்.

எனவே, கப்பலில் டிக்சனுடன் பயணம் செய்யும் ராபின்சன்தான் தனக்கு மிகப்பெரிய சவால். ஆகவே, எப்படியும் ராபின்சனை இதிலிருந்து விடுவிக்க வேண்டும் என்று முடிவு செய்தார் புஷ்பராஜ்.

ராபின்சன் தனது அறைக்குள் அமர்ந்து இருந்தான். அவனைப் பொறுத்தவரை இந்த வேலையும் பயணமும் அவ்வளவாக சுவாரஸ்யமில்லாத விஷயங்கள். இந்த வேலையால் அவனது சுதந்திரம் பறி போயிருக்கிறது.

இருப்பினும் அவன் ஒரு விஷயத்தில் ஆறுதல் அடைந்தான். இந்தச் சூழ்நிலையில் தற்சமயம் அவன் எவருக்கும் பயப்பட வேண்டியதில்லை. எவரும் அவனைப் பிடிக்கவும் முடியாது.

கட்டிலில் இருந்து எழுந்த ராபின்சன் லைட்டை எரிய விட்டுக் கடிகாரத்தைப் பார்த்தான். மணி ஒன்றுக்கு மேலாகி இருந்தது.

அவனுக்கு உறக்கம் வரவில்லை.

அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியேறினான்.

வராந்தா வழியாக நடந்தான்.

மேல் தளத்தில் சற்று நேரம் உலாவலாம் என்ற எண்ணத்துடன் படிகளில் ஏறினான்.

டெக்கில் செக்யூரிட்டி எவரையும் காணவில்லை. அந்த இடத்தில் செக்யூரிட்டி ஒருவர் இருக்க வேண்டியது கண்டிப்பான கட்டளை. ஆனால், எவரும் அங்கு இல்லை.

சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டு அவன் ஒரு தடவை தளத்தைச் சுற்றி வந்தான். புஷ்பராஜைத் தள்ளிவிட்ட பகுதியை அடைந்ததும் அரண்ட வெளிச்சத்தில் பால்கனியைப் பார்த்தான். அங்கிருந்து கீழ்ப்புறமாகப் பார்த்தபோது ஏதோ ஒன்று தொங்கிக் கொண்டிருப்பதாகத் தோன்றியது.

அவன் மெதுவாகக் கீழ்ப்புறம் இறங்க முயன்றான். அப்போது கப்பல் அவன் இருந்த பக்கமாகச் சற்றுச் சரிவது போல் தோன்றியது. சன்னமான பயத்துடன் சுற்றுமுற்றும் பார்த்தான்.

கப்பல் ஒரு தடவை ஆடியலைந்து நேராக நின்றது. உடனேயே நகரவும் தொடங்கியது.

“என்ன இது!” ராபின்சன் தன்னையும் மீறிக் குரல் கொடுத்தான்.

கப்பலின் முன்புறம் மெதுவாகத் திரும்பி வடக்குத் திசையில் நகரத் தொடங்கியது. ஒரு சில விநாடிகளுக்குள் கப்பலின் வேகம் அதிகரிக்கத் தொடங்கியது.

எதனால் கப்பல் திசை மாறிப் பயணம் செய்கிறது என்று ராபின்சனுக்கு விளங்கவில்லை.

மறு விநாடியே, ‘கப்பல் எந்தப் பக்கம் போனால் என்ன? அது என்னுடைய வேலை அல்ல!" என்று நினைக்கவும் செய்தான்.

அதன் பிறகு அவன் பால்கனி பக்கமாகப் பார்த்தான்.

யாரோ ஒருவர் தலைகீழாகக் கிடப்பது போல் அவனுக்குத்

தோன்றியது. புஷ்பராஜ் கடலில் விழுந்து விட்டதாகத்தான் அவன் நினைத்திருந்தான். இப்போது அவர் கடலிலிருந்து கப்பலுக்குள் நுழைந்து விட்டிருக்கலாமோ என்ற சந்தேகம் முதன்முதலாக ஏற்பட்டது. தன்னை ஏமாற்றுவதற்காக அவர் ஒருவேளை இப்படி அசைவற்றுக் கிடக்கிறாரோ என்னவோ?

அப்படியிருந்தால் அவரை மறுபடியும் கடலுக்குள் தள்ளிவிடுவது என்ற நோக்கத்தில் நூலேணியைக் கடல் பக்கமாகத் தட்டிவிட்டு அதன் வழியாக இறங்கத் தொடங்கினான்.

வளைந்து வரும் பால்கனிப் பகுதியை நெருங்கியதும் கயிறிலிருந்து கையை விடுவித்து இறங்கினான். அந்த இடத்தில்தான் யாரோ படுத்துக் கிடக்கிறார்கள். இப்போது உருவம் ஓரளவுக்குத் தெளிவானது.

அவன் தலைகீழாகக் கிடக்கிறான்.

சந்தேகத்துடன், தனது உறையிலிருந்து உருவிய கத்தியுடன் மெதுவாக பால்கனியில் நடக்கத் தொடங்கினான்.

கப்பலின் வேகம் அதற்குள் அதிகரித்திருந்தது. கப்பல் மணிக்கு முப்பது மைல் என்ற வேகத்தை எட்டியிருந்தது. புஷ்பராஜ் இப்போதும் கண்ட்ரோல் ரூமில்தான் இருந்தார். ஒருவேளை ஏதாவது தகவல் வரக் கூடும் என்று புஷ்பராஜ் எதிர்பார்த்தார்.

அப்படி வருவதாக இருந்தால் அந்தத் தகவலைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதால் உறங்காமல் விழித்திருந்தார்.

மணி, இரண்டை நெருங்கியது.

டிரான்ஸ்மிட்டரில் விளக்கு எரிந்து ‘பீப்... பீப்...’ என்ற சத்தம் கிளம்பியது.

பரஸ்பரம் கோட் நம்பர் பரிமாறப்பட்டது.

“சொல்லுங்கள்..."

"பேசுவது யார்?”

“கேப்டன்தான்!”

“கப்பலின் திசை மாறியதா?”

“மாறிவிட்டது. முப்பது கி.மீ வேகத்தில் கப்பல் பயணமாகிறது."

“மேற்குத் திசையில் தெரிந்த கப்பல் இப்போதும் தட்டுப்படுகிறதா?”

“இல்லை!"

"அப்படியானால் கப்பல் வடக்குத் திசையிலேயே போகட்டும். ஒரு விஷயம் கவனத்தில் இருக்கட்டும். இங்கிருந்து வழங்கப்படும் கட்டளைப்படி நடந்து கொள்ள வேண்டும். அதற்கு மாறாக எந்த மாற்றத்தையும் செய்யக் கூடாது!”

"அப்படியே... ஒரு சந்தேகம்!” புஷ்பராஜ் கூறினார்.

“கப்பலை அடிக்கடி திசை மாற்றினால் சிரமமாகி விடும். எனவே, கப்பலின் திசை உடனே மாறாமல் இருப்பது நல்லது.”

"நாங்களும் அதையே விரும்புகிறோம். கங்காபிரசாத் தின் ஆள் கப்பலுக்குள்தானே இருக்கிறார்?”

புஷ்பராஜ் ஒரு விநாடி யோசித்தார். அவருக்கு விஷயம் விளங்கியது.

கட்டளைகள் வருவது, கங்காபிரசாத்திடம் இருந்து அல்ல என்பது விளங்கியது. வேறு எங்கிருந்தோ வருகிறது?

“என்ன யோசனை கேப்டன்?” எதிர்முனை கேள்வி கேட்டது.

புஷ்பராஜ் என்ன சொல்வது என்று புரியாமல் ஒரு கணம் தடுமாறினார்.

29

“இல்லை... எந்தக் குழப்பமும் இல்லை!” புஷ்பராஜ் கூறினார்.

“உங்களது சிரமம் எங்களுக்குப் புரிகிறது. பொறுத்துக் கொள்ளுங்கள். அதற்குரிய வெகுமதியும் உங்களுக்குக் காத்திருக்கிறது.” தலைமையகக் குரல் ஆறுதல் கூறியது.

“இருப்பினும்... லட்சியமில்லாத இந்தப் பயணம்."

"குறுகிய காலத்துக்குதான். நீங்கள் பம்பாயை நெருங்கு வதற்கு முன்பே அவரை வேறொரு கப்பலில் ஏற்றியனுப்ப ஏற்பாடு செய்திருக்கிறோம். உடனேயே நீங்கள் இந்தப் பொறுப்பிலிருந்து விலகிக் கொள்ள முடியும்.”

“உங்கள் விருப்பப்படியே!”

“விரைவிலேயே அதற்கான மறு அறிவிப்பு வெளி வரும்."

அத்துடன் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்த புஷ்பராஜ், கேப்டனின் படுக்கை யறைக்குச் சென்றார். கதவைத் திறந்து பார்த்தார். கேப்டன் அப்போதும் சுயநினைவின்றியே படுத்துக் கிடந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் அவர் கண் விழித்தால், நிலைமை மிகவும் சிக்கலாகிவிடும் என்று புஷ்பராஜ் கருதினார். மறு கணமே, தற்போதைய நிலைமையில் அவரால் எதையும் புரிந்து கொள்ளவோ, அதற்கேற்பச் செயல்படவோ முடியாது என்பது அவருக்கு ஆறுதல் அளித்தது.

எனவே, கேப்டன் கண் விழிப்பதற்குள் டிக்சனை ஒரு தடவை பார்த்து விட்டு வருவது என்று புஷ்பராஜ் முடிவு செய்தார்.

டிக்சனது அறையை நோக்கி நடக்கும்போது அவர் சுற்றுமுற்றும் பார்த்தார். செக்யூரிட்டி ஒருவர் அறை வாசலில் நின்று கொண்டிருந்தார். கேப்டன்தான் வருகிறாரோ என்று நினைத்த அந்த செக்யூரிட்டி, புஷ்பராஜுக்கு சல்யூட் அடித்தார். புஷ்பராஜ், டிக்சனது அறைக்குள் நுழைந்தார்.

டிக்சன் நிம்மதியற்றவராகத் தவித்துக் கொண்டிருந்தார். அவர் புஷ்பராஜைச் சந்தேகத்துடன் கவனித்தார்.

"நான்தான் புரபசர்... இப்போது கேப்டனின் வேஷம்.” சிரித்தவாறு கூறினார் புஷ்பராஜ்.

"அப்படியா... நல்லதுதான். நாம் இப்போது எங்கே போகிறோம்?” டிக்சன் கேட்டார்.

"பம்பாயை நோக்கிச் செல்கிறோம். ஆனால், பம்பாயை நெருங்குவதற்கு முன்பே உங்களை வேறொரு கப்பலில் ஏற்றியனுப்ப முயற்சிகள் நடக்கின்றன."

“அதுவும் அவர்களது கப்பலாகத்தானே இருக்கும்?”

"ஆமாம்."

"அப்படியானால், அதற்குள் நாம் எப்படியாவது தப்பிக்க வேண்டும்."

“இப்போதைய சூழ்நிலையில் அதற்கான வாய்ப்பு இல்லை. நமது மனிதர்களைத் தொடர்பு கொள்ள எந்த ஒரு வழியும் இல்லையே?”

“ஒரு வழி இருக்கிறது!”

“சொல்லுங்கள்."

உடனே டிக்சன் தனது வாட்ச்சிலிருந்த ரேடியோ டிரான்ஸ்மிட்டரை இயக்கினார்.

அதற்காகக் காத்திருந்தது போல் டயானாவும் உடனே அவருடன் தொடர்பு கொண்டாள்.

அவளுக்கு அருகே காவல்துறையினர் ஆர்வத்துடன் காத்திருந்தனர்.

“இப்போது நீங்கள் எங்கு இருக்கிறீர்கள் என்று சொல்ல முடியுமா?” டயானா கேட்டாள்.

“இடம் என்று தனியாகக் குறிப்பிட முடியாது. கடலில்தான்... இருங்கள் நான் கேப்டனிடம் லைன் கொடுக்கிறேன்."

“கேப்டனிடமா?” அப்துல் கபூரும், ஜோஸப் மாத்யூவும் ஒரே குரலில் கேட்டனர்.

"ஆமாம்... இப்போது நான்தான் கப்பலின் கேப்டன். பெயர் புஷ்பராஜ்."

“மிக்க மகிழ்ச்சி. நிலைமை எப்படி இருக்கிறது?” ஜோஸப் மாத்யூ கேட்டார்.

“மேற்குத் திசையில் நகர்ந்திருக்க வேண்டிய கப்பலை, நான் திசை மாற்றி பம்பாய்ப் பக்கமாகக் கொண்டு வருகிறேன்."

"நாங்கள் எப்படி உங்களுக்கு உதவ முடியும்?” ஜோஸப் மாத்யூ கேட்டார்.

“உசிதம்போல் செயல்படுங்கள்!"

“உங்கள் பாதையில் எங்களின் கப்பல் ஒன்று குறுக்கிடும். இந்த உதவி போதுமா?"

“போதும்... முடிந்த அளவுக்கு அது விரைவாக நடக்கட்டும்!”

அதன் பின் டயானாவும் டிக்சனும் சற்று நேரம் தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

அந்தச் சந்தர்ப்பத்தில் ராபின்சன் பால்கனிப் பகுதியி லிருந்து கடல்

பக்கமாகக் கீழ்நோக்கித் தொங்கிக் கொண் டிருக்கும் உருவத்தின் உடலில் கத்தியைப் பாய்ச்சினான்.

அதனால் எந்த விதமான பயனும் ஏற்படவில்லை. அந்த உருவம் பழையபடியே அப்படியே தொங்கிக் கொண் டிருந்தது. அது இறந்துபோன உடல் என்பது விளங்கியது.

அவன் அந்த உருவத்தின் உடலைப் புரட்டிப் பார்க்க முற்பட்டபோது, அது தொங்கிக் கொண்டிருந்த உடை விசையுடன் கிழிந்து கடலுக்குள் விழுந்து அமிழ்ந்தது. அதனால் அந்த உருவம் எவருடையது என்று ராபின்சனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஒருவேளை அது புஷ்பராஜின் உடலாக இருக்கலாம் என்று நினைத்தான் ராபின்சன். அதன் பிறகு அவன் மேற்புற டெக்குக்கு வந்தான்.

அப்போது செக்யூரிட்டி ஒருவர் அவனருகே வந்தார். அவனைப் பார்த்ததும் சல்யூட் அடித்தார்.

“இங்கிருந்த செக்யூரிட்டி எங்கு போனார்?” ராபின் சனிடம் கேட்டார் அந்த செக்யூரிட்டி.

“என்ன... அவரைக் காணவில்லையா?” ராபின்சன் சந்தேகத்துடன் கேட்டான்.

ராபின்சனுக்குக் குழப்பம் தோன்றியது. அவன் மேற்புற டெக்கில் அங்குமிங்குமாக உலாவிய பிறகு கப்பலின் பக்கவாட்டுப் பகுதியைப் பார்த்தான். பிறகு பால்கனிப் பக்கமாக ஊன்றிக் கவனித்தான்.

ராபின்சன் சற்று முன் நடந்ததை அவரிடம் வெளியிட விரும்பவில்லை. காரணம் அந்த செக்யூரிட்டியை ராபின்சன் கொன்று விட்டதாக, இந்த செக்யூரிட்டி நினைக்கலாம் என்று நினைத்தான்.

“நீங்கள் இங்கிருந்த செக்யூரிட்டியைப் பார்க்கவில்லை என்றா சொல்கிறீர்கள்?” செக்யூரிட்டி விடுவதாகத் தெரியவில்லை.

“உண்மையிலேயே நான் கவனிக்கவில்லை!” ராபின் சன் உறுதியான குரலில் கூறினான்.

“அவர் எங்கே போயிருப்பார்? நான் வரும்போது அவர் இங்கு இருக்க வேண்டும். நான் வந்த பிறகுதான் அவர் இங்கிருந்து கிளம்ப வேண்டும்." அவர், எவரிடம் என்றில் லாமல் பேசினார்.

“ஒருவேளை பக்கத்தில் எங்காவது போயிருக்கலாம்.” என்ற ராபின்சன், கடற்காற்றின் சில்லிப்பிலிருந்து தப்பிக்கத் தனது கோட்டின் காலர்ப் பகுதிகளை மேற்புறமாக உயர்த்திவிட்டுக் கொண்டான்.

“நான் அவரைத் தேடவேண்டும். நான் திரும்பி வருவது வரையில் தயவு செய்து நீங்கள் இங்கு இருக்கமுடியுமா?" என்றவர் பதிலை எதிர்பார்க்காதது போல் அங்கிருந்து விரைந்து ஏணிப்படிகளில் இறங்கிச் சென்றார்.

அவர் நேராகச் சென்றது, செக்யூரிட்டிகளின் அலுவலகத்துக்குத்தான். செக்யூரிட்டியைக் காணவில்லை என்ற தகவலை அங்கிருந்த அதிகாரியிடம் தெரிவித்தார்.

அந்த அதிகாரி உடனே தனது பதிவுப் புத்தகத்தை எடுத் துப் பார்த்தார். அந்த இடத்தில் டியூட்டிக்குப் போட்டிருந் தவரின் கையொப்பம் அன்றைய தேதியில் இல்லை.

உடனே வேறு சில நோட்டுப் புத்தகங்களைப் புரட்டிப் பார்த்துவிட்டு, "இவரும், இவரின் நண்பரும் நூற்றுப் பதினான்காம் எண்ணுள்ள அறையில் தங்கியிருக்கிறார்கள். எனவே, அங்கு சென்று பாருங்கள். அவர் இல்லா விட்டால் உடனே வந்து எனக்குத் தெரிவியுங்கள்!” என்று கட்டளையிட்டார்.

வந்தவர் அங்கிருந்து கிளம்பினார்.

சற்று நேரத்துக்குப் பிறகு திரும்பி வந்தவர், குறிப்பிட்ட அந்த செக்யூரிட்டி அங்கு இல்லை என்ற தகவலைத் தெரிவித்தார்.

உடனே அந்த அதிகாரி சந்தேகத்துடன் வந்திருக்கும் செக்யூரிட்டியைப் பார்த்தார்.

அப்போது ராபின்சனின் சிந்தனை வேறொரு திசையில் செயல்படத் தொடங்கியது.

பால்கனியில் தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருந்தது, காணாமற் போன அந்த செக்யூரிட்டியின் உடம்பு என்றால் இந்தச் சம்பவத்துக்குக் காரணம் என்ன?

அவரை யார் கொலை செய்திருப்பார்கள்?

அப்படியானால் புஷ்பராஜ் தப்பித்து விட்டாரா? தப்பித்திருந்தால், அவரை தான் பார்த்திருக்க வேண்டும். ஆனால், இதுவரை

சந்திக்கவில்லை. ஒருவேளை, கேன்டீனில் விசாரித்தால் உண்மை தெரியலாம் என்று கணக்கிட்டான்.

டாக்டர் ஷெரீப் என்றுதான் புஷ்பராஜை, அந்தக் கப்பலில் உள்ளவர்களுக்குத் தெரியும். எனவே, அவர் அங்கு சாப்பிடுகிறாரா இல்லையா என்பதை விசாரித்தாலே தெரிந்துவிடும்.

எனவே, அவன் கேன்டீனை நோக்கி நடந்தான்.

அங்கு சென்றபோது கேன்டீன் சர்வர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். விசாரித்தபோது டாக்டர் கேன்டீனுக்கு வரவில்லை என்ற தகவல் தெரிந்தது. அது உண்மையானால், புஷ்பராஜ் உயிருடன் இருந்தால் தன்னைப் பழிவாங்குவார் என்பதும் விளங்கியது.

அப்படியானால் அவனுக்குத் தெரியாமல் அவர் இந்தக் கப்பலுக்குள் நடமாடிக் கொண்டிருக்கிறார். எப்படியிருந் தாலும் அது தனக்கு ஆபத்துதான்!

அப்போதுதான் அவனுக்கு மற்றொரு விஷயமும் விளங் கியது. கப்பல் திசைமாறிப் பயணம் செய்வதும் கப்பலில் உள்ளவர்களுக்குத் தெரியவில்லை.

மேற்குத் திசையில் பயணம் செய்த கப்பல் வடக்குத் திசையில் இப்போது பயணம் செய்வதை ராபின்சன்தான் முதலில் கண்டுபிடித்தான். இதற்கு என்ன காரணம் என்பது இந்த விநாடி வரை அவனுக்குப் புரியவில்லை. அதை விசாரிப்பதும் அவனுடைய வேலை இல்லை என்று நினைத்தான்.

இந்த நிலைமையில் கப்பலின் கேப்டனான ரிச்சர்டைத் தொடர்பு கொள்ள முடிந்தால் நல்லது என்று நினைத்தான்.

ஆனால், எவ்வளவு முயன்றும் ரிச்சர்டைத் தொடர்பு கொள்ள முடியவில்லை.

மறு நாள் காலையில் புஷ்பராஜ் கேப்டனின் அறையில் சிற்றுண்டி சாப்பிடும்போது, ரகசியத் தலைமையகத்திலிருந்து தகவல் வந்தது.

கேப்டனுக்கு மட்டும் அவரது அறைக்குச் சிற்றுண்டி மற்றும் சாப்பாட்டைக் கொடுத்து அனுப்புவது வழக்கம். எனவே, கேப்டன் கேன்டீனுக்குப் போக வேண்டிய தேவை ஏற்படவில்லை.

புஷ்பராஜ் கதவுகளை மூடிவைத்து விட்டு, டிரான்ஸ் மிட்டரின் செயல்பாட்டில் கவனம் செலுத்தினார்.

அப்போது வந்தது அவசரமான செய்தி ஒன்று.

அன்று மதியத்தில் மோட்டார் படகு ஒன்று கப்பலை நெருங்கும் என்பதுதான் தகவல்.

உடனேயே புஷ்பராஜின் நெற்றியில் சுளிவுகள் உயர்ந்தன.

‘அந்தப் படகில் வரப் போவது யாராக இருக்கும்?’ -புஷ்பராஜ் யோசனையில் ஆழ்ந்தார்.

கப்பல் அப்போதும் வடக்குத் திசையிலேயே பயணம் செய்து கொண்டிருந்தது.

அப்போது கேப்டனின் ஒய்வு அறையிலிருந்து சத்தம் கேட்டது. புஷ்பராஜ் உடனே அந்தப் பக்கமாக விரைந்தார்.

கேப்டன் அதற்குள் கண் விழித்துக் கட்டிலில் எழுந்து உட்கார்ந்திருந்தார்.

"கேப்டன், இப்போது உங்களுக்கு எப்படி இருக்கிறது?” புஷ்பராஜ் கேட்டார்.

"பரவாயில்லை. மிகவும் களைப்பாக இருக்கிறது. நான் அளவுக்கு அதிகமாகக் குடித்து விட்டேன் போலிருக்கிறது. என்ன நடந்தது என்றே தெரியவில்லை!"

"ஆமாம்.. கொஞ்சம் அதிகம்தான்.” புஷ்பராஜ் ஒப்புக் கொண்டார்.

“என்ன இருந்தாலும் இந்த அளவுக்குக் குடித்திருக்கக் கூடாதுதான். நான் கப்பலின் மேல்தளத்துக்கு வந்தது வரை நன்றாக நினைவிருக்கிறது.” கேப்டன் கட்டிலிலிருந்து எழுந்திருக்க முயன்றாலும் முடியவில்லை.

புஷ்பராஜ் சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தார்.

‘கேப்டன் இந்தச் சூழ்நிலையில் கப்பலைச் செலுத்துவது சரியாகாது!’ என்று நினைத்த புஷ்பராஜ், கப் போர்டி லிருந்து விஸ்கி பாட்டிலை எடுத்தார். கையிலிருந்த கிளாஸில் பாதியளவு விஸ்கியை ஊற்றியவர் அதை கேப்டனிடம் நீட்டினார்.

“ஹாங் ஓவர் தீரட்டும்... இதைக் குடியுங்கள் கேப்டன்.” புஷ்பராஜ் வற்புறுத்தினார்.

மதுபானத்துடன் ஆர்வம் கொண்ட கேப்டன் சற்றும் யோசிக்காமல்

அதை வாங்கிச் சட்டென்று குடித்தார். உடனேயே சுருட்டு ஒன்றைப் பற்ற வைத்து அவரிடம் கொடுத்தார் புஷ்பராஜ்.

சுருட்டை மூன்றாவது முறை இழுப்பதற்குள் கேப்டன் தனது கட்டிலிலேயே மட்டமல்லாக்க விழுந்தார். புஷ்ப ராஜ், அவர் கால்கள் இரண்டையும் கட்டில் மீது ஒழுங் காக எடுத்து வைத்தார்.

மதியச் சாப்பாட்டுக்குப் பிறகு மறுபடியும் தலைமை யகத்திலிருந்து தகவல் வந்தது.

“கப்பலின் வேகத்தைக் குறையுங்கள்!"

புஷ்பராஜ் உடனே இன்ஜின் அறைக்குத் தகவல் தெரிவித்தார்.

கப்பலின் வேகம் குறையத் தொடங்கியது.

அப்போது கிழக்குத் திசையிலிருந்து மோட்டார்ப் படகு ஒன்று கப்பலை நோக்கி வருவதை புஷ்பராஜும் கவனிக்கவே செய்தார்.

30

மோட்டர் படகு கப்பலை மிக நெருங்கியது.

அப்போது துப்பறிவாளர் புஷ்பராஜ், கேப்டனின் தோற்றத்தில் மேல்தளத்தில் வந்து நின்றார்.

படகில் இருந்த மனிதர் மேற்புறம் பார்த்ததும், புஷ்பராஜ், நூலேணி ஒன்றைக் கீழ்ப்புறமாக வீசினார்.

அந்த மனிதர் கப்பலின் மேல் தளத்தை அடைந்தார்.

“நீங்கள் கேப்டன் என்று நினைக்கிறேன்."

"ஆமாம்.” புஷ்பராஜ் ஆங்கிலத்தில் பதில் அளித்தார்.

“உங்கள் ஊர்?”

“மகாராஷ்டிரா..."

"நான் கப்பலில் உள்ள ராபின்சன் என்பவரைச் சந்திக்க வேண்டுமே!”

"சந்திக்கலாம்... வாருங்கள்."

அவர் புஷ்பராஜைப் பின்தொடர்ந்தார்.

நடக்கும்போது, “முக்கிய விருந்தாளி எப்படி இருக்கிறார்? நான் அவரைச் சந்திக்க முடியுமா?” வந்தவர் கேட்டார்.

“நீங்கள் யார் என்று எங்களுக்கு உறுதியாகத் தெரிந்தால், அவரைச் சந்திக்க முடியும்."

"தகுந்த ஏற்பாடுகள் இல்லாமல் வருவேனா?”

“முதலில் என்னுடன் வாருங்கள். மற்றவற்றை அங்கு போய்ப் பேசிக் கொள்ளலாம்... வாருங்கள்."

அவர் புஷ்பராஜுடன், கேப்டனின் அறைக்குள் நுழைந்தார். பாண்ட்-ஓவர்கோட்- தொப்பி அணிந்திருந்தார். நாற்பத்தைந்து வயது மதிப்பிடலாம். உறுதியான தசைப் பகுதிகள். துடிப்பான சதுர முகம். முகத்தில் மீசை இல்லை. தடித்த புருவங்கள், முகத்தில் வெளவால் ஒன்று இறக்கைகளை விரித்தாற் போல ஒட்ட வைத்தது போலிருந்தது. பார்வை கூர்மையாக இருந்தது.

ஒரு கிரிமினலுக்கு உரிய எல்லா அம்சங்களும் அந்த மனிதருக்குப் பொருந்தியிருந்தன.

தனது கோட் பாக்கெட்டிலிருந்து உறை ஒன்றை எடுத்து, புஷ்பராஜிடம் கொடுத்தார்.

புஷ்பராஜ் அதை வாங்கிப் பார்த்தார். உள்ளே காகிதம் ஒன்றில் வந்துள்ள நபரின் புகைப்படம் பாஸ்போர்ட் அளவில் ஒட்டப்பட்டிருந்தது. மட்டுமின்றி அவரைப் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றிருந்தன.

‘பகவான்தாஸ்சிங்கை அனுப்பி வைத்துள்ளேன். ராபின்சனிடம் இவரை அறிமுகப்படுத்தி வைக்கவும். கங்காபிரசாத்.’

அப்படியானால், கங்காபிரசாத்’ இந்தக் கூட்டத்துடனான தொடர்பை இன்னும் துண்டித்துக் கொள்ளவில்லை. இவர்களுக்காகக் தொடர்ந்து வேலை செய்கிறார் என்பது நிரூபணமாகிறது.

"சரி... வாருங்கள். ராபின்சனின் அறையைக் காட்டு கிறேன். எனக்கு வேறு எதுவும் தெரியாது. கப்பலை வழி நடத்துவது மட்டும்தான் என்னுடைய பொறுப்பு." புஷ்பராஜ் கூறினார்.

“எனக்கும் அது தெரியும்!” -வந்தவரின் குரலில் அழுத்தம் தென்பட்டது.

‘அப்படியானால், கப்பலை நிர்வகிக்கும் பொறுப்பு தன் கையை விட்டுப் போகாது என்று தெரிந்தது. இதுவரை கப்பலைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது பெரிய விஷய மில்லை. இவர்கள் எல்லோரும் வந்துவிட்ட சூழ்நிலையில் மேற்கொண்டு வெளிப்படையாக கேப்டனாக நடிப்பதும் சிரமம். நிலைமை மிகவும் சிக்கலாகிக் கொண்டே வருகிறது. புஷ்பராஜ் யோசனையில் ஆழ்ந்தார்.

“என்ன யோசிக்கிறீர்கள்?”

“இல்லை.. இது மிகவும் கவனமாகக் கையாளப்பட வேண்டிய விஷயம். இப்போதைய சூழ்நிலையில் நீங்கள் கொண்டு வந்துள்ள கடிதத்தை எந்த அளவுக்கு நம்புவது என்று தெரியவில்லை. அதனால்தான் தயங்குகிறேன்." புஷ்பராஜ், வந்தவரின் முகத்தைப் பார்த்தார்.

“நீங்கள் தேவையில்லாத விஷயத்தைப் பற்றி அளவுக்கு அதிகமாக யோசிக்கிறீர்கள்.” வந்தவரின் குரல் உரத்து ஒலித்தது.

“என்ன செய்வது... சூழ்நிலை அப்படி இருக்கிறதே..." புஷ்பராஜ் பதிலளித்தார். வந்தவர், தன் தலையிலிருந்து தொப்பியைக் கழற்றினார். மொட்டை அடித்தாற் போன்ற தலை. மொத்தத்தில் பயங்கரமான ஒரு மனிதன்.

தனது கோட்டைக் கழற்றி அருகிலிருந்த நாற்காலி ஒன்றில் போட்ட பகவான்தான் கூறினார் “தேவைப்பட்டால், நான் கப்பலைச் செலுத்தவும் முடியும்!” அந்தக் குரல் ஓர் எச்சரிக்கை போல் ஒலித்தது.

“ஒரு கப்பலில் இரண்டு கேப்டன்கள் தேவையில்லை என்று சொல்ல வருகிறீர்களா?” புஷ்பராஜ் இயல்பான குரலில் கேட்டார்.

“அது உங்களுக்கு இன்னுமா விளங்கவில்லை?”

அந்த பதில் முடிவடைவதற்குள் புஷ்பராஜின் கால் உயர்ந்து, பகவான்தாஸின் முழங்காலில் பதிந்தது.

"ஐயோ!” என்ற அலறலுடன் அவர் பின்புறமாகச் சரிந்தார். எதிர்பாராத இந்தத் தாக்குதலில் அவர் நிலை குலைந்து போனார். எனினும், விரைவில் நிலைமையை உணர்ந்து சமாளித்து எழுந்தவர், புஷ்பராஜை நோக்கிக் கையை ஓங்கினார். அப்போது அவர் கையில் கத்தி ஒன்று பளபளத்தது.

அவர், கத்தியை இரு புறமும் விசையுடன் வீசினார்.

புஷ்பராஜ், லாகவமாக ஒதுங்கித் தப்பித்தார். இரு புற விளிம்பும் கூர்மையான அந்தக் கத்தியின் எந்தப் பகுதி பட்டாலும் உடலின் தசை கிழிந்து விடுவது உறுதி.

புஷ்பராஜ், பகவான்தாஸின் கண்களை உற்றுப் பார்த்தார். அவரும், கண்களை விலக்காமல் அப்படியே பார்த்தார். அந்த நிலை சுமார் இரண்டு நிமிடங்கள் தொடர்ந்தன.

அதற்குள் இருவரும் மனதுக்குள் ஏதேதோ திட்டங்கள் தீட்டினர்.

கண்ணிமைப்பதற்குள் புஷ்பராஜ், பகவான்தாஸின் கோட்டை இடக் கையால் எடுத்து அவர் முகத்தில் வீசிய அதே வேளையில் வலக்கை நாற்காலியை அவர் முகத்தில் வலுவாகத் தாக்கவும் செய்தது. ஆனால், பகவான்தாஸ் கையால் தடுத்ததால் அடி கையில் விழுந்தது. மட்டுமின்றி, அந்த நாற்காலி அவர் கையிலிலேயே தொங்கிக் கிடந்தது.

அதிலிருந்து பகவான்தாஸ் விடுபட்டுச் சூழ்நிலையை உணர்வதற்குள் மேற்புறமாக எம்பிக் குதித்த புஷ்பராஜ், அவரின் மார்பில் ஓங்கி மிதித்தார்.

எல்லாம் மின்னல் போல் நடைபெற்றதால், பகவான் தாஸினால் உடனே எதுவும் செய்ய முடியவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக, கேப்டனிடமிருந்து இப்படி ஒரு தாக்குதலை எதிர்பார்க்காததால் அவரால் முன்னெச் சரிக்கையுடன் நடந்து கொள்ள முடியவில்லை.

கீழே விழுந்த பகவான் தாஸிடமிருந்து கத்தி விசை யுடன் விரைந்து மூலை ஒன்றில் போய் விழுந்தது.

பகவான்தாஸ், ஒரு கணம் என்ன செய்வது என்று தெரியாமல் குழம்பினார்.

அதற்குள் புஷ்பராஜின் ஷூவின் ஒரு முனை அவர் கழுத்தின் மீது பதிந்தது.

ஒரு சன்னமான சத்தம் மட்டும் அவர் தொண்டையிலிருந்து வெளிப்பட்டது. வாழ்க்கையில் அளவுக்கு அதிகமான முரட்டுத்தனம் புரிந்துள்ள அந்த மனிதர் அந்தக் கணத்தில் எல்லாவற்றையும் இழந்து அநாதரவாகிப் போனார்.

கதவைத் திறந்து ஒரு முறை இரு புறமும் பார்த்த புஷ்பராஜ், பகவான்தாஸைத் தன் தோளில் போட்டுக் கொண்டு நடக்கத் தொடங்கினார்.

வராந்தாப் பகுதியை அடைந்ததும் ராபின்சனின் அறையைப் பார்த்தார் புஷ்பராஜ். அது மூடிக் கிடந்தது. மெதுவாக நடந்தவர் மேற்புறம் செல்லும் ஏணிப்படியில் ஏறினார்.

அப்போதும் வராந்தாவில் எவரும் தென்படவில்லை. அமைதியாக இருந்த அந்தப் பகுதியில் எந்த ஒரு நிழலும் தட்டுப்படவில்லை.

பகவான்தாஸைக் கடலில் எறிவது புஷ்பராஜின் நோக்கம். அவர் ஒருபோதும் ராபின்சனைச் சந்திக்கக் கூடாது என்று புஷ்பராஜ் தீர்மானித்தார்.

பகவான்தாஸைச் சுமந்து கொண்டு புஷ்பராஜ் மேல் தளத்துக்கு வந்ததும் தென்பட்டது சிலை போல் அங்கு நின்று கொண்டிருக்கும் ஒர் உருவம்தான். ஊன்றிப் பார்த்தபோது அது ராபின்சன் என்று புஷ்பராஜுக்கு விளங்கியது.

எனவே, புஷ்பராஜ் வந்த வழியே திரும்பத் தொடங்கினார்.

ராபின்சன் இருள் நிறைந்த கடல் பகுதியை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். சட்டென்று மூடியிருந்த மேகம் விலகியதும் விடுபட்ட நிலாவின் வெளிச்சம், அந்தப் பகுதியில் தெளிவாக விழுந்தது. அப்போதுதான் அவனுக்கு அந்தக் காட்சி தட்டுப்பட்டது.

கடலில், கப்பலை ஒட்டி மோட்டார்ப் படகு ஒன்று நின்று கொண்டிருந்தது.

ராபின்சன் நூலேணி வழியாக இறங்கினான். தனது பாக்கெட்டிலிருந்த பென்டார்ச்சைப் பயன்படுத்தி, அந்தப் படகைப் பரிசோதித்தான்.

படகில் எவரும் இல்லை. எனினும் வேறு ஏதாவது தட்டுப்படுமோ என்று பார்த்தும் பயனில்லை.

அப்படியானால் யாரோ கப்பலுக்கு வந்திருக்கிறார்கள். கப்பலுக்கு உள்ளும் நுழைந்திருக்கிறார்கள்.

‘யார் வந்திருப்பார்கள்?’ ராபின்சன் யோசனையில் ஆழ்ந்தான்.

எதுவும் புரியவில்லை. கப்பலுக்கு அனுப்பி வைத்த போது ஜான்ஸனுக்கு உதவுவது மட்டுமே அவனுக்கு இடப்பட்ட வேலை. மற்றபடி கங்காபிரசாத்தைத் தொடர்பு கொள்வதற்கு எந்த விதமான மாற்று ஏற்பாட்டையும் அவனுக்குத் தெரிவிக்கவில்லை.

ஜான்ஸன் ஒரு மாதிரியான மனிதனாக இருந்தான். அவன் பிறருடன் அதிகமாகப் பேச விரும்பாதவன். யார், எக்கேடு கெட்டாலும் தனது வேலை ஒழுங்காக நடக்க வேண்டும் என்பதில் குறியாக இருப்பவன் ஜான்ஸன்.

கப்பலில் இருக்கும் கைதியான டிக்சனை யாரிடமோ ஒப்படைத்த பின் பணத்தைப் பெற்றுக் கொள்வது தனது லட்சியம். வேறெதுவும் தனக்குத் தேவையில்லாதது. எனவே, முடிந்த வரையில் அதை நிறைவேற்ற வேண்டும்.

இப்போது கப்பலின் பயண திசையும் மாறியிருக்கிறது. இந்த நிலையில் தனது நோக்கம் நிறைவேறுமா என்பது சந்தேகமாக இருக்கிறது.

‘மோட்டார்ப் படகில் வந்த மனிதன் கேப்டனிடமோ, ஜான்ஸனிடமோ போயிருக்க வேண்டும்!’ ராபின்சன் சுயமாக ஒரு தீர்மானத்துக்கு வந்தான்.

எனவே, முதலில் ஜான்ஸனைச் சந்திப்பது என்ற முடிவுடன் கப்பலுக்குத் திரும்பி வந்தான்.

இரவு மணி பத்து ஆகிவிட்டது.

ஜான்ஸன் சுருட்டு ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டு, யோசனையில் ஆழ்ந்திருந்தான். ராபின்சன் கதவைத் தட்டியதும் உடனே திறந்தான் ஜான்ஸன்.

“என்ன மிஸ்டர் ராபின்சன்?” ஜான்ஸன் கேட்டான்.

ராபின்சன் பதில் எதுவும் சொல்லாமல் அறையை ஒரு முறை பார்வையால் துழாவினான். எவரும் தட்டுப்பட வில்லை.

“என்ன பார்க்கிறீர்கள்?” ஜான்ஸன் மீண்டும் கேட்டான்.

“உங்களைச் சந்திக்க எவராவது வந்திருந்தார்களா?”

“இல்லை... இப்படிக் கேட்கக் காரணம்?”

"மோட்டார்ப் படகு ஒன்று கப்பலில் பிணைக்கப் பட்டுள்ளது.”

"அப்படியானால் கேப்டனின் அறையில் இருக்கலாம்."

ஒரு விநாடி ஜான்ஸனின் முகத்தைப் பார்த்த ராபின்சன், திரும்பி நடக்கத் தொடங்கினான். ஜான்ஸன் அவனைப் பின்தொடர்ந்தான்.

31

கேப்டனின் அறை வாசலை அடைந்த இருவரும் ஏககாலத்தில் அதன் கதவைத் தட்டினர்.

புஷ்பராஜ், ‘வந்திருப்பது யாராக இருக்கும்?’ என்று யோசித்தார். வழக்கமாக இந்த நேரத்தில் எவரும் தன்னிடம் வர வேண்டிய தேவையில்லை.

ராபின்சன் கூட இதுவரை இங்கு வந்ததில்லை. கதவை நெருங்கிய புஷ்பராஜ், "யாரது?” என்று கேட்டார்.

"நாங்கள்தான். உடனடியாக உங்களைச் சந்திக்க வேண்டியிருக்கிறது." ராபின்சன் கூறினான்.

புஷ்பராஜுக்குப் புரிந்து விட்டது. ராபின்சனின் குரல்.

“தற்சமயம் நான் முக்கியமான வேலை ஒன்றில் ஈடுபட்டிருக்கிறேனே!” புஷ்பராஜ் பதற்றமில்லாமல் பேசினார்.

“இது அவசரமான காரியம். எதிரி கப்பலுக்குள் நுழைந்திருக்கிறான்!”

“அதற்கு நான் என்ன செய்வது? நான் முக்கியமான வேலையில் ஈடுபட்டிருக்கிறேன்." -கதவைத் திறப்பது ஆபத்து என்று புஷ்பராஜுக்கு விளங்கியது.

"நாங்கள், டிரான்ஸ்மிட்டர் மூலமாகத் தலைமை யகத்தைத் தொடர்பு கொள்ள வேண்டும்."

"நான் உங்களை நம்ப முடியாது. வெளியே சூழ் நிலையே சரியில்லை. எனவே, நீங்கள் தகவலைச் சொன்னால் நானே தொடர்பு கொண்டு கூறுகிறேன்." புஷ்பராஜ் ஒருவாறு சமாளித்தார்.

"அப்படியே செய்வோம். இருந்தாலும் நீங்கள் கதவைத் திறந்தால்தானே நாம் அதைப் பற்றிப் பேச முடியும்?”

புஷ்பராஜ் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தார். பிறகு எது வந்தாலும் சமாளித்துவிட வேண்டியது தான் என்ற முடிவுடன் சட்டென்று கதவைத் திறந்தவர், கதவுப் புறமாக மறைந்து நின்றார்.

முதலில் அறைக்குள் நுழைந்தவன் ராபின்சன். புஷ்ப ராஜ் சட்டென்று கதவை மூடினார். அவன், அவரை அடையாளம் தெரிந்து கொண்டான்.

“ஒகோ... நீங்கள்தான் இதற்குள் இருக்கிறீர்களா?* ராபின்சன் திகைப்புடன் கேட்டான்.

“நீங்கள் இருக்கும் இடத்தில் நானும் இருக்க வேண்டாமா?” புஷ்பராஜ் மிகவும் தாழ்ந்த குரலில் கேட்டார்.

“உங்கள் நோக்கம்?”-ராபின்சன்.

“நான், எனது வேலையைச் செய்வதுதான். பரஸ்பரம் நம்மால் முடிந்ததை நாம் செய்ய வேண்டும். தற்சமயம் நான்தான் இந்தக் கப்பலின் கேப்டன். எனவே, நான் சொல்கிறபடி நடந்து கொள்வதுதான் புத்திசாலித்தனம்."

"அப்படியானால், உண்மையான கேப்டன்?” ராபின்சன் சுற்றுமுற்றும் பார்த்தான்.

“அது, நீங்கள் யூகிக்க முடிந்த விஷயம்தான்!” புஷ்ப ராஜ் எந்த விதத் தயக்கமும் இல்லாமல் பதிலளித்தார்.

ராபின்சன் யோசனையில் ஆழ்ந்தான்.

‘கேப்டனை, புஷ்பராஜ் கொலை செய்திருப்பார்!’ என்று நினைத்தான் ராபின்சன். எனவே, தற்காலிகமாக புஷ்பராஜின் சொற்படி நடந்து கொள்வதுதான் புத்தி சாலித்தனம். கப்பலைச் செலுத்துவது ராபின்சனுக்குத் தெரியாத விஷயம். எனவே, முதலில் எங்கு கப்பல் கரை சேருகிறதோ அங்கு புஷ்பராஜைத் தீர்த்துக் கட்டுவது!" என்று முடிவு செய்தான்.

“சரி... உங்கள் பேச்சை நம்புகிறேன். இப்போதைய சூழ்நிலையில் நாம், நமக்குள் சண்டை போட்டுக் கொள்வது நல்லது அல்ல. எனவே, நமது பாதை மற்றும் செயல்களில் உறுதியாக இருப்போம். நான் கிளம்புகிறேன்."

அவனது புத்திசாலித்தனம் புஷ்பராஜ"க்குத் தெரிந்தது தான்.

“கேப்டன் என்ன சொன்னார்?' வெளியே வந்த ராபின்சனிடம், ஜான்ஸன் கேட்டான்.

ஜான்ஸனை அழைத்துக் கொண்டு நடக்கத் தொடங்கிய ராபின்சன் அதற்கு பதிலளித்தான் “கப்பல் செலுத்து வதைத் தவிர அவருக்கு வேறு எதுவும் தெரியவில்லை!"

"அது எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். நமது

தலைமையகத்திலிருந்து வரும் செய்தியை நாம் தெரிந்து கொள்ள வேண்டுமே.”

“ஏதாவது ஒரு துறைமுகத்தை அடையும்போது நிலைமை சரியாகும் என்று நினைக்கிறேன்."

நள்ளிரவு நேரம்.

கேப்டனான புஷ்பராஜாசம், மேல் தளத்திலுள்ள செக் யூரிட்டியும் மட்டுமே கப்பலில் உறங்காமல் விழித்திருந்தனர்.

டிக்சன் தூக்கத்திலிந்து திடுமென்று விழித்தார்.

சுருட்டு ஒன்றைப் பற்ற வைத்துப் புகையை ஆழ்ந்து இழுத்தார்.

அப்போது அவரது வாட்ச் ‘பீப்... பீப்...’ ஒலியெழுப்பியது.

"யாரது?” டிக்சன் கேட்டார்.

"டயானா பேசுகிறேன்."

"ஏதாவது தகவல் உண்டா?”

“தீவிரமாகத் தேடுகிறார்கள். சரி, தற்போது நீங்கள் எங்கு இருக்கிறீர்கள் என்று ஏதாவது தெரியுமா?”

“தெரியாது. நடுக்கடல். நள்ளிரவு நேரம்... வேறு என்ன சொல்ல?”

"புஷ்பராஜ் அங்கு இருக்கிறாரா?”

"இருக்கிறார்.”

"பயப்படாதீர்கள். நிலைமையை அவர் சமாளித்துக் கொள்வார்."

"நான் அப்படித்தான் நம்புகிறேன்."

அப்போது கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. டிக்சன் எழுந்து வந்து கதவைத் திறந்தார். புஷ்பராஜ் வெளியே நின்று கொண்டு இருந்தார்.

"வாருங்கள்!” டிக்சன் வரவேற்றார்.

அவர் உள்ளே நுழைந்தார்.

“நீங்கள் எதையாவது தெரிவிக்க விரும்பினால், இதை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.” டிக்சன், தனது வாட்ச் சைக் கழற்றி அவரிடம்

கொடுத்தார்.

“ஹலோ மிஸ் டயானா, எஸ்.பி அங்கு இருந்தால் அவரிடம் கொடுங்கள்."

சற்று நேரத்தில் எஸ்.பி பேசினார். “சொல்லுங்கள் புஷ்பராஜ். எப்படி இருக்கிறீர்கள்?”

"நிலைமை சற்று மோசம்தான். கப்பலுக்குள் தற்சமயம் மூன்று பேர்-மூன்று வித நிலைமை!”

"மற்றவர்கள் யார்?”

"ஜான்ஸன், ராபின்சன், நான்."

"ராபின்சன் எப்படி?”

"அவன் என்னை அடையாளம் தெரிந்து கொண்டான். முக்கியமான விஷயம் கப்பல் தற்போது பம்பாயை நோக்கி விரைகிறது."

"அப்படியானால்... நாங்கள் என்ன செய்ய வேண்டும்.?”

"நான் சூழ்நிலையை விளக்குகிறேன். டிக்சனைக் கப்பலிலிருந்து அப்புறப் படுத்தத் திட்டம் இட்டிருக் கிறார்கள். அதற்குள் நாம் ஏதாவது செய்யாவிட்டால் நமது நோக்கம் நிறைவேறாது. கப்பலில் கேப்டன் இருந்தாலும் கப்பல் தற்போது என் கட்டுப்பாட்டில்தான் உள்ளது.”

"சரி, நாங்கள் விவாதித்து என்ன செய்யலாம் என்று தீர்மானிக்கிறோம்."

"சரி... உங்கள் முறைப்படியே அதெல்லாம் நடக்கட்டும்."

அத்துடன் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

கரையில் கங்காபிரசாத், அடுத்த கட்ட நடவடிக்கைக்கு உருவம் கொடுத்துக் கொண்டிருந்தார். அரபிக்கடலில் கப்பல் ஒன்று கன்னாபின்னாவென்று அலைவது நல்லது அல்ல என்று அவருக்குத் தெரியும்.

மட்டுமின்றி, தற்சமயம் பல்வேறு கப்பல்கள், வெவ்வேறு பெயர்களிலும், காரணம் சொல்லிக் கொண்டும் மறைமுகமாகவும் டிக்சனைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளன. இந்தச் சூழ்நிலையில் டிக்சன் உள்ள கப்பல் கரையை நெருங்குவது ஆபத்து. அதுவும் அந்தக்

கப்பலில் தற்சமயம் சரக்குகள் எதுவும் இல்லை.

எனவே, எப்படி இருப்பினும் கப்பல் பம்பாயை நெருங்கக் கூடாது. வெறும் கப்பலைத் துறைமுகத்துக்குள் அனுமதிக்க துறைமுக விதிகள் ஒப்புக் கொள்ளாது. எனவே, அதற்குள் எப்படியும் டிக்சனை அதிலிருந்து அப்புறப்படுத்தியாக வேண்டும்.

கப்பலில் எரிபொருளும், உணவுப் பொருளும் தீர்ந்து விடலாம். எனவே, அந்த வகையிலும் நெருக்கடி உருவாகலாம்.

அப்போது கங்காபிரசாத்திடம் இருந்த டிரான்ஸ்மிட்டர் ஒலியெழுப்பியது. ஜான்ஸனை இந்தப் பணிக்கு நியமித்த தலைமையகத்திலிருந்து வரும் தகவல். டிக்சனின் நிலை மையை விசாரிப்பது அவர்களின் நோக்கம்.

அரபிக் கடலில் இந்திய எல்லைக்கு மறு புறம் பயணம் செய்யும் ஒரு கப்பலில் இருந்து வருகிறது அந்தத் தகவல்.

டிக்சன் பயணம் செய்யும் கப்பலின் சரியான இடத்தைக் குறிப்பிட்டார் கங்காபிரசாத். “பிளாக்ரிப்பன் என்ற கப்பல் தற்சமயம் டிக்சனுடன் பம்பாயை நோக்கிச் செல்கிறது. ஆனால், அதற்கு முன்பே அவரை அதிலிருந்து அப்புறப்படுத்துவதுதான் நோக்கம்." என்று கங்காபிரசாத் குறிப்பிடவும் தவறவில்லை.

“சரி, மேற்கொண்டு நாங்கள் அந்தக் கப்பலைப் பின் தொடர்ந்து செல்கிறோம். உங்கள் கப்பலின் கேப்டனுக்கு இந்தத் தகவலைத் தெரிவித்து விடுங்கள்."

“என்ன சொல்ல வேண்டும்?”

"இன்னும் இருபத்துநான்கு மணி நேரத்துக்குள் மீன் பிடிப் படகு ஒன்று, டிக்சனை அழைத்துச் செல்வதற்காக பிளாக்ரிப்பனை நெருங்கும். தேவையான ஏற்பாடுகளைச் செய்யுமாறு சொல்லுங்கள்.”

"தெளிவாகச் சொல்லுங்கள்."

"டிக்சனை அதிலிருந்து வெளியேற்றிய பிறகு, பிளாக் ரிப்பன் எரிக்கப்படும்."

"அப்படியா!”

"ஆமாம்."

கங்காபிரசாத் டிரான்ஸ்மிட்டரை அணைத்துவிட்டு, தன்னருகில்

நிற்கும் இரண்டு அடியாட்களைப் பார்த்தார்.

"அந்தக் கப்பல் எரியக் கூடாது. அதற்கு முன், அது நமது கட்டுப்பாட்டுக்குள் வர வேண்டும். நமது வெடி பொருட்களை பத்திரமாகக் கொண்டு செல்ல அது பயன்படும்."

“நல்ல யோசனை!” அடியாட்களில் ஒருவர் சிலாகித்தார்.

"அப்படியானால் உங்களில் யாராவது ஒருவர் அந்தக் கப்பலுக்குச் செல்ல வேண்டும். மோட்டார்ப் படகை அமர்த்திக் கொள்ளுங்கள். அதற்கு முன் கேப்டனிடம் நீங்கள் வரும் தகவல் போய்ச் சேரவேண்டும். ஆனால், கேப்டனுக்கு நமது நோக்கம் ஒருபோதும் தெரியக் கூடாது. கப்பல் நமது கட்டுப்பாட்டுக்கு வந்துவிட்டால், மறு விநாடி அந்த கேப்டன் உயிருடன் இருக்கக் கூடாது. தேவைப்பட்டால் நீங்கள் இருவருமே செல்லுங்கள். டேவிட்டுக்குக் கப்பலைப் பற்றி நன்றாகத் தெரியுமில்லையா?” கங்காபிரசாத் கேட்டார்.

உடனே அவர்கள் இருவரும் அங்கிருந்து கிளம்பினர். கங்காபிரசாத்துக்குச் சொந்தமான மோட்டார் படகுகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்தனர். அதன் பெயர் புளூ ஏஞ்சல். அது ஒரு நவீனப் படகு. அதில் எல்லா விதமான சௌகரியங்களும் உள்ளன.

மற்ற படகுகளை ஒதுக்கிவிட்டு புளூ ஏஞ்சல், கடலை நோக்கி விரைந்தது.

32

டிக்சனை அழைத்துச் செல்லப் படகு வருகிறது என்ற செய்தியை அறிந்த புஷ்பராஜ் நிம்மதி இழந்தார்.

இப்போதைய சூழ்நிலையில் தனக்கு ஏதாவது நேர்ந்து விட்டால், அத்துடன் சாதகமான எந்த ஒரு வழியும் இல்லாமல் போய்விடும். ஏற்கெனவே, எதிரிகளின் எண்ணிக்கை அதிகம். மட்டுமின்றி, அவர்கள் பல்வேறு காரணங்களால் அதிகரித்துக் கொண்டும் இருக்கிறார்கள்.

எனவே, 'உடனடியாக ஏதாவது செய்தே ஆக வேண்டும்!’ என்ற முடிவுக்கு வந்தவர் கப்பலை உடனே நிறுத்துமாறு கட்டளையிட்டார்.

மோட்டார்ப் படகில் வருபவரைக் கப்பலுக்குள் நுழையவிடக் கூடாது என்று புஷ்பராஜ் தீர்மானித்தார்.

இரவு மணி ஒன்பது.

கேப்டனின் அறையிலிருந்து புஷ்பராஜ் வெளியே வந்தார். மேற்புற டெக்கை நோக்கிச் செல்லும் ஏணியில் ஏறினார்.

மேல்தளத்தை அடைந்தார்.

அங்கு எவரும் இல்லை. கடல் அமைதியாக இருந்தது. கேப்டனின் அறையில் இருந்து எடுத்து வந்த பைனாகுலர் மூலம் கடலின் அடிப்பரப்பு வரை நுட்பமாகப் பார்த்தார்.

சட்டென்று ஒளிப்பொட்டு ஒன்று அவரது பார்வையில் பட்டது. கிழக்குத் திசையிலிருந்து அது விரைந்து வந்து கொண்டு இருந்தது. அநேகமாக அதுதான் எதிராளிகள் டிக்சனுக்காக அனுப்பியிருக்கும் படகாக இருக்கும் என்று நினைத்தார்.

படகு நெருங்கி நெருங்கி வந்தது.

புஷ்பராஜ் நூலேணியைக் கடல் பக்கமாகத் தொங்க விட்டார்.

படகு, கப்பலை நெருங்கி நின்றது.

படகு நின்றதும் மனிதர் ஒருவர் நூலேணியைப் பிடித்துக் கொண்டு கப்பலின் மேற்பகுதியை நோக்கி விறுவிறுவென்று உயரத் தொடங்கினார். அந்த மனிதர் மேல் தளத்தை அடைவது வரை புஷ்பராஜ் மௌனமாக இருந்தார்.

“நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?” புஷ்பராஜ் வந்த மனிதரிடம் கேட்டார்.

“கங்காபிரசாத் அனுப்பி வைத்திருக்கிறார். என் பெயர் டேவிட் என்னைப் பற்றிய தகவல்களை ஏற்கெனவே கேள்விப்பட்டிருப்பீர்கள்!” டேவிட் கூறினான்.

"கிடைத்தது. வாருங்கள்...” புஷ்பராஜ் அந்த மனித ரைத் தனது அறைக்கு அழைத்துச் சென்றார்.

"மிஸ்டர் டேவிட், நீங்கள் வந்திருப்பது இந்தக் கப்பலைக் கைப்பற்றுவதற்கு அல்லவா? அதற்கு நான் உங்களுக்கு உதவுகிறேன். ஆனால், இந்தக் கப்பலைக் கொளுத்துவதற்கு வேறொருவர் வருகிறார்.” புஷ்பராஜ் கூறினார்.

“இது எனக்குப் புதிய தகவல். அப்படி வரப் போகிறவர் யார்?” டேவிட் கேட்டான்.

“இன்னார் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. ஆனால், அதற்கு முன்பாக நாம் வேறொரு வேலை செய்ய வேண்டும். இந்தக் கப்பலைக் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் கங்காபிரசாத் உங்களை அனுப்பி வைத்திருந்தால்... அதற்கு நான் உங்களுக்கு உதவ முடியும். என்ன சொல்கிறீர்கள்?”

“என்ன திட்டம்? சொல்லுங்கள். நான் கப்பலில் மாலுமியாகப் பணி புரிந்திருக்கிறேன். எந்தச் சூழ்நிலையை யும் சமாளிக்க என்னால் முடியும்." டேவிட் கூறினான்.

“நீங்கள் இந்தக் கப்பலின் நிலைமையை எப்படிப் புரிந்து கொண்டிருக்கிறீர்களோ அது எனக்குத் தெரியாது. உண்மை நிலை நீங்கள் நினைப்பதற்கு மாறாகவும் இருக்கலாம். இந்தக் கப்பலில் ஒரு புகழ்பெற்ற கிரிமினல் இருக்கிறான். அவனது உண்மையான பெயர் கிளமெண்ட் டிசூசா. தற்போதைய அவன் பெயர் ராபின்சன். திஹார் சிறையிலிருந்து தப்பித்தவன் அவன். அவனை மட்டும் உங்களால் சமாளிக்க முடிந்தால், உங்களது நோக்கம் நிறை வேறுவது சுலபம். அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டால், உங்களுக்கு முழு ஒத்துழைப்புத் தருவதற்கு நான் தயார் என்னை நீங்கள் நம்பலாம்!”

புஷ்பராஜ் இவ்வாறு சொன்னதற்கு ஒரு காரணம் இருந்தது. அனாவசியமாக ராபின்சனுடன் ஒரு மோதல் ஏற்பட்டு, அதனால் தனது திட்டங்கள் பாழாகிவிடக் கூடாது என்று அவர் நினைத்தார். நல்லவேளையாக அதற்கு ஏற்றாற் போல் ஒருவன் வந்து சேர்ந்திருக்கிறான்.

"அவர் எந்த அறையில் தங்கியிருக்கிறார்?” டேவிட் கேட்டான்.

“அதெல்லாம் சிக்கலானது. இரவு பத்து மணியானால், அவன் மேற்புறத் தளத்துக்கு வந்து நிற்பான்."

"அப்படியானால், நான் அவனை அங்கேயே சந்தித்துக் கொள்கிறேன்."

அப்போது டிரான்ஸ்மிட்டர் ‘பீப்... பீப்...’ என்று குரல் கொடுத்தது.

கங்காபிரசாத்தின் குரல் தெளிவாக ஒலித்தது. “டேவிட் வந்து சேர்ந்து விட்டாரா?”

உடனே புஷ்பராஜ் டேவிட்டிடம் பேசுமாறு சைகை செய்தார்.

"நான் வந்துவிட்டேன் பாஸ்!”

“நீங்கள் செய்ய வேண்டிய முதல் வேலை, ராபின் சனுடன் தொடர்பு கொள்வது. பிறகு கப்பலை கோவா வின் கடற்கரையை நோக்கிச் செலுத்தி, துறைமுகத்தை நெருங்காமல் கடலிலேயே இருக்க வேண்டும்.”

“பிறகு…”

"அங்கு நம் ஆள் ஒருவர் வருவார். இந்தக் கப்பலைப் பற்றிய தகவல்கள் எப்படியோ போலீஸுக்குத் தெரிந்திருக் கிறது. அவர்கள் கப்பலைச் சுற்றி வளைப்பதற்கு முன்பாக, நமது கைதியை பத்திரமான வேறோர் இடத்துக்கு மாற்ற வேண்டும்."

“அதற்கு நான் எப்படி உங்களுக்கு உதவ முடியும்?" டேவிட் கேட்டான்.

“நீங்கள், ராபின்சனைத் தொடர்பு கொண்டால் எல்லாவற்றையும் அவர் விளக்குவார்.” கங்காபிரசாத்தின் குரல் உறுதியாக ஒலித்தது.

“சரி.." டேவிட் ஒப்புக் கொண்டான்.

தொடர்பு துண்டிக்கப்பட்டது.

“ஒரு விஷயம் ஞாபகம் இருக்கட்டும். அந்த ராபின்சன் உயிரோடு இருப்பதுவரை நமது திட்டம் நிறைவேறாது. எனவே, நான் சொன்னது போல் செய்யுங்கள்.” புஷ்பராஜ் கூறினார்.

டேவிட் சம்மதத்துக்கு அடையாளமாகத் தலையாட்டிக் கொண்டான்.

ஏறத்தாழப் பத்து மணியளவில் டேவிட், கப்பலின் மேல்தளத்துக்கு வந்தான். ராபின்சன் வழக்கம்போல் அங்கு நின்று கொண்டிருந்தான்.

டேவிட் வருவதை ராபின்சன் கவனிக்கவில்லை.

ராபின்சன் கம்பித் தடுப்பை ஒட்டி நின்று கொண்டிருந்தான். மெதுவாக அவனை நோக்கி நகர்ந்த டேவிட், ராபின்சனை அலாக்காகத் தூக்கிக் கடலில் வீசி எறிந்தான்.

பிறகு கம்பித் தடுப்பை நெருங்கிய டேவிட், கடற் பகுதியைப் பார்த்தான்.

இருட்டில் எதுவும் தெரியவில்லை.

அங்கிருந்து கிளம்பிய டேவிட் கீழ்த்தளத்துக்கு வந்தான். தகவலை உடனே புஷ்பராஜிடம் தெரிவிக்கவும் செய்தான்.

அந்தத் தகவல் சரிதான் என்றாலும் அத்துடன் அவன் தொலைந்து விட்டதாக நினைக்க முடியாது. அவன், அவ்வளவு சுலபமாகக் சாகக் கூடியவன் அல்ல. எனினும் தகவலை டிக்சனிடம் தெரிவிக்க விரைந்தார் புஷ்பராஜ்.

தகவலைக் கேட்டதும், டிக்சன் உடனே டயானாவுடன் டிரான்ஸ்மிட்டர் மூலமாகத் தொடர்பு கொண்டார்.

டயானாவுக்கு அருகில் அப்போதும் காவல்துறை அதிகாரிகள் காத்திருந்தனர்.

ஜோஸப் மாத்யூ லைனில் வந்த பிறகு அது வரையிலான நிலைமையை புஷ்பராஜ் விவரித்தார்.

“கப்பலை, தவிர்க்க முடியாத ஏதாவது ஒரு காரணம் சொல்லி அருகிலுள்ள கடற்கரையை நெருங்க முயற்சி செய்யுங்கள்!” ஜோஸப் மாத்யூ யோசனை கூறினார்.

“அதற்கு வாய்ப்பு இல்லை. கப்பல் பம்பாயை நோக்கிச் செல்கிறது. ஆனால், கோவாவில் கப்பலை நிறுத்த வேண்டும் என்றொரு உத்தரவு வந்துள்ளது. எனவே, நீங்கள் கோவாவுக்கு வருவதானால் எல்லோரையும் ஒட்டு மொத்தமாகப் பிடித்து விடலாம். புஷ்பராஜ் கூறினார்.

“கோவாவில் அவர்களது திட்டம் என்ன?”

"டிக்சனை வேறு கப்பலில் மாற்றுவதுதான். நீங்கள் மீன்பிடிப்பவர்களாக மோட்டார் படகு ஒன்றில் கப்பலுக்கு வந்து சேருங்கள். எல்லாம் நல்லபடியாக முடிந்துவிடும்.”

"சரி... அப்படியே செய்கிறோம்."

அடுத்த கட்ட நடவடிக்கைகள் ஒரு வடிவத்துக்கு வந்து விட்டதால் புஷ்பராஜ், டிக்சனிடம் தகவல் தெரிவித்து விட்டு, உடனே மேற்புற டெக்குக்கு வந்து சேர்ந்தார்.

டெக்கில் அப்போது செக்யூரிட்டிகள் எவரும் இருக்க வில்லை. புஷ்பராஜ் மட்டுமே அங்கு தென்பட்டார்.

அப்போது டெக்கின் விளிம்பிலிருந்து தலை ஒன்று உயர்வதை புஷ்பராஜ் கவனித்தார். உடனே, அவர் அடுக்கி வைத்திருந்த கயிற்றுப் பகுதியில் மறைந்து நின்று கொண்டார்.

தலை மேற்புறமாக உயர்ந்தது.

அது, பதுங்கிப் பதுங்கி மேலெழும்பியது.

ஊன்றிக் கவனித்தபோது அது ராபின்சன் என்பது விளங்கியது.

ராபின்சன் தப்பித்திருக்கிறான்!

அப்படியானால் அவன் நேராக மோத வருவது தன்னிட மாகவே இருக்கும். அவனைப் பிடித்துத் தள்ளியது புஷ்ப ராஜ்தான் என்று அவன் தீர்மானித்திருக்கலாம். தான், கப்பலில் இருப்பதை அவன் ஏற்கெனவே ஊகித்திருக்கலாம்.

புஷ்பராஜ் மெதுவாக அவனை நெருங்கினார். அவரை ஏறிட்ட ராபின்சன் திகைப்பு அடைந்தான்.

“நீங்கள் இங்கேயேதான் இருக்கிறீர்களா?” ராபின்சன் கேட்டான்.

"நான் வேறு எங்கு செல்வது?”

“என்னைக் கடலில் தள்ளியது?”

"அந்த மாதிரி கோழைத்தனமான செயல்களை நான் ஒருபோதும் செய்வதில்லை. நான் எவரிடமும் நேரடியாக மோத விரும்புபவன். இப்போது கூட நான் அதற்குத் தயார்."

ராபின்சன் அவரை நெருங்காமல் சற்றுத் தொலைவிலேயே நின்றான்.

"அப்படியானால் வேறு யார் என்னைக் கடலில் தள்ளியது?”

“யார் என்று நான் எப்படி உறுதியாகச் சொல்ல முடியும்? நான் பார்க்காத ஒன்றை எப்படிக் கூறுவது? இப்போதுதான் கப்பலில் எல்லாவற்றுக்கும் போட்டி ஆயிற்றே. கப்பலுக்குப் புதிதாக ஒருவர் வந்திருக்கிறார். பெயர் டேவிட். கப்பலையும், புரபசர் டிக்சனையும் கடத்திச் செல்வது அவரது நோக்கம். இவர் வேறொரு கூட்டத்தைச் சேர்ந்தவரா அல்லது உங்களை நம்பாமல் அனுப்பி வைத்திருக்கிறார்களோ என்னவோ?”

புஷ்பராஜ் கூறியது ராபின்சனுக்குச் சுருக்கென்று தைத்தது.

“கங்காபிரசாத் அப்படியெல்லாம் செய்யக் கூடியவர் என்று எனக்குத் தெரியும். எப்படி இருந்தாலும் நான் வெற்றி பெற வேண்டியது அவசியம். இது என் எதிர்காலப் பிரச்சினையும் கூட!”

"நாம் உடனடியாகக் கரையை நெருங்குவதுதான் நமக்கு நல்லது. எனவே, அதற்கான வழியைப் பார்ப்போம்."

"இப்போது கப்பல் எங்கு போகிறது?" ராபின்சன் கேட்டான்.

"கோவா கடற்கரையை ஒட்டிப் பயணம் செய்கிறோம். எனவே, உடனடியாக நாம் ஒரு தீர்மானத்துக்கு வர வேண்டும்."

"நல்ல யோசனை. நான் முதலில் டேவிட்டைச் சந்தித்துவிட்டு வருகிறேன். அதன் பிறகு தீர்மானம்" என்ற ராபின்சன் கீழ்த்தளத்தை நோக்கி விரைந்தான்.

அவனது அறைக்குள் நுழைந்து உடை மாற்றினான்.

கங்காபிரசாத் தன்னை வேவு பார்க்கவோ, வெற்றி கொள்ளவோ ஒரு மனிதனை அனுப்பி வைத்திருந்தால், அவர் தன்னை நம்பவில்லை என்று பொருள். அப்படி யானால் இரட்டை விளையாட்டு என்பது தனக்கு இழைக்கப்பட்ட துரோகம் அல்லவா? எனவே, எப்படியும் அதை முறியடிக்க வேண்டும்.

அதே சந்தர்ப்பத்தில் கங்காபிரசாத்தின் ரகசிய பங்களா வுக்குள் வேறு சில ஆலோசனைகளும் நடைபெற்றுக் கொண்டு இருந்தன.

கோவாவிலோ அதற்குள் வேறு ஏதாவது பகுதியிலோ டிக்சனை அந்தக் கப்பலிலிருந்து இடம் மாற்ற வேண்டும்.

டிக்சனைச் சுமந்து செல்லும் கப்பல் குறித்து போலீஸாருக்குத் தகவல் எட்டியுள்ளதால், அவர்கள் பல்வேறு வழிகளில் அவரை மீட்க முயற்சி செய்வார்கள். எனவே, முந்திக் கொள்வதுதான் புத்திசாலித்தனம்.

மற்றொரு புறம் டிக்சனைக் குறித்து ஜான்ஸன் அவ்வப்போது சரியான தகவல்களைத் தருவதில்லை. டிக்சனை, ஜான்ஸன் பத்திரமாகக் கொண்டு போய்ச் சேர்த்தால் மட்டுமே தனக்குத் தருவதாக அவர்கள் குறிப்பிட்டுள்ள பெரும் தொகை கிடைக்கும். எனவே, அதுவரை தனது பணி தொடர வேண்டும் என்பது மறைமுகமான நிபந்தனை எப்படியிருப்பினும் ஒப்புக் கொண்ட இதை முடித்தே தீர வேண்டும். இல்லாவிட்டால் தொழில் தெரியாதவன் என்ற கெட்டபெயர் பெறுவதுடன், இதுவரை தான் செய்தவையும், செலவுகளும் தனக்கு நஷ்டத்தை ஏற்படுத்தும். எனவே, தன்னால் முடிந்த எல்லா வழிகளிலும் அதற்காகச் செயல்பட வேண்டும். கங்காபிரசாத் விவாத முடிவில் ஒரு தீர்மானத்துக்கு வந்தார்.

அன்று மாலை நேரத்தில் கங்காபிரசாத்துக்கு ஒரு தகவல் கிடைத்தது.

அதாவது, கங்காபிரசாத்தைச் சந்திப்பதற்காக, பம்பாயிலிருந்து ஒருவர் வந்திருக்கிறார். கங்காபிரசாத்தின் வெளியுலகத் தொடர்புகளில் அவருக்கு உதவும் டெலிபோன் ஆபரேட்டர் ஒருவர் கூறினார். இது போன்ற தொடர்புகள் அவருக்கு ஏராளம். அவர்களுக்கெல்லாம் மாதந்தோறும் ஒரு தொகை பக்கவாட்டு வருமானமாக, கங்காபிரசாத்திடமிருந்து போய்க் கொண்டிருக்கிறது.

கங்கா பிரசாத் தனது நம்பிக்கைக்கு உரிய ஜஸ்ட்டினை அழைத்தார்.

“ஒட்டல் த்ரீ ஸ்டாரில் நமக்கு வேண்டிய ஒருவர் வருகிறார். வழக்கம் போல் அவரை இங்கு அழைத்து வர வேண்டும். மறக்காமல் வாடகைக்கு அமர்த்தும் கார் நம்பரைக் குறித்துக் கொள்.”

ஜஸ்ட்டின் பயன்படுத்துவது ஒரேயொரு அம்பாஸ்டர் காரைத்தான். ஆனால், அதன் பதிவு எண் ஒவ்வொரு முறையும் ஒவ்வொன்றாக இருக்கும். சில சமயம் அதன் வண்ணமும் மாறுவது உண்டு.

குறிப்பிட்ட நபர் ஒருவர் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்தும் வண்டி ஒரே எண் மற்றும் வண்ணம் கொண்டதாக இருக்கக்கூடாது என்பது கங்காபிரசாத்தின் யோசனை. எதிரிகளுக்குக் கடுக்காய் கொடுக்கவே இப்படி யொரு முறையைக் கைக்கொள்கிறார் கங்கா பிரசாத்.

இந்த முறையும் ஜஸ்ட்டின் அதையெல்லாம் கவனமாகப் பின்பற்றினான்.

காரை, ஒட்டலின் பார்க்கிங் பிளேஸில் நிறுத்திய ஜஸ்ட்டின், நேராக டெலிபோன் ஆபரேட்டரை நெருங்கினார்.

“அறை எண் நூற்றுப்பன்னிரண்டு” என்று தெரிவித்தார் அவர்.

அப்போது யதேச்சையாக அங்கு வந்த எஸ்.பி ஜோஸப் மாத்யூ காரை பார்க் செய்யும்போது எதிர்பாராமல் கவனித்தார். ஒரே ரிஜிஸ்ட்ரேஷன் நம்பரில் மற்றொரு கார் அருகிலேயே நிற்கிறது.

ஜஸ்ட்டின் விருந்தாளியைச் சந்திக்க ஒட்டலுக்குள் போயிருந்த நேரம் எஸ்.பி அந்த காரை நெருங்கினார்.

ஒரே நம்பரில் இரண்டு கார்கள்!

அவர் அந்த கார்களை நெருங்கி ஊன்றிக் கவனித்தார்.

33

ஜோஸப் மாத்யூவின் வியப்பு பன்மடங்கானது.
இரண்டுமே அம்பாஸ்டர் கார்கள்.

நிறங்கள் மட்டும் வெவ்வேறு.

ஒன்று கறுப்பு, மற்றொன்று தந்தத்தின் நிறம்.

எஸ்.பி நேராக விசாரணை கௌண்டரை நெருங்கினார்.

"இங்கு பார்க் செய்யப்பட்டுள்ள கார்கள் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?" எஸ்.பி கேட்டார்.

“தெரியாது சார்!” ரிசப்ஷனிஸ்ட் கொட்டாவி விட்டபடி பதிலளித்தார்.

"அப்படியானால் சரி.” என்ற எஸ்.பி டெலிபோனை நெருங்கி அதன் ரிசீவரைக் கையில் எடுத்தார்.

காவல் நிலையத்துக்கு போன் செய்த எஸ்.பி உடனடி யாக இரண்டு போலீஸாரை த்ரீ ஸ்டார் ஒட்டலுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

மறுபடியும் கார்கள் நிற்கும் பகுதியை அடைந்தார். காத்திருந்தார்.

சற்று நேரத்தில் ஒட்டலிலிருந்து வெளியே வந்த ஒருவர் குறிப்பிட்ட அம்பாஸ்டர் காரை நெருங்கினார்.

உடனே எஸ்.பி கேட்டார். “சார்... நீங்கள்?”

“டாக்டர் பெயர் ஜெயச்சந்திரன்."

“இந்த காரின் ஆர்.சி. புத்தகத்தை நான் பார்க்க வேண்டுமே.”

"நீங்கள் யாரென்று எனக்குத் தெரியவில்லையே?” யூனிஃபார்ம் அணியாமல் வந்த எஸ்.பி-யிடம் டாக்டர் கேட்டார்.

"கிரைம் பிராஞ்ச் எஸ். பி. பெயர் ஜோஸப் மாத்யூ!"

"சாரி சார். இதோ தருகிறேன்.”

அது உண்மையான ஆர்.சி. புத்தகம்தான். அதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை. அதை அவரிடம் திரும்பக் கொடுத்த எஸ்.பி கூறினார்: “இதோ உங்களது காருக்கு அருகில் மூன்றாவதாக நிற்கும் காரை கவனியுங்கள்."

டாக்டர் பார்த்த போதுதான் அவருக்கு விஷயம் விளங்கியது.

“மன்னிக்க வேண்டும் சார். நான், யாரோவென்று நினைத்தேன். மட்டுமின்றி, நீங்கள் கேட்டதற்கான காரணமும் எனக்குப் புரியவில்லை. இனி, நான் போகலாம் இல்லையா?” டாக்டர் கேட்டார்.

“போகலாம். நன்றி!” எஸ்.பி விடை கொடுத்தார்.

அப்போது ஜஸ்ட்டின் 112-ஆம் நம்பர் அறைக்குள் விருந்தாளியுடன் பேசிக் கொண்டிருந்தான்.

“டிக்சன் தொடர்பான முக்கிய விஷயத்துக்காக வந்திருக்கிறேன். உங்கள் தலைவரிடம் எல்லாம் பேசியாகி விட்டது."

“சரி நான் என்ன செய்ய வேண்டும்?”

“இன்றிரவு பன்னிரண்டு மணிக்கு இங்கு வந்தால் முன்பணம் தரப்படும்."

ஜஸ்ட்டின் பதில் சொல்ல முற்படுவதற்குள் அங்கிருந்த இண்டர்காம் ஒலித்தது.

விருந்தாளி ரிசீவரை எடுத்தார்.

ரிசப்ஷனிஸ்ட் பேசினார்.

நடந்ததை அவர் விவரித்தார்.

“நீங்கள் ஒரு முட்டாள்தனம் செய்திருக்கிறீர்கள்." ரிசீவரை கிராடிலில் வைத்த விருந்தாளி கூறினார்.

“என்ன!” ஜஸ்ட்டின் கேட்டான்.

"உங்கள் காரின் அருகில், அதே நம்பர் கொண்ட உண்மையான மற்றொரு காரும் இருப்பதை நீங்கள் கவனிக்கவில்லை."

ஜஸ்ட்டின் இருக்கையிலிருந்து துள்ளியெழுந்தான்.

“நான் பிறகு வருகிறேன்." ஜஸ்ட்டின் அந்த அறையி லிருந்து உடனடியாக வெளியேறினான்.

வரவேற்பு கௌண்டரை நெருங்கிய ஜஸ்ட்டின் கார் நிறுத்தியிருக்கும் இடத்தைப் பார்த்தான்.

"உங்கள் காரை அப்படியே விட்டுவிடுவதுதான் நல்லது என்று தோன்றுகிறது." ரிசப்ஷனிஸ்ட் கூறினான்.

"உண்மைதான்" என்ற ஜஸ்ட்டின் நேராக வாசலை நோக்கி விரைந்து ஆட்டோ ஒன்றில் ஏறிக் கண்ணிமைப்ப தற்குள் மறைந்தான்.

அதற்குள் போலீஸார் வந்து விட்டனர். அவர்களிடம் ஏதேதோ உத்தரவுகளைப் பிறப்பித்த ஜோஸப் மாத்யூ உடனே அங்கிருந்து கிளம்பினார்.

நேராக ரிசப்ஷனிஸ்ட்டிடம் வந்த மாத்யூ கேட்டார்.

"அந்த காரில் வந்தவரை உங்களுக்குத் தெரியுமா, தெரியாதா?"

"தெரியாது சார்!"

"அதனால் என்ன... பரவாயில்லை!"

ஜோஸப் மாத்யூ அதன் பிறகு எதுவும் விசாரிக்காமல் தனது காரில் ஏறிக் கிளம்பினார்.

போலீஸார் இருவரும் அந்த காருக்கு அருகிலேயே காவலிருந்தனர்.

மதியம் ஒரு மணியானபோது ரிசப்ஷனிஸ்ட் டியூட் டியை முடித்துக் கொண்டு தனது பைக்கை நெருங்கினான். உடனே போலீஸ்காரர் ஒருவர், அவனை நெருங்கினார்.

"நீங்கள் போகிற வழியில் என்னை ஸ்டேஷனில் இறக்கிவிட முடியுமா?"

"அதற்கென்ன... வாருங்கள் சார்!"

போலீஸ்காரர் பில்லியனில் உட்கார்ந்தார். பைக் கிளம்பியது.

போலீஸ் ஸ்டேஷன் வாசலில் பைக் பிரேக்கிட்டு நின்றது. வண்டியிலிருந்து இறங்கிய போலீஸ்காரர், வண்டி யோட்டி வந்தவனின் கழுத்துப் பகுதியில் கொத்தாகப் பிடித்துக் கீழே தள்ளினார். அவன் தரையிலிருந்து எழுந்திருக்க முற்படுவதற்குள் மேலும் இரண்டு போலீஸார் அவனைச் சூழ்ந்து கொண்டனர்.

எஸ்.பி ஜோஸப் மாத்யூ முன்பாகக் கொண்டு போய் நிறுத்தப்பட்டான்.

"உன் பெயர்?"

“பிரான்சிஸ்!”

“இவன் போலீஸ் கிளப்பில் என் விருந்தாளியாக இரண்டு நாள் இருக்கட்டும்!”

"சார்... நான் அப்படியென்ன தவறு செய்தேன்?”

"அது உனக்கும் எனக்கும் இப்போது தெரியாது. சீக்கிரம் தெரிந்து கொள்ளலாம். எல்லாம் அங்குதான்!”

எஸ்.பி கிளம்பிய ஜீப்பில் அவனுடன் போலீஸார் இருவரும் சென்றனர்.

அங்கு டி.ஜ.ஜி. இஸ்மாயிலும் இருந்தார்.

“முதலில் ஒன்றைத் தெரிந்து கொள். எங்கள் கேள்விகளுக்குச் சரியான பதில் தேவை. உண்மையைத் தவிர வேறு எதுவும் எங்களுக்குத் தேவையில்லை. உண்மையைச் சொல்வது வரை நீ இங்கிருந்து வெளியேற முடியாது. முதல் கேள்வி, அங்கு எவ்வளவு நாட்களாக நீ வேலை செய்கிறாய்?”

“இரண்டு வருடங்களாக."

"அந்த ஒட்டலின் உண்மையான முதலாளி யார்?”

“தெரியாது!”

"உண்மை தூரத்தில் இருக்கிறது. நெருங்கி வா. முதலாளி யாரென்று உனக்குத் தெரியாது என்பதை நாங்கள் நம்ப வேண்டுமா? யாரோ ஒரு பெண்மணி... பெயர் அம்பிகாபாய். இது உண்மையா?”

"அப்படித்தான் நானும் கேள்விப் பட்டிருக்கிறேன். இதுவரை அவரை நேரில் பார்த்தது இல்லை!"

‘'நீ சொல்வது உண்மையா என்று சோதித்து விட்டால் போகிறது!” என்ற ஜோஸப் மாத்யூ தனது இருக்கையிலிருந்து எழுந்து, ரிசப்ஷனிஸ்ட்டின் நெஞ்சுப் பகுதியைக் கொத்தாகப் பிடித்து சுமார் இரண்டு அடி உயரம் வரை தூக்கிப் பொத்தென்று இருக்கையில் போட்டார்.

அவன் நிலைகுலைந்தான். அவன் உடல் நடுங்கத் தொடங்கியது.

“அந்த அம்பிகாபாய் பம்பாயில் லேடீஸ் ஹாஸ்ட்டல் ஒன்றயும் நடத்துகிறாள்...”

"உண்மைதான் சார்.”

“சரி. இப்போது சொல். அந்த காரின் உரிமையாளரை உனக்குத் தெரியும். நீ எச்சரித்ததால்தான் அவர் காரை அங்கேயே போட்டுவிட்டுப் போனார்... இல்லையா?”

ஒரு கணம் விழித்தவன், மிரண்டு போய், 112- ஆம் நம்பர் அறையிலிருந்து தொடங்கி சென்சார் செய்து சில தகவல்களைக் கூறினான்.

உடனேயே போலீஸார் த்ரீ ஸ்டார் ஒட்டலுக்கு விரைந்தனர். அந்த அறையில் தங்கியிருப்பவரைக் கைது செய்யும் வாரண்டுடன்.

ஆனால், அந்த அறை காலியாக இருந்தது.

“வாங்கிய காசுக்கு வஞ்சகம் இல்லாமல் வேலை செய்திருக்கிறாய். சபாஷ். சம்பந்தப்பட்டவர்களை எல்லாம் எச்சரித்துக் காப்பாற்றி விட்டாய். இன்றோ நாளையோ இதற்குரிய சன்மானத்தையும் பெறுவாய். ப்ச். அது தவறி விட்டது. பரவாயில்லை... அதையும் சேர்த்து நாங்களே தந்து விட்டால் போகிறது. ஆனால், எங்களின் நடைமுறை வேறு மாதிரி. அதனால் நீ கொஞ்சம் சிரமப்படத்தான் வேண்டும்.'' எஸ்.பி -ஜோஸப் மாத்யூ கூறினார்.

பிரான்சிஸ் சந்தேகத்துடன் அவரை ஏறிட்டான்.

"நான் அங்கு வந்தபோதே உன்னை எடை போட்டு விட்டேன். இருந்தாலும் ஒரு சிறு சந்தேகம். எனவே, கொஞ்சம் விட்டுப் பிடித்தேன். அதனால் நீ என்னை முட்டாள் என்று நினைத்துவிட்டாய்!” என்ற ஜோஸப் மாத்யூ மீண்டும் ஒரு தடவை அவனைக் கொத்தாகப் பிடித்து உயர்த்தி நாற்காலியில் விசையுடன் போட்டார். பிரான்சிஸ் உடல் மொத்தமும் நொறுங்கியது போல் துடித்தான்.

“நமது நாட்டை அழிக்க நினைப்பவர்களுக்கு நீ, உன்னையறியாமல் உதவி செய்கிறாய். அதுவும் அவர்கள் போடும் எலும்புத் துண்டுக்காக. அதனால் உன்மீது எனக்குத் துளிகூடக் கருணையோ, இரக்கமோ தோன்றாது. மரியாதையாகச் சொல். யார் இந்த விஷயத்தில் உன் முதலாளி?” எஸ்.பி-யின் குரல் படிப்படியாகக் கடுமை அடைந்தது.

பிரான்சிஸ் பதற்றம் அடைந்தான். உயிர் வேதனையை அனுபவிக்கத் தயாராக இல்லாதவனைப் போல் நடுக்கத் துடன் பேசத்

தொடங்கினான்.

“கங்காபிரசாத்!”

“யார் அந்த கங்காபிரசாத்? அவர் எங்கே இருக்கிறார்? சமூகத்துக்கு அவர் என்ன பெயரில் அறிமுகம்?"

"அவரைப் பற்றி எனக்கு அதிகமான தகவல்கள் தெரியாது. ஒட்டலுக்கு வரும்போது மட்டுமே நான் பார்த்துப் பேசியிருக்கிறேன்."

“ஒட்டலுக்கு அவர் எப்போதெல்லாம் வருவார்?”

“அதற்கு ஓர் ஒழுங்குமுறை கிடையாது!”

“ஒகோ அப்படியா... அப்படியானால் நீ அவரைத் தொடர்பு கொள்வாய்... இல்லையா?”

“இல்லை அவராகத் தொடர்பு கொள்ளும்போதுதான் நான் பேசுவேன்."

“அவரைத் தொடர்பு கொள்ளும் நம்பர் எதுவும் உன்னிடம் இல்லையா? பிறகு எப்படி நீ அவருக்கு உளவு சொல்வாய்?”

“நான் அப்படி எதுவும் சொல்லவில்லை... வந்து...”

அப்போது தொலைபேசி அலறியது.

ஜோஸப் மாத்யூ ரிசீவரை எடுத்தார்.

“ஹலோ... யார் பேசுவது? என்ன வேண்டும் உங்களுக்கு?” அவர் கேட்டார்.

“நீங்கள் தற்போது விசாரித்துக் கொண்டிருக்கும் கங்கா பிரசாத் என்பது என் பெயர் என்னைப் பற்றி விசாரித்து அந்த அப்பாவி மனிதனை நீங்கள் தொந்தரவு செய்வது நல்லதாகத் தெரியவில்லையே? ஒரு சிறிய விண்ணப்பம். நீங்கள் அந்த மனிதனுக்கு ஏதாவது தீங்கு இழைத்தால், உங்கள் துறையிலிருந்து டாக்டர் என்ற பெயரில் விஞ்ஞானி டிக்சனின் கப்பலில் நுழைந்திருக்கும் அந்த மனிதனின் உயிருக்கும், அவருக்கு உதவும் மனிதர்களுக்கும் என்ன நிகழும் என்று நான் சொல்ல வேண்டிய தில்லை என்று நினைக்கிறேன். இந்த அப்பாவிக்கு என்ன நிகழ்கிறதோ, அடுத்த பத்து நிமிடத்துக்குள் அது, அந்த டாக்டருக்கும் நிகழும். எனவே, என் மீது நம்பிக்கை இருந்தால் அந்த பிரான்சிஸை மேற்கொண்டு கேள்வி எதுவும் கேட்காமல் விட்டு விடுவது

உங்களுக்கு நல்லது.”

ஜோஸப் மாத்யூ பதில் சொல்வதற்குள் எதிர்முனையில் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

34

அந்தத் தொலைபேசி அழைப்பு ஜோஸப் மாத்யூவை நிலைகுலையச் செய்தது என்பது உண்மை! நடப்பதை எல்லாம் நேரில் காண்பது போன்ற விவரிப்பு, இப்போது எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளாவிட்டால் நிலைமை எக்கச்சக்கம் ஆகிவிடும்.

“என்ன செய்யலாம்?” ஜோஸப் மாத்யூ அருகில் இருந் தவர்களிடம் நிலைமையை விளக்கிவிட்டுக் கேட்டார்.

“நிலைமை எப்படி இருந்தாலும் தற்சமயம் அவரை விட்டுவிடுவதுதான் நல்லது. இதனால் எதிராளியின் பயம் அதிகமாகும் என்பது நிச்சயம்!” அப்துல் கபூர் பேசினார்.

“சரி” என்ற ஜோஸப் மாத்யூ பிரான்சிஸை நெருங்கினார்.

“பிரான்சிஸ் நிலைமை உனக்குப் புரிந்திருக்கும். ஒரு பயங்கரமான கூட்டத்துடன் நீ தொடர்பு கொண்டிருக்கிறாய். அதற்குரிய பலனை நீ அனுபவித்தே ஆக வேண்டும். அதனால் இப்போது நீ போகலாம்!”

பிரான்சிஸ் அங்கிருந்து வெளியேறினான்.

அவன் அந்த அறையிலிருந்து வெளியேறியதும், போலீஸ்காரர்கள் மாறி மாறி அவனது நடவடிக்கை களைக் கவனிக்க வேண்டும் என்று ஜோஸப் மாத்யூ போலீஸ்காரர்களிடம் கட்டளையிட்டார்.

அங்கிருந்து கிளம்பிய பிரான்சிஸ் நேராக ஒட்டலுக்குச் சென்றான். தனது அறைக்குள் நுழைந்து, குளித்து உடை மாற்றினான். அப்போது ஒரு மனிதர் அந்த அறைக்குள் நுழைந்தார். அவர் கங்காபிரசாத்தின் கூட்டத்தைச் சேர்ந்தவர்.

“போலீஸ்காரர்கள் உங்களிடம் மிகவும் கடுமையாக நடந்து கொண்டார்களா?” வந்தவன் கேட்டான்.

“சித்ரவதை செய்தார்கள். நான் வாயைத் திறக்க வில்லை."

“பிறகு...”

“நீ பயங்கரமானவர்களுக்குத் துணையாக இருக்காதே என்று கூறி என்னை அனுப்பி விட்டார்கள்."

“ம்... பிறகு?”

“சரி... என்றேன்!”

"உன்னை அழைத்துக் கொண்டு போகச் சொல்லி யிருக்கிறார்!”

“யார்?”

“உங்கள் ஒட்டல் முதலாளி!”

"ஐயோ... எதற்காக?"

“அதெல்லாம்... அங்கு போன பிறகு புரியும்."

பிரான்சிஸுக்கு அப்போது அதற்குக் கீழ்ப்படிவதைத் தவிர வேறு வழியில்லை. ஒட்டல் முதலாளியின் கட்ட ளைக்குச் கீழ்ப்படியவில்லை என்றால் அதுவும் வேலை பறிபோக ஒரு காரணமாகிவிடும். எனவே அவன், வந்தவனுடன் புறப்படத் தயாரானான்.

“கீழே ஜீப் இருக்கிறது!” வந்தவன் கூறினான்.

அவர்களின் ஜீப் அங்கிருந்து கிளம்பியதும் அவர்களை போலீஸாரின் ஜீப்பும் பின்தொடர்ந்தது.

மோட்டார் பைக் ஒன்று பின்தொடர்வதை ஜீப் ஒட்டுபவன் கவனித்தான்.

சட்டென்று சந்தேகத்தால் அவன் ஜீப்பை நிறுத்தினான்.

"நாம் இங்கு இறங்கிக் கொள்வோம். யாரோ நம்மைப் பின்தொடர்கிறார்கள்." ஜீப் டிரைவர் கூறினார்.

ஜீப்பிலிருந்து இருவரும் இறங்கி ஓடத் தொடங்கினர்.

ஜீப் நின்றதைக் கவனித்த போலீஸ்காரர் அவர்கள் இருவரும் ஒடுவதைக் கவனிக்கவில்லை.

சற்றுநேர இடைவெளிக்குப் பிறகு மோட்டார்பைக், ஜீப்பை ஒட்டி வந்தது.

அதற்குள் எவரும் இல்லையென்பது அப்போதுதான் அவருக்கு

விளங்கியது. சற்றுத் தூரம் பைக்கை ஒட்டிச் சென்ற அந்த போலீஸ்காரர் சுற்றுமுற்றும் தேடினார். எவரும் அவர் கண்ணுக்குத் தட்டுப்படவில்லை.

திரும்ப ஜீப்பை நெருங்கிய போலீஸ்காரர் அதன் ரிஜிஸ்ட்ரேஷன் எண்ணைக் கவனித்தார். அதில் இரண்டு எண்கள் தேய்த்து அழிக்கப்பட்டிருந்தன. எனவே, அந்த ஜிப்பை ஒட்டிச் செல்வது என்று தீர்மானித்தார். சற்றுத் தொலைவிலிருந்த பெட்டிக்கடையில் மோட்டார் பைக்கை பார்த்துக் கொள்ளுமாறு விட்டுவிட்டு வந்த போலீஸ்காரர் மீண்டும் ஜீப்பை நெருங்கினார்.

ஜீப்பின் சாவி அதன் இடத்திலேயே தொங்கிக் கொண்டிருந்தது ஜீப்பை ஸ்டார்ப் செய்து அந்தப் பாதையிலேயே முன்னேறினார்.

பாதை இரண்டு முறை வளைந்து சென்ற பிறகு புதர் மண்டிய ஒரு நிலப்பகுதியும், அதன் நடுவே பாழடைந்த வீடு ஒன்றும் தென்பட்டன. அந்த வீட்டுக்குள் தன்னந் தனியாக நுழைவது நல்லது அல்ல என்று கருதிய போலீஸ் காரர், ஜீப்பை போலீஸ் கிளப்புக்கு ஒட்டி வந்தார்.

நடந்ததையெல்லாம் விவரிக்கவும் செய்தார்.

"அந்த வீட்டை நாம் சோதனை போட்டால் என்ன?" இஸ்மாயில் கேட்டார்.

"அதற்கென்ன... சோதனை போட்டு விடலாம். யாராவது என்னுடன் கிளம்புங்கள்!" ஜோஸப் மாத்யூ தனது இருக்கையிலிருந்து எழுந்தார்.

சற்று நேரத்துக்குள் போலீஸ் ஜீப் ஒன்று அவர்களை அந்த இடத்துக்குக் கொண்டு வந்து சேர்த்தது.

"அதோ தெரிவதுதான் நான் குறிப்பிட்ட வீடு." போலீஸ்காரர் சுட்டிக் காட்டினார்.

வாய்க்கால் ஒன்றின் மறு கரையில் இருந்த்து வீடு. அதன் கரையில் படகு ஒன்று கட்டப்பட்டிருந்தது.

"இந்தப் படகையே நாம் பயன்படுத்தலாம்... ம்... சீக்கிரம் ஏறுங்கள்."

படகு நீரில் நீங்கியது. எதிர்க்கரையை அடைந்ததும் நின்றது.

அங்கிருந்து ஒற்றையடிப் பாதையொன்று அந்த வீட்டை நோக்கிச் சென்றது.

அது இரண்டு மாடிக் கட்டடம்.

உள்ளே நுழைந்து பார்த்தபோது எவரும் தென்பட வில்லை. ஆனால், அதற்குள் நவீனமான எலெக்ட்ரானிக் உபகரணங்கள் அனைத்தும் இருந்தன. டெலிவிஷன், ரேடியோ, ரேடியோ டிரான்ஸ்மிட்டர் போன்ற சாதனங்கள் இணைப்புகளுடன் பொருத்தப்பட்டிருந்தன.

ஒவ்வோர் அறையாக அவர்கள் கவனமுடன் பரிசோதித் தனர். சட்டென்று அங்கு தொலைபேசி ஒன்று மணி யடிப்பது கேட்டது.

பக்கத்து அறையிலிருந்து அந்தச் சத்தம் கேட்பதை உணர்ந்தனர்.

ஜோஸப் மாத்யூ ரிசீவரை எடுத்தார்.

“எஸ்.பி ஜோஸப் மாத்யூதானே?” எதிர் முனையிலிருந்து ஒரு குரல் கேட்டது.

"ஆமாம்... நீங்கள்?”

“நீங்கள் நினைக்கும் அதே நபர்தான். ஒரு நல்ல விஷயம் சொல்வதற்காகத்தான். நீங்கள் அந்தக் கட்டடத்துக்குள் அதிக நேரத்தைச் செலவிட வேண்டாம்!”

"அதை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். இது இப்போது எங்களது கைவசம் உள்ளது. முதலில் நீங்கள் யார் என்று சொல்லுங்கள்."

“கங்காபிரசாத்! புரிந்ததா? உங்களால் முடிந்த சீக்கிரம் அங்கிருந்து வெளியேறுவது நல்லது. இல்லாவிட்டால் அனாவசியமாகக் குண்டுவெடிப்பில் உயிர் இழக்க நேரிடும்."

அதைக் கேட்டதும் ஜோஸப் மாத்யூ ஒருகணம் அதிர்ந்தார். ‘அவன் சொல்வது உண்மையாகவும் இருக்கலாம். சக்தி வாய்ந்த வெடிகுண்டு இங்கு வைக்கப்பட்டிருக்க லாம். ரிமோட் மூலம் தொலைவிலிருந்து அதை இயக்கவும் செய்யலாம். எனவே, சட்டென்று அங்கிருந்து புறப்படுவது தான் நல்லது' என்ற முடிவுக்கு வந்தவர், உடனடியாக அங்கிருந்து எல்லோரையும் கிளம்புமாறு உத்தரவிட்டார்.

எல்லோரும் படகில் ஏறி மறு கரையை அடைந்தனர். வரும் வழியில் ஜீப்பை நிறுத்தி, அங்கிருந்த பெட்டிக் கடைக்காரரிடம் விசாரித்தார் ஜோஸப் மாத்யூ.

“ஒரு சில சந்தர்ப்பங்களில் இரவு நேரத்தில் கார்களும், வேன்களும், ஜீப்புகளும் வருவதுண்டு. வருபவர்கள் யார்? எதற்காக வருகிறார்கள் என்றெல்லாம் எனக்குத் தெரியாது!’ என்றார் பெட்டிக் கடைக்காரர்.

ஆனால், ஒரு விஷயம் தெளிவானது. கங்காபிரசாத்தின் சதிக்கூட்டம் அருகில் எங்கோதான் செயல்படுகிறது. அது, எங்கே என்பது சரியாகத் தெரியவில்லை.

பிரான்சிஸ் மீண்டும் அந்தப் பகுதிக்கு வந்தால் பின் தொடருமாறு போலீஸ்காரர் ஒருவரை நியமித்த பிறகு ஜோஸப் மாத்யூ தன் கூட்டத்தாருடன் அங்கிருந்து கிளம்பினார்.

அதே போல் ஒட்டல் த்ரீ ஸ்டாரும் கண்காணிப்புக்கு உள்ளாக்கப்பட்டது.

இரவு நேரம்.

கப்பல் அப்போதும் நிதானமாக வடக்கு நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது.

புஷ்பராஜ் கேப்டனின் அறையில் அமர்ந்திருந்தார். அப்போது ராபின்சன் அங்கு வந்தான். அவன் வந்தது கேப்டனைச் சந்திப்பதற்காக. ஆனால், அங்கு அவன் எதிர் பார்த்ததற்கு மாறாக புஷ்பராஜைச் சந்தித்ததால் ஒரு கணம் திகைப்பு அடைந்தான்.

“கேப்டன் எங்கே?” அவன் கேட்டான்.

“இப்போது நான்தான் கேப்டன்.” புஷ்பராஜ் பதிலளித்தார்.

"அப்படியானால், உண்மையான கேப்டன்?”

“அவர் என்றைக்கோ போய்விட்டார்!” என்ற புஷ்பராஜ் மிகவும் நிதானமாக சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டார்.

ராபின்சன் என்ன செய்வது என்று புரியாமல் சில விநாடிகள் தவித்தான். தற்போதைய சூழலில் புஷ்ப ராஜுடன் மோதுவதால் எந்த வித பயனும் இல்லை என்று விளங்கியது. எனவே, தந்திரமாக நடந்து கொள்வதுதான் நல்லது.

“ராபின்சன்... உட்காரலாமே!” புஷ்பராஜ் இருக்கை ஒன்றைச் சுட்டிக் காட்டினார்.

அவன் உட்கார்ந்தான்.

"சிகரெட் புகைக்கிறீர்களா?” என்ற புஷ்பராஜ் சிகரெட் பாக்கெட்டையும் லைட்டரையும் அவனுக்கு நேராக நீட்டினார்.

அவற்றை வாங்கிய ராபின்சன் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக்

கொண்டான்.

“நீங்கள் ஒரு கிரிமினல். இருப்பினும் கெட்டிக்காரர். வேறொரு முறையில் சொன்னால் கங்காபிரசாத் மாதிரி பயங்கரமானவரும் அல்ல."

புஷ்பராஜ் பேசிக்கொண்டே இருந்தார்.

அவர் என்ன சொல்ல வருகிறார் என்பதை அறியும் ஆவலுடன் ராபின்சன் அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள். உங்கள் மீது ஏராளமான வழக்குகள் உள்ளன. அவற்றுடன் இப்போது ஆள் கடத்தலும் சேர்ந்து கொண்டது. உங்கள் ஆயுள் முழுக்கச் சிறையில் இருக்க இவையெல்லாம் போதும். நான் சொல்வது உண்மைதானே?"

ராபின்சன் அப்போதும் மௌனமாக இருந்தான்.

"நான் சொல்கிறபடி நடந்து கொண்டால், உங்களை என்னால் பெருமளவுக்குக் காப்பாற்ற முடியும்."

“சுற்றி வளைக்காமல் நேரடியாக விஷயத்துக்கு வாருங்கள். நான் யாரையாவது கொலை செய்ய வேண்டுமா?” சிகரெட்டை ஆழ்ந்து இழுத்த பிறகு ஆஷ்ட்ரேயில் போட்டு நெரித்தபடி ராபின்சன் கேட்டான்.

"அப்படியொரு தேவை எனக்குக் கிடையாது. ஆனால், நீங்கள் செய்ய வேண்டியது அதைவிடச் சிரமமான வேலையை."

“விஷயத்தைச் சொல்லுங்கள்!"

“உங்களது நோக்கம் டிக்சன் என்கிற விஞ்ஞானியைக் காப்பாற்றுவது. அதாவது எனக்கு எதிராகச் செயல்பட்டு, என்னைச் சிரமப்படுத்துவது. அல்லது என்னை ஏமாற்றி விட்டு அவரை இங்கிருந்து கடத்துவது.”

"ஆமாம். நீங்கள் சொன்னது மொத்தமும் உண்மை தான். இல்லாவிட்டால் நான் எதற்காக இந்தக் கப்பலுக் குள் நுழைந்தேனோ, அந்த நோக்கமே சிதைந்து விடும்!”

ராபின்சன் இதைக் கூறும்போது டேவிட் அந்த அறைக் குள் நுழைந்தான். சொல்லி வைத்தாற்போல், எதிர்பாராமல் அங்கு வந்த டேவிட்டைப் பார்த்து புஷ்பராஜ் ஒரு கணம் திகைத்தார். டேவிட்டின்

நிலைமையும் அது தான். எனவே, புஷ்பராஜும் டேவிட்டும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

35

"என்ன... எதிர்க்கட்சியில் சேர்ந்து விட்டாயா?" டேவிட், ராபின்சனைப் பார்த்துக் கேட்டான்.

"அதெல்லாம் இல்லை!" என்று மிகவும் தாழ்ந்த குரலில் கூறிய ராபின்சன், சட்டென்று எம்பி டேவிட்டின் நெஞ்சில் ஓங்கி மிதித்தான். டேவிட் எதிர்பாராத அந்தத் தாக்குதலில் அலமலந்து போனான்.

கீழே விழுந்தவன் எழுந்திருப்பதற்கு பதிலாகப் படுத்த நிலையிலேயே சட்டென்று தனது கைத்துப்பாக்கியை எடுத்து ராபின்சனை நோக்கிச் சுட்டான். ராபின்சன் ஓர் அலறலுடன் கீழே விழுந்தான்.

டேவிட்டின் அடுத்த குறி புஷ்பராஜ்தான் என்பதை உணர்ந்ததாலோ என்னவோ, அதற்குள் டேவிட் மீது பாய்ந்த புஷ்பராஜ், அவன் கையிலிருந்த துப்பாக்கியைத் தட்டிவிட்டார். அவன் கையிலிருந்து விசையுடன் பாய்ந்த துப்பாக்கி எதிர்ப்புற மரச் சுவரில் மோதி, அங்கிருந்த அலமாரியின் பின்னால் போய் விழுந்தது.

சுதாரித்து எழுந்த டேவிட், புஷ்பராஜின் பக்கம் திரும்பினான். அதற்குள் புஷ்பராஜ், அவன் முழங்காலில் ஓங்கி உதைத்தார். டேவிட் ஒதுங்கி நகர்ந்தான். எனவே, புஷ்பராஜ் முன்புறமாகச் சாய்ந்தார். அதற்குள் டேவிட் அந்த அறையிலிருந்து ஓடித் தப்பித்தான். புஷ்பராஜ் ராபின்சனை நெருங்கினார். அப்போதும் அவன் அசை வற்றுப் படுத்திருந்தான்.

அவனைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு அவர், கீழ்த்தளத்தை நோக்கி இறங்கினார். பின்பு ஒரு முறை அந்த உடலைப் பரிசோதித்துவிட்டு, விசையுடன் கடலை நோக்கி எறிந்தார்.

அங்கிருந்து திரும்பிச் செல்லும்போது, அவர் மனம் நிம்மதியற்றுத் தவித்தது. அதற்குக் காரணம் டேவிட். அவன் இன்னும் அந்தக் கப்பலுக்குள்தான் இருக்கிறான். ராபின்சனை விட அதிகமாக பயப்பட வேண்டிய எதிரி அவன்தான் என்பது அவருக்குத் தெரியும்.

டேவிட் அங்கிருந்து படிக்கட்டுகளில் இறங்கிச் சென்றபோது, எதிரில் ஜான்ஸன் நிற்பதைக் கவனித்தான்.

"இந்தக் கப்பலுக்குள் என்ன நடக்கிறது?" ஜான்ஸன் கேட்டான்.

“நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது!” டேவிட் பதிலளித்தான்.

“என்ன நடந்தது?” என்று கேட்டவாறே ஜான்ஸன் தனது அறைக் கதவைத் திறந்தான்.

டேவிட் உள்ளே நுழைந்ததும் ஜான்ஸன் கதவை மூடித் தாழிட்டான்.

"இந்தக் கப்பலில் நமக்கு உதவ வேண்டியவன், எதிராளிகளுடன் சேர்ந்து விட்டான்”

"அப்படியென்றால்...”

“இந்தக் கப்பலில் மர்மமாக என்னவெல்லாமோ நடக்கிறது- அதுவும் நமக்கு எதிராக. இந்தக் கப்பலின் கேப்டனே நமக்கு எதிராளிதான்!”

ஜான்ஸன் அதைக் கேட்ட பிறகு மௌனமாக அறைக்குள் அங்கும் இங்குமாக உலாவினான். அவன் முகத்தில் பல்வேறு உணர்வுகள் மின்னி மறைந்தன. அந்தக் கண்களில் ஒரு சிறுத்தையின் சீற்றம் இருந்தது.

“நமது சொற்படி நடக்க வேண்டியதுதான் அந்த கேப் டனின் வேலை. மாறாக அவர் விருப்பப்படி நடப்பதற்கு அல்ல. ஆமாம், அந்த கேப்டன் எந்த நாட்டவர்?”

"கனடாக்காரர். ஏற்கெனவே ஒரு வழக்கில் கைது செய்யப்பட்டுச் சிறையிலிருந்து தப்பித்திருப்பவர்."

இதைக்கேட்ட டேவிட் திடுக்கிட்டான். அவன் சந்தேகத்துடன் ஜான்ஸனைப் பார்த்தான்.

“இல்லை. நீங்கள் சொல்வது தவறு. அதற்கு எந்த ஒரு வாய்ப்பும் இல்லை."

"அப்படியென்றால்..." ஜான்ஸன் கேள்விக் குறியுடன் பார்த்தான்.

“இந்தக் கப்பலின் கேப்டனை நீங்கள் நேரில் பார்த் திருக்கிறீர்களா?”

"ஆமாம். நான்கு வருடங்களுக்கு முன்பு நாங்கள் இருவரும் ஒன்றாக அமர்ந்து பீர் குடித்தோம்.”

“அதற்குப் பிறகு?”

“பார்க்கவில்லை."

"அப்படியானால் தெரிந்து கொள்ளுங்கள். இந்தக் கப்பலின் தற்போதைய கேப்டன் ஒர் இந்தியன். வங்காளி போல் தென்படுகிறான். நன்றாக ஆங்கிலம் பேசுகிறான்."

இந்த வார்த்தைகளைக் கேட்ட ஜான்ஸன் சட்டென்று நின்றான். அவன் டேவிட்டையே வைத்த கண் வாங்கா மல் பார்த்தான்.

“நீங்கள் சொல்வது உண்மையாக இருந்தால், நான் கேப்டனை உடனடியாகப் பார்க்க வேண்டும்."

“நானும் உங்களுடன் வருகிறேன். அந்த கேப்டன் நிச்சயமாக நீங்கள் கருதும் மனிதர் அல்ல என்று எனக்குத் திடமாகத் தெரியும்."

இருவரும் அறைக்கு வெளியே வந்தார்கள். ஜான்ஸன் கதவை மூடிப் பூட்டிவிட்டு டேவிட்டுடன் விரைவாக நடக்கத் தொடங்கினான். இருவரும் படிகளில் ஏறி அவசர அவசரமாக கேப்டனின் அறையை நெருங்கினர்.

கேப்டனின் அறைக்கதவை ஜான்ஸன் தட்டினான்.

கதவைத் திறந்தவர் புஷ்பராஜ்.

ஆனால், அப்போது அவரது வேடம் வித்தியாசமாக இருந்தது. அங்கிங்காக நரைத்த தாடி, கண்டபடி கலைந்து கிடந்து காது வரை இறங்கியுள்ள தலைமுடி. தொள தொளப்பான கோட் சுமார் அறுபது வயது மதிக்கத் தக்க தோற்றம்.

“நீங்கள் யார்?” ஜான்ஸன் கேட்டான்.

“டாக்டர் ஷெரீப். கேப்டன் உடல் நலமில்லாமல் கிடக்கிறார். உள்ளே வாருங்கள்...” புஷ்பராஜ் அவர் களுக்கு வழிவிட்டு ஒதுங்கி நின்றார்.

இருவரும் அறைக்குள் நுழைந்தனர்.

“எங்கே இருக்கிறார் கேப்டன்?” ஜான்ஸன் அந்த அறையைக் கண்களால் துழாவியபடி கேட்டான்.

“வாருங்கள் காட்டுகிறேன்... உட்புற அறையில் இருக்கிறார்” என்றபடி புஷ்பராஜ் நடந்தார். மற்ற இருவரும் அவரைப் பின்தொடர்ந்தனர்.

புஷ்பராஜ் அந்த அறை விளக்கின் சுவிட்சை அழுத் தினார். விளக்கு எரிந்தது. கட்டிலில் கேப்டன் படுத்துக் கிடந்தார்.

"அவருக்கு உடல் நலம் சரியில்லை. சுயநினைவிழந்து படுத்திருக்கிறார். நான் மருந்து கொடுத்திருக்கிறேன்." என்ற புஷ்பராஜ் தன் கழுத்தில் கிடந்த ஸ்டெதாஸ் கோப்பை வருடியபடி பேசினார்.

“நீங்கள் இங்கு வரும்போது வேறு எவராவது இருந்தார்களா?” ஜான்ஸன் கேட்டான்.

"ஆமாம்... ஒருவர் இருந்தார். என்ன காரணத்தாலோ நான் வந்தவுடன் அவர் வெளியே போய்விட்டார்." புஷ்பராஜ் இயல்பான குரலில் பேசினார்.

"யார் அவர்?” -ஜான்ஸன்.

“எனக்குத் தெரியாது! ஒருவேளை துணை கேப்டனாக இருக்கலாம்."

“அதற்கு வாய்ப்பு இல்லை. எந்த ஓர் இந்தியரும் இந்தக் கப்பலில் வேலைக்கு அமர்த்தப்படவில்லை என்று எனக்கு உறுதியாகத் தெரியும்."

"இருக்கலாம். கேப்டனுக்கு உடல் நலம் சரியில்லாத போது அவருக்கு உதவ யாராவது வந்திருக்கலாம்."

ஜான்ஸன் அந்த அறை வாசலையே கவனித்துக் கொண்டிருந்தான்.

“எதற்கும் கேப்டன் கண் விழிப்பது வரை நாம் இங்கேயே காத்திருப்போம்." டேவிட் கூறினான்.

"ஆமாம்... எப்படியும் அந்த மனிதர் இங்கு வராமல் இருக்க முடியாதே." என்ற ஜான்ஸன் அங்கிருந்த நாற்காலி யில் அமர்ந்தான்.

அப்போது டிரான்ஸ்மிட்டர் ‘பீப்... பீப்...’ ஒலி யெழுப்பியது.

ஜான்ஸன் அதை நெருங்கினான்.

“எஸ்” என்ற ஜான்ஸன் கோட் எண்ணைக் குறிப்பிட்டான்.

"நான் கங்காபிரசாத் பேசுகிறேன். என்ன விசேஷமான தகவல் ஏதாவது உண்டா? தலைமையகத்திலிருந்து என்னிடம் தகவல் கேட்டார்கள்."

“இங்கு ஒரே குழப்பமாக உள்ளது."

“என்ன குழப்பம்? புரபசர் பத்திரமாக இருக்கிறார் இல்லையா?”

"அவர் பத்திரமாக இருக்கிறார்."

"பிறகு என்ன குழப்பம்?"

"கேப்டனுக்கு உடம்பு சரியில்லை. அவருக்கு பதிலாக யாரோ ஒருவர் வந்திருக்கிறார். அவர் யார் என்று தெரியவில்லை."

“ஒருவேளை ராபின்சனா?”

"அவர் என்ன ஆனார் என்றே தெரியவில்லை.”

அப்போது டேவிட், டிரான்ஸ்மிட்டரை நெருங்கினான்.

"அவனை நான்தான் கொன்றேன். நான் இந்த அறைக்குள் வரும்போது அவர்கள் இருவருமே அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். ராபின்சன் நமக்கு எதிராகச் செயல்படுகிறானோ என்ற சந்தேகத்தில் நான்தான் அவனைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றேன்."

"அப்படியானால் அவனது பிணம் எங்கே?”

“அதை, உடனிருந்தவன் கடலில் வீசி எறிந்திருக்க வேண்டும்.”

"இருக்கலாம். இவர் சொல்கிற சம்பவம் தொடர்பாக உங்களுக்கு ஏதாவது தெரியுமா?” ஜான்ஸன், புஷ்பராஜின் பக்கமாகத் திரும்பினான்.

“மன்னிக்கவும்... நீங்கள் என்ன பேசுகிறீர்கள் என்றே எனக்கு விளங்கவில்லை. நான் ஏன் இந்த மாதிரியான விஷயத்தில் அனாவசியமாக ஆர்வம் காட்ட வேண்டும்? மருத்துவம் எனது தொழில். அது தொடர்பாக நீங்கள் என்ன கேட்டாலும் நான் பதிலளிக்க முடியும்! வேறு என்ன சொல்ல?”

அதன் பிறகு புஷ்பராஜ் தனது மருந்துப் பெட்டியுடன் அந்த அறையிலிருந்து வெளியேறினார். மற்ற இருவருக்கும் அவர் மீது சந்தேகம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

“அதோ போகிறவர் உண்மையான டாக்டர்தானா?” டேவிட் கேட்டான்.

“டாக்டர்தான். மாலத்தீவில் டாக்டர் ஒருவரைக் கப்பலில் நியமித்தோம்.’’ ஜான்ஸன் கூறினான்.

"அப்படியானால், அவர் அந்த டாக்டராக இருக்கலாம். நமது கேள்வி,

கேப்டனாக இங்கு நடித்த மனிதன் எங்கே? ராபின்சன் உண்மையிலேயே இறந்திருந்தால், அந்த உடலை அவன் எதற்காகக் கடலில் வீசி எறிந்திருக்க வேண்டும்?" டேவிட் கேட்டான்.

"அதைச் சோதித்து விடுவோம். இந்த நிலைமையில் நாம் மிகவும் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். நிலைமை ஒரே குழப்பமாக உள்ளது." ஜான்ஸன் பதிலளித்தான்.

கப்பல் அப்போதும் வடக்குத் திசையில் நகர்ந்து கொண்டிருந்தது. புஷ்பராஜ் டாக்டரின் அதே வேடத்தில் மேற்புற டெக்கில் நின்று கொண்டிருந்தார்.

நேரம் நள்ளிரவு ஆகிவிட்டிருந்தது. ஆகாயப் பரப்பில் நட்சத்திரங்கள் எதுவும் தென்படவில்லை. கடலில் சின்னஞ்சிறு அலைகள் எழும்பிக் கப்பலின் மீது மோதிக் கொண்டிருந்தன. பைனாகுலரை பயன்படுத்தி புஷ்பராஜ் கடற்பகுதியைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அப்போது வடதிசையிலிருந்து வெளிச்சப் பொட்டு ஒன்று அசைவதாகப் பட்டது. அது கப்பலை நோக்கி வந்து கொண்டுமிருந்தது.

உடனேயே அவர் கேப்டனின் அறைக்கு விரைந்தார். டிரான்ஸ்மிட்டர் இயந்திரம் அப்போதுதான் உயிர் பெற்றுக் கொண்டிருந்தது.

"ஆமாம்... பிளாக்ரிப்பன்தான். என்ன செய்தி? புஷ்பராஜ் கேட்டார்.

"முக்கியத் தகவல்."

"சொல்லுங்கள்."

"விரைவிலேயே கப்பல் ஒன்று உங்களை நெருங்கும். எதிர்பாராமல் இப்படியொரு வாய்ப்புக் கிடைத்தது. வழக்கப்படி நமது அடையாளம் கிடைக்கும். அதன் பிறகு விஞ்ஞானியை அதற்குள் ஏற்றியனுப்ப வேண்டும்." தலைமையகத்திலிருந்து வந்த தகவல் புஷ்பராஜை நிம்மதி இழக்கச் செய்தது.

"இன்னொரு விஷயம்... அதற்குள் புரபசரை மட்டும் ஏற்றியனுப்பினால் போதும். வேறெவரும் தேவை யில்லை."

"ஜான்ஸன்?"

"தேவையில்லை. புரபசரைக் கவனித்துக் கொள்ள அந்தக் கப்பலில் ஆட்கள் இருக்கிறார்கள். எனவே, அவருடன் வேறு எவரும்

தேவையில்லை."

“சரி...”

டிரான்ஸ்மிட்டரை அணைத்துவிட்டு புஷ்பராஜ் அவசரமாக வெளியே வந்தார். நேராக அவர் டிக்சனின் அறைக்கு விரைந்தார்.

புரபசர் மிகுந்த ஆவலுடன் அவரை வரவேற்றார்.

“என்ன விஷயம்?” புரபசர் கேட்டார்.

"உடனடியாக உளவுப் பிரிவுடன் தொடர்புகொள்ள வேண்டும்’ புஷ்பராஜ் கூறினார்.

புரபசர் உடனே, தனது கடிகாரத்தில் உள்ள டிரான்ஸ்மிட்டருக்கு உயிர் கொடுத்தார். டயானாவின் குரல் கேட்டது.

“ஜோஸப் மாத்யூவைக் கூப்பிட முடியுமா?”

மறு விநாடி அவர் குரல் கேட்டது.

“என்ன புஷ்பராஜ்?"

“நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. புரபசரை ஏற்றிச் செல்ல மற்றொரு கப்பல் வருகிறது. அந்தக் கப்பலில் வேறு எவரையும் ஏற்றக் கூடாது என்பது கண்டிப்பான நிபந்தனை!”

"நாம் என்ன செய்யலாம் என்று சொல்லுங்கள்!”

“எனக்கு ஒரு புது யோசனை தோன்றுகிறது. வருகிற கப்பலில் இருப்பவர்களுக்கு புரபசரைத் தெரியாது. எனவே, புரபசராக நான் அதற்குள் நுழைந்து விடுகிறேன். நீங்கள் இந்தக் கப்பலைச் சூழ்ந்து கொள்ளுங்கள். இதனால், அவர்களுக்கும் எந்த விதமான சந்தேகமும் ஏற்படாது.” புஷ்பராஜ் பதிலளித்தார்.

ஜோஸப், டி.ஐ.ஜி இஸ்மாயிலைப் பார்த்தார்.

“நல்ல யோசனைதான்!” அவர் கூறினார்.

கப்பல் வருவதாகத் தகவல் கிடைத்த நிமிடத்திலிருந்து புஷ்பராஜ் மிகுந்த பரபரப்புக்கு உள்ளானார்.

36

வரவிருக்கும் ஒவ்வொரு நிமிடமும் விலைமதிப்பு மிக்கதாக புஷ்பராஜ"க்குத் தோன்றியது. தனது திட்டத்தை ஜான்ஸனோ, டேவிட்டோ தெரிந்து கொண்டால் விளைவு மாறி விடலாம்.

அவர்களுக்கு புரபசரை நன்றாகத் தெரியும். எனவே, அவர்கள் கண்முன்பாக இந்த ஆள்மாறாட்ட யோசனையை புத்திசாலித்தனமாக நிறை வேற்ற வேண்டும்.

இதற்கு என்ன செய்யலாம் என்று புஷ்பராஜ் யோசிந்த போது ரேடியோ டிரான்ஸ்மிட்டர் குரல் கொடுத்தது.

தலைமையகத்திலிருந்து வரும் தகவல்.

கோட் சொல்லிவிட்டு, புஷ்பராஜ் பேசத் தொடங்கினார்.

“சொல்லுங்கள்!”

"கேப்டன்தானே?”

"ஆமாம்.”

“புரபசரைக் கப்பலில் ஏற்றும்போது ஜான்ஸனும், டேவிட்டும் அவருடன் செல்லட்டும்.”

"அப்படியா?”

"ஆமாம்... நான் ஏற்கெனவே ஏற்பாடு செய்துள்ளவர் களின் கெட்டிக்காரத்தனத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை. எனவே, புரபசர் லட்சியப் பகுதியை அடைவது வரை ஜான்ஸனும், டேவிட்டும் உடன் வரட்டும்.”

“நல்லது... அப்படியே!” புஷ்பராஜ் டிரான்ஸ்மிட்டரை அணைத்துவிட்டு யோசனையில் ஆழ்ந்தார்.

இந்தச் சூழ்நிலையில் நான் புரபசராக வேடமிட்டால், அது ஜான்ஸனுக்கும் டேவிட்டுக்கும் தெரியும். உண்மை யான புரபசருடன் அவர்களை அனுப்புவது பைத்தியக் காரத்தனம். எனவே, எதற்கும் புரபசர் டிக்சனுடன் ஒரு தடவை பேசிப் பார்ப்பது என்று புஷ்பராஜ் தீர்மானித்தார்.

கேப்டனின் அறையிலிருந்து வெளியேறிய புஷ்பராஜ், புரபசரின் அறைவாசலை அடைந்தார். சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, அறைக் கதவைத் தட்டினார்.

புரபசர் வந்து கதவைத் திறந்தார்.

“வாருங்கள் டாக்டர்...’’ என்ற புரபசர், அவருக்கு வழிவிட்டு ஒதுங்கி நின்று அவர் வந்ததும் கதவை மூடித் தாழிட்டு விட்டு உள்பக்கம் நடந்தார்.

“டயானாவுடன் இப்போதுதான் பேசினேன்.”

“முக்கியமான தகவல்கள் ஏதாவது?” புஷ்பராஜ் ஆர்வத்துடன் கேட்டார்.

"அப்படி எதுவும் இல்லை.”

"நாம் மறுபடியும் அவர்களைத் தொடர்புகொள்ள முடியுமா?”

“தாராளமாக!"

சற்று நேரத்தில் தொடர்பு கிடைத்ததும், "இஸ்மாயில் வேண்டுமே!” என்றார் புஷ்பராஜ்.

“சொல்லுங்கள்!” இஸ்மாயில் குரல் கொடுத்தார்.

எல்லாவற்றையும் அவரிடம் விவரித்தார் புஷ்பராஜ்.

எதிர்முனையில் அமைதி நிலவியது.

புஷ்பராஜ் கூறிய தகவல்கள், புரபசரையும் கவலைக்கு உள்ளாக்கின இந்த நடவடிக்கையை அவர் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை. இந்த மாதிரியான சூழ்நிலை ஏற்படு வதற்குள் தப்பித்து விடலாம் என்று நினைத்திருந்தார். இனிமேல் அதற்கு வாய்ப்புக் கிடையாது!

புரபசர் என்ன செய்வது என்று தெரியாமல் சற்று நேரம் குழப்பத்தில் ஆழ்ந்தார்.

"மிஸ்டர் புஷ்பராஜ்!” இஸ்மாயில் அழைத்தார்.

"சொல்லுங்கள் இஸ்மாயில்!”

"நாங்கள் எங்களால் முடிந்த அளவுக்கு விரைவாகச் செயல்படுகிறோம். அங்குள்ள சூழ்நிலைக்கு ஏற்றவாறு செயல்பட்டு, புரபசரைக் காப்பாற்ற வேண்டியது தற்சம யம் நீங்கள்தான். பரஸ்பரம் நாம் உதவிக் கொள்ளும் தொலைவில் இல்லையே!”

“சரி... பார்த்துக் கொள்கிறேன்."

"என்ன சொல்கிறார்கள்?”

"நான் எதிர்பார்த்த பதில்தான்."

"பதற்றப்படாமல் யோசித்தால் நாம் ஒரு நல்ல முடிவுக்கு வர முடியும்!"

“முயற்சி செய்யலாம் சார்!”

அங்கிருந்து வெளியேறிய புஷ்பராஜ், கேப்டனின் அறைக்குள் நுழைந்து தீவிர யோசனையில் ஆழ்ந்தார். பிறகு ஒரு தீர்மானத்துக்கு வந்தவராக மாறுவேடம் அணியத் தொடங்கினார். பிறகு மேல் தளத்துக்கு வந்தபோது செக்யூரிட்டி ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவரைப் பார்த்ததும் செக்யூரிட்டி அருகில் வந்தார்.

“என்ன வேண்டும் உங்களுக்கு?” புஷ்பராஜ் கேட்டார்.

"சார்... நீங்கள்?" செக்யூரிட்டி தயங்கினார்.

புஷ்பராஜ் அப்போது விஞ்ஞானியின் வடிவத்துக்கு மாறியிருந்தார். செக்யூரிட்டியைப் பொறுத்தவரை விஞ்ஞானி கூட அறிமுகம் இல்லாத ஒருவர்தான்.

"நான் இந்தக் கப்பலின் விருந்தாளி!" புஷ்பராஜ் கூறினார்.

“கப்பல் எப்போது கரையை அடையும் சார்?”

"அந்த விஷயம் உங்களுக்கும் தெரியாதா?"

"ஆமாம் சார்!"

“உங்கள் ஊர்?”

“கொச்சி. எட்டு வருட காலமாக நான் இந்தக் கப்பலில் பணி புரிகிறேன்."

“நீங்கள் ஒரு குற்றவாளியா என்ன?”

“என்ன இப்படிக் கேட்கிறீர்கள்?”

"உண்மையைச் சொன்னால் நானும் ஒரு குற்றவாளி தான். அதனால்தான் இந்தக் கப்பலுக்கு வந்து சேர்ந்தேன். ஆனால், நான் நினைத்த மாதிரி இங்கு எதுவும் இல்லை. எனவே, இப்போது எப்படியாவது தப்பித்தால் போது மென்று தோன்றுகிறது." புஷ்பராஜ் பேசியவாறே அந்த செக்யூரிட்டியின் முகத்தை ஊன்றிக் கவனித்தார்.

கிழக்குப்புற ஆகாயத்தில் ஒரு வெள்ளித்தட்டு மாதிரி மிதந்த

சந்திரனின் ஒளியால், அந்த செக்யூரிட்டியின் முகத்தை புஷ்பராஜினால் தெளிவாகப் பார்க்க முடிந்தது அந்த முகம் சுளிவடைந்தது.

“நானும் அதே மனநிலையில்தான் இருக்கிறேன். இங்கு வந்து சேர்ந்த பிறகுதான் இதுவும் ஒரு சிறைச்சாலை என்பது விளங்கியது. அதுவும் இப்போது மர்மமாக என்ன வெல்லாமோ நடக்கிறது." செக்யூரிட்டி பேசினார்.

அந்த செக்யூரிட்டியை வளைப்பது சுலபம் என்று புஷ்பராஜாக்கு விளங்கியது.

“இந்தக் கப்பலில் பணி புரியும் ஊழியர்கள் பெரும் பாலனவர்கள் இப்படித்தான் என்று நினைக்கிறேன்."

"உண்மைதான்! இதற்குள் வரும் ஊழியர்ளை, ஊழியர்களின் அனுமதி இல்லாமலே வேறு கப்பலுக்கும் மாற்று வார்கள். கேப்டன் அந்தக் குழுவின் தலைவர் என்று நினைக்கிறேன்."

"ஒகோ... அப்படியா!”

சூழ்நிலை இதுதான் என்றால், தப்பிப்பதற்கு வாய்ப்பு உண்டு என்ற நம்பிக்கை அவருள் ஏற்பட்டது.

“உங்கள் குடும்பம்?"

“மனைவியும் இரண்டு குழந்தைகளும் இருக்கிறார்கள். நான் வீட்டுக்குச் சென்று இரண்டு வருடங்களுக்கு மேல் ஆகிறது."

"நான் சொல்கிறபடி நடந்து கொண்டால், நீங்கள் இங்கிருந்து தப்பிக்க, நான் உதவ முடியும்.” புஷ்பராஜ், அவர் முகத்தையே பார்த்தார்.

“நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லை. தப்பிப்பது என்றால்..?” செக்யூரிட்டி அந்த வார்த்தைகளை நம்ப வில்லை என்பது விளங்கியது.

“சற்றுச் சிரமம்தான். அதற்காக நாம் ஒருசிலரை ஒதுக்க வேண்டியுள்ளது.”

"அந்த ஒரு சிலர் யார்?"

"சொல்கிறேன்."

அப்போது ஜான்ஸன் அங்கு வந்து சேர்ந்தான். அவன் புஷ்பராஜையே ஊன்றிப் பார்த்தான். டிக்சனின் வேடத்தில் நிற்கும் புஷ்பராஜை அவனால் அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை.

நிலாவெளிச்சம் முகத்தில் சரியாகப் படாதபடி ஒருக் களித்து, தலையைச் சற்றுச் சாய்ந்து நின்று கொண்டிருந் தார் புஷ்பராஜ். ஆனால், புரபசர் எப்படி இந்த இடத்துக்கு வந்தார் என்று ஜான்ஸன் யோசனையில் ஆழ்ந்தான்.

“புரபசர் நீங்கள் எந்த விதப் பாதுகாப்பும் இல்லாமல் இப்படித் தனியே நிற்பது நல்லது அல்ல. வாருங்கள்... உங்கள் அறைக்குப் போகலாம்.” என்றவாறு ஜான்ஸன், புஷ்பராஜை நெருங்கினான்.

வாய் திறந்து பேசினால் ஒருவேளை வேடம் கலைந்து விடலாம் என்று பயந்த புஷ்பராஜ் அதற்கு பதிலளிக்காமல் மௌனமாக இருந்தார்.

"நான் சொல்கிறபடிக் கேட்காவிட்டால் நான் பலவந்த மாக உங்களை அழைத்துச் செல்ல வேண்டியிருக்கும்." என்று எச்சரிக்கை செய்தான் ஜான்ஸன்.

புஷ்பராஜ் சட்டென்று திரும்பினார்.

“என் சொற்படி நடக்காவிட்டால், நான் துப்பாக்கியைப் பயன்படுத்த வேண்டியிருக்கும். உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தாத மாதிரி...” அப்போது ஜான்ஸனின் கையில் சிறு துப்பாக்கியொன்று இருந்தது.

ஜான்ஸன் துப்பாக்கியின் டிரிக்கரை அழுத்துவான் என்பது உறுதியானதும் புஷ்பராஜ் சட்டென்று மேற்புறும் எம்பிக் குதித்து, தனது கால் ஷூவின் முனையை ஜான்ஸ் னின் தொண்டைப் பகுதியில் விசையுடன் பாய்ச்சினார்.

அவன் மட்டமல்லாக்க விழுந்தான். அவன் கையிலிருந்த துப்பாக்கியிலிருந்து குண்டு சீறிப் பாய்ந்தது. குறி தவறிப் பாய்ந்த குண்டு கடலில் போய் விழுந்தது. அதே நேரம் புஷ்பராஜுக்கு அருகில் இருந்த செக்யூரிட்டியின் பயனட்டுடன் கூடிய துப்பாக்கி ஜான்ஸனின் உடலில் பாய்ந்தது.

ஜான்ஸன் மேற்புறத்தளத்தில் கிடந்து துடித்தான்.

மறு விநாடி புஷ்பராஜ், ஜான்ஸனின் கையிலிருந்த துப்பாக்கியை எட்டி உதைத்தார். அது, மேற்புறத்தளத்தில் சத்தம் எழுப்பிக் கொண்டு விரைந்து, மரச்சுவரில் மோதி உட்புறத்தில் விழுந்தது. பிறகு

ஜான்ஸனைத் தூக்கிக் கடலில் எறிந்தார் புஷ்பராஜ்.

வெடிச்சத்தம் வெளியே கேட்டதால், அதற்குள் யாரெல் லாமோ மேல்தளத்துக்கு வந்தார்கள். அவர்களில் டேவிட் டும் ஒருவன்.

“என்ன நடந்தது?” அவன் விசாரித்தான்.

"அப்படி எதுவும் நடக்கவில்லை. கடலில் யாரோ நீந்துவது போல் தோன்றியது." செக்யூரிட்டி பேசினார்.

“நல்லது!” டேவிட் கூறினான். பிறகு புஷ்பராஜின் பக்கம் திரும்பினான்." என்ன புரபசர் இங்கு தனியாக நிற்கிறீர்கள்?” கேட்டான்.

அதற்கு பதில் அளிக்காத புஷ்பராஜ் கீழ்த்தளத்துக்கு இறங்கிச் சென்றார். டேவிட்டுக்கு அங்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை.

புஷ்பராஜ், கேப்டனது அறைக்குள் நுழைந்த சற்று நேரத்துக்குள் தலைமையகத்திலிருந்து டிரான்ஸ்மிட்டர் அழைப்பு வந்தது.

“அதிகபட்சம் இன்னும் ஒரு மணி நேரத்துக்குள் புரபசரை அழைத்துச் செல்லும் கப்பல் வரும். அதிலிருந்து இறக்கும் படகில் புரபசரையும், அவரின் பாதுகாவலர் களையும் கவனமாக ஏற்றி அனுப்ப வேண்டும்!” என்று கட்டளையிட்டது அதில் ஒலித்த குரல்.

“யெஸ் சார்!” புஷ்பராஜ் பதிலளித்தார்.

பின்னர் சற்றும் தாமதிக்காமல் புரபசரது அறையை அடைந்தார் புஷ்பராஜ்.

“உங்களை ஏற்றிச் செல்லும் கப்பல் இப்போது வரப் போகிறது. அதில், உங்கள் வேடத்தில் நான் செல்லப் போகிறேன். எனவே, நீங்கள் ஒரு பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்.” புஷ்பராஜ், டிக்சனிடம் கூறினார்.

“தற்சமயம் என்னுடன் வாருங்கள்!” புரபசர் டிக்சன் அழைத்தார்.

புரபசர் நேராக கேப்டனது அறையை நோக்கி நடந்தார். புஷ்பராஜ் அவரைப் பின்தொடர்ந்தார்.

இருவரும் கேப்டனது அறைக்குள் நுழைந்தனர்.

"கேப்டனை நான் மயக்கத்தில் ஆழ்த்தியிருக்கிறேன். அவர் இந்தச்

சூழ்நிலையில் கண் விழிக்கக் கூடாது. நாம் துறைமுகத்தை அடைந்த பிறகு மட்டுமே அவர் கண் விழிக்க வேண்டும்.” புஷ்பராஜ் கூறினார்.

“சரி... அவரை நான் கவனித்துக் கொள்கிறேன்.” புரபசர் ஒப்புக் கொண்டார்.

புஷ்பராஜ் கேப்டனது அறைக் கதவை மூடிவிட்டு, புரபசரது அறைக்குள் நுழைந்து கதவைத் தாழிட்டுப் படுத்துக் கொண்டார்.

சரியாக ஒரு மணி நேரத்துக்குப் பிறகு அந்த அறைக் கதவை யாரோ தட்டினார்கள்.

புஷ்பராஜ், புரபசராகக் கதவைத் திறந்தார்.

எதிரே டேவிட் நின்று கொண்டிருந்தான்!

37

டேவிட் சற்று நேரம் அப்படியே வாசலில் நின்றான். புஷ்பராஜ், "புரபசர் வேடத்தில் தலை குனிந்தவாறு சுருட்டைப் புகைத்துக் கொண்டிருந்தார். அந்தச் சுருட்டி லிருந்து கிளம்பிய புகை அடர்த்தியாக மேலெழும்பிக் கொண்டிருந்தது.

“நீங்கள் தயவு செய்து வெளியே வர வேண்டும்.”

சட்டென்று தலை உயர்த்திய புஷ்பராஜ் கேட்டார்: "நாம் எங்கே போகிறோம்?”

“உங்களை அழைத்துச் செல்ல மற்றொரு கப்பல் வந்திருக்கிறது!”

"அப்படியா... நான் இதோ வந்து விட்டேன்!” என்றவர் உடைகளைச் சரி செய்துகொண்டு சுருட்டு, தீப்பெட்டி ஆகியவற்றுடன் டேவிட்டுடன் கிளம்பினார்.

இருவரும் மேல்தளத்துக்கு வந்தனர். அப்போது கப்பலை ஒட்டி விரைவுப்படகு ஒன்று நின்றிருந்தது.

“அதோ பாருங்கள்... சற்றுத் தொலைவில் நிற்கும் அந்தக் கப்பலுக்குத்தான் நாம் செல்கிறோம்." டேவிட் சுட்டிக்காட்டினான்.

அதற்குள் நூலேணி கீழ்ப்புறமாக இறக்கப்பட்டது.

"வாருங்கள் புரபசர்!” டேவிட் அழைத்தான்.

"நாம் இந்தக் கப்பலிலேயே தொடர்ந்து பயணம் செய்தால் என்ன?' புஷ்பராஜ் சட்டென்று கேட்டார்.

“இதையெல்லாம் நாம் தீர்மானிக்க முடியாது. கட்டளைக்குக் கீழ்ப்படிவதுதான் நமது வேலை."

“யாருடைய கட்டளை!"

“அதையெல்லாம் நான் விசாரிப்பது இல்லை. கீழ்ப்படிவது மட்டும்தான் தெரியும்."

“நான் அதற்கு உடன்படாவிட்டால்?”

"அவர்கள் பலம் வாய்ந்தவர்கள். நவீனமான ஆயுதங்கள் அவர்களிடம் உள்ளன. உடன்படாவிட்டால், உடம்பு புண்ணாவதைத் தவிர, வேறு பலனேதும் இருக்காது." டேவிட் பேசினான்.

டேவிட் சொன்னது எல்லாம் உண்மைதான். கட்ட ளைப்படி நடக்காவிட்டால் அதன் பொருட்டு ஒரு தாக்கு தல் நடக்கலாம். அது ஆபத்து. எனவே, அந்தக் கப்பலுக்குச் செல்வதுதான் புத்திசாலித்தனம் என்று தீர்மானித்தார் புஷ்பராஜ்.

“எனக்கு அறிமுகமானவர்கள் எவராவது அந்தக் கப்பலில் இருக்கிறார்களா?” புஷ்பராஜ் கேட்டார்.

“எங்களைத் தவிர வேறு எவரும் இருக்க முடியாது சார்!”

"அதுவும் நல்லதற்குத்தான்!”

“எந்த வகையில் சார்!”

"தொல்லை இருக்காது என்பதுதான்.”

“அதற்கு நாங்கள் பொறுப்பு!”

"அந்தக் கப்பலுக்குச் சென்ற பிறகு நான் என்ன செய்ய வேண்டும்?”

"புரபசர், அவர்கள் சொல்கிறபடி மட்டும் நடந்து கொண்டால் போதும்."

“நீங்கள் என்னுடன் வருகிறீர்களா?”

"ஆமாம்."

"அப்படியானால் இந்தக் கப்பல்?”

"அதை கேப்டன் பார்த்துக் கொள்வார். அவருடன் இனி நமக்கு எந்த ஒரு தொடர்பும் கிடையாது!"

முதலில் புஷ்பராஜை இறங்குமாறு கூறிய டேவிட், அவரைத் தொடர்ந்து நூலேணியில் இறங்கினான்.

அந்தப் படகில் ஒருவர் மட்டுமே இருந்தார்.

நான்குபேர் பயணம் செய்யும் ஸ்பீடுபோட் எனப்படும் விரைவுப்படகு அது. அவர்கள் இருவரும் படகில் வந்து அமர்ந்தவுடன் படகு, விசையுடன் கிளம்பி விரைந்தது.

சற்றுத் தொலைவில் நங்கூரம் பாய்ச்சி நிற்கும் கப்பல், அவர்களை நெருங்கிக் கொண்டிருந்தது.

அதுவும் ஒருபெரிய சரக்குக் கப்பல்தான். அவர்கள் கப்பலை மிக நெருங்கியதும் படகை யாரோ பிடித்து நிறுத்தியது போல் சட்டென்று நின்றது. மேற்புறத்திலிருந்து யாரோ விளக்கு வெளிச்சம் பாய்ச்சினார்கள். அப்போது மேற்புறத்திலிருந்து தொங்கும் நூலேணி அவர்களுக்குத் தெரிந்தது.

"ஏறுங்கள் புரபசர் சார்!" டேவிட் கூறினான்.

புஷ்பராஜ் நூலேணியில் ஏறத் தொடங்கினார். அவர் மேலேறி வந்ததும் இருவர், அவரை கப்பலில் பத்திரமாக இறக்கினர். விரைவிலேயே டேவிட்டும் மேலேறி வந்தான்.

அங்கிருந்த ஒருவன் அவர்களை வழிநடத்திச் சென் றான். பின்பு புரபசருக்கு ஒதுக்கப்பட்டிருந்த அறையை அவருக்குக் காட்டினான்.

அது எல்லாவித சௌகரியங்களும் நிறைந்த ஓர் அறை.

அறைக்குள் நுழைந்ததும், கதவைத் தாழிட்டுவிட்டு, கட்டிலில் ஏறிப் படுத்துக் கொண்டார் புஷ்பராஜ்.

அப்போது உண்மையான புரபசர், கேப்டனின் அறை யில் கேப்டனாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தார்.

மணி மூன்றை நெருங்கியது.

டிக்சன் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தார்.

ரேடியோ டிரான்ஸ்மிட்டர் ஒலியெழுப்பியது கேட்டுச் சட்டென்று அவர் கண் விழித்தார். கப்பலில் செயல்படும் டிரான்ஸ்மிட்டரின்

சங்கேத வார்த்தை அவருக்குத் தெரியாததால் அவர் மௌனமாக இருந்தார்.

“புரபசர் டிக்சன் பத்திரமாக வெளியேறிவிட்டாரா?”

"ஆமாம்... அது நடந்து முடிந்து பதினைந்து நிமிடங்கள் ஆகிவிட்டன."

"அப்படியானால், இனி உங்கள் திட்டப்படி கப்பலைச் செலுத்தலாம்."

மேற்கொண்டு ஏதாவது கட்டளைகள் வருமோ என்று சற்று நேரம் காத்திருந்தார். எதுவும் வராததால் அதன் சுவிட்சை அழுத்தி, தொடர்பைத் துண்டித்தார்.

உடனே அவர், இன்ஜின் அறைக்கு இண்டர்காம் மூலம் உத்தரவிட்டார். “இனி, கப்பல் நாம் வந்த பாதையிலேயே தெற்கு நோக்கிச் செல்லட்டும்."

கப்பலின் பயணப்பாதை அடுத்த ஐந்து நிமிடத்துக்குள் மாறியது.

வெளியே பொழுது விடியத் தொடங்கி இருந்தது.

அதற்குள் உண்மையான கேப்டன் மயக்கத்திலிருந்து விடுபட்டார். அவர் கண்விழித்து எழுந்ததும் வெளிப்புற அறைக்கு வந்தார். அங்கு அவருக்கு அறிமுகமில்லாத மனிதர் (புரபசர்) ஒருவர் அமர்ந்திருந்தார்.

கேப்டன் அப்போதுதான் முதன் முறையாக புரபசரைப் பார்க்கிறார். யாரோ ஒரு மனிதரை இந்தக் கப்பலுக்குள் ஏற்றி இருக்கிறார்கள் என்பதும், அவரை எங்கோ ரகசியமான இடத்துக்குக் கொண்டு போகிறார்கள் என்றும் மட்டுமே அவருக்குத் தெரியும்.

"சார்... நீங்கள்?” கேப்டன், புரபசரிடம் கேட்டார்.

அப்போதுதான் தன்னை அவருக்குத் தெரியவில்லை என்ற உண்மை டிக்சனுக்கு விளங்கியது. அப்படியானால் கேப்டன் தன்னைத் தெரிந்து கொள்ளாமல் இருக்கட்டும் என்று புரபசர் நினைத்தார்.

“நீங்கள் உடல் நலமில்லாமல் படுத்ததால், நான் தற்காலிகமாக உங்கள் பொறுப்பை எடுத்துக் கொண் டேன். மன்னியுங்கள்!” புரபசர் கூறினார்.

“உங்களுக்கு அந்த அதிகாரத்தை வழங்கியது யார்?" கேப்டன் ஆத்திரம் நிறைந்த குரலில் கேட்டார்.

“தலைமையகத்திலிருந்து!"

“இந்த அறைக்குள் ஏற்கெனவே ஒருவர் இருந்தாரே. அவர் போய்விட்டாரா?”

“போய் விட்டார்.”

"அப்படியானால் எனது வேலை தீர்ந்துவிட்டது. நான் என் வேலையைப் பார்த்துக் கொண்டு போக வேண்டியது தான்."

“நீங்கள் எங்கே போக வேண்டும்."

“பிரான்ஸுக்கு!"

புரபசர் சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தார்.

கேப்டன் இன்ஜின் அறையை நோக்கி நகர முற்பட்ட போது, புரபசர் அங்கிருந்த ஸ்டூலை எடுத்து கேப்டனின் தலை மீது விசையுடன் இறக்கினார்.

எதிர்பாராத அந்தத் தாக்குதலால் நிலைகுலைந்து தரையில் விழுந்த கேப்டன் அப்படியே மயக்கம் அடைந் தார். புரபசர், அவரை கட்டிலில் படுக்க வைத்த பிறகு அந்த அறையை வெளிப்புறமாகத் தாழிட்டார்.

அவர் வெளிப்புற அறைக்கு வந்தபோது அவரது கடிகாரம் ‘பீப்... பீப்...’ ஒலியெழுப்பியது.

டயானா பேசினாள்.

"நான் பத்திரமாக இருக்கிறேன். தற்சமயம் இந்தக் கப்பலின் கேப்டன் நான்தான்!” புரபசர் பதிலளித்தார்.

அந்தச் செய்தி டயானாவின் அருகில் இருந்த போலீஸ் அதிகாரிகள் அனைவருக்கும் மகிழ்ச்சி அளித்தது. ஆனால், ‘அது எப்படிச் சாத்தியமானது!’ என்ற வியப்பு அவர்களிடையே மிஞ்சியது.

“போலீஸ் துறைதானே?” புரபசர் கேட்டார்.

"ஆமாம் சார்!”

"புஷ்பராஜ் தற்சமயம் புரபசர் டிக்சன் என்ற பெயரில் வேறொரு கப்பலுக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறார். அது எந்தப் பகுதி, அது என்ன கப்பல் என்று என்னால் அடையாளம் சொல்ல முடியவில்லை. ஏனெனில், இந்தச் சம்பவங்கள் எல்லாம் இன்று விடியற்காலையில்தான் நிகழ்ந்தன."

"அப்படியா!”

"நான் இப்போது என்ன செய்ய வேண்டும்?” புரபசர் கேட்டார்.

“கொச்சியை நோக்கி வாருங்கள்!” எஸ்.பி கூறினார்.

அப்போது யாரோ வாசற்கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. புரபசர் எழுந்தார். கோட் பாக்கெட்டில் கையை விட்டார். அதில் கேப்டனின் கைத்துப்பாக்கி இருந்தது. கதவைத் திறந்தார் புரபசர்.

செக்யூரிட்டி ஒருவர் வாசலில் நின்று கொண்டிருந்தார். புரபசரைப் பார்த்ததும் சல்யூட் அடித்தார். புரபசரும் பதிலுக்குக் கையை உயர்த்தினார்.

“என்ன விஷயம்?” புரபசர் கேட்டார்.

"நாம் வந்த பாதையிலேயே திரும்பிக் கொண்டிருக் கிறோம் சார்!”

“நமது வேலை முடிந்துவிட்டது. இனி நேராகக் கொச்சிக்குப் போக வேண்டியதுதான். அதன் பிறகுதான் மேற்கொண்டு நடக்க வேண்டியவை பற்றித் தீர்மானிக்க முடியும்.” புரபசர் பதில் அளித்தார்.

அந்த செக்யூரிட்டி ஒப்புக் கொண்டவராகத் திரும்பிச் சென்றார்.

மீண்டும் அவரது கைக்கடிகாரம் “பீப். பீப். ஒலியெழுப்பியது.

மறுமுனையிலிருந்து கப்பலின் பெயர் மற்றும் தகவல்களைக் கேட்டனர். அதற்குள் அவை பற்றிய தகவல் களை கேப்டனின் அறையிலிருந்து தெரிந்து கொண்ட புரபசர் அவை எல்லாவற்றுக்கும் தெளிவான பதில் அளித்தார்.

கப்பல் விரைந்து கொண்டிருந்தது.

விரைவிலேயே கப்பல், கடலிலிருந்து கொச்சி நகரின் காயல் எனப்படும் குடாப் பகுதிக்குள் நுழைந்தது.

ஜோஸப் மாத்யூவும் இதர போலிஸ் அதிகாரிகளும் கூட்டமாக மற்றொரு படகில் கப்பலை நோக்கி வந்தனர். அவர்களது கூட்டம் மொத்தம் மூன்று படகுகளில் வந்தது. படகு, கப்பலுக்குச் சற்றுத் தொலைவில் வந்ததும் நிறுத்துமாறு புரபசர் இன்ஜின் அறைக்குத் தகவல் தெரிவித்தார். படகு, கப்பலை ஒட்டி நின்றது.

போலீஸார் திபுதிபுவென்று நூலேணி வழியாக ஏறினர்.

புரபசர் பத்திரமாகக் கப்பலிலிருந்து இறக்கப்பட்டு, படகில் ஏற்றப்பட்டார்.

புரபசரைக் காண அவர்கள் எல்லோருமே ஆவலுடன் இருந்தனர். அவர்களுடன் டயானாவும் வந்திருந்தாள்.

அவர்களைக் கண்ட புரபசரும் நிம்மதியுடன், மகிழ்ச்சி யும் அடைந்தார். கப்பல் துறைமுகத்தை நோக்கிச் செலுத்தப்பட்டது.

அங்கிருந்த மொத்தப் பேரும் அப்போதுதான் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். ஒரு பெரிய ராக்கெட்டை உடைத் துக் கொண்டு புரபசரை நல்லபடியாகக் காப்பாற்றி விட்டோம்!" என்ற மகிழ்ச்சி அவர்களின் முகத்தில் தெரிந்தது.

சூழ்நிலையே மாறிவிட்டது!

அப்போது புஷ்பராஜ் பெயர் தெரியாத கப்பல் ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்தார். அவருக்கு எல்லா வித வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருந்தன.

மறு நாள் காலையில் அவருக்குச் சிற்றுண்டி எடுத்து வந்தார் கப்பல் பணியாளர் ஒருவர்.

சற்று நேரத்துக்குக்குப் பிறகு புஷ்பராஜ் அந்த உடையில் கேன்டீனுக்கு வந்தார்.

கேப்டனுக்கு உரிய உணவு இன்னும் எடுத்துச் செல்லப்படாமல் இருந்ததால், புஷ்பராஜின் திட்டம் சுலபமாக நிறைவேறியது.

அறைக்குள் நுழைந்ததும் அவர் அந்த அறைக் கதவை மூடித் தாழிட்டார்.

"ஏன் கதவை மூடினிர்கள்?" கேப்டன் கேட்டார்.

"நீங்கள் சாப்பிடுங்கள் சார் விஷயத்தைச் சொல்கிறேன்." என்ற புஷ்பராஜ் தனது பாக்கெட்டிலிருந்து கைத்துப்பாக்கியை வெளியே எடுத்தார்.

"நீங்கள் என்ன செய்கிறீர்கள்?" கேப்டன் கோபத்துடன் கேட்டார்.

"நீங்கள் அதிகமாகச் சிரமப்பட வேண்டாம் என்பதற் காகச் சொல்கிறேன். முதலில் சாப்பிடுங்கள்." என்ற புஷ்பராஜ் அங்கிருந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்தார். அப்போதும் துப்பாக்கி, கேப்டனை நோக்கியே விழித்துக் கொண்டிருந்தது.

“உண்மையைச் சொல்லுங்கள்... நீங்கள் யார்?" கேப்டனின் குரல் இப்போது சற்றுக் கனிவுடன் ஒலித்தது.

“என் பெயர் புஷ்பராஜ். இந்தக் கப்பல் உடனடியாகக் கொச்சிக்குத் திரும்ப வேண்டும். இல்லாவிட்டால், அனா வசியமாக நீங்கள் உயிரிழக்க நேரிடும். இந்தக் கப்பலை போலீஸார் சூழந்து கொள்வதுடன், கப்பலும் பறிமுதல் செய்யப்படும்!”

அதன் பிறகு கேப்டன் எந்த வித மறுப்பும் சொல்லவில்லை.

கப்பலின் பயணம் திசை மாறியது.

இந்தச் சம்பவம் நடந்த இரண்டாவது நாளன்று பகல் சுமார் பதினோரு மணியளவில் கப்பல் கொச்சித் துறைமுகத்தை அடைந்தது.

அதிலுள்ள தகவல் தொடர்புச் சாதனங்கள் மூலமாக ஏற்கெனவே கரையில் உள்ள போலீஸாருக்குத் தகவல் தெரிவித்திருந்ததால், மீண்டும் ஒரு தடவை போலீஸ் குழாம் புஷ்பராஜை வரவேற்பதற்காகத் துறைமுகத்தில் காத்திருந்தது.

*****